உங்கள் இதயத்துடன்

# இஸ்லாம் பேசுகின்றது !

எஸ். எம். மன்சூர்

நொலெஜ் பதிப்பக வெளியீடு

## உங்கள் இதயத்துடன்

# இஸ்லாம் பேசுகின்றது !

**எஸ். எம். மன்சூர்**

வெளியீடு
நொலெஜ் பதிப்பகம்
172/4, இப்ராஹிம் நய்னமரிக்கார் வீதி,
பழைய நகர், மாதம்பை.
இலங்கை.

© Knowledge Publishers

Title of the Book :
**Islam Speaks to Your Heart** (Tamil)

1st Edition : 1999

Author :
**S. M. Mansoor**

Publishers :
**Knowledge Publishers**
172/4, Ibrahim Naina Marikkar Mawatha
Old Town,
Madampe - 61230
Sri Lanka.
Phone : 032 - 47940

ISBN - 955 - 8223 - 00 - X

Price : Rs. 135/=

Printers :
A. A. Prints
30, First Floor
Super Market
Beruwala.

எல்லாவிதமான
பேதங்களையும் கடந்து,
திறந்த மனதுடன்
சத்தியத்தைத் தேடும்
நல்லவர்கள்
எங்கெல்லாம் இருக்கிறார்களோ,
அவர்கள் கரங்களுக்கு,
இந்நூல்
சமர்ப்பணம்!

Knowledge Publishers

Title of the Book :
Islam Speaks to Your Heart (Tamil)

1st Edition : 1999

Author
R. M. Mansoor

Publishers
Knowledge Publishers
Ibrahim Naina Marikkar Mawatha
Road,
Maharagama - 81230
Sri Lanka
Phone : 032 - 47940

ISBN 955 - 9??? - 00 - X

Price : Rs. 135/-

Printers :
A. A. Prints
30, First Floor
Bemwala.

# பொருளடக்கம்

அணிந்துரை : பணி தொடரட்டும் ...
முன்னுரை
வேற்றுமைகளை வேரறுத்துச் சாய்க்கும் இஸ்லாம்!
**1.** இஸ்லாம் : ஓர் அறிமுகம் ..... 19
— எங்கும் தீமைகள் ..... 20
— பரிகாரங்கள் பயன்தரவில்லையே! ..... 21
— மதங்களும் அரசும்! ..... 26
— இஸ்லாம் என்றால் என்ன? ..... 30
— அறிவுக்குத் தடையில்லை! ..... 32
— கருத்துச் சுதந்திரம்! ..... 34
— ஆசையை சாகடிப்பதில்லை! ..... 36
— நீதியும் தண்டனையும்! ..... 44
— சமத்துவம் சார்ந்த வாழ்வு! ..... 48
— நிற வேறுபாடு! ..... 51
— மொழி வேறுபாடு! ..... 55
— சாதிப் பாகுபாடு! ..... 57
— வர்க்க பேதம்! ..... 63
— இஸ்லாத்தில் பெண்கள்! ..... 71
— மற்ற சமூகங்களில் பெண்கள் நிலை! ..... 71
— பெண் விடுதலை இயக்கங்கள்! ..... 78
— ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்து . . . ..... 81
— பெண் தாழ்த்தப்படவில்லை! ..... 82
— இருவருக்கும் பங்குண்டு! ..... 82
— உயர்ந்த அந்தஸ்து! ..... 83
— பெண்ணைத் தூற்றாதீர்! ..... 83
— சமமானவர்கள்; சரிநிகரானவர்களல்லர்! ..... 84
— அது அவர்களது உரிமை! ..... 85
— இணங்கி வாழ்வீர்! ..... 86
— பிணக்கு வந்தால் . . . ..... 87
— மறுமணம் உண்டு! ..... 88
— அவள் அடிமை அல்லள்! ..... 89
— தாயாக . . . ..... 90

— கல்வியும் தொழிலும்! ..... 90
— சமூகப் பணிகளில் ... ..... 94
— பெயரை இழக்க வேண்டியது இல்லை! ..... 96
— பொறுப்பும் வெகுமதியும்! ..... 96
— பலதார மணம்! ..... 97
— இந்துக்களிடம் ... ..... 98
— இந்துக்கள் தொடர்பான நூல்களில் ... ..... 99
— சீனாவில் ... ..... 100
— ஆபிரிக்காவில் ... ..... 100
— இலங்கையில் ... ..... 100
— யூத மதத்தில் ... ..... 101
— கிறிஸ்தவத்தில் ... ..... 101
— இன்றைய இந்தியாவில் ..... 102
— இஸ்லாம் அறிமுகப்படுத்தியதல்ல! ..... 103
— இஸ்லாத்தில் பலதார மணம்! ..... 104
— அதிகரித்த காம வேட்கை! ..... 107
— மனைவி நிரந்தர நோயாளியாயின் ... ..... 107
— மலட்டுத் தன்மை! ..... 109
— பலதார மணம் வேண்டும்! ..... 111
— இஸ்லாத்தில் மாமிசம் உண்ணல்! ..... 115
— எல்லாத் துறைகளுக்கும் இஸ்லாம்! ..... 127
— இஸ்லாத்தில் இறைநம்பிக்கை! ..... 127
— பலதெய்வ வழிபாடு! ..... 130
— அவதாரம் எடுத்தல்! ..... 131
— கற்பனைக்கு எட்டாதவன்! ..... 131
— மனைவியும் மக்களும் ...! ..... 132
— எல்லாவற்றையும் சூழ்ந்து நிற்கின்றான்! ..... 133
— இறைவனை நாட ... ..... 133
— இறைவன் இருக்கின்றான்! ..... 135
— வானவர்கள் ..... 138
— வேதங்கள் ..... 138

— இறை தூதர்கள் ..... 140
— மறுமை நாள் ..... 143
— அறிவும் சுதந்திரமும்! ..... 144
— மறுமை நம்பிக்கையின் மற்றொரு அவசியம்! ..... 146
— மறு பிறப்பு . . . ? ..... 148
— இஸ்லாத்தில் மறுமை வாழ்வு! ..... 151
— இறை நிர்ணயம் ..... 153
— கட்டாயக் கடமைகள் ..... 155
— சான்று பகர்தல்! ..... 155
— தொழுகை ..... 157
— நோன்பு நோற்றல் ..... 161
— ஸக்காத் ..... 162
— ஹஜ் ..... 163
— பொதுவாக . . . ..... 164
— திறந்த மனதுடன் . . . ..... 165
— இஸ்லாத்தின் மூலாதாரங்கள்! ..... 169
அல் குர்ஆன் ஒரு வாழும் நூல்! ..... 171
**2.** அல் குர்ஆன் ..... 172
— பொதுவான நூல்களிலிருந்து மாறுபட்டது! ..... 173
— அறிவுக் கருவூலம்! ..... 175
— அல் குர்ஆனின் அடிப்படை நோக்கம்! ..... 177
— குர்ஆனும் முந்திய வேத நூல்களும்! ..... 180
— கற்பனைகள், கூட்டல் குறைத்தல்கள்! ..... 182
— குர்ஆனின் மொழி! ..... 184
— வேத நூல்களின் தொகுப்புமுறை! ..... 186
— குர்ஆனின் தொகுப்புமுறை! ..... 189
— தினமும் ஓதப்படும் திருக்குர்ஆன்! ..... 192
— இதயங்களில் வாழும் இறைமறை ..... 193
— குர்ஆனின் பாதுகாப்பு! ..... 195
— இஸ்லாத்தின் மூல நூல்! ..... 200

முழு உலக மக்களுக்கும் முன்மாதிரியாய் அமைந்த ..... 203
முஹம்மத் (ஸல்) அவர்கள் ..... 204
**3.** முஹம்மத் (ஸல்) அவர்கள் ..... 206
*— மக்களால் அவதானிக்கப்பட்ட மகத்தானவர்!* ..... 208
*— குடும்ப வாழ்வில் ஈடுபட்டவர்!* ..... 209
*— பொருளாதாரத் துறையில் ஈடுபாடுடையவர்!* ..... 211
*— அரசு நடத்தியவர்!* ..... 215
*— யுத்தம் புரிந்தவர்!* ..... 217
*— நபிகளாரும் வாளும்!* ..... 222
*— ஆன்மிகத்தில் ஊறித் திளைத்தவர்!* ..... 225
*— உறுதியான இறை நம்பிக்கை கொண்டவர்!* ..... 227
*— விக்கிரக, வீர வணக்கம்!* ..... 232
ஓர் ஒப்பற்ற சமுதாயம்!
**4.** காருண்ய நபி தோற்றுவித்த குர்ஆனிய சமுதாயம்! ..... 233
*— கூட்டமைப்பும் முயற்சிகளும்!* ..... 236
இஸ்லாம் மனநிறைவைத் தந்தது! ..... 241
**5.** இருள்களிலிருந்து ஒளியை நோக்கி . . . ! ..... 242
உசாத் துணை நூல்கள், சஞ்சிகைகள். ..... 247

பணி தொடரட்டும்...

"உங்களுள் ஒருவர் தான் விரும்புவதைத் தன் சகோதனுக்கும் விரும்பாத வரை (உண்மை) விசுவாசம் கொண்டவராக மாட்டார்."

இது ஒரு நபிமொழியாகும். ஒரு முஸ்லிமுக்கு உலகிலுள்ள எல்லோரையும் எல்லாவற்றையும்விட விருப்பத்திற்குரியதாக இருப்பது அவர் நம்பிப் பின்பற்றும் சன்மார்க்கமான இஸ்லாமாகும். எவரை எதனை இழந்தாலும் ஒரு விசுவாசி இஸ்லாத்தை இழக்க விரும்பமாட்டான். அத்தகைய சிறப்புக்குரிய இஸ்லாம் உட்பட தான் விரும்பும் அனைத்தும் அடுத்த சகோதர மனிதனுக்கும் கிட்ட வேண்டும் என ஆசிப்பது ஒரு முஸ்லிமின் அடிப்படைப் பண்பாகும் என்பதையே குறித்த நபிமொழி கூறி நிற்கின்றது.

இந்த வகையில், தான் நேசிக்கும் இஸ்லாத்தினால் பிறரும் கவரப்பட்டு தன்னைப் போன்றே அவர்களும் அதன் அபரிமிதமான ஈருலக நன்மைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனும் நன்னோக்கின் வெளிப்பாடே உங்கள் கரங்களில் தவழும் இந்நூல் என நான் நம்புகிறேன்.

இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் விதத்தில் எழுதப்பட்ட நூல் வரிசையில் இந்நூல் குறிப்பிடத்தக்கதும் தனியான ஓர் இடத்தைப் பெறத்தக்கதும் ஆகும் என்பது என் கருத்து. இஸ்லாத்தை அதன் அசல் உருவில் – முழுமையான வடிவில் – முன்வைப்பதற்கு ஆசிரியர் மேற்கொண்டுள்ள முயற்சி பெரிதும் வெற்றிபெற்றுள்ள தைக் காண முடிகின்றது. இந்நூலினூடே இஸ்லாத்துடன் தொடர்பான பல ஐயங் களை களையும் விதத்தில் விளக்கங்கள் இடம் பெற்றுள்ளமை இந்நூலுக்குரிய மேலும் ஒரு தனிப்பெரும் சிறப்பாகும்.

மொத்தத்தில் ஏற்றுப் பின்பற்றத் தகுந்த ஒரே மார்க்கம் இஸ்லாம் தான் என்பதனை இந்நூலில் மிகக் கச்சிதமாக நிறுவியுள்ளார் இதன் ஆசிரியர்.

இதைப் படிக்கும் ஒருவர், இஸ்லாத்தை மேலும் விளங்கிக் கொள்ள, அதன்பால் நெருங்க, ஏன் அதைத் தழுவவும் தூண்டப்படலாம். அவ்வாறு ஒரு மனிதர் இந்நூலின் மூலம் 'ஹிதாயத்' எனும் வழிகாட்டலைப் பெறுவாராயின், அதுவே இந்நூலாசிரியரின் முயற்சிக்குப் போதுமான சன்மானமாக அமைந்துவிடும்.

"அல்லாஹ் உங்கள் மூலம் ஒரு மனிதனுக்கு நேர்வழி காட்டுவதானது இவ்வுல கத்தையும் இதிலுள்ள அனைத்துப் பொருட்களையும்விட சிறந்ததாகும்." என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

சகோதரர் எஸ். எம். மன்சூர் அவர்கள் இஸ்லாமிய கண்ணோட்டங்களை விளக்கும் பல சிறந்த நூல்களை தமிழ் கூறும் உலகுக்கு வழங்கியவர். அழகிய தமிழில்

ஆழமான கருத்துக்களையும் எளிய நடையில் விளக்குவதில் அவருக்குத் தனியான திறமையுண்டு.

அவரது பயன்மிக்க எழுத்துப்பணி தொடர வேண்டும்; மேலும் பல சிறந்த ஆக்கங்களை அவர் வழங்க வேண்டும் என்பது எமது பிரார்த்தனை.

எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா இந்நூலாசிரியரின் இந்த 'தஃவா' முயற்சியை ஏற்று அங்கீகரிப்பானாக; அவருக்கு அறிவு விளக்கத்தையும், தேக ஆரோக்கியத்தையும் வழங்கி அருள் புரிவானாக – ஆமீன்.

● ஏ. ஸீ. அகார் முஹம்மத்*

பேருவளை
இலங்கை.
20. 10. 1998.

* அஷ்ஷெய்க் ஏ. ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) பீ. ஏ. (சிறப்பு) அவர்கள், இலங்கை, பேருவளையில் அமைந்துள்ள சன்மார்க்கக் கலைக்கூடமான ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களில் ஒருவராவார்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ....

"நம்பிக்கை கொண்டவர்களே!
அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.
மேலும், நேர்மையான
சொல்லை மொழியுங்கள்."
— அல் குர்ஆன் 33: 70

# முன்னுரை

ஓர் உண்மை; அதைப் புரிந்துகொள்ளும் முறைமைகளில் வேறுபாடுகள் தோன்றலாம்; கால, தேச, சூழல்கள் காரணமாக அது மறைவுற்றதுபோல் இருக்கலாம்; அதை அணுகும் விதங்களில் வித்தியாசமான போக்குகள்கூட கடைப்பிடிக்கப்படலாம். என்றாலும், "அது உண்மையே!" என்பதில் எந்நிலையிலும் கருத்தொருமைப்பாடு இருக்கவே செய்யும்; இதில் எத்தகைய ஐயமும் இல்லை.

உதாரணமாக - கதிரவன் உதித்து மறைகின்றான்; இரவு பகல் மாறி மாறி வருகின்றன; மரஞ்செடி கொடிகள் தழைத்து, பாரிய அளவில் வளர்ந்து, சில காலத்திற்குப் பின் பட்டுப்போகின்றன; உயிரினங்கள் பிறந்து, வாழ்ந்து, மரிக்கின்றன; மனிதனும் பிறக்கின்றான், கோபுரத்திலோ குடிசையிலோ வாழ்கின்றான், பின்னர் என்றோ ஒருநாள் போய் விடுகின்றான் - மரணிக்கின்றான். இப்படியான எத்தனையோ நிகழ்வுகள் இந்தப் பிரபஞ்சத்தினிலே!

இந்தத் தோற்றம், வாழ்வு, மறைதல் என்பன பற்றி எத்தனையோ தத்துவங்கள் மனிதரிடையே இருக்க முடியும். எனினும், 'இப்படியான ஓர் இயக்க முறை இப்பிரபஞ்சத்தில் உண்டு' என்ற உண்மையை எவரும் மறுக்கவில்லை; மறுக்கவும் முடியாது. சிலவேளை, யாரேனும் மறுத்தாலும், 'இப்படியோர் இயக்க முறை இல்லை' என்றாகிவிட மாட்டாது.

இஸ்லாம் என்பதுவும் இத்தகைய ஓர் உண்மையே!

அல்லாஹ் இந்தப் பிரபஞ்சத்தையும், இதில் காணப்படும் எண்ணிக் கணக்கிட முடியாத உயிரினங்கள் மற்றும் உண்டானவற்றையும் படைத்தான்; மனிதனைப் படைத்தான்; மனிதன் வாழ்வதற்கான சூழலை அமைத்தான்; அவனுக்கு அவசியமான வாழ்க்கைத் தேவைகளைப் படைத்தான்; அந்தத் தேவைகளைப் பெற்று முறையாகப் பயன்படுத்தும் சிந்தனையையும் உடல் உறுப்புக்களையும் கொடுத்தான்; இறுதியில், இந்த இயற்கையுடன் இயைந்து வாழ்வை சீராக அமைத்துக் கொள்வதற்கான தனது வழிகாட்டலையும் வழங்கினான். அந்த வழிகாட்டலுக்குப் பெயர் 'இஸ்லாம்' என்பதாகும்.

இஸ்லாத்திற்கு 'உண்மை' என்றேன்; ஏன் என நீங்கள் சிந்திக்கலாம்.

எது இயற்கையோ அதுதான் உண்மை. அதற்கு மாறானதை 'செயற்கை' என அழைக்கின்றோம்; அது அசல் அல்ல, போலி. எனவே, இயற்கையான மனித வாழ்வு இயற்கையாக வழிகாட்டும் வாழ்க்கை முறையொன்றை வேண்டி நிற்பதை நமது அறிவு ஏற்றுக் கொள்ளும். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. அப்படி அமையாவிட்டால், போலியைப் புகுத்தினால் வாழ்க்கை தடம்புரண்டு விடும்; அழிவும் இழிவும் மனிதனை அணைத்துக்கொள்ள விரைந்தோடி வரும்.

இதை நாம் இன்று பார்க்கின்றோம். வானொலிப் பெட்டிக்குள்ளே அதற்கு எந்த வகையிலும் பொருந்தாத மோட்டார் வாகன உதிரிப்பாகமொன்றைப் பொருத்துவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். அப்படியான முட்டாள் தனம் மனித வாழ்விலும் இடம்பெற்று விட்டது. மனிதனின் இயற்கைத் தேவைகளை மறுக்கின்ற - சாகடிக்க முனைகின்ற - அல்லது அவற்றுக்கு முற்றிலும் பொருத்தமில்லாத வழிமுறைகளை வழங்குகின்ற மதங்கள் மற்றும் கொள்கைகள் காரணமாக மனிதன் அனுபவிக்கின்ற துன்பங்கள் ஒன்றிரண்டல்ல. இன்று மூன்றாவது உலக யுத்தமொன்று மனித சமுதாயத்தை ஒரே நொடியில் விழுங்கி விட தருணம் பார்த்திருக்கின்றது. இதிலிருந்து மனித சமுதாயத்தைப் பாதுகாக்க இயற்கையான ஒரு வழிகாட்டல் அவசியம் என்பதை உங்களது புத்தி ஏற்றுக் கொள்ளும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்காது.

மனிதன் இயற்கையானவன் போலவே இஸ்லாமும் இயற்கையானது. மனிதனைப் படைத்த அல்லாஹ்தான் இஸ்லாத்தையும் அருளினான். எனவே, இஸ்லாம் மனிதனின் இயற்கையான எந்தத் தேவையையும் மறுக்கவில்லை; "வேண்டாமே" எனத் தடுக்கவில்லை. மாறாக, அந்தத் தேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளை நெறிப்படுத்தித் தருகின்றது; ஒழுங்குபடுத்தி நேரான வழியில் செயற்படத் தூண்டுகின்றது. இந்த ரீதியில் இயற்கை எனும் உண்மையைப் போலவே இஸ்லாமும் இயற்கையாக அமைந்துள்ளதால், அதற்கு "உண்மை" என்றேன்.

இஸ்லாத்தை நன்கறிந்து, ஏற்றுப் பயனடைந்தோரும், பயனடைவோரும் பல கோடி; அதன் அழகை அறிந்தும் ஏற்காது வெறும் நாவால் புகழ்ந்துரைத்து விட்டு, நிற்பவர்கள் பல லட்சம்; அதனை அறிந்து ஏற்றும் அதன்படி வாழாது, அதன் வளர்ச்சிக்குத் தடையாக இருப்போர் பலர்; அதன் உயர்வை உணராமலேயே தப்பும் தவறுமாக விமர்சிப்பவர்கள் சிலர்; அதைப் புரிந்துகொள்ள விழைந்தும் வழியமைத்துக் கொடுக்கப்படாது தவிப்போர் பலர்; அதன் மேன்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற உணர்வேயில்லாது வாழ்வோரை "அப்படியே இருக்கட்டுமே!" எனத் தப்பான கருத்துக்களை மிக நாசூக்காகத் திணித்துவரும் மன நோயாளிகள் சிலர்!

இந்த நிலையில், தனது வேர்களை பூமிக்குள்ளே ஆழப் பதித்துக் கொண்ட ஓர் ஆல விருட்சம் எப்படி உயிரினங்களுக்கு நிழலைக் கொடுக்கின்

றதோ, அப்படி - இஸ்லாமும் நிலைத்து நின்று மனித சமுதாயத்திற்குப் பயனுடையதாய் அமைந்து வருகின்றது. என்றாலும் காய்த்திருக்கும் மாமரத்திற்குக் கல்லடிப்பது போல, சிலர் இஸ்லாத்தைப் பற்றி ஏதாவது அவ்வப்போது எழுதுவதுண்டு. அப்படியான ஒன்றுதான் இச்சிறு நூல் உருவாவதற்கே காரணம்!

இலங்கைப் பத்திரிகை[1]யொன்றில், 'பலவந்தமாகப் பரப்பப்படாத ஒரே மதம் பௌத்தம்!' என்ற தலைப்பில் சிறியதொரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.

அக்கட்டுரையின் ஓரிடத்தில்,

"இஸ்லாம் அரசியல் கலப்பைக் கொண்டு பரவச் செய்யப்பட்டது என்பதை வரலாற்றைப் படிப்போர் அறிவர். மதப் பிரசாரத்திற்காக மக்களைக் கொல்வதைக் கூட நன்மையான செயல்களுள் ஒன்று என்று முஸ்லிம் மதத்தில் போதிக்கப்படுகின்றது!"

எனக் குறிப்பிடப்பட்டிருந்தது!

இக்கட்டுரையாளரின் கருத்தை வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், 'இஸ்லாம் அதிகாரத்தால் - வாளால் - பரப்பப்பட்டது!' எனலாம். இஸ்லாத்தைப் பற்றி எதுவும் தெரியாத மக்கள் மனங்களில் இத்தகைய நச்சுக் கருத்தை விதைக்க, இக்கட்டுரையாளர் எடுத்த இம்முயற்சி தவறானதே. இஸ்லாமிய வரலாற்றை நடுநிலை நின்று ஆராய்வோர் இதனை உணர்வர்.

இவர் இப்படி எழுதிவிட்டாரே என்பதற்காக இவரை நாம் கோபிப்பதில் அர்த்தம் இல்லை. இப்படி எழுதி இஸ்லாத்தை இகழ்வதையே நோக்கமாகக் கொண்டவர்களுள் இவரும் ஒருவர். எனினும், இஸ்லாத்தின் இலட்சியம், கொள்கை, கோட்பாடு, பிரசார முறை, போராட்டங்கள், வரலாறு என்பன பற்றி நல்ல முறையில் ஆராயாது எழுதி விட்டாரே என்ற வருத்தம் என் உள்ளத்தை ஆட்கொண்டு விட்டது. எது எவ்வாறாயினும் எனது இந்நூலில் இவரது கூற்று சிறிதளவு ஆராயப்பட்டுள்ளது என்பதைக் கூறிக்கொள்ள விழைகின்றேன்.

இவர் இப்படி எழுதினாலும், குறிப்பிட்ட நாளிதழ் இது ஒரு சமூகத்தின்-முஸ்லிம்களின்-மனங்களைப் புண்படுத்துவதாகக் கருதி பிரசுரிக்காது விட்டிருக்கலாம்; இலங்கையில் இனப் பார்வைகள் வளர்ந்து விபரீதங்களை விளைவித்துக் கொண்டுள்ள இக்கட்டத்தில் இதனைப் பிரசுரிப்பது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல் அமையலாம் எனக் கருதி தடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அவ்விதழ் அப்படி நடந்து கொள்ளவில்லை. மாறாக, அக்கட்டுரையைப் பிரசுரித்து முஸ்லிம்களின் மனங்களைப் புண்படுத்தி விட்டது; இலங்கையில் பின்பற்றப்படும் ஜனநாயக மரபு சார்ந்த 'எழுத்துச் சுதந்திரம்' அதை அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டு விட்டது.

---

1. 'திவயின' சிங்கள நாளிதழ், 28. 5. 91, கட்டுரை எழுதியவர்: ஹேகொட கேமானந்த தேரர் என்பவராவார்.

எனவே, அதே ஜனநாயக மரபுகளுக்கமைய எது உண்மையோ அதை அப்பட்டமாக அனைத்து மக்கள் மத்தியிலும் திறந்த புத்தகமாக வைக்க விழைந் தேன். அதன் பயன் - உங்கள் கரங்களில் மலர்ந்து, கருத்துக்களை அள்ளித்தர முனைந்துள்ள இந்நூல்; அல்ஹம்துலில்லாஹ்!

இந்நூலில், இஸ்லாத்தை மற்றைய மதங்களுடன் ஒப்புநோக்கி முன் வைக்க முயன்றுள்ளேன். அது அந்தந்த மதத்தை உடையவர்களின் உள்ளங் களைப் புண்படுத்த வேண்டும் என்பதற்கான ஒரு முயற்சியல்ல; இஸ்லாத்தைப் பற்றி எல்லோருக்கும் எடுத்துக்கூறி பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும் என்பதற்கும் அல்ல. மாறாக, ஒப்புநோக்குதல் மூலம், எடுத்துக்கொண்ட விடயத் தை எளிதாக விளக்கலாமே என்ற எண்ணத்திலாகும்.

எனவே, எழுதிய என்னைப் பார்ப்பதைவிட எழுதப்பட்டுள்ள விஷயங்களைக் கவனத்தில் கொள்வது மிகுந்த பயனுடையதாகும் என்று நான் திடமாக நம்புகின்றேன்.

இதை முற்றாகப் படித்து முடிக்கும் நீங்கள், சிலவேளை 'இதில் கூறப் படும் இஸ்லாத்தை இன்றைய முஸ்லிம்களிடம் முழுமையாகக் காண முடியவில் லையே!' என்ற உணர்வைப் பெறலாம்.

அது ஓரளவு உண்மைதான், மறுக்கவில்லை. அதற்கு நியாயமான சில காரணிகளும் இல்லாமலில்லை.

அவையாவன:

— முஸ்லிம்களிடம் காணப்படும் இஸ்லாத்தைப் பற்றிய அறியாமை
— பிற மதங்கள், கொள்கை கோட்பாடுகளிலிருந்து இஸ்லாத்தின் பெயரில் புகுத்தப்பட்ட கலாசார பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாய சடங்குகளின் விளைவாக உருமாறிய இஸ்லாமிய வாழ்வு
— இஸ்லாத்திற்கு மாறான சூழல் தாக்கம்
— இஸ்லாமிய நம்பிக்கைகள், நடைமுறைகளுக்கு எதிரான அல்லது மாறான ஆட்சியாளரின் கெடுபிடிகள்
— இஸ்லாத்தின் சரியான இலட்சியத்தைப் புரிந்து கொண்டு ஒருமுகப் பட்டு முஸ்லிம்கள் செயற்படாமை

போன்றவையாகும். என்றாலும் ஓர் உண்மையை நீங்கள் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இன்று, இஸ்லாத்தைப் போன்று தாக்குதல்கள், தவறான விமர்சனங்கள், திரித்துக் கூறல்கள், திட்டமிட்ட சதிகள் மூலம் அழித்தொழிக்கும் தீவிர முயற்சி கள் போன்றவற்றுக்கு இலக்கான மற்றொரு மதத்தைக் காண முடியாது, இஸ்லாம் இத்தகைய எதிர்ப்புகளுக்குத் தாக்குப் பிடிக்க முடியாது, இரையாகி விட்டிருந்தால், அது அழிந்துபோன மதங்களில் ஒன்றாக இருந்திருக்கும். மிகச் சாதாரண நிலையிலேயே மக்களால் பின்பற்ற முடியாது அழிந்துபோன சமண மதத்தையும், மேற்குலகில் கிறிஸ்தவர்கள் தமது தேவாலயங்களை விட்டு

ஒதுங்கிச் செல்வதன் மூலம் படிப் படியாக ஒதுக்கப்படும் கிறிஸ்தவத்தையும், அத்தகைய அழிவுப் பாதையில் செல்லும் இன்னும் பலவற்றையும் இட்டு நாம் அவ்வப்போது படிக்கின்றோம்; பார்க்கின்றோம் அல்லவா!

ஆனால், இஸ்லாம் இத்தனைச் சவால்களையும் முறியடித்துக் கொண்டு, உயிர்த் துடிப்புடன் உலகையே ஆட்கொள்ள விரைந்து வருவதை யார்தான் மறுக்க முடியும்?

— உலகெங்கிலும் உள்ள பள்ளிவாயல்களில் இறை வணக்கத்திற்காக நிரம்பி வழியும் முஸ்லிம்களின் உணர்வுகள்
— ஒவ்வொரு நாட்டிலும் இஸ்லாமிய அமைப்பைக் கொண்டு வர உயிர்த் தியாகங்களுடன் போராடிவரும் மக்கள் அலைகள்
— நாளுக்கு நாள் இஸ்லாத்தைத் தழுவுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வரல்
— இஸ்லாத்தை எல்லா மக்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வம் பழைய புதிய முஸ்லிம்களிடம் மிகுந்து காணப்படல்

போன்ற பலவற்றின் மூலம் இஸ்லாம் ஒரு சக்தியாக வளர்ந்து வருவதை நன்கு உணர முடியும். காலையில் கதிரவன் உதிக்கின்றான் என்பதில் எவராவது சந்தேகம் கொள்ள முடியுமா? அதுபோல, இஸ்லாமும் மனித மனங்களில் இடம் பிடித்து வருகின்றது என்பதில் எவரும் எள்ளளவும் சந்தேகம் கொள்ள முடியாது.

இன்னுமொரு வகையில் நோக்கினால் இன்னொரு விளக்கத்தையும் நாம் பெற முடியும்.

கம்யூனிஸம் 20 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு கொள்கை. பல நாடுகளை ஆக்கிரமித்து, ஆட்கொண்டு, உலகத்தையே விழுங்கிவிடத் தருணம் பார்த்திருந்தது; கம்யூனிஸ்டுகள் உலகெங்கும் வீறு நடை போட்டார்கள்; கம்யூனிஸ்டுகளல்லாதவர்கள்கூட கம்யூனிஸக் கருத்துக்களால் கவரப்பட்டு, தமது எழுத்து, பேச்சு என்பன மூலம் அவற்றை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்த கம்யூனிஸத்திற்கு எழுபத்தைந்து வயது பூர்த்தியாகவில்லை. இன்று அதன் கருத்துக்கள் சிதைந்து, கட்டுப்பாடுகள் உடைப்பெடுத்து, நாடுநாடாக வீழ்ந்துவிட்ட வேகத்தைப் பார்க்கும்பொழுது, இன்னும் சில ஆண்டுகளில், 'என்றோ இருந்த ஒரு கொள்கை!' என்று கூறத் தக்கதாக வரலாற்றில் சங்கமித்துவிடும் என்பது உறுதியாகி விட்டது.

"இந்தக் கம்யூனிஸத்தால்தான் நாம் அழிந்தோம்; பின்தள்ளப்பட்டோம்!" என்று குரல் எழுப்பிக்கொண்டு அதற்கெதிராகப் போராடும் மக்களையும், கிளர்ச்சி செய்யும் இளைஞர்களையும், பிரிந்து போன குடியரசுகளையும் கார்ல்மார்க்ஸ், லெனின் போன்றோரின் சிலைகளை உடைத்து, உருட்டிவிட்ட விரக்தியடைந்தோரையும் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக

வந்தன. அவர்கள் ஒருவர் இருவர் அல்லர்; ஒரு சிலரும் அல்லர்; கூட்டங் கூட்டமாக, பென்னம்பெரிய ரஷ்யா முதல் சின்னஞ்சிறிய அல்பேனியா வரையிலான நாடுகளின் மக்கள் திரண்டு வந்து, கம்யூனிஸத்தைத் துடைத்து எறிந்துவிடத் தீர்மானித்து செயல்படுவதை செய்திகள் கூறுகின்றன.

அதாவது, கம்யூனிஸம் செத்துக்கொண்டிருக்கின்றது என்பதல்ல, தமக்குத் தீங்கிழைத்த ஒருவன் எத்தகைய வெறியுணர்வுடன் கொஞ்சம் கொஞ்ச மாகப் பலரால் சாகடிக்கப்படுவானோ, அவ்வாறே, “கம்யூனிஸத்தால் வீழ்ந்து விட்டோம்” என எண்ணுபவர்கள் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து அதைச் சாகடித்துக்கொண்டு வருகிறார்கள் என்பதுதான் உண்மை. இன்று கம்யூனிஸம் சோவியத் ரஷ்யாவையும் இன்னும் பல கம்யூனிஸ நாடுகளையும் பொறுத்த வரையில் முடிந்துபோன சோகமான கதை என்பதை எவரும் புரிந்து கொள்வர்.

ஆனால், இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் நிலை முற்றிலும் இதற்கு நேர்மாறானதே.

இஸ்லாத்தைப் பின்பற்றுவதில் பொடுபோக்காக இருந்த, இருக்கின்ற எவருமே இஸ்லாத்தைக் குறை கூறவில்லை; தமது வாழ்வு கெட்டு விடுவதற்கோ, பொருளாதாரக் கஷ்டம் ஏற்படுவதற்கோ, ஒழுக்கம், நற்பண்பு, நன்னடத்தை போன்றவைகளை இழந்து இகழப்படும் நிலைக்குத் தள்ளப்படுவதற்கோ இஸ்லாம்தான் காரணம் என அத்தகைய எவரும் கூறவில்லை!

அவர்கள் அனைவரும் தமது தவறுக்குத் தாமே பொறுப்பாளிகள் என்றும், புனித இஸ்லாத்தின் நெறிமுறைகளைக் கவனத்தில் கொள்ளாது வாழ்ந்ததன் காரணமாகவே தமக்கு இக்கதி நேர்ந்தது என்றும் தம்மைத் தாமே நொந்து கொள்கிறார்கள்; கவலைப்படுகிறார்கள்; கண்ணீர் வடிப்பவர்களாக வும் இருக்கின்றார்கள்.

இது மட்டுமல்ல, இத்தகைய தவறுகளில் உழன்று வாழ்பவர்கள் தம்மை இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கமைய திருத்திக்கொள்ள துடித்துக் கொண்டும் இருக்கின்றார்கள். இன்று-நாளுக்கு நாள் மாறிவரும் அவர்களது எண்ணங்கள், தோற்றங்கள், செயல்கள், வீட்டு விவகாரங்கள், வியாபார வழிமுறைகள், வணக்க வழிபாடுகளிலான தனியாத ஆர்வம், அல்லாஹ்வின் மீதும், இறை தூதர் முஹம் மத் (ஸல்) அவர்கள் மீதும், மறுமை நாள் மீதும் பெருகிவரும் அசையாத, ஆழ மான விசுவாசம் என்பன அவர்கள் மறந்து விட்டிருந்த இஸ்லாத்தின்பால் விரைந்து வருவதையே காட்டுகின்றன.

எனவே, முன்னர் போலவே இனி வரும் காலங்களிலும் மக்கள் மனதை வெற்றிகொண்டு வழிகாட்டப்போகும் ஜீவசக்தி நிறைந்த ஒரு வாழ்க்கை நெறியாக இஸ்லாம் திகழப் போகின்றது என்பதை மனச்சாட்சிக்கு மதிப் பளித்து பேசுபவர்கள் ஒருபோதும் மறுக்க மாட்டார்கள்.

அந்த அழகிய மார்க்கத்தை - இஸ்லாத்தை - இந்நூல் மூலம் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். இதை சமர்ப்பிக்கும் வகையில், எடுத்துக் கூறிய முறையில்

குறைகள் இருக்கலாம். அப்படி குறைகள் இருந்தால், அவை என்னுடையவையே அன்றி இஸ்லாத்தினுடையவை அல்ல என்பதைக் கூறிக் கொள்கின்றேன்.

இந்நூல், இஸ்லாத்தின் வடிவை சுருக்கமாகத் தந்து, அதை விரிவாக விளங்கிக் கொள்ள தூண்டுதல் வழங்கும் ஒன்றாகும். அதற்கான முயற்சியை மேற்கொள்வது வாசகர் கடமை. அப்பொழுது அதிக விளக்கத்தைத் தருவதற்கு அல்லாஹ் போதுமானவன்.

இந்நூலைப் படித்துப் பார்த்து, கருத்துரை வழங்கிய இலங்கை, பேருவளை, ஜாமிஆ நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் ஏ. ஸீ. அகார் முஹம்மத் அவர்கள் என் நன்றிக்குரியவர். இதனைச் சிறப்பாக அச்சிட்டு உதவிய பேருவளை ஏ. ஏ. பிரிண்ட்ஸ் உரிமையாளர் சகோதரர் ஏ. ஸீ. எம். நஜீப்தீன் அவர்களும் என் நன்றிக்குரியவர்!

எல்லாவற்றுக்கும் மேலாக எனக்கு நல்லுணர்வூட்டி, இஸ்லாத்தின் விளக்கத்தைத் தந்து, இப்பணியை நல்லபடி செய்து முடிக்க என் அகத்தைத் திறந்து விட்ட அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் அருள் புரிந்த மறை கருத்தேற்று, இறை தூதர் (ஸல்) அவர்கள் வழி நடக்கும் எவரும், ஒரு நாளும், தூய வாழ்விலிருந்து பிறழ்ந்து தவறான பாதையில் சென்று தன்னை நஷ்டவாளராக்கிக் கொள்ள மாட்டார்கள் எனத் திடமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

இஸ்லாம் இறைவனின் மார்க்கம்; இனியதொரு மார்க்கம்; மக்கள் சமுதாயத்திற்கு மகத்தானதொரு வாழ்வைத் தருவதற்கு வந்துவிட்ட மார்க்கம். இதை அனைத்து மக்களும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்பது என் மனம் நிறைந்த விருப்பம். என் விருப்பம் ஓர் இஸ்லாமிய அழைப்பாக உங்கள் கரங்களை நிரப்பி நிற்கின்றது - அல்ஹம்துலில்லாஹ்!

● எஸ். எம். மன்சூர்

172/4, Ibrahim Naina Marikkar Mawatha,
Old Town, Madampe.
Sri Lanka.
06. 01. 1999

## வேற்றுமைகளை வேரறுத்துச் சாய்க்கும் இஸ்லாம்!

மனிதத்துவத்தைப் போதித்து நடைமுறைப்படுத்திய
முதல் மார்க்கம் இது (இஸ்லாம்)தான்.
பள்ளிவாயலின் மினாராவிலிருந்து
தொழுகைக்காக விடுக்கப்படும் அழைப்பு - நாளெல்லாம்,
ஐவேளைகளில் (அல்லாஹ்வை) வணங்குவதற்கு
முஸ்லிம்களை ஒன்றுதிரட்டுகின்றது.
அப்பொழுது,
— நாட்டுப்புறத்து விவசாயியும்
— நாடாளும் மன்னனும்
முழந்தாளில் இருந்து
"அல்லாஹ் ஒருவனே அனைத்துக்கும் பெரியவன்"
என்று பிரகடனம் செய்கின்றனர்!
இங்கு, உண்மையான ஜனநாயகம்
உயிர்பெற்றுத் திகழ்வதைப் பார்க்கின்றேன். மேலும்,
மனிதரிடையே உண்மையான சகோதரத்துவ
உணர்வை ஊட்டும்
இஸ்லாமும், அதன் ஒற்றுமையை
வலியுறுத்தும் போதனைகளும்
என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டன!
நீங்கள் முஸ்லிமான ஓர் எகிப்தியனையோ, அல்ஜீரியனையோ,
இந்தியனையோ அல்லது துருக்கியனையோ
லண்டனில் காண்பதாக வைத்துக்கொள்ளுங்கள்.
(அவர்கள் இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றும்போது)
எகிப்து ஒருவனின் தாய்நாடு என்பதிலோ
இந்தியா மற்றொருவனின் தாய்நாடு என்பதிலோ
எத்தகைய வேறுபாட்டையும் நீங்கள் காண மாட்டீர்கள்.
இதுதான் இஸ்லாத்தின் வழி வந்த சமுதாயத்தின் சிறப்பு!

■ சரோஜினி நாயுடு
Speeches and Writings of Sarojini Naidu on
'The Ideals of Islam' Madras (1918) Page: 169

# 1

“தீனில் (இஸ்லாத்தை மேற்கொள்வதில்) யாதொரு கட்டாயமோ நிர்ப்பந்தமோ இல்லை. (முற்றிலும்) தவறான வழியிலிருந்து நேரான வழி தெளிவாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.”

— அல் குர்ஆன் 2:256

# இஸ்லாம்: ஓர் அறிமுகம்

அன்புள்ள சகோதரரே, சகோதரியே!

உங்கள் நல்வாழ்விற்காக வல்ல இறைவனிடம் பிரார்த்தனை புரிந்து, என் உள்ளத்தினுள் அடங்கிக் கிடக்கின்ற கருத்துக்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விழைகின்றேன்; இவை தொடர்பாக உங்கள் உள்ளத்துடன், உள்ளுணர்வுகளுடன் உரையாட அவாவுறுகின்றேன்.

என்னுடன் கருத்துப் பரிமாற அன்புடன் இணங்கி வருகின்ற நீங்கள் மதத்தால், ஒரு

— முஸ்லிமாகவோ
— கிறிஸ்தவராகவோ
— பௌத்தராகவோ
— இந்துவாகவோ

அல்லது வேறு ஏதாவது ஒரு மதத்தில் நம்பிக்கை உடையவராகவோ இருக்கலாம். சிலவேளை, “எந்த மதமும் எனக்கு வேண்டாம்; எதிலும் எத்தகைய நம்பிக்கையும் எனக்கில்லை!” என்று கூறும் ஒரு நாத்திகராகவும் இருக்கலாம். இவ்வாறு கூறுவதும் ஒரு வகையான நம்பிக்கைசார்ந்த கூற்றே - ‘எந்த மதத்தையும் நம்பமாட்டேன்!’ என்ற நம்பிக்கை.

இனி, இத்தகைய நம்பிக்கைகளுடன் சேர்த்தோ அல்லது சேர்க்காமலோ, நீங்கள்

— மேற்கத்திய சிந்தனை
— முதலாளித்துவம்
— நவீன ஜனநாயகம்
— கம்யூனிஸம்

போன்ற தற்கால கொள்கைகளில் ஆர்வங்கொண்டு, அவற்றின் வழியில் உழைப்பவராகவும் இருக்கலாம்; அத்துடன் நாடு, இனம், மொழி, தேசம் என்பவற்றில் பற்றும் பாசமும் கொண்டு, அவற்றின் வழியில் எழுச்சி காண பாடுபடுபவராகவும் இருக்கலாம்.

உங்கள் மதம், கொள்கை, உழைப்பு என்பன எவ்வாறு இருப்பினும் நீங்கள் நல்லவற்றை விரும்புவீர்கள்; தீயவற்றை வெறுப்பீர்கள். நற்பண்பு, நன்னடத்தை, நீதி, நேர்மை, கட்டுப்பாடு, ஒழுங்கு என்பவற்றை மதித்து, ஏற்று வாழ்வோரைக் கண்டால் மட்டற்ற மகிழ்ச்சி அடைவீர்கள்; இவற்றை மதிக்காது மனம்போன போக்கில் வாழ்வோரைக் கண்டால் மனச்சோர்வுற்று வேதனை அடைவீர்கள். இது நீங்கள் மனித சமுதாயத்தின் மீது வைத்துள்ள வரம்பற்ற பாசத்தின் வெளிப்பாடாகும் என்பதில் எவரும் ஐயம் கொள்ள முடியாது.

## எங்கும் தீமைகள்!

ஆனால், நீங்கள் வாழும் சூழல், தொழில் புரியும் இடம், மக்கள் நடமாடும் சந்தைகள், மாணவ மாணவியர் கல்வி கற்கும் கலைக்கூடங்கள், பொது ஸ்தாபனங்கள், பொதுசன தொடர்புச்சாதனங்கள் போன்ற பலவற்றில் எவற்றைக் காண்கிறீர்கள்? நாளாந்த செய்திகள் தரும் தகவல்கள் என்ன?

உங்களுக்குத் திருப்தியைத் தரக்கூடிய காட்சிகள், செய்திகள் என்பன இல்லாமலில்லை; ஆறுதல் அளிக்கும் அம்சங்களும் இருக்கவே செய்யும். என்றாலும், அவற்றைக் கடந்த பொதுவான பார்வையொன்றைச் செலுத்தினால், நீங்கள் காணும் காட்சிகளும், செவிமடுக்கும் செய்திகளும் உங்கள் உள்ளத்தைப் பிழிந்தெடுப்பனவாகவே இருக்கும்; அவ்வளவு கொடுமையானவை அந்தக் காட்சிகளும் செய்திகளும்!

எத்தனை வகையான

— மதுபானங்கள்
— போதைப் பொருட்கள்
— சூதாட்டங்கள்
— பொருளாதார சுரண்டல்கள்

நாம் வாழும் சூழலை மாசுபடுத்தியுள்ளன; மாசுபடுத்தி வருகின்றன! இவற்றுடன் முடிந்ததா?

இன, மத, மொழி வேற்றுமை, வயதெல்லை போன்ற யாவற்றையும் கடந்து, ஆண் பெண் இருபாலாரதும் தீய உணர்வுகளைத் தட்டி எழுப்பி, ஒழுக்கத்தைக் கெடுக்கும் எத்தனை வகையான வழிமுறைகள் இன்று நம் மத்தியில் இருக்கின்றன என்பதைப் பாருங்கள்.

மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட மகத்தான பொதுசன தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகள், நூல்கள், சினிமா, தொலைக்காட்சி, வானொலி போன்றவை மட்டுமல்ல, விளம்பர அட்டைகள், சுவரொட்டிகள் கூட எவ்வளவு இழிவான கருத்துக்களையும் காட்சிகளையும் மக்கள் முன் எடுத்து வைக்கின்றன என்பதை எண்ணிப் பாருங்கள். கவிதைகள், கதைகள், பாடல்கள் போன்ற இலக்கியங்கள் கூட விரசத்தை விளம்பரப்படுத்துபவையாக உள்ளனவே!

இவை போதாதென்று, மேற்கு நாடுகளில் தவறான வாழ்வுக்கு இரையாகி, விரக்தியும் வேதனையும் கொண்ட இளைஞர்களும் யுவதிகளும் உல்லாசப் பயணிகளாக நாடு நாடாகப் பயணம் செய்து தருகின்ற கொடிய உணர்வுகள், கூடாத பழக்கங்கள் கணக்கற்றவை. அவற்றால் நமது இளம் சந்ததியினர், நாட்டுக்கும் வீட்டிற்கும் பயனுடையவர்களாய் அமையவேண்டிய அணியினர், காலத்தை வென்ற வேகத்துடன் கெட்டுச் சீரழிந்து வருகின்றனரே!

இன்று வாழ்வின்

— எல்லாமே பணமயமாகி விட்டன!

— மனிதனின் எண்ணம், எதிர்பார்ப்பு, கண்ணியம், கற்பு, பார்வை பேச்சு, உதவி, ஒத்தாசை என்பன எல்லாமே 'பணத்திற்குத்தான்' என்றாகி விட்டனவோ என்று எண்ணும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது!

இதன் விளைவாக ஏமாற்று, லஞ்சம், பொய், திருட்டு, கொலை, விபசாரம், குடும்பச் சீரழிவு, கொடிய நோய்கள் போன்றவை நமது சூழலை, நாட்டை மட்டுமன்றி உலகையே ஆக்கிரமித்துள்ளன. இதனால், வறுமை, துன்பம், அமைதியின்மை என்பன எங்கும் வியாபித்து வளர்ந்து செல்வதை நாம் காண்கின்றோமல்லவா!

இன்று ஒரு நாய் ஒரு தெருவிலிருந்து மறு தெருவிற்குப் போய் விட்டுப் பத்திரமாகத் திரும்பி வந்துவிட முடியும். ஆனால், மனிதனின் நிலையோ அந்த நாயின் நிலையை விடத் தாழ்ந்து போய் விட்டது. ஒருவனோ ஒருத்தியோ தமது வீட்டைவிட்டு வெளியே சென்றால், அவர்கள் திரும்பி வரும்வரை அவர்களது உயிருக்கு உத்தரவாதம் கிடையாது. அந்த அளவுக்குக் கொலை வெறி எங்கும் தாண்டவமாடுகின்றது. ஒருவனின் உழைப்புப் பணம் எப்பொழுதும் கொள்ளையிடப் படலாம்; ஒருத்தியின் கற்பு எந்த வேளையிலும் பறிக்கப் படலாம் எனும் அளவுக்கு, உலக மக்களுள் பெரும் பகுதியினர் அச்சத்தின் விளிம்பில் நிம்மதியிழந்து தடுமாறுவதை உங்களால் மறுக்க முடியுமா?

## பரிகாரங்கள் பயன்தரவில்லையே!

இத்தீமைகளை இல்லாதொழித்து நல்லவற்றை நிலைபெறச் செய்வதற்கு பல மட்டங்களில், பல்வேறு அமைப்புக்கள்-அரசுகள் கூட, பல விதமான முயற்சிகளை மேற்கொள்வதைப் பார்க்கின்றீர்கள்.

கல்வி, பொருளாதார, சமூகத் துறைகள் சீரமைத்தல், மத வழிபாடுகள் அதிகமதிகம் ஊக்குவிக்கப்படல், முன்னோர்களது வாழ்வை வரலாற்றை எடுத்துக்காட்டி மக்களை நெறிப்படுத்த ஆவன செய்தல் போன்றவை அத்தகைய முயற்சிகளில் முக்கியமானவையாகக் குறிப்பிடலாம்.

பயங்கரத் தீமைகள் மற்றும் பாவமான காரியங்கள் மக்கள் மனங்களில் பதியும் வண்ணம் ஆக்கங்களை வழங்கும் பொதுசன தொடர்புச் சாதனங்கள்

கூட, பலவிதமான உத்திகளைக் கையாண்டு நல்லன போதனை செய்யாத நாளே இல்லை; சற்று முன்னர் நான் குறைகூறிய பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சி என்பவற்றைத்தான் குறிப்பிடுகின்றேன்!

மேலும், புனித நாட்களில், புண்ணியத் தளங்களில் மக்கள் கூட்டங்கூட் டமாகச் சேர்ந்து பக்திப் பரவசத்துடன் போதனைகளை செவிமடுப்பதும் வழி பாடுகளில் ஈடுபடுவதும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். அவற்றைக்காணும் நீங்கள், "ஆகா, என்ன பக்தி! எத்தனை உயர்வான வழிபாடுகள்! இனி நாடே சொர்க்க பூமிதான்!" என்று நினைத்துப் பெருமிதம் அடைவீர்கள். அப்படி நீங்கள் நினைப்பதில் தவறு இல்லை. நான் இத்தகைய வழிபாடுகளைக் குறைத்து மதிப்பிடுவதாக நீங்கள் கருதக் கூடாது. மனித வாழ்வு பாவங்களிலிருந்து விடுபட்டு தூய்மை அடைய வேண்டும் என்பதில் எனக்கும் தனியாத ஆர்வம் உண்டு.

எனினும், என்ன துரதிருஷ்டம்!

இத்தனைக்குப் பின்னரும் மக்களில் பெரும்பான்மையினருக்கு

— நல்லன வேம்பாய்க் கசக்கின்றன!
— தீயன தேனாய் இனிக்கின்றன!

பலரும் நல்ல வழியில் நடப்பதை விட்டுவிட்டுத் தீய வழியில் செல்வதில் ஆசையும் ஆர்வமும் கொண்டு செயற்படுவதைத்தான் எங்கும் காண முடிகின் றது. இந்த வேதனைதரும் நிலையைக் காணும் நீங்கள் சற்று முன், "நாடே சொர்க்க பூமிதான்!" என்று கொண்ட நினைப்பை மாற்றிக் கொண்டு, "இனி என்றுமே நல்லவற்றிற்கு உலகில் இடமில்லாது போய் விடுமோ?" என ஏக்கம் கொள்வீர்கள். அந்த அளவு வேகமாக நல்லவற்றுடனான உறவுகளை அறுத் துக்கொண்டு தீயவற்றின்பால் மக்கள் சாரிசாரியாக விரைவதைத்தான் நானும் நீங்களும் அன்றாடம் காண்கின்றோம்.[2]

---

**2.** சில உதாரணங்களைப் பாருங்கள் :

1. அமெரிக்காவில் ஒரு நாளில் மட்டும் 2753 கன்னிப் பெண்கள் கர்ப்பமடைகின்றனர். 1099 இளம் பெண்கள் கருவை கலைத்துக் கொள்கின்றனர். 367 இளம் பெண்களுக்குக் கருச்சிதைவு ஏற்படுகின்றது. 1287 திருமணமாகாத இளம் பெண்கள் பிரசவிக்கின்றனர். 666 குழந்தைகள் வளர்ப்பு பற்றியே அறியாத பெண்களால் ஈன்றெடுக்கப்படுகின்றன. 72 குழந்தைகள் தங்களின் முதல் பிறந்த நாளுக்கு முன்பே இறந்து விடுகின்றன. 9 குழந்தைகள் துப்பாக்கிச் சூட்டால் மரணமடைகின்றன. 5 இளைஞர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். 609 இளைஞர்களுக்கு மேக வெட்டை நோய் ஏற்படுகின்றது. 988 குழந்தைகள் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். 3288 குழந்தைகள் வீட்டை விட்டு ஓடிவிடுகின்றனர். 49,322 பிள்ளைகள் சீர்திருத்த பள்ளியில் இருக்கின்றனர். 2269 முறைகேடான குழந்தைகள் பிறக்கின்றன. 2989 குழந்தைகள் தங்களது பெற்றோர் விவாகரத்து செய்வதைப் பார்க்கின்றனர்.

பார்க்க : 'சமரசம்' இருவார இதழ், சென்னை-12, 16-31 ஜுலை 1992, பக்:32

2. இலங்கை மக்கள் 1983ல் 6,450,000 கலன் மதுவும் 1984ல் 6,600,000 கலன் மதுவும் அருந்தியுள்ளனர். 1985 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்த நிதியமைச்சர் மதுவின் மூலம் கிடைக்கும் வருமானத்தை இன்னும் அதிகமாக-ரூபாய் 185,000,000யாக எதிர்பார்ப்பதாகக் கூறியுள்ளார்.

பார்க்க : அல்ஹஸனாத் (இலங்கையில் வெளிவரும் மாத இதழ்), ஏப்ரல்-1985

நிச்சயமாக, மனித சமுதாயத்திற்குச் சாபக்கேடாக அமைந்துள்ள இந்நிலை உங்களுக்குத் தாங்கிக்கொள்ள இயலாத கவலையைத் தந்து விடும் என்பதில் ஐயமில்லை.

தீமைகளை இல்லாதொழிக்கவென எண்ணற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை அழியாது அசுர வேகத்தில் உலகெங்கும் பரவி வருகின்றனவே! என்ன காரணம்? ஏன் இந்த பரிதாப நிலை? இப்படி நீங்கள் சிந்திக்கலாம்; மண்டையைக் குழப்பிக் கொள்ளலாம். இவ்வினாக்கள் என் உள்ளத்தில் எழுந்தபோது எனக்குக் கிடைத்த பதில் :

- 'வழிகாட்டுதல்களில் காணப்படும் குறைகளே' என்பதாகும்.

நீங்கள்கூட சிந்தித்தால் இந்தப் பதிலே கிடைக்கப் பெறுவீர்கள் என்பது என் திடமான நம்பிக்கை.

நீங்கள் ஓர் ஓய்வு நேரத்தில், ஏகாந்தமான ஓர் இடத்தில் தனியாக அமர்ந்து கொள்ளுங்கள். அப்பொழுது மற்றவர்களின் தொந்தரவுகள் உங்களுக்கு இருக்கக் கூடாது. அத்தகைய அமைதி வேளையிலே தீயன பாபங்கள் சம்பந்தமான சாதக பாதக அம்சங்களை, சூழ்நிலைகளை மனதில்கொண்டு சொற்ப நேரம் சிந்தியுங்கள். அப்பொழுது - தீமைகள் எங்கிருந்து, எத்தகைய பலமான பின்னணியோடு உருவாகி, பரவி, மனித சமுதாயத்தில் இடம்பிடிக்கின்றன என்பதையும், அவற்றின் எதிரில் பல மதங்களும் அவை சார்ந்த ஒழுக்க மாண்புகளும் எவ்வாறு செயலிழந்து சாவின் மடியில் கிடக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

---

3. இலங்கை மக்கள் 1988ல் 3 கோடி 7 லட்சத்து 35,984 லீட்டர் சாராயமும், 1 கோடி 2 லட்சத்து 59, 051 லீட்டர் வெளிநாட்டு மதுபானங்களும், 21 லட்சத்து 36,246 லீட்டர் கள்ளும் அருந்தியுள்ளனர். இது 1987 ஆம் வருட பாவனையை விடக் கூடுதலானதாகும். 1987லிலும் பார்க்க 1988ல் அருந்திய சாராயத்தின் தொகை 16 லட்சத்து 21,490 லீட்டர்களாலும், வெளிநாட்டு மதுபானங்களின் தொகை 8 லட்சத்து 93,139 லீட்டர்களாலும் கூடியுள்ளன.
1987ல் மதுவரி மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் 133 கோடி 34 லட்சத்து 95,431 ரூபாவாகும். 1988ல் கிடைத்த வருமானம் 167 கோடி 97 லட்சம் ரூபாவாகும். இவ் விவரங்களை அரச வடிசாலை கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது.
பார்க்க : இலங்கையில் வெளிவந்த தமிழ்த் தினசரியான 'தினபதி' (16. 11. 1989)

4. இலங்கையில் நாளுக்கு நாள் கற்பழிப்பு, விபசாரம், கொலை போன்ற கொடுமைகள் பெருகி வருவதைக் குறிப்பிடும், சிங்கள நாளிதழில் வெளிவந்த கட்டுரையொன்று, இந்த யுகத்தை 'மிருக யுகம்' என்று வர்ணித்துள்ளது. அக்கட்டுரையில் 2½ வயது பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகள் முதல் வயதுவந்த பெண்கள் வரை, எவ்வாறு கெடுத்து, கொலை செய்யப்பட்டனர் என்ற விவரங்களைத் தருகின்றது.
பார்க்க : 'திவயின' சிங்கள நாளிதழ் (12. 7. 92) பக் : 5

குறிப்பு : இவை இக்கட்டுரை எழுதும்போது கிடைத்த மிகச் சொற்பமான தகவல்கள். இப்போது இவை இன்னும் பன்மடங்காகக் கூடியிருக்கும். அதோடு, மற்றும் பல நாடுகளில் நடக்கும் பாவ காரியங்களைத் திரட்டினால் அவை ஒரு தனி நூலாகவே வந்துவிடும். சிந்திப்போருக்கு இவை போதுமானவை.

உதாரணத்திற்கு இரண்டொரு விடயங்களைக் குறிப்பிடுகிறேன்; நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக:

"மது தீமைகளின் தாய்!" என்று நான் கூறி நீங்கள் அறிய வேண்டும் என்பதில்லை. குடிகாரன் கூட அதன் தீமையைத் தெரிந்துகொண்டுதான் குடிக்கின்றான். மேலும், அதன் கொடுமைகள் எப்படி மனிதனை வதைத்து வருகின்றன என்பதை முழு உலகமும் நிரூபித்துக் கொண்டு இருக்கின்றது.

என்றாலும் என்ன?

இன்று அதிகார பீடங்கள்-அரசுகள்-அதிகமான நாடுகளில் மதுவை சட்டத்தின் மூலம் ஆகுமாக்கியுள்ளன; "குடித்துவிட்டு குடிகெடுங்கள்!" என்பது போல், அதன் பயங்கர பாதகங்களை நன்கு அறிந்துகொண்டே உற்பத்திக்கும், இறக்குமதிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது; விற்பனை நிலையங்கள் அமைத்து, மக்களைக் கவர்ந்திழுக்கும் விளம்பரங்கள் செய்து, விற்கவும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. 'மதுவின்றி எதுவும் இல்லை' எனுமளவுக்கு மக்கள் வாழ்வை மதுவுடன் இணைத்து, மதுவாற்றில் நீந்தச் செய்துவிட்ட பெருமை அரசுகளுக்கு உண்டு. காரணம், மதுவினால் எவர் எக்கேடு கெட்டாலும் அரசுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் வந்து குவிகின்றனவே; கொழுத்த வருமானம் (?) இருக்கின்றதே என்பதுதான்.

- ஆனால், மதங்களோ இந்த மதுபான உற்பத்தியை, இறக்குமதியை, விளம்பரங்களை தடைசெய்யவோ, தடுத்து நிறுத்தவோ முடியாத அதிகாரமற்றவையாக, மடாலயங்களுக்குள் இருந்து போதனை புரிகின்றன!

இந்தப் போதனையால் மக்களிடம் என்ன விளைவு ஏற்பட்டு விட்டது? குறைந்தபட்சம் மதுபாவனையை சொற்ப அளவிலேனும் தடுத்து நிறுத்த இந்தப் போதனைகள் சக்தி பெற்றனவா?

இன்னுமொரு விடயம்:

நீங்கள் பஸ் வண்டியில் பிரயாணம் செய்கிறீர்கள்; பாதையில் நடக்கின்றீர்கள்; சற்று ஓய்வெடுக்கவும், சந்தோசமாகக் காலத்தைக் கழிக்கவுமென குடும்பத்துடன் பூங்காவனத்திற்கும் பொது மைதானத்திற்கும் செல்கின்றீர்கள். அங்கெல்லாம் உங்கள் கண்கள் எதைக் காணுகின்றன? செவிகள் எவற்றைச் செவிமடுக்கின்றன?

உங்களால் அவற்றை -அந்த அசிங்கங்களை விவரிக்க முடியாது. அவ்வளவு ஆபாசமான, 'மிருகங்கள்தாம் மனித உருவில் வந்துவிட்டனவோ!' என்று நினைக்கும் படியான ஒழுக்கக் கேடான, தரங்கெட்ட பார்வை, பேச்சு, சிரிப்பு, நடத்தை என்பன தான் அங்கெல்லாம் ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கின்றன என்பதை நீங்கள் காணுகின்றீர்கள்.

இந்த மோசமான சூழல் நல்லவர்களைக் கெடுத்து விடும்; வளரும் சிறுவர் சிறுமியரை, இளைஞர்கள், யுவதிகளைக் கெடுத்து குட்டிச்சுவராக்கி விடும்

என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனினும், உங்கள் கண்ணெதிரே நடக்கும் இக்கொடுமையை, பயங்கர ஒழுக்கக் கேட்டை உங்களால் கண்டிக்க முடிகின்றதா? அப்படியே கண்டித்தாலும் அச்சூழலில் இருக்கும் மற்றவர்களது அனுதாபம் உங்கள் பக்கம் இருக்கும் என நீங்கள் நம்புகிறீர்களா?

"ஆம்" என்று உங்களால் பதில் கூற முடியாது!

உண்மையில், இது உங்கள் குற்றமோ அல்லது அவர்களது குற்றமோ அல்ல. சற்று நிதானமாக நோக்கினால் மக்களின் மனோநிலை, வாழ்வு பற்றிய கண்ணோட்டம், ஒழுக்கப் பண்பாடு பற்றிய உணர்வுகள் என்பன தீய கொள்கைகள், தவறான சிந்தனைகள் காரணமாக பெருமளவுக்குப் பாதிப்புற்றுள்ள நிலையைக் காண முடியும். அதனால் நன்மை தீமைகளைப் பகுத்துப் பார்க்க முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். சிலவேளை, அவற்றைப் பகுத்துப் பார்க்க முடிந்த சிலர் இருந்தாலும் தீமைகளின் வளர்ச்சி வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது மௌனிகளாகி விடுகின்றார்கள். எனவே, உங்கள் உணர்வும், தீமைகள் மீதான வெறுப்பும், மற்றும் கவலைகளும் உங்கள் உள்ளத்தில் பிறந்து அதிலேயே மடிந்துவிடும் துரதிருஷ்டத்தைத்தான் அனுபவிப்பீர்கள்!

இத்தகைய எண்ணற்ற தீமைகள் உருவாகி, பரவி, பலர் வாழ்வைக் கெடுத்து குட்டிச்சுவராக்குவதற்கு, வழிகாட்டல்களில் காணப்படும் குறைபாடுகளுடன்

— தீமைகள் நடப்பதற்கான சூழல்
— சட்டங்களில் காணும் ஓட்டைகள்
— வாழ்வின் அனைத்துமே பணமயமாதல்
— அரசு அதிகாரம்

போன்றவையும் மிக முக்கியமான காரணிகள் எனக் குறிப்பிட முடியும். இவற்றுடன் மற்றொரு அதி முக்கியமான அம்சம் தொடர்பான மக்களின் சிதைந்த கருத்துக்களும், அவர்களைத் தவறான வழியில் இட்டுச்சென்றுள்ளன என்று குறிப்பிடலாம்.

அதுதான்

● இறை நம்பிக்கை*

இத்தகைய சிக்கலான நிலைமையில்கூட அதிகாரமற்ற நல்ல மனிதர்கள் தீமைகளுக்கு எதிராகப் போராடலாம்; மிகச் சிறிய மட்டத்தில் அப்போராட்டக் கருத்துக்களுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கும் வாய்ப்பையும் பெறலாம். ஆனால், அவை சமூக மட்டத்தில் பாரிய விளைவைக் கொண்டுவரும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், அங்கு அரசு ஆதரவுடனும் மற்றும் பலத்த ஏற்பாடுகளுடனும் தீமைகள் தமது நிலையைப் பலப்படுத்திக் கொண்டிருப்பதாகும்.

---

* மேலதிக விளக்கம்பெற இறை நம்பிக்கையைப் பற்றிய பகுதியைப் பார்க்கவும்.

## மதங்களும் அரசுகளும் !

மனிதனிடம் மிகப்பெரும் செல்வாக்கைப் பதித்துள்ளவை தான் அற நெறிப் போதனைகளைக் கொண்ட மதங்களும், மக்களை ஆளும் பொறுப்பை ஏற்றுள்ள அரசு பீடங்களும். இன்று இவற்றின் நிலையென்ன என்று சிந்தித்துப் பாருங்கள். இரண்டும் இருதுருவப் பயணத்தையே மேற்கொண்டுள்ளன. மதங்கள் ஒரு புறம் செல்கின்றன; அரசு பீடங்களோ மற்றொரு புறம் செல்கின்றன. அரசு பீடங்களுக்கு எதையும் எப்படியும் செய்வதற்குரிய வலிமையும், வரையறையற்ற அதிகாரங்களும், சட்டத் துணையும் பாதுகாப்பும் மற்றும் சகல விதமான வசதிகளும் உள்ளன. ஆனால், மதங்களோ எத்தகைய அதிகாரமும் அற்றவைகளாகவும், விலங்கிடப்பட்டவைகளாகவும் மடாலயங்களுக்குள் முடங்கிக்கிடக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றின் ஆகக் கூடிய சேவை - ஒழுக்கப் போதனைகள் புரிவதும், சில கலாசார நிகழ்ச்சிகளை நடத்துவதும் மற்றும் சிறு சிறு செயற்பாடுகளுமேயாகும்.

இந்நிலை உருவாவதற்கு அரசு, மதம், வாழ்வு என்பன தொடர்பாக மனிதன் ஏற்படுத்திக்கொண்ட கருத்துக்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன எனக் குறிப்பிடலாம்.

அவையாவன :

- மதம் வேறு - அரசு வேறு!
- மதம் வேறு - வாழ்க்கை வேறு!
- மதம் மனிதனின் தனிப்பட்ட ஆன்மிக வழிபாடுகள் தொடர்பானது - அதற்கு அவனது அன்றாட வாழ்வுடனோ அரசுடனோ தொடர்பிருக்கக்கூடாது !
- "மதமா? மடாலயங்களுக்குள் வைத்துக் கொள்ளுங்கள்!" "வாழ்வா? அரசு வழிமுறைகளை அல்லது மனதில் எழும் கருத்துக்களை பின்பற்றுங்கள்!"

இப்படியான கருத்துக்களுக்கமைய அரசியல், பொருளாதார, சமூக, அறிவியல் சார்ந்த விடயங்களும், மனிதனின் அன்றாட வாழ்வு தொடர்பான மற்றும் பல அம்சங்களும் மத வழிகாட்டல்களிலிருந்து பிரித்து ஒதுக்கி வைக்கப்பட்டன. இவை, ஒன்றில் ஒவ்வொரு மனிதனும் தத்தமது மனோ இச்சைக்கு இயைந்த விதத்திலோ அல்லது தம்மைப் போன்ற மனிதர்களால் உருவாக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ற விதத்திலோ செயற்படுத்தப்படுகின்றன.

விளைவை நாம் பார்க்கின்றோம் அல்லவா!

உண்மையில், இந்த வகையில் மனிதர்கள் பெரும் தவறொன்றை இழைத்துள்ளார்கள். அதாவது அரசு அமைப்பை அனைத்துக்கும் உரிய மூலக்கருவாக ஆக்கி, மனிதர்களது வாழ்வு தொடர்பான அத்தனையையும் அதனிடம் ஒப்படைத்து விட்டார்கள். இது பெரும் தவறு. 'அரசு' என்பது ஒரு தேவையை அடைவதற்கான ஓர் அமைப்பு, சாதனம், கருவியேயன்றி வேறில்லை. அதற்குக்

கிடைக்கும் வழிகாட்டல்கள், அதை இயக்கும் மனிதர்கள் எப்படியோ, அப்படித்தான் அது இயங்கும். நல்ல வழிகாட்டலும் நல்ல இயக்குநர்களும் கிடைத்தால் நல்லன விளையும்; தீய வழிகாட்டலும் தீய இயக்குநர்களும் கிடைத்தால் தீயன விளையும்.

இந்நிலை உருவாவதற்கு மற்றொரு முக்கிய காரணியும் இருக்கின்றது. அதுதான் பல மதங்களின் இயற்கையான தன்மையும், மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டுதல் வழங்குவதில் அவற்றுள் காணப்படும் குறைபாடுகளாகும். மதப் புரோகிதம், மதப் புரோகிதர்களின் அறியாமை சார்ந்த நடவடிக்கைகள், மதங்களின் பெயரால் நடத்தப்படும் அக்கிரமங்கள் என்பனவும் ஏனைய காரணங்களாகக் குறிப்பிடலாம். இத்தகைய எல்லாமாகச் சேர்ந்து அரசு எனும் சாதனத்தை அனைத்துக்கும் மேலாக, 'ஆண்டவனாகக்' கருதும் நிலையை மனிதரில் உருவாக்கிவிட்டது.

"அப்படியாயின் நாம் என்ன செய்ய முடியும்? அடிப்படைத் தவறல்லவா அனைத்துத் தவறுகளுக்கும் ஆணிவேராய் அமைந்துள்ளது!" என்று நீங்கள் விரக்தியடைந்து மௌனமாகிவிட முடியாது; தீமைகளை வேரறுத்து வீழ்த்திவிட்டு நன்மைகளைச் செழுமையாய் வளர்த்தெடுத்து, மக்களை நல்லபடி வாழச்செய்யும் பணியிலிருந்து நீங்கள் ஒதுங்கி இருக்க முடியாது. அது மன்னிக்க முடியாத மாபெரும் தவறு; ஒரு நோயாளியை மருந்து கொடுத்துக் காப்பாற்றலாம் என்றிருந்தும் அப்படிச் செய்யாமல் அவன் சிறுகச் சிறுகச் சாவதைப் பார்த்திருப்பது போன்ற மாபெரும் தவறாகும்.

ஓர் உதாரணம் :

நீங்கள், எப்போதோ பெருக்கெடுத்தோடும் வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது அதிலிருந்து தப்புவது கஷ்டம் என்பது உங்களுக்குத் தெரிந்து விடுகின்றது. எனவே, "என்ன செய்வது? செத்துப் போகின்றேன்!" என நினைத்து அதிலிருந்து தப்பிப்பதற்கு வழி தேடாது இருப்பீர்களா? அல்லது "எப்படியாவது தப்பித்தே ஆகனும்" என்ற உணர்வுடன் அதற்கான வழியைத் துரிதமாகத் தேடுவீர்களா?

அதேபோல, யாரோ ஒருவன் ஆற்றில் அடித்துச் செல்லப்படுவதை உங்கள் கண்கள் பார்த்து விடுகின்றன. அப்பொழுது, "அவன் யாரோ, நாம் யாரோ; நமக்கேன் அவனைப் பற்றிய கவலை!" என்ற கல்நெஞ்சக்காரராக, அவன் நீரில் மூழ்கிச் சாவதைப் பார்த்திருப்பீர்களா? அல்லது அவனைக் காப்பாற்ற உங்களால் ஆன அதிகப்படியான முயற்சிகளை மேற்கொள்வீர்களா?

சொல்லுங்கள் பார்க்கலாம் !

நீங்கள் பொறுப்புள்ள, இரக்க சிந்தையுடைய ஒருவராக இருந்தால் ஒரு நிமிடமேனும் தாமதிக்க மாட்டீர்கள். மாறாக, வெள்ளத்துடன் போராடி உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே முயலுவீர்கள்; அதேபோல, ஆற்றில் அடித்துச் செல்லும் அந்த யாரோ ஒருவனையும் பாதுகாத்துக் கரைசேர்க்க பெரு முயற்சியை மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சியின் பயன் எதுவாகவும் இருக்

கலாம். ஆனால், ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுவது அவசியம்தான் என்பதை மறுக்க மாட்டீர்களே !

இப்பொழுது இதைக் கேளுங்கள் !

தீமை எனும் வெள்ளம் கரைபுரண்டோடுகின்றது. அது ஓடும் வேகத்தில் அடுத்தவரின் உயிர் உடைமைகளை மட்டுமல்ல, உங்கள் உயிர் உடைமைகளையும், வீடு வாசல்களையும், நீங்கள் பெற்றெடுத்து, கல்வி புகட்டி, அன்பு டன் பேணி வளர்த்துவரும் பிள்ளைகளையும், அவர்களது நல்லொழுக்கம், தூயபண்புகள், சீரியநடத்தை போன்ற மற்றும் பலவற்றையும் அள்ளிக் கொண்டு போய்விடும் போல் தெரிகின்றது.

மற்றொரு வகையில் கூறுவதாயின், 'தீமை' எனும் பயங்கரப் பேய் எங்கெல்லாமோ அலைந்து திரிந்து, எவரெவரையெல்லாமோ கெடுத்து, நிர்மூலமாக்கிவிட்டு, நாளை காலை உங்கள் வீட்டு வாசலில் வந்து நிற்கப் போகின்றது!

எனவே, 'ஒதுங்கிப் போகலாம்' என்றோ, 'சற்று தாமதித்து பிறகு பார்க்கலாம்' என்றோ நினைத்து அமைதியாக இருக்கும் அளவுக்குத் 'தீமை' ஒன்றும் சாமானியமானதாய் இல்லை. அது முழு உலகையும், ஒவ்வொரு மனிதனையும் அழிவின் விளிம்பிற்குக் கொண்டு செல்லப் புறப்பட்டுள்ள காட்டாற்று வெள்ளம்; பயங்கரப் பேய்; மனித சமுதாயத்தின் முதற்தரமான எதிரி!

அந்த அளவு பயங்கரமான 'தீமை' எனும் எதிரியை அழித்தொழித்து விட்டு மனித சமுதாயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நம் எல்லோருக்கும், ஒவ்வொரு தனி மனிதனுக்கும், ஏன் - உங்களுக்கும் இருக்கின்றது.

இந்த வகையில், நானும் நீங்களும் நம்பிக்கை கொண்டுள்ள மதமோ, கொள்கையோ அல்லது மற்றொரு வாழ்க்கை முறையோ பொருத்தமாகக் காணாவிடின், போதிய பயனுடையதாக இல்லாவிடின், புதியதொரு வழியை-வாழ்க்கை நெறியைப் பற்றி சிந்திப்பதில், பொருத்தமாகக் கண்டால் ஏற்றுக் கொள்வதில் தவறு இல்லையே!

எனக்கோ உங்களுக்கோ நோய் கண்டால் அதற்கான உரிய சிகிச்சையைத் தகுந்த டாக்டரிடம் பெற்று குணமடைய விரைவோம். அன்றி, சிகிச்சையளிக்கும் டாக்டரின் இனத்தை, மொழியை, மதத்தை ஆராய முற்பட மாட்டோம். அப்படித்தானே!

அதேபோன்று தீமைகள் படுவேகமாக வளர்ச்சியுற்று, எல்லா மனிதர்களையும் அதலபாதாளத்தில் தள்ளிவிடும் ஆபத்து இருப்பதை அறிந்தும் அது பற்றி கவலையற்று மௌனமாக இருப்போமா? அல்லது அந்தத் தீமைகளைத் துடைத்தெறிந்து விடும் ஆற்றல் நாம் ஏற்றுள்ளதைவிட மற்றொரு மதத்திற்கோ கொள்கைக்கோ இருப்பதைக் கண்டால், அதை ஏற்று பரிகாரங்காண, நாம்

காலங்காலமாக நம்பிவந்த கோட்பாடுகள் ஊடாகத் தயக்கத்துடன் பார்ப்போமா?

சகோதரரே, சகோதரியே! இது நீங்கள் நிதானமாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய விஷயம். நீங்கள் எடுக்கும் முடிவைப் பொறுத்துத்தான் மனித சமுதாயத்தின் ஆக்கத்திற்கோ அல்லது அழிவிற்கோ உரிய வழி உருவாக முடியும். இதிலிருந்து உங்கள் முடிவு எவ்வளவு முக்கியமானது என விளங்கிக் கொள்வீர்கள்.

நீங்கள் திறந்த மனதுடன், தெளிந்த பார்வையைச் செலுத்துவீர்களாயின் ஓர் அருமையான மார்க்கத்தை, சிறந்ததொரு வாழ்க்கை நெறியைக் காண்பீர்கள்.

அந்த மார்க்கம்

— திட்டமிட்டுத் தீமைகளை வேரறுத்தது.
— மனிதரிடையே புரையோடிக் கிடந்த பாவங்களை நீக்கியது.
— மனிதரை வாட்டிய பிரச்சினைகளை துடைத்தெறிந்தது.
— பிளவு பட்டிருந்த மக்களை ஐக்கியமாக்கியது.
— ஒழுக்க மாண்புகளை அடித்தளமாகக் கொண்ட மக்கள் சமுதாயத்தை உருவாக்கியது.

அத்தகைய அதியுயர்ந்த மார்க்கம் அருளப்பட்டதன் நோக்கமே, முழு மனித சமுதாயமும் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு புனிதத்துவம் பெற்று வாழ்வது எப்படி என்பதைக் காட்டித் தரத்தான் என அதன் மூலக் கிரந்தமான அல் குர்ஆன் பல்வேறு வசனங்கள் மூலம் தெளிவு படுத்தியுள்ளது.

● இந்த அழகிய மார்க்கத்திற்கு 'இஸ்லாம்' என்று பெயர்!

இந்த நன்னெறியை, நற்பயன் தரும் வாழ்க்கை முறையை நீங்கள் கட்டாயம் அணுக வேண்டும்; ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

"என்ன இது? மதப்பிரசாரமா? இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாகிவிட வேண்டும் என்று சொல்கிறீர்களா?" என்று அவசரப்பட்டுக் கேட்டு விடாதீர்கள்.

அப்படியல்ல. இதுவரை நாம் இருவரும் கருத்துப் பரிமாறிக் கொண்ட பிரச்சினைகள் தொடர்பாக இஸ்லாம் காட்டும் பரிகாரம் என்ன? அந்தப் பரிகாரம் இயற்கையானதா? அது யதார்த்தபூர்வமானதா? அதன் வழியில் சுபீட்சம் சாத்தியமானதா? போன்ற அம்சங்களை ஆராய்ந்து பார்க்கும்படி உங்களை வேண்டி நிற்கின்றேன்.

அதன் பின்னர் அதை ஏற்பதும் ஏற்காது இருப்பதும் உங்கள் பொறுப்பில் உள்ள விஷயம்.

# இஸ்லாம் என்றால் என்ன?

இன்று உலகிலுள்ள உங்களுக்குத் தெரிந்த மதங்களையும் மற்றும் கொள்கைகளையும் மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். அவை யாவும் ஒன்றில் அவற்றைக் கொண்டுவந்தவரின் பெயரில் அல்லது அவை தோன்றிய சமூகங்களின் பெயரில் அழைக்கப்படுவதைக் காண்பீர்கள். அத்துடன், அந்தப் பெயர்களில் எந்தப் பொருளும் இல்லை என்பதையும் நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

உதாரணமாக: இயேசு கிறிஸ்து கொண்டுவந்தார் என்ற கருத்தில், கிறிஸ்தவத்திற்கு 'கிறிஸ்தவ மதம்' எனக் கூறப்படுகின்றது; மகான் புத்தரும், கொன்ஃபியூஸியஸூம் அறிமுகப்படுத்திய மதங்கள் என்பதற்காக அவை முறையே 'புத்த மதம்' என்றும் 'கொன்ஃபியூஸிய மதம்' என்றும் அழைக்கப்படுகின்றன; 'யூதியா' என்றழைக்கப்படும் யூத கோத்திரத்தில் தோன்றிய மதம் 'யூத மதம்' என்றும், இந்தியாவில் இந்து சமூகத்தில் தோன்றிய மதம் 'இந்து மதம்' என்றும் அறிமுகமாயின; 'மார்க்ஸிய வாதம்' கால்மார்க்ஸின் பெயரில் குறித்துக் காட்டப்படுகின்றது. இப்படித்தான் ஏனைய மதங்களும் அழைக்கப்படுகின்றன; அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இஸ்லாம் இவ்வாறு அழைக்கப்படுவதிலிருந்தும், அறிமுகப்படுத்தப்படுவதிலிருந்தும் தூய்மையாக உள்ளது. இதற்கு தனிப்பட்ட ஒரு மனிதருடனோ, சமூகத்துடனோ, நாட்டுடனோ பெயர் ரீதியான எத்தகைய தொடர்பும் இல்லை. இஸ்லாத்தைச் சிலர் 'முஹம்மதிய மதம்' எனக் குறிப்பிடுகின்றனர். அது அவர்களது அறியாமை. அவ்வாறு குறிப்பிடுவதற்கு இஸ்லாத்தின் மூலாதாரங்களிலோ, இதனைத் தமது மதமாக ஏற்று, எழுதிக்குவித்த அறிஞர்களது நூல்களிலோ ஒரு சொல்லேனும் ஆதாரமாகக் காண்பதற்கில்லை.

உலகில் எப்பொழுது முதல் மனிதர் தோன்றினாரோ அப்பொழுதே - அன்றே - அவருக்கும் அவரிலிருந்து தோன்றும் சந்ததியினருக்கும் வழி காட்டவென இஸ்லாமும் அருளப் பெற்றது. அன்று முதல், மனிதர்கள் எவ்வாறு நேரிய வழியில் வாழ்வது என்பதை எடுத்தியம்பி, அதற்கான சூழலை அமைத்து, அவர்களைச் சுவனத்திற்குரியவர்களாய் ஆக்குவது அதன் இலட்சியப் பணியாக அமைந்தது.

எனவே, 1400 ஆண்டுகளுக்கு சற்று முன்னர், அரேபியாவில் தோன்றிய அருங்குணசீலர் முஹம்மத் (ஸல்)* அவர்களுக்குத்தான் முதன் முதலாவதாக இஸ்லாம் அருளப் பெற்றது எனக் கூறுவதில் எத்தகைய உண்மையும் இல்லை.

முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைக் கொணர்ந்த இறுதித் தூதர் ஆவார்கள். அவர்களுக்கு முன்னர், உலகில் முதல் மனிதராகத் தோன்றிய ஆதம்

---

* (ஸல்): 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' என்பதன் சுருக்கம். எனவே, (ஸல்) என வருமிடங்களிலெல்லாம் அதை முழுமையாக மொழிவது அவசியம். இதன் கருத்து : "அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர்கள் மீது உண்டாவதாக" என்பதாகும்.

(அலை)** அவர்கள் முதல் பல இறைதூதர்கள், பல்வேறு தேசங்களிலும், சமூகங்களிலும் தோன்றினர். அவர்கள் அனைவரும் போதித்து, வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறி 'இஸ்லாம்'தான்.

முஹம்மத் (ஸல்) அவர்களது வருகையுடன் இறைதூதர்கள் வருகை முடிவுற்றது; வேத வெளிப்பாடுகளின் வருகையும் முற்றுப் பெற்று விட்டது. அதன் பின்னர், உலகம் உள்ளவரை அனைத்து மக்களுக்கும் பொதுவான இறைதூதராக முஹம்மத் (ஸல்) அவர்கள் இருப்பார்கள்; பொதுவான மதமாக - மார்க்கமாக - இஸ்லாம் இருக்கும்.

இஸ்லாத்தைத் தந்தவன் - இப்பிரபஞ்சத்தைப் படைத்து, இதனுள் அடங்கப் பெற்றுள்ள அனைத்துப் பொருட்களையும், உயிரினங்களையும், படைப்புக்களில் மிகச் சிறப்பான மனிதனையும் படைத்து, பரிபாலித்து, போஷித்து பாதுகாத்துவரும் வல்லமை படைத்த இறைவனாகும்.

- இஸ்லாம் அந்த இறைவனை "அல்லாஹ்" என்று எமக்குக் கற்றுத் தருகின்றது!

அந்த அல்லாஹ்வுக்கு முற்றாக அடிபணிந்து வாழ்வின் சகல துறைகளிலும், எல்லா விவகாரங்களிலும் நடந்துகொள்ள வேண்டும் என்பது இஸ்லாத்தின் கோரிக்கையாகும். அதற்கான வழிகாட்டல்கள் அனைத்தும் அதனுள் அடங்கப் பெற்றுள்ளன. ஒருவர், "இந்த விடயத்திற்கு இஸ்லாத்தில் வழிகாட்டல் இல்லையே!" என்று குறைபட்டுக் கொள்வதற்குரிய மிகச் சிறு அம்சமேனும் இஸ்லாத்தின் வழிகாட்டலின்றி விடுபட்டதாக இல்லை என்பது ஐயம்-திரிபு-இல்லாத உண்மையாகும்.

இஸ்லாத்தைத் தனது வாழ்க்கை நெறியாக ஏற்று வாழ்பவன் எந்த நாட்டை, மொழியை, நிறத்தை, இனத்தை, வர்க்கத்தைச் சேர்ந்தவனாயினும், அவன் 'முஸ்லிம்' என்றே அழைக்கப்படுவான்.

இஸ்லாம் முழு மனித சமுதாயத்தையும் எல்லா விதமான

— அடிமைத் தளைகளிலிருந்தும்
— தீயன, பாபங்களிலிருந்தும்
— கொடுமைகளிலிருந்தும்

விடுவித்து, பாதுகாத்து, அல்லாஹ்வுக்கு மட்டும் சிரம் பணிந்து, நல்லன செய்து வாழ வழிகாட்டுகின்றது. இஸ்லாத்தின் பெயரே இதற்குச் சான்றாக அமையப் பெற்றுள்ளதை நீங்கள் அதன் கருத்திலிருந்து சிரமமின்றிப் புரிந்து கொள்வீர்கள்.

---

**(அலை): 'அலைஹிஸ் ஸலாம்' என்பதன் சுருக்கம். இப்படி வருமிடங்களில் இதனை முழுமையாக மொழிவது அவசியம். இதன் கருத்து: "அல்லாஹ்வின் சாந்தி அவர்கள் மீது உண்டாவதாக" என்பதாகும்.

'இஸ்லாம்' என்றால், 'கீழ்ப்படிதல், கட்டுப்படல், கட்டளைகளை நிறைவேற்றல்' எனப் பொருள்படும். அதற்குச் 'சாந்தி' என்றொரு சிறப்புப் பொருளுமுண்டு.

இக்கருத்துக்கள் எல்லாவற்றையும் இணைத்து நோக்கினால்,

- 'எவர்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து, அவன் கட்டளைகளை முழுமையாக நிறைவேற்றி வாழ்கின்றனரோ அவர்கள் வாழ்வில் அமைதியும் சாந்தியும் கிட்டும்'

என்ற கருத்து வெளிப்படுவதை நீங்கள் காண்பீர்கள். அத்தகைய வாழ்வொன்றே மனிதனின் ஈருலக வாழ்விலும் நிம்மதியையும் ஈடேற்றத்தையும் பெற்றுத் தருவதற்கு முடியும்.

இஸ்லாம் - எக்காலத்திற்கும் ஏற்புடையது; எச்சூழலுக்கும் பொருத்தமானது; எந்த நாட்டவரும் இலகுவில் பின்பற்ற சாத்தியமானது; காலத்தால் அழியாதது. மாறாக, காலவோட்டத்தின் தேவைகளையிட்டு, அடிப்படை அசைவுறாது விரிந்து கொடுக்கும் இயல்புடைய இனிய மார்க்கமாகும்!

இஸ்லாம் - எந்தவொரு மனிதனதும் இயற்கையான தேவைகளுக்கு இடைஞ்சல் தரும் மார்க்கம் அல்ல. மாறாக, அத்தகைய தேவைகளை இயற்கைக்கு இயைந்தவாறு நேரிய வழியில் பெற்றுக் கொள்ள வழியமைத்துக் கொடுக்கும் மார்க்கமாகும்!

இஸ்லாம் - மனிதனை, அவனது சுதந்திரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தி, மரத்துடன் பிணைத்துவிட்ட மாட்டின் நிலையில் வைக்கும் மார்க்கம் அல்ல. அதேவேளை, சுதந்திரம் வழங்குவதன் பேரில் எல்லாவிதமான கட்டுப்பாடுகளையும் கலைந்தெறிந்து விட்டு தெருவில் அலைந்து திரியும் நாயின் நிலைக்கு ஆளாக்கி விடும் மார்க்கமும் அல்ல. மாறாக, இந்த இரு நிலைக்கும் இடைப்பட்ட நடு நிலையில் எப்படி செயற்படுவது என்பதைக் காட்டித் தரும் மார்க்கமாகும்!

இஸ்லாத்தில், அல்லாஹ்வுக்கும் அவனது அடிமைகளான ஆண் பெண் சகலருக்கும் இடையில் தரகர் முறை என்றொன்று இல்லை; குருத்துவ அமைப்பும் இல்லை. எந்த ஓர் அடியானும் தனது எஜமானனைச் சுதந்திரமாக வணங்கவும், வழிபடவும், தன் தேவைகளையிட்டு சுயமாகப் பிரார்த்தனை புரியவும் உரிமை பெறுகின்றான். அந்த வகையில் மனித சமுதாயத்தைச் சேர்ந்த எல்லா ஆண்களும் பெண்களும் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே அடிமையாவார்கள் என்று இஸ்லாம் பிரகடனப்படுத்துகின்றது.

## அறிவுக்குத் தடையில்லை!

நீங்கள் அல்குர்ஆனை கையில் எடுத்துக் கொள்ளுங்கள். அது உங்கள் மொழியிலும் இருக்கின்றது. படித்துப் பாருங்கள். அப்பொழுது அறிவு தேடுவ

தன் அவசியத்தை வலியுறுத்தும் எண்ணற்ற வசனங்கள் உங்கள் முன்னே வந்து நிற்கும்.

அதன் ஒரு வசனம் இப்படிப் பேசுகின்றது:

- "உண்மையில் அல்லாஹ்வின் அடிமைகளில் ஞானமுடையோர் மட்டுமே அவனுக்கு அஞ்சுகின்றார்கள்."[3]

இந்த வசனம் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பதற்கான அடிப்படை அம்சமாக அறிவை-ஞானத்தைக்-குறிப்பிடுவதைப் பாருங்கள். ஒருவன் முஸ்லிமாக இருப்பதற்கு அறிவு அவசியம் என்பதைத்தான் இவ்வசனத்தின் கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்ள முற்படுகின்றோம்.

உண்மையில் இஸ்லாம் அறிவின் முன்னோடியாக, ஊற்றுக் கண்ணாகத் திகழ்கிறது எனக் குறிப்பிடலாம். இஸ்லாத்திலிருந்து தான் அறிவு எனும் சுனை ஊற்றெடுத்து, உலகெலாம் ஓடிச் சென்று, மக்களிடம் இருந்த மடத்தனம் எனும் அழுக்கை நீக்கியது. எனவே, இஸ்லாத்திற்கு அறிவுடன் எந்தப் பகையும் இல்லை என்பது தெளிவு.

இஸ்லாம் அறிவுடன் கொண்ட உறவின் காரணமாக விஞ்ஞானத்துடன் ஒருபோதும் மோதிக்கொண்டதில்லை; மோதிக் கொள்வதும் இல்லை. இஸ்லாம் எதிலும் தெளிவான திடமான முடிவுகளையே கொண்டுள்ளது. விஞ்ஞானமோ அனேகமானவற்றில் அனுமான முடிவுகளை - யூகங்களையே கொண்டுள்ளது. எவையெல்லாம் மிகச் சரியான விஞ்ஞான உண்மைகள் என்று தெளிவான சான்றுகளுடன் சமர்ப்பிக்கப் படுகின்றனவோ அவற்றுடன் இஸ்லாம் முரண்படுவது இல்லை; இணக்கம் கொள்கின்றது; இணங்கிச் செல்கின்றது.

இஸ்லாத்தின் நம்பிக்கை சார்ந்த அம்சங்கள், நடைமுறை சார்ந்த வழி காட்டல்கள் யாவுமே அறிவை அடிப்படையாகக் கொண்டவை. எனவேதான், "அறிவைத் தேடுங்கள்" என எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் இஸ்லாம் அறைகூவல் விடுக்கின்றது.

தொழுகையை எடுத்துக் கொள்ளுங்கள். அதை நினைத்தவுடன் நிறைவேற்றிட முடியாது. அதற்கெனத் தனியான ஒழுங்கு முறை இருக்கின்றது. எப்பொழுது, எதன் பக்கம் திரும்பி, எப்படி, எவற்றை ஓதி, எத்தகைய மனோ உணர்வுடன் அதை நிறைவேற்ற வேண்டும் என்ற வழிமுறையைப் புரிந்து கொள்ள வேண்டும்; உடற் சுத்தம், உடைச்சுத்தம், இடச்சுத்தம், உளச்சுத்தம் என்பன என்ன எனத் தெரிந்திருக்க வேண்டும்; தொழ வேண்டிய நேர காலங்களை அறிந்திருக்க வேண்டும்; தொழுவதால் வரும் நன்மைகள், அதை விடுவதால் வரும் கேடுகள் என்ன என்பன தெரிந்துகொள்ள வேண்டும்.

இப்படித்தான் இஸ்லாத்தின் எல்லாமே அறிவுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளன. எனவே, அறிவு இல்லாமல் இவற்றைப் புரிந்து கொள்ள முடி

---

*3. அல் குர்ஆன் 35 : 28*

யுமா? நடைமுறைப்படுத்த முடியுமா? இப்படியெல்லாம் இருக்கின்றதே என்பதற்காக இவற்றை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்தாது இருக்கத்தான் முடியுமா? சொல்லுங்கள் பார்க்கலாம்.

இன்னொரு அம்சத்தை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

இன்று, உலகில் வாழும் பெரும்பாலானோர் தாம் எதை நம்புகின்றோம், எதைச் செய்கின்றோம் எனச் சிந்தித்துப் பார்க்காமலே மூட நம்பிக்கைகளிலும், சடங்கு சம்பிரதாயங்களிலும் மூழ்கிக் கிடக்கின்றனர்; அல்லது யாரோ கட்டவிழ்த்துவிட்ட கட்டுக்கதைகள், கற்பனைகள், அற்புதங்கள் ஆகியவற்றை நம்பி நடக்கின்றனர்; அல்லது தாம் ஏற்றுக்கொண்ட கொள்கை, மதம், கோட்பாடு என்பன பற்றி எந்த அறிவையும் பெறாமல் எப்போதோ, யாரோ போதித்தவற்றை அப்படியே பின்பற்றுகின்றனர்.

இஸ்லாம் இத்தகைய போக்கை ஒருபோதும் ஏற்றுக்கொள்வது இல்லை. மற்றவற்றை எப்படிப் போனாலும், இஸ்லாத்தையேனும் பின்பற்றுவதில் கூட அறிவைப் பயன்படுத்துவதைத்தான் அது விரும்புகின்றது; வலியுறுத்துகின்றது.

அல்லாஹ் எப்படி எமது அறிவுணர்வைத் தூண்டுகின்றான் என்பதை நினைத்துப் பாருங்கள்:

● "அவர்கள் குர்ஆனைச்
சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அல்லது
அவர்களது இதயங்கள் மீது
பூட்டுகள் போடப்பட்டிருக்கின்றனவா?"[4]

இத்தகைய தூண்டுதல்கள் காரணமாகத்தான், மேற்குலக மக்கள் அறிவு குன்றி இருளில் தடுமாறிய வேளையில், இஸ்லாமிய உலகம் விழிப்புற்று அறிவு எனும் தீபத்தைச் சுமந்து நின்றது என வரலாறு கூறுகின்றது. முஸ்லிம் ஸ்பெயின் இதற்கு மிகச் சிறந்த சான்றாகும்.

மனிதன் தன் காலத்தை வீணாக்கி விடாது மரணிக்கும் வரை, பல்வேறு துறை சார்ந்த அறிவைப் பெற்று ஆக்கப் பணிகளில் ஈடுபடுவதற்கு இஸ்லாம் ஒருபோதும் தடைவிதிக்கவில்லை; மாறாக, அறிவின்பால் தூண்டும் ஓர் உந்து சக்தியாகவே திகழ்கின்றது என்பது எண்ணற்ற சான்றுகள் மூலம் வெளிப்படும் உண்மையாகும்.

## கருத்துச் சுதந்திரம்!

மனிதன் தனது பேச்சு, எழுத்து என்பன மூலம் வெளிப்படுத்தும் கருத்துக்கள் இருவகைப்படும்.

---

4. அல் குர்ஆன் 47:24

அவையாவன :

— ஆக்கத்திற்கு வழிகோலுபவை
— அழிவுக்கு வழிகோலுபவை

இவற்றில், அழிவுக்குத் துணை புரியும் கருத்துக்களை பேசவோ எழுதவோ இஸ்லாத்தில் அனுமதியில்லை. கோள், புறம், அவதூறு, மற்றாரின் மானம் மரியாதை என்பவற்றுக்கு ஊறு விளைவிக்கும் அபவாதங்கள், ஒழுக்கத்திற்கு மாசு கற்பிக்கும் கீழ்த்தரமான கருத்துக்கள், பொய் போன்றவற்றுக்கு இஸ்லாத்தில் இம்மியளவும் அனுமதி தரப்படுவது இல்லை.

அல்லாஹ் அறிவுரை பகர்கின்றான்:

● "இறை நம்பிக்கையாளர்களே!
எந்த ஆண்களும் மற்றெந்த ஆண்களையும்
பரிகாசம் செய்ய வேண்டாம்.
ஒருவேளை அவர்கள் இவர்களைவிடச்
சிறந்தவர்களாய் இருக்கலாம்.
எந்தப் பெண்களும் மற்றெந்தப் பெண்களையும்
பரிகாசம் செய்ய வேண்டாம்.
ஒருவேளை அவர்கள் இவர்களைவிடச்
சிறந்தவர்களாய் இருக்கலாம்.
நீங்கள் ஒருவரையொருவர் குத்திப் பேசாதீர்கள்.
ஒருவருக்கொருவர் மோசமான
பட்டப் பெயர்களைச் சூட்டி அழைக்காதீர்கள்.
இறைநம்பிக்கை கொண்டதன் பின்னர்
மோசமான பெயர்களைச் சூட்டுவது
மிகவும் கெட்ட விஷயமாகும்.
எவர்கள் இந்த நடத்தையைக் கைவிடவில்லையோ
அவர்கள்தாம் கொடுமைக்காரர்கள்.
இறைநம்பிக்கை கொண்டவர்களே!
அதிகமாக சந்தேகம் கொள்வதைத் தவிர்த்துவிடுங்கள்.
ஏனெனில், சில சந்தேகங்கள் பாவமாக இருக்கின்றன.
மேலும் துப்பறிவதில் ஈடுபடாதீர்கள்.
இன்னும் உங்களில் ஒருவர்
மற்றவரைப் பற்றி புறம் பேச வேண்டாம்.
உங்களில் எவரேனும் இறந்துவிட்ட
தன் சகோதரரின் இறைச்சியை உண்ண விரும்புவாரா, என்ன?"[5]

முஹம்மத் (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்:

● "அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறவர்கள்
நல்லவற்றையே பேசட்டும். அல்லது
எதையும் பேசாமல் இருக்கட்டும்."[6]

---

5. அல் குர்ஆன் 49: 11, 12
6. ஆதாரம்: புகாரி, முஸ்லிம். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்.

இஸ்லாம் இவற்றை "வேண்டாமே" என்று தடுப்பதற்குக் காரணம், இவற்றால் மனிதரிடையே வெறுப்பும், வீண் பிரச்சினைகளும் உருவாகி சண்டை சச்சரவுகள் தோன்றிவிடும் என்பதனால்தான்![7]

இவையல்லாத ஏனைய பேச்சுக்களுக்கும் எழுத்துக்களுக்கும் இஸ்லாத்தில் பூரண அனுமதியுண்டு; அவற்றை வெளியிடும் சுதந்திரமும் உண்டு. அத்தகையவைகளுக்குப் பல வழிகளிலும் ஊக்கமும் உற்சாகமும் தரப்படுவதும் உண்டு. இதன் விளைவாக இஸ்லாமிய உலகில் நடைபெற்ற அறிவியல் ஆய்வுகள் அனந்தம் எனக் குறிப்பிடலாம்.

இஸ்லாம் எழுத்துக்கும் பேச்சுக்கும் வைத்துள்ள வரையறை பற்றிய ஓர் உண்மையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, எழுத்தும் பேச்சும் ஒருவரது சிந்தனையின் வெளிப்பாடாகும். எனவே, அவற்றுக்கு வரையறை வைப்பது மூலம் நற்சிந்தனையை வளர்ப்பதற்கும் தீய சிந்தனையைத் தடுப்பதற்கும் விழைகின்றது என்பதே அவ்வுண்மையாகும்.

உண்மையில், எழுத்து பேச்சு தொடர்பாக இஸ்லாம் இட்டுள்ள வரம்பு முஸ்லிம் சமூகத்திற்குள் மட்டுமன்றி, அதற்கு வெளியிலும் பின்பற்றியேயாக வேண்டும் என்பதற்கான சான்றுகள் ஏராளமுண்டு.

## ஆசையை சாகடிப்பதில்லை!

அல்லாஹ் மனிதனை எந்த உணர்வும் அற்ற சதைப் பிண்டமாகப் படைக்கவில்லை. அப்படிப் படைக்கப் பட்டிருந்தால் அவன் இயங்க முடியாது. எனவே, அவனைப் படைத்த அந்தக் கருணையாளன் அவனுக்குப் பல வகையான உடலுறுப்புக்களைக் கொடுத்தான்; மற்ற எந்த உயிரினத்திற்கும் வழங்காத பேரருட்களான அறிவையும் வேறு பல விசேடத் திறமைகளையும் வழங்கினான். அத்துடன், உணர்வுத் தொகுதியினையும் வழங்கினான். இவ்வுணர்வுகள் அன்பு, பாசம், கருணை, ஈவு, இரக்கம், கோபம், கவலை, காமம்,

---

7. அண்மைக் காலத்தில் முஸ்லிம் பெயர்தாங்கிகளால் இஸ்லாத்திற்கு எதிராக எழுதப்பட்ட சில நாவல்கள் வெளிவந்தன. அவற்றின் மையக் கருவும், கதைசொல்லும் பாணியும் மிகக் கீழ்த்தரமாக இருந்ததால் முஸ்லிம்கள் அவற்றிற்கு எதிராகக் குரல் எழுப்பினர்; கிளர்ச்சி செய்தனர். ஆனால், மேற்கு நாடுகளில் இரண்டொன்று அவற்றை வரவேற்று, பரிசளித்து, பிரசுரித்து, மக்கள் கரங்களுக்குக் கிடைக்கவும் செய்தன. அத்துடன், அவற்றை எழுதியவர்கள் தம் நாடுகளில் தஞ்சம் புகுந்து வாழவும் அனுமதித்தன. மேலும், "முஸ்லிம்களிடம் சகிப்புத்தன்மை இல்லை; கருத்துச் சுதந்திரம் இல்லை!" என்று பாரிய அளவிலான பிரசாரங்களையும் மேற்கொண்டன. இன்னும் அத்தகைய பிரசாரங்கள் தொடர்கின்றன.

முஸ்லிம்கள் மதிக்கும் இஸ்லாத்தின் மீது 'அவமானம்' எனும் ஈட்டியைப் பாய்ச்சிய எதிரிகளின் செயல்கண்டு வேதனையுற்று, 'அது ஆகாத செயல்' என கிளர்ந்தெழுந்த முஸ்லிம்களின் எதிர்ப்பைக் கண்ட மேற்கத்தியர்-"அது கருத்துச் சுதந்திரத்தை அவமதிப்பதாகும்!" எனக் கூறுகின்றனர். அது உண்மையாயின், அதே ஈட்டியை அவர்கள் மதித்து, மரியாதை செய்யும் ஒருவரின் மீது திருப்பிப் பாய்ச்சினால் அவர்கள் என்ன கூறுவார்களோ? அதை 'நல்லது' என ஏற்று, போற்றி, பரிசளிப்பார்களா? அது அவர்கள் மானம், மரியாதை, கௌரவம் என்பவற்றுக்குக் கொடுக்கும் இடத்தைப் பொறுத்து அமையும். உலக நாடுகள் பலவற்றில் பல நூல்கள் தடைசெய்யப்பட்டுள்ளன என்பதும் மறப்பதற்கில்லை.

வேகம், சோம்பல், விரக்தி, நாணம், பயம் எனப் பல வகைப்படும். இவற்றுடன் மற்றொரு பிரதான உணர்வான 'ஆசை' என்பதனையும் அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ளான். இவை அனைத்துமே மனிதனைப் பல்வேறு வகைகளில் இயங்கத் தூண்டும் 'உந்து சக்திகள்' என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

சில மதங்கள், "மனிதன் மத்தியில் பிரச்சினைகள் தோன்றுவதற்கும் பிணக்குகள் வளர்வதற்கும், கவலைகள் உருவாவதற்கும் பிரதான காரணியாக அமைவது 'ஆசை' என்ற உணர்வே. எனவே, இதனை முற்றாகத் துறந்துவிட வேண்டும். அப்பொழுதுதான் மனிதன் விமோசனம் பெறுவான்!" என்று போதிக்கின்றன.

இதனை, அத்தகைய மதநூல் ஒன்றின் வாயிலாகவே நாம் நன்கு விளங்கிக் கொள்ள முயற்சிப்போம்:

"எல்லா வகையான துக்கங்களுக்கும், உயிரினங்கள் மீண்டும் மீண்டும் பிறப்பதற்கும் காரணியாக அமைவது பல விதமான தோற்றங்களில் காணப் படும் ஆசையாகும். பௌத்த தர்மத்தின்படி எல்லாமே ஒன்றோடொன்று தொடர்புற்று, ஒன்றிலொன்று தங்கியிருப்பதால் ஆரம்ப காரணமொன்று உருவாவதற்கு இடமில்லை. துக்கத்திற்குக் காரணியாகக் கணிக்கப்படுகின்ற ஆசைக்கும் கூட காரணியொன்று உண்டு. அதுதான் வேதனை என்பதாகும். வேதனையும் மற்றொன்றில், அதாவது ஸ்பரிசத்தின் காரணமாக உருவாகின்றது...... துக்கம் உருவாவதன் முதலாவது அல்லது ஒரே காரணி ஆசை அல்ல என்பது இதிலிருந்து தெரிகின்றது. எனினும், அது (ஆசை) மிகவும் நெருங்கிய, மிகவும் தெளிவான காரணியாகும்; பாரிய காரணியாகும்; எல்லா இடங்களிலும் வியாபித்து நிலைபெற்றுள்ள காரணியாகும்......

"இங்கு ஆசை என்பதில் காமம், செல்வம், அதிகாரம் போன்றவை தொடர்பான ஆசைகள் மட்டுமன்றி, பார்வைகள், கருத்துக்கள், வாதங்கள், எண்ணங்கள், நம்பிக்கைகள் போன்றவை தொடர்பான ஆசைகளும் எடுக்கப்படும். புத்தரின் விளக்கங்களுக்கு ஏற்ப வீடுகளிலான தனிப்பட்ட சண்டை சச்சரவுகள் தொடக்கம் நாடுகள், தேசிய இனங்கள் வரையிலான பெரும் போர்கள் வரையுள்ள உலகத்தின் எல்லாவிதமான பிணக்குகளும் இந்த ஆசை காரணமாகவே உண்டாகின்றன. இதிலிருந்து தெரிவது என்னவெனில் உலகின் பொருளாதார, அரசியல், சமூகப் பிரச்சினைகள் யாவும் ஆசையை மையமாகக் கொண்டே உருவாகின்றன என்பதாகும்.

(எனவே,) துக்கத்தை முழுமையாக இல்லாமலாக்க வேண்டுமாயின், துக்கம் உருவாவதற்கான பிரதான காரணியென முன்னர் கூறப்பட்ட ஆசைகளை இல்லாதொழிக்க வேண்டும்.

● "ஆசையில் ஒட்டிக்கொள்வதிலிருந்து, அதை முற்றாக சாகடித்தல்,

விட்டுவிடல், தூர எறிதல், அதிலிருந்து விடுபடல், அதில் கட்டுப் படாதிருத்தல் என்பன மூலம் விலகியிருக்க வேண்டும்."[8]

ஆசையைப் பொறுத்த வரையிலான இந்தக் கருத்து மனித சமுதாய நிலைப்பாட்டிற்குப் பொருத்தமானதா? நடைமுறைக்குச் சாத்தியமானதா? என நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

எது எப்படியோ, இஸ்லாம் இத்தகைய கருத்துக்களுடன் எத்தகைய உடன்பாடும் கொள்வதில்லை. மாறாக, இஸ்லாம் 'ஆசை' எனும் உணர்வைப் பெரிதென மதிக்கின்றது; மனிதன் இயங்குவதற்கு இன்றியமையாத ஒன்றெனக் கருதுகின்றது. எனவே, அதனை நெறிப்படுத்தி, சரியான வழியில், பயன்தரும் முறையில் இயங்கச் செய்கின்றது; அதன் செயற்பாடுகள் எல்லாமே ஒழுக்க வரம்பிற்கு உட்பட்ட விதத்தில் அமைவதற்கான வழிகளை அமைத்துத் தூய் மையாக இயங்கத் துணை புரிகின்றது.

நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆசை மட்டுமல்ல, மனிதனின் எல்லா உணர்வுகளும் நல்லன-தீயன இரண்டிற்கும் பயன்பட முடியும் என்பதை நன்குணர்வீர்கள்.

அதாவது, அவ்வுணர்வுகள்

— பெற்றுக்கொள்ளும் சிந்தனைகள்
— சந்திக்கும் மக்கள்
— நிலைபெறும் சூழ்நிலைகள்
— வேண்டிநிற்கும் தேவைகள்
— எதிர்நோக்கும் பிரச்சினைகள்

என்பவற்றுக்கமைய சரியாகவோ பிழையாகவோ இயங்க முடியும்; நல்ல தையோ கெட்டதையோ விளைவிக்கவும் முடியும்!

உதாரணமாக, 'கோபம்' எனும் உணர்வை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் இயற்கையான தன்மையில் "அது கூடாதா?" என நீங்கள் கேட்டால், "இல்லை!" என்றுதான் கூறுவேன். கோபத்தால் தீயன விளையுமாயின் அவை கூடாதுதான். அதேவேளை, தீய பாபகரமான செயல்களைக் கண்டு, கோப முற்று, கொதித்தெழுந்து, அவற்றைத் துடைத்தெறிய வேண்டும் என்ற உணர் வைப் பெற்றால், அதற்கான ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டால், கோபத்தைக் கோபித்துக்கொள்வதில் அர்த்தமுண்டா?

'அன்பு' எனும் உணர்வைப் பாருங்கள். அது இல்லாவிட்டால் வாழ்வில் இனிமை இருக்காது; முரட்டுத் தன்மைதான் மிளிர்ந்து நிற்கும். இந்த அன்புணர்வு அளவு மீறிச்சென்று நாம் அன்பு செலுத்தும் ஒருவரின் தீமை

---

8. බුදුන් වදාළ ධර්මය புத்தர் போதித்த தர்மம்), பேராசிரியர் வல்பொல ஸ்ரீ ராகுல தேரர், எம்.டீ. குணசேன, 217-ஓல்கட் ரோடு, கொழும்பு-11, இலங்கை வெளியீடு, 7 ஆம் பதிப்பு-1993, பக்: 42, 43, 50, 51, 52

களை அங்கீகரிப்பதாக இருந்தால் கூடாதுதான். அதேபோன்று ஒருவர் மீது செலுத்தும் அன்பானது அவரை சிரம் தாழ்த்தி வணங்கி வழிபடச் செய்யுமாயின் அது மிகப்பெரும் கொடுமைதான். ஆனால், பெற்றோர் - பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், மற்றும் உயிரினங்கள் மீது செலுத்தும் அன்பில் தவறு உண்டா?

'காமம்' என்ற உணர்வு ஒவ்வோர் ஆணிலும் பெண்ணிலும், உயிரினங்கள் அனைத்திலும் உள்ளது. அது ஒவ்வோர் உயிரினத்தினதும் விருத்திக்கு இன்றியமையாத ஓர் உணர்வாகும். இந்த உணர்வால் உந்தப்பட்ட ஆணும் பெண்ணும் இன்பம் பெற விழையும் பொழுது, இனப்பெருக்கத்திற்கும் வித்திடப்படுகின்றது. மதமோ மற்றொரு கொள்கையோ பின்பற்றப்படுவதற்கும் மனித இனம் இருக்க வேண்டுமே. இதற்குப் பெரும் துணையானது இக்காம உணர்வு. இதை, "வேண்டாம்; அடக்கிக் கொள்ளுங்கள்!" எனக் கூறுவது தனிப்பட்ட வெகு சிலருக்கு சிலவேளை பொருத்தமாக இருக்கலாம். ஆனால், உலக முழுவதற்கும், முழு மனித சமுதாயத்திற்கும் அல்லது துறவு பூணுவதன் பேரில் மனிதருள் ஒரு சாராருக்கும் நிச்சயமாகப் பொருந்த மாட்டாது; இதை அடக்கிக் கொள்வது சாத்தியப்படவும் மாட்டாது. ஒரு பேச்சுக்கு, "சாத்தியப் படும்; காம உணர்வைத் தடுத்துக்கொள்ளத்தான் வேண்டும்!" என்று முடிவெடுத்தால், ஓரிரு சந்ததிகளுடன் உலகம் சூனியமாகி விடும்; மனித இனமே அற்றுப் போய்விடும்!

அதற்காக, இக்காம உணர்வை 'எப்படியும் செயற்படட்டும்' என்ற கருத்தில் அது தொடர்பான வரம்புகளை நீக்கிவிடுவது விவேகபூர்வமானது அல்ல; ஆண்களையும் பெண்களையும் சுதந்திரத்தின் பெயரால் சுற்றித் திரியவும், ஆடிப்பாடவும், கலந்துறவாடவும் அனுமதிப்பதும் முறையல்ல. அனுமதிக்கப் பட்ட காரியங்களில் கூட கட்டுப்பாடும் வரையறைகளும் இருப்பது அவசியம். இதுதான் காம உணர்வு தொடர்பாக நாம் நடந்து கொள்ள வேண்டிய சீரான வழிமுறை.

'ஆசை' எனும் உணர்வை நோக்குங்கள். அதன் இயற்கையான அமைப்பில் அது பிழையானது அல்ல. மனிதன் உற்சாகமாக இயங்கவும், இயங்கும் அம்சத்தில் முன்னேறிச் செல்லவும் தூண்டுதல் வழங்கும் ஓர் அபார சக்தியாக அதைக் கொள்ளலாம்.

உண்மையில், இவ்வாசை உணர்வு உள்ளத்தில் தோன்றும் பல வகையான உணர்வுகளுடன் இணைந்து தோன்றும் ஒன்றாகும். வித்தியாசமான, ஒன்றோடொன்று தொடர்புடைய, ஒன்றுக்கொன்று முரணான பல உணர்வுகளுடன் ஆசை உணர்வுக்குத் தொடர்புள்ளது. அந்தத் தொடர்பு சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்ததாகும். எனவே, அந்தந்த சூழ்நிலைகளை நன்கறிந்து, நேரிய வழியில் நெறிப்படுத்தி, நடைமுறைக்குக் கொண்டுவருவது அவசியம். அன்றி, அதை மட்டந்தட்டி அடக்கிவைக்க முயலுதல் கூடாது. அப்படிச் செய்வது சாத்தியமும் இல்லை. ஏனெனில், அது மனிதனது இயற்றையான உடல

மைப்பின் உள்ளே பிரித்தெடுக்க முடியாது அமைந்துவிட்ட ஒன்று. எனவே, அதைத் தீர்த்துக்கட்ட எடுக்கும் முயற்சிகள் வேறு பல பாரதூரமான விளைவு களுக்கே நம்மை இட்டுச் செல்லும்.

இஸ்லாம் ஒருபோதும் ஆசையுணர்வை சாகடிக்க முயற்சிக்கவில்லை. மாறாக, அதன் தேவையை நேரிய வழியில் நிறைவு செய்து வைக்க ஆவன செய்கிறது.

உதாரணத்திற்கு இரண்டொரு அம்சங்களை உங்கள் சிந்தனைக்குத் தருவதற்கு விழைகின்றேன்:

ஒருவன் திருமணம் செய்துகொள்ள விரும்புகின்றான்; ஆசை கொள் கின்றான். இது மனிதரது பொதுவான தேவையொன்று; ஆண் பெண் இரு பாலாருக்கும் உரியது. சில மதங்களின் பெயரில் மடாலயங்களில் முடங்கிக் கிடக்கின்ற ஆயிரமாயிரம் பேர்களுக்கு இத்தேவை மறுக்கப்பட்டுள்ளது. அத னால் விளையும் விபரீதங்கள் அனந்தம். ஆனால், இஸ்லாம் இந்தத் தேவையை எவருக்குமே மறுக்கவில்லை. மாறாக, "திருமணம் செய்யுங்கள்!" என்று தூண் டுதல் வழங்குகின்றது. இத்தேவையை நிறைவு செய்வது சன்மார்க்கத்தின் பாதி யாகும் என்று கூறுவதுடன் அவன் யார் யாரை மணப்பது கூடாது என்ற விளக்கத்தைக் கொடுத்து மற்றாரை மணக்க அனுமதி கொடுக்கின்றது. உண் மையில், இது மனிதனின் இயற்கையுணர்வை மதிப்பதாக இல்லையா? நினைத் துப் பாருங்கள்.

இறைதூதர் (ஸல்) அவர்கள் இயம்பினார்கள்:

- "ஒரு மனிதன் மணம் புரியும்போது மார்க்கத்தின் பாதியைப் பூரணப் படுத்துகின்றான். பின்னர், மற்றப் பாதியையிட்டு அவன் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளட்டும்."[9]

அல்லாஹ் கூறுகின்றான்:

- "(பின்வரும் பெண்களை மணம் புரிவது)
உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளது:
உங்கள் தாய்மார்கள், உங்கள் புதல்விகள்;
உங்கள் சகோதரிகள், மற்றும்
உங்கள் தந்தையின் உடன் பிறந்த சகோதரிகள்,
உங்கள் அன்னையின் உடன் பிறந்த சகோதரிகள்; மேலும்
சகோதரனின் புதல்விகள், சகோதரியின் புதல்விகள், மேலும்
உங்களுக்குப் பாலூட்டிய செவிலித் தாய்மார்கள், மேலும்
உங்கள் பால்குடிச் சகோதரிகள், மேலும்
உங்கள் மனைவியரின் தாய்மார்கள்,
நீங்கள் உடலுடறவு கொண்ட மனைவியர் (தம் முன்னாள்

---

9. Al Hadees-vol:2, Al Haj Moulana Fazlul Careem, Malik Sirajuddin & Sons Publication, First Edition - Jan. 1979, Page No.633, அறிவிப்பவர்: அனஸ் (ரலி) அவர்கள். ஆதாரம்: பைஹகீ.

கணவர் மூலம்) பெற்றெடுத்து,
உங்கள் மடிகளில் வளர்ந்துள்ள புதல்விகள்,
ஆனால், (திருமணம் ஆகி) நீங்கள் அம்மனைவியருடன்
உடலுறவு கொள்ளவில்லையாயின்
(அவர்களை விடுத்து அவர்களின் புதல்விகளை மணமுடித்துக் கொள்வதில்)
உங்கள் மீது எத்தகைய குற்றமும் இல்லை. மேலும்
உங்கள் முதுகந்தண்டுகளிலிருந்து பிறந்த
உங்கள் புதல்வர்களின் மனைவியரை மணம் புரிவதும்,
இரு சகோதரிகளை நீங்கள் ஒருசேர மனைவியாக்குவதும்
(தடை செய்யப் பட்டுள்ளன.).....
மேலும் பிறருக்கு மனைவியராக இருக்கின்றவர்களும்
(உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளனர். ஆனால் யுத்தத்தில்)
உங்கள் கைவசம் வந்துவிட்ட பெண்கள் விதிவிலக்கானவர்கள்.....
இவர்களைத் தவிர மற்றப் பெண்களை
உங்கள் செல்வத்தின் வாயிலாக (மஹர் கொடுத்து)
அடைந்து கொள்வது உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது;
(ஆனால் இந்த நிபந்தனையுடன்)
திருமண வரையறைக்குள்
நீங்கள் அவர்களைக் கொண்டுவந்துவிட வேண்டும்.
அவ்வாறு செய்யாமல் அவர்களுடன்
நீங்கள் தகாத உறவில் ஈடுபடக் கூடாது.
மேலும் ஈமான் - இறைநம்பிக்கை கொண்ட
அடிமைகளல்லாத பெண்களைத் திருமணம் செய்து கொள்ள
உங்களில் எவர் வசதி வாய்ப்புப் பெறவில்லையோ அவர்
உங்கள் ஆதிக்கத்தில் இருக்கின்ற
இறைநம்பிக்கை கொண்ட அடிமைப் பெண்களில்
ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளட்டும்."[10]

திருமணம் தொடர்பாக அல்லாஹ்வும் அவன் தூதரும் மொழிபவற்றைப் பார்த்தீர்களா? இது தொடர்பான விளக்கம் இவ்வளவுதான் எனக் கருதிவிடாதீர்கள். இன்னும் ஏராளமான போதனைகளும் திட்டவட்டமான சட்டதிட்டங்களும் இருக்கின்றன.

ஒரு குடும்பம் என்பது முழு மனித சமுதாயத்தினதும் ஆரம்பநிலை. அது ஒழுங்காக, சீராக அமைந்தால் மனித சமுதாயமே சீரடையும் என்பது நீங்கள் அறியாதது அல்ல. இந்தக் குடும்ப அமைப்பின் உருவாக்கம் ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் ஆரம்பிக்கின்றது. அவ்விருவரிடம் குறித்த வயதை அடையும்போது முதிர்ச்சிபெறும் காம உணர்வு தொடர்பான ஆசை, ஆர்வம், விருப்பம் என்பன இருவருக்கும் இருவரது தேவையை ஏற்படுத்தி விடுகின்றன. இந்நிலையில் இதைத் தடுத்தால் என்ன விளைவைத் தரும்; எத்தகைய விளைவைத் தந்துகொண்டுள்ளது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். மறுபுறம், மனித

10. அல்குர்ஆன் 4: 23-25

இனப் பெருக்கத்தைத் தடை செய்யும் கொடுமை இதனால் நிகழ்கின்றது என்பதையும் நீங்கள் மறுக்க மாட்டீர்களே!

மற்றொருவன், உழைப்பில் - சம்பாத்தியத்தில் அதிக ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று நாடுகிறான் - ஆசை கொள்கிறான் என வைத்துக் கொள்ளுங்கள். உண்மையில் இதுவோர் அடிப்படைத் தேவை. சகல மனிதரும் ஒவ்வொருவரும் உணவு, உடை, உறைவிடம் என்பவற்றுக்காக உழைத்துத்தான் ஆக வேண்டும். உழைக்க இயலாதவர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் இதில் விதிவிலக்குண்டு.

இஸ்லாம் நேர்மையாகப் பொருள் திரட்டுவதை - உழைப்பதை பெருமளவு ஊக்குவிக்கின்றது. உலகில் தோன்றிய எல்லா இறைதூதர்களும் தமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்காக உழைப்பில் ஈடுபட்டுள்ளார்கள்; இறுதித் தூதர் முஹத்தத் (ஸல்) அவர்களும் வியாபாரம் செய்தார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். மதத்தின் பெயரால் குருத்துவம் பூண்டும், துறவறத்தை மேற்கொண்டும் உழைப்பை உதாசீனப்படுத்துவதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.

அல்லாஹ் அளிக்கும் அனுமதியைப் பாருங்கள்:

● "...... பின்னர் தொழுகை நிறைவேற்றப்பட்டு விட்டால்
பூமியில் பரவிச் செல்லுங்கள்;
அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள்."[11]

இப்படி, ஆசையுணர்வு சார்ந்த தேவைகளுக்கு, சொல்லும் செயலும் கொண்ட வழிகாட்டல்கள், இஸ்லாத்தில் ஏராளமாய் இருக்கின்றன. அவற்றை நீங்கள் தேடிப் படிக்க வேண்டும்; பிரமித்துப் போவீர்கள்!

"நல்ல ஆசைகளைப் பற்றித்தான் கூறுகின்றீர்கள். ஏற்றுக் கொள்கிறேன். அதேவேளை, தீய ஆசைகள் தோன்றுமாயின் என்ன செய்வது?" என்று நீங்கள் கேட்கலாம்.

நான் முன்னர் கூறினேன், "சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து அத்தகைய தீய ஆசைகளும் உருவாகலாம்" என்று. அப்பொழுது, அத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு இடந்தராத, அவை ஆதிக்கம் பெற முடியாத, சமூக அமைப்பைக் கொண்டுவருவதில் அதிகக் கவனம் செலுத்துதல் மிக அவசியம். அச்சமூக அமைப்பில் தீமைகள் வளராது தடுக்கும் வழிவகைகள், நீதி முறை, தண்டனைகள் என்பன அமையப் பெற்றிருக்கும்.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

---

11. அல் குர்ஆன் 62: 10

● "உலகில் நீ
ஓர் அந்நியனைப் போலவோ,
ஒரு வழிப்போக்கனைப் போலவோ வாழு!"[12]

இது உலகத்தைத் துறந்து, ஆசைகளை சாகடித்துக் கொண்டு வாழச் சொல்லும் ஒரு நபிமொழியல்ல. மாறாக மறுமையை இலக்காகக் கொண்டு இவ்வுலக வாழ்வை அமைத்துக் கொள்ளக் கூறும் நபிமொழியாகும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வுலகம், இதிலுள்ள படைப்புக்கள், உயிரினங்கள் போன்ற எதுவும் நிலையானவை அல்ல. என்றோ ஒருநாள் அழிந்துவிடும். மனிதன் கூட அழிந்து விடுவான். எனினும், மற்றவற்றுக்கு இல்லாத சில விசேட அருட்கள் மனிதனுக்குத் தரப்பட்டுள்ளன.

— சிந்தித்துச் செயற்படும் ஆற்றல்
— எதையும் பகுத்துணரும் தன்மை
— எதையும் தெரிவுசெய்து எடுத்துக்கொள்ளும் சுதந்திரம்
— இறை வழிகாட்டல்

இத்தனையும் பெற்றுக்கொண்ட மனிதன் இவற்றைப் பயன்படுத்தி இங்கு வாழ வேண்டும். அந்த வாழ்க்கை மறுமையில், அல்லாஹ்வின் சந்நிதானத்தில், அவனது கேள்விகளுக்குப் பதில் கொடுக்க வேண்டும் என்ற உணர்வுடன் அமைய வேண்டும். அப்பொழுது மனிதன் தீமைகளைக் கண்டால் நெருப்பைக் கண்டதுபோல் ஒதுங்கி நடக்க முற்படுவான். இப்படி, நிலையில்லாத இந்த வாழ்க்கை மூலமாக, நிலையான மறுமை வாழ்க்கைக்கானவற்றைத் தேடிக் கொள்ளும் முறைப்படி வாழவேண்டும் என்பதையே மேற்காணும் நபிமொழி நமக்குணர்த்துகின்றது.

இதுவரை நாம் பார்த்தவற்றிலிருந்து ஆசையுணர்வு தொடர்பான இஸ்லாத்தின் கருத்தைப் புரிந்திருப்பீர்கள். இஸ்லாம், ஆசையுணர்வு ஒரு வெறியாக மாறி, பாதகமான விளைவுகளையும் பெரு நஷ்டங்களையும் தருவதிலிருந்து திசைதிருப்பி, கட்டுப்படுத்தி, பயன்தரும் வகையில் நடைமுறைக்குக் கொண்டு வருவதை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது - எங்கெல்லாமோ ஓடும் ஆற்று நீரை அணைகட்டி, கட்டுப்படுத்தி, பயன்தரும் வகையில், வாய்க்கால்கள் மூலம் வயல் வெளிகளுக்குப் பாய்ச்சுவது போல!

இதனால், மனிதனின் இயற்கையான தன்மை பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றது. அதேவேளை, தீமைகள் உருவாகி, அவற்றின் போக்கில் வளர்ந்து, பாதகங்கள் விளைவிப்பதும் தடுக்கப்படுகின்றது.

எனவே, நீங்கள் இது பற்றி நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

12. ஆதாரம்: புகாரி

அப்பொழுது, இஸ்லாத்தின் தூர நோக்குடைய இந்தப் போக்கு எவ்வளவு சிறப்பானது என விளங்கிக் கொள்வீர்கள்.

இஸ்லாம் இயற்கையைப் படைத்த இறைவன் தந்த மார்க்கம்; இதன் வழிகாட்டல்களும் இயற்கை சார்ந்ததே!

## நீதியும் தண்டனையும்!

'இஸ்லாத்தில் கடுமையான, காட்டுமிராண்டித் தனமான தண்டனைகள் உண்டு!' என்று சிலர் எழுதி வைத்துவிட்டார்கள். அவற்றைப் படிப்பவர்களும் சிறிதளவும் ஆராயாது, 'அப்படித்தான்!' என ஒப்புதல் வழங்கி விடுகின்றார்கள். அவர்கள் கண்களில் படுவது களவெடுத்தால் கை வெட்டுவது, விபச்சாரம் புரிந்தால் கொல்வது போன்ற தண்டனைகள் மாத்திரமே.

இந்தத் தண்டனைகளும், இவை போன்றுள்ள இன்னும் பல தண்டனைகளும் எத்தகைய கட்டத்தில், எப்படி விசாரித்து, எந்த அளவு தண்டனை, எப்படி கொடுக்கப் படுகின்றது என்பன பற்றி நான் இங்கு எதுவும் குறிப்பிடுவது என் நோக்கமல்ல. ஏனெனில், அது விரிவாக எடுத்துக் கூற வேண்டிய தனியானதொரு தலைப்பு.

இங்கு, "முழுவதும் அமைதியை, சாந்தி, சமாதானத்தைப் போதிக்கின்ற மதமொன்றில் - இஸ்லாத்தில் - தண்டனை முறைகள் அவசியம் தானா?" என்ற வினாவைத் தொடர்ந்து, இஸ்லாத்தை வித்தியாசமாகப் பார்ப்பவர்கள் சிந்தனைக்கு சில வரிகள் எழுத விழைகின்றேன்.

ஒரு கொள்கையோ, மதமோ, வாழ்க்கை நெறியோ நின்று நிலைக்க வேண்டுமாயின், நல்ல முறையில் செயல்படுத்துவது அவசியமாயின் அதற்கு வெறும் போதனைகள் மட்டும் போதாது. அதோடு அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான

— 'களம்' எனும் சமூக அமைப்பும்
— 'வேலி' எனும் நீதி முறையும்
— 'சாட்டை' எனும் தண்டனைகளும்

இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எதுவுமே சாத்தியப் படாது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

மனிதன் பலதரப்பட்ட உணர்வுள்ளவன் என்பதை நான் முன்னர் விளக்கியுள்ளேன். அந்த உணர்வுகள் நல்லதையும் கொண்டுவரும்; தீயதையும் கொண்டுவரும். நல்லதைக் கொண்டுவந்தால் யாருக்குத் தான் ஆட்சேபனை உண்டு. ஆனால், தீயதைக் கொண்டுவந்தால்....?

இந்த இடத்தில்தான் நாம் இஸ்லாத்தின் உயர்வையும் பெறுமதியையும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது; அது யதார்த்தத்தில் மற்ற மதங்கள், கொள்கைகள் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது என்பதை அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இஸ்லாம் மற்றெந்த மதத்தையும் கொள்கையையும் விட உயர்ந்த இடத்தில் மனிதனை வைத்து மதிக்கின்றது. அவனுக்கு வெறும் உடலும் உயிரும் மட்டுமல்ல அறிவும் ஆன்மாவும் உண்டு என பறைசாட்டுகின்றது. இந்த வகையில் அவனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இடையில் பாரிய வித்தியாசம் இருப்பதாகவும் இயம்புகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான் :

● "திண்ணமாக,
நாம் மனிதனை
மிகச் சிறந்த அமைப்பில் படைத்தோம்."[13]

இத்தகைய சிறப்புடைய மனிதன் இச்சிறப்புக்கு இலக்கணமாகவே வாழ வேண்டும். அத்தகைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒப்பற்ற நெறிமுறைகள் அடங்கிய மார்க்கமே இஸ்லாம். அது மனிதனை வாழ்விக்கவென திட்டமிட்ட வழிமுறையொன்றைக் கைக்கொள்கின்றது. அந்த வழிமுறை ஐந்து அம்சங்களின் மீது அமைந்துள்ளது.

1. மனிதன் இவ்வுலகில் மிக உயர்ந்த குண ஒழுக்கத்துடன் வாழ்வதற்கான அத்தனை வழிகாட்டல்களையும் அவன் முன்னிலையில் வைத்தல்.

2. இவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான சூழலை அமைத்துக் கொடுத்தல்

3. இச்சூழல் கெட்டு விடாதிருக்க அவசியமான ஒழுங்குகளைச் செய்வதுடன், மனிதன் இச்சூழலைக் கெடுத்து விடாதிருப்பதற்கான வகையில் நீதி நெறிமுறைகளை அறிமுகப்படுத்தல்

4. இந்த நீதி நெறிமுறைகள் மீறப்படும் நிலையில் விசாரணை செய்யவும் ஒழுங்கை நிலைநாட்டவும் அவசியமான வழி வகைகளைச் செய்தல்

5. தவறு செய்பவர்கள் திருந்தாத பட்சத்தில், அவர்களுக்குத் தண்டனை வழங்குவதன் மூலம் மனித சமுதாயத்தையும் மேற்காணும் ஒழுங்கு முறையையும் பாதுகாத்தல்.

இஸ்லாத்தின் இவ்வொழுங்கை ஓர் உதாரணத்தின் மூலம் இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்வீர்கள் என நினைக்கின்றேன்:

ஆயிரக் கணக்கான வாகனங்கள் ஓடும், லட்சக் கணக்கான மக்கள் புழங்கும் பெரும் நகரமொன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அங்குள்ள பாதைகளில் வாகனங்கள் எப்படிப் போக வேண்டும், எங்கே நிறுத்த வேண்டும், எங்கே நிறுத்தக் கூடாது போன்ற ஏராளமான அறிவுரைகள் அந்நகர நிர்வாகிகள் மூலம் எல்லா வாகன சாரதிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. அதே போன்ற அறிவுரைகள் பாதைகளில் நடந்து செல்லும் பாதசாரிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. இத்துடன் முடியவில்லை. அந்தப் பாதைகளில் வாகனங்களும்

13. அல்குர்ஆன் 95:4

பாதசாரிகளும் இலகுவாக, ஆபத்தின்றி போவதற்கான சூழல் எனும் ஒழுங்கு செய்து வைக்கப் படுகின்றது. மேலும், 'இங்கு மேடு உண்டு', 'அங்கு பள்ளம் உண்டு', 'இந்த இடத்தில் வளைவு உண்டு', 'இது நாற்சந்தி', 'அடுத்த பக்கத்தி லிருந்து வாகனங்கள் வரலாம்', 'நிறுத்துங்கள்', 'அபாயம்' போன்ற எச்ச ரிக்கைகள், அறிவித்தல்கள், சமிக்கைகள் பெருமளவு ஆங்காங்கே இருப்பதை யும் காண முடியும். இத்தனையையும் மீறி நடந்து கொள்வோரை விசாரித்து, குற்றத்தின் தன்மைக்கேற்ப தண்டனை வழங்கவோ, குற்றம் காணாவிடத்து விடுதலை செய்யவோ ஒரு நீதித் துறையும் இயங்கிக் கொண்டுள்ளது.

மனிதனின் உயிர் பாதுகாப்புக்காகவும், பாதையில் பயணம் செய்வோரின் பயணத்தை இலகுவாக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பாரிய அமைப்பு முறையை ஒரு முட்டாள் அன்றி அறிவுள்ள எவரும் 'வேண்டாம்' எனக் கூற மாட்டார்கள் அல்லவா!

அப்படியாயின் இதே முறையில் அமைந்த போதனையும், ஒழுங்கும், கட்டுப்பாடும், நிர்வாகமும், நீதித் துறை சார்ந்த அம்சங்களும் குடும்பம், கல்லூரி, காரியாலயம், வர்த்தக நிலையம், மருத்துவமனை, கிராமம், நகரம், நாடு போன்றவற்றிலும் இருக்க வேண்டும் என்பதை யார்தான் மறுக்க முடியும்? அப்படி மறுத்தாலும் அது புத்திக்குப் பொருத்தமாய் அமைய முடியுமா?

ஒரு விஷயத்தை நீங்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். நல்லன உருவாவதும் தீயன விலகிச் செல்வதும் வெறும் போதனையால் மாத்திரம் சாத்தியமானது அல்ல. சிலர் சொல்வர்: "நன்மைகளை ஏவினால் தீமைகள் தாமாகவே அழிந்து விடும்" என்று. இவை தவறான சிந்தனைப்போக்கு என்பதற்கு வரலாறு சான்றாக அமைகின்றது. முன்னர் அது பற்றி விரிவாக விளக்கியுள்ளேன்.

முஹம்மத் (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸ், 'தீமைகள் தாமாகவே விலகிச் செல்லாது; அவற்றை நாம் விலகச் செய்தால் அன்றி!' என்பதை ஐயத்திற்கிட மின்றி தெளிவு படுத்துகின்றது.

அந்த ஹதீஸ் - நபிமொழி - வருமாறு:

- "உங்களில் எவர் தீமையைக் காண்கிறாரோ
அதனைத் தனது கரத்தால் (வலிமையால்) மாற்ற வேண்டும்.
அவ்வாறு இயலாது போனால்
நாவினால் அதை மாற்றுவதற்கு முயல வேண்டும்.
அதுவும் இயலாது போனால்
மனத்தில் அதை மாற்ற வேண்டும் என்னும்
துடிப்பாவது இருக்க வேண்டும்;
இது ஈமானின் (நம்பிக்கையின்) இறுதி நிலையாகும்."[14]

14. ஆதாரம் : முஸ்லிம். அறிவிப்பவர் : அபூ ஸயீத் (ரலி) அவர்கள்.

இப்படி மொழிந்த நபி (ஸல்) அவர்களின் செயல் ரீதியான நடவடிக்கைகளில் இருந்து பிறந்தவையே நீதி நெறி முறைகளும் தண்டனைகளும். இவையில்லாது நல்லன நிலைபெற மாட்டாது; தீயன விலகிச் செல்லவும் மாட்டாது.

ஒரு சிறிய உதாரணம் :

நீங்கள் பெற்றெடுத்த பிள்ளையின் மீது எவ்வளவு அன்பு செலுத்துகின்றீர்கள்; பாசத்தை எப்படியெல்லாம் அள்ளிக் கொட்டுகின்றீர்கள். அந்தப் பிள்ளை ஒழுங்காக வளருவதற்கும், நீங்கள் விரும்பும் கண்ணியமான இடத்திற்குக் கொண்டுவருவதற்கும் உரிய ஒரு சூழலை, அமைப்பை ஏற்படுத்துவீர்கள். அப்படித்தானே? அதோடு, எங்கோ ஓர் இடத்தில் உங்கள் பிள்ளைக்குத் தெரியும் வகையில் ஒரு பிரம்பையும் ஏன் வைக்கின்றீர்கள்? பிள்ளை தவறு செய்தால் சிற்சில வேளைகளில் அன்பாகவும் ஆதரவாகவும் புத்தி புகட்டியும் கேளாதபோது ஏன் அந்தப் பிரம்பால் அவனை அடிக்கின்றீர்கள்; தண்டனை வழங்குகின்றீர்கள்? மிகச் சிறிய மட்டத்தில் நீங்கள் எடுக்கும் இந்த நடவடிக்கைகள் எதனைக் காட்டுகின்றது? அந்தப் பிள்ளையை ஒழுங்காக வளர்த்தெடுக்க அன்பும் ஆதரவும் மட்டும் போதாது; இவற்றுடன் திட்டமும், சூழலும், கட்டுப்பாடும், மீறி ஏதாவது செய்துவிடும்போது விசாரித்து, அவசியமாயின் தண்டனையும் கொடுக்க வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

— அப்படியாயின் பாரிய மட்டத்தில், நாடளாவிய ரீதியில், இத்தகைய எல்லா ஒழுங்குகளும் பின்பற்றப்பட்ட பின்னர், மனிதன் செய்யும் குற்றங்கள் தொடர்பாக அவனுக்கு அறிவு புகட்டியும் திருந்தாத நிலையில், மனித சமுதாயத்தைப் பாதுகாக்கும் நோக்கில் தண்டனை வழங்குவதில் என்ன தவறு இருக்கின்றது?

சில மதங்கள் திருடுவது, விபச்சாரம் புரிவது, மது அருந்துவது போன்ற பெரும் பாவங்களில் 'ஈடுபடாதே!' என அறிவுறுத்துகின்றன. நல்லது; மறுப்பதற்கில்லை; மறுக்கவும் முடியாது. ஆனால், இரண்டு வினாக்கள்... தயைகூர்ந்து பதிலளிக்க வேண்டுகின்றேன். அந்த பதில் அந்தந்த மதங்களின் மூல நூல்களில் பதிவான செயல் ரீதியான நடவடிக்கைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. ஆண்களும் பெண்களும் இத்தீமைகளில் ஈடுபடாதிருக்க எடுத்த நடவடிக்கைகளும், உருவாக்கிய சமூக அமைப்பும் என்ன?

2. இத்தீமைகள் செய்த மக்கள் தொடர்பாக வழங்கிய தீர்வு என்ன? வெறுமனே போதனைகள் புரிந்து அத்தகையவர்கள் விட்டுவிடப்பட்டனரா? அல்லது தண்டிக்கப் பட்டனரா? என்னென்ன தீமைகளுக்கு எத்தகைய தண்டனைகள் வழங்கப்பட்டன?

இவை ஏதோ குறிப்பிட்ட சில மதங்களில் குறைகாணும் நோக்கில் கேட்கப்படும் கேள்விகள் என தயவுசெய்து நினைத்து விடாதீர்கள். உண்மையில், இக்கேள்விகள் மனித சமுதாயத்தின் நலனில் கொண்ட அக்கறையின்

விளைவாக என் உள்ளத்தில் உதித்தனவாகும். இங்கு ஒரு விடயத்தை நாம் மறந்துவிடலாகாது. அதாவது, சாதாரணமான போதனையால் திருந்திவிடும் சிலர் எங்கும் இருப்பர். இதனை முழு மனித சமுதாயத்திற்கும் உரிய ஒரு வழிமுறையாக நாம் எடுத்துக் கொள்ள முடியாது. சிறியதொரு செடியை எம் கரங்களால் பிடுங்கி எறிந்துவிட முடியும்; ஓரளவு வளர்ந்துவிட்ட மர மொன்றை, ஆல விருட்சத்தை அப்படிப் பிடுங்கி எறிய முடியுமா?

இஸ்லாம் வெறும் போதனைகளை மட்டும் கொண்டதொரு மதம் அல்ல, மாறாக, போதனைகள் புரிந்து, அவற்றை நடைமுறைப் படுத்துவதற் கான சமூக அமைப்பும் தந்து, அந்த நிலையையும் கடந்து தவறு செய்யும்போது தகுந்த விசாரணை செய்து, அவசியமாயின் தண்டனைகள் வழங்கும் மார்க்கமு மாகும். ஆனால், எடுத்த எடுப்பிலேயே எத்தகைய தயவு தாட்சணியமும் இன்றி கையை வெட்டுவதும், கல்லெறிந்து கொல்வதும், கசையடி கொடுப்பதும் இஸ் லாத்தில் இல்லை என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டத்தின் மற்றைய அம்சங்களில் போலவே, இவற்றிலும் நிதான மான, நீதி சார்ந்த, முற்றிலும் அனுதாபம் கலந்த நிலையே இருக்கின்றது.

குற்றம் புரிந்த மனிதர்களை திருத்துவதிலும், திருந்தாத பட்சத்தில் ஏனைய பெருமளவு மக்களை அக்குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் நீதி விசாரணை செய்து தண்டனை வழங்குவதிலும், இஸ்லாம் மிகுந்த அனுதாபத்துடன் நடந்துகொள்கின்றது என்பதற்கு வரலாறு சான்றாகத் திகழ்கின்றது.

## சமத்துவம் சார்ந்த வாழ்வு!

மனிதன் ஒரே நாட்டில், ஒரு தாய் வயிற்றில் பிறப்பவன் அல்லன்; ஒரே வகையான சூழலில் வாழ்பவனும் அல்லன். அவன் பல நாடுகளில் பல வகை யான தட்பவெப்ப தன்மைகள் உடைய பகுதிகளில் பலகோடி தாய்மார்களுக் குப் பிள்ளைகளாய் பிறக்கின்றான்; பல்வேறு சூழல்களில், பலதரப்பட்ட தொழில்கள் புரிந்து, உழைத்து, உண்டு வாழ்கின்றான்.

எனவே, அவனிடம் இன, நிற, மொழி, வர்க்க வேறுபாடுகள் இருப்பது இயல்பானதே. அத்துடன் அவனிடம் இயற்கையாகவே அமைந்து விடுகின்ற உடற்கூற்றுத் தன்மைகள், அறிவு, ஆற்றல் போன்றவற்றிலான உயர்வு தாழ்வுகள் என்பனவும் பல விதமான வேறுபாடுகளைத் தோற்றுவிப்பதும் மறுப்பதற் கில்லை.

நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் - இவற்றில் ஏதாவது, மனிதன் நினைத்து அமைகின்றதா? இல்லையே! உண்மை இப்படியிருக்க, இவற்றின் அடிப்படை யில் மனிதனை வேறுபடுத்திப் பார்ப்பதும், பிரச்சினைகளை உருவாக்குவதும், மனிதருள் ஒரு சாராரைச் சாக்கடைப் பிறவிகளாகக் கருதுவதும் எவ்வளவு பெரிய, மன்னிக்க முடியாத குற்றம். இதனால் ஏதாவது ஆக்கம் இருக்கின்றதா — அழிவைத் தவிர!

அல்லாஹ் கூறுகின்றான் :

● "மனிதர்களே! நாம் உங்களை
ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம்.
பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர்
அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு
உங்களை சமுகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம்.
உண்மையில்,
அதிக கண்ணியம் வாய்ந்தவர்
உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம்.
திண்ணமாக, அல்லாஹ்
அனைத்தையும் அறிந்தவனாகவும்,
தெரிந்தவனாகவும் இருக்கின்றான்."[15]

மேலும் அவன் கூறுகின்றான்:

● "வானங்கள் மற்றும் பூமியைப் படைத்திருப்பதும்,
உங்கள் மொழிகளும்,
உங்கள் நிறங்களும் மாறுபட்டிருப்பதும்
அவனுடைய சான்றுகளில் உள்ளவையே!
திண்ணமாக, இவற்றிலெல்லாம்
அறிவுடையோருக்கு நிறையச் சான்றுகள் உள்ளன."[16]

இந்த இறை வசனங்கள் எவ்வளவு ஆழமான, வேற்றுமைகளுக்கு மத்தியில் இணங்கி வாழ்வதற்குரிய கருத்துக்களை வழங்குகின்றன என்பதைப் பாருங்கள்.

இதன் காரணமாகத்தான் இஸ்லாத்தில் இன, நிற, மொழி வேறுபாடுகள் எதுவுமே பாராட்டப்படுவது இல்லை; இக்குறுகிய வட்டங்களில் மனித சமுதாயத்தைத் துண்டாடும் தீய செயல்களைத் தூண்டுவதும் இல்லை. மாறாக, இத்தகைய எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், எவரிடம் இஸ்லாம் வேண்டி நிற்கின்ற நம்பிக்கையும் நடைமுறையும் இருக்கின்றதோ, 'அவர் மிகுந்த கண்ணியத்திற்குரியவர்' என்பது இஸ்லாத்தின் தீர்க்கமான, தெளிவான முடிவாகும்.

இஸ்லாத்தின் பார்வையில் மனிதன் மத்தியில் இரண்டேயிரண்டு பிரிவுகள்தான் உண்டு; மூன்றாவது ஒன்று இல்லை!

— முதலாவது பிரிவு:

அல்லாஹ்வை மட்டும் தம்மைப் படைத்து, போஷித்து, பரிபாலித்து, பாதுகாத்து, பேணுதலாக வாழ்வதற்கான வாழ்க்கை முறையொன்றை

15. அல் குர்ஆன் 49:13 16. அல் குர்ஆன் 30:22

யும் தந்து நிற்கின்ற இறைவனாக ஏற்று வாழ்பவர்கள். இவர்கள் 'முஸ் லிம்கள்' என அழைக்கப்படுவர்.

— இரண்டாவது பிரிவு:

அல்லாஹ்வை விடுத்து வேறு இறை நம்பிக்கைகளையும் கொள்கை களையும் அவற்றுக்கு இசைவான நடைமுறைகளையும் கொண்டு வாழ்பவர்கள். இவர்கள் 'காஃபிர்கள்'* என அழைக்கப்படுவர்.

இவற்றிலிருந்து, இஸ்லாம் மனிதனின் நம்பிக்கையையும் அது சார்ந்த செயல்களையும் வைத்தே அவனை நோக்குகின்றது என்பதைப் புரிந்து கொள் வீர்கள். மற்றைய எத்தகைய வேறுபாடுகளும் இஸ்லாமிய வட்டத்திற்குள் அங்கீகாரம் பெறவே மாட்டாது.

இதேவேளை, இஸ்லாத்தை ஏற்காதவர்களது உயிர், உடைமைகள், கண்ணியம் மற்றும் உரிமைகளுக்கு ஊறு விளைவிப்பதையும் இஸ்லாம் ஒரு போதும் அனுமதிப்பது இல்லை. அவர்களுடன் நல்ல விதமாக நடந்து கொள்ள வேண்டும்; அவர்களுக்கு ஏதேனும் துன்பம் வந்தால் அதைத் துடைத்தெறியும் வகையில் துணை நிற்க வேண்டும்; தேவை ஏற்பட்டால் ஓடோடிச் சென்று உதவி புரிய வேண்டும்; அவர்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டால், தட்டிக் கேட்க வேண்டும்; ஆறுதல் அளிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களை மனிதர்கள் என்ற ரீதியில் மதித்து நடத்த வேண்டும்.

அத்தகைய எல்லாக் கட்டங்களிலும் முஸ்லிம்கள் இஸ்லாத்துடனான தமது உறவையும், 'முஸ்லிம்' என்ற உணர்வையும் மறந்துவிடக் கூடாது. இவற் றுக்குப் பாதகம் வராது பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அதாவது, எத்தகைய கட்டத்திலும், எது விடயத்திலும், எவருக்காவது உதவி புரிவதிலும் இஸ்லாம் விதித்துள்ள கட்டுப்பாட்டை, இட்டுள்ள வரம்பை மீறிச்செல்லக் கூடாது எனக் கூறப்படுவதையும் உங்கள் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இஸ்லாத்தின் இந்த எல்லைக்கோடு பற்றி நீங்கள் ஆட்சேபனை தெரிவிக்க மாட்டீர்கள் என நினைக்கின்றேன். ஏனெனில், ஒரு கொள்கையின் எல்லைக்கோடு அதனை ஏற்றவர்களால் தாண்டப்படுமானால், அங்கு அந்தக் கொள்கைக்கு எந்தப் பெறுமதியும் இருக்காது; அதன் வழிகாட்டல்கள் எத் தகைய நற்பயனையும் தரமாட்டாது என்பதை நீங்கள் அறிந்து வைத்தி ருப்பீர்கள்.

எனவே, தூய வழி நின்று, மனிதனை மனிதனாக மதித்து ஆக்கத்திற்கு அகத்தைத் திறந்து கொடுக்கும் இஸ்லாம் தன்னிகரற்றது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

---

* 'காபிர்கள்' என்றால் 'அல்லாஹ்வையும் அவனது மார்க்கத்தையும் ஏற்காதவர்கள், நிராகரிப்பவர்கள்' என்று பொருள்படும்.

## நிற வேறுபாடு!

சில நாடுகளை உற்றுப் பாருங்கள். அவற்றில் நிற வேறுபாடு காரணமாக எத்தகைய பாரிய அழிவுகள் இடம்பெறுகின்றன என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள். அந்த அளவு ஆழமாக அந்நாடுகளின் மக்கள் மனங்களில் நிற வேற்றுமையுணர்வு வேர்பிடித்துள்ளது. அந்நாடுகளில், ஒரு காலத்தில் அறிவியல் துறைகூட நிற வேற்றுமையை வலியுறுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது என்றால் பாருங்களேன்!

அமெரிக்கா அறிவியல் முதிர்ச்சியடைந்த நாடு என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் வானத்தைத் தொட்டுப்பார்க்கக் கோடிக்கணக்கான டாலர்களை, தங்குதடையின்றி ஓடும் கங்கை நீராய் செலவு செய்து வருகின்றனர். என்றாலும் அவர்களுக்குள்ளேயே நிறச்சண்டை ஓய்ந்தபாடில்லை; ஓயாது என்பதைத்தான் அங்கு அவ்வப்போது நடக்கும் அக்கிரமங்கள் உணர்த்துகின்றன.*

"நிற வேற்றுமை பாராட்டப்படுவது சரியே!" என்று கடந்த இரு நூற்றாண்டுகளாக அமெரிக்க நீதிமன்றங்கள்(?) தீர்ப்பு வழங்கி வந்துள்ளன; ஒன்றிரண்டல்ல, பல்லாயிரக் கணக்கான மனித உயிர்கள், 'அவற்றின் தோல் கரு நிறம்' என்ற ஒரே காரணத்திற்காக அடக்குமுறைகளுக்கும் எண்ணற்ற கொடுமைகளுக்கும் இலக்காக்கப்பட்டு வந்துள்ளன. அங்கு கறுப்பர்களுக்கென்றும் வெள்ளையர்களுக்கென்றும் தனித்தனி சட்டங்கள் அமுலில் இருந்து வந்துள்ளன; ஒரே கூரையின் கீழ்க் கறுப்பரும் வெள்ளையரும் கல்விகற்க முடியாது; வழிபாடுகளில் ஈடுபட முடியாது. இவற்றின் விளைவாக, 1954 மே மாதம் 17 ஆம் திகதி 'பல்கலைக்கழகங்களில் நிற வேற்றுமை கடைப்பிடிக்கப்படுவது நியாயமற்றதும், மனித சமுதாய கோட்பாடுகளுக்கு முரண்பட்டதும் ஆகும்' என அமெரிக்க உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியது.

பல நூற்றாண்டுகள் மிகக் கொடூரமான தவறுகள் இழைத்து கறுப்பர்களைக் கருவறுத்த பின்னர்தான், 'நிற வேற்றுமை நியாயமற்றது!; கைவிடப்பட வேண்டியது' என்று அமெரிக்க நீதி மன்றம் முடிவெடுத்தது. இருந்தும் என்ன, இன்றுகூட நிற வேற்றுமை காரணமாக வெறிபிடித்து மிருகத்தனமாய் நடந்து கொள்ளும் வெள்ளையர் அமெரிக்கா முழுவதும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இதே நிலை தென்னாபிரிக்காவிலும் நிலவுகின்றது. அங்கு கறுப்பு ஆபிரிக்கர்கள் - பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், மருத்துவ மனைகள், கிளினிக்குகள், விளையாட்டரங்குகள் போன்றவற்றிலிருந்து தூர ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளனர். தென்னாபிரிக்கக் கடற்கரை ஒன்றில், "இங்கு ஐரோப்பியர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்" என்ற அறிவித்தல் போடப் பட்டுள்ளது. அங்கு நாய்கள் அலைந்து திரிந்தால் அலட்டிக் கொள்ளாத

---

* 1992 பெப்ரவரி - ஏப்ரல் காலப் பகுதியில் லொஸ் ஏன்ஜல்ஸ் நகரில் ஆரம்பித்து, ஹொலிவுட் ஊடாகப் பரவி, நியுயார்க்கிலும் எதிரொலித்த நிறக் கலவரம் காரணமாக, சுமார் 60 பேர் வரை கொல்லப்பட்டனர்; சுமார் 100 கோடி டாலர்கள் பெறுமதியான பொதுச் சொத்துக்கள் அழித்து நாசம் செய்யப்பட்டன.

வெள்ளையர், கறுப்பர் இருப்பதைக் கண்டால் தீயை மிதித்தவர் போலாகி விடுவர். இவற்றின் காரணமாக அடிக்கடி கலவரங்கள் மூளுவதும், உயிர் உடைமைகளுக்குச் சேதம் விளைவிப்பதும் உலக மக்கள் யாவரும் அறிந்த விஷயமே. இந்நிலை இன்னும் பல ஐரோப்பிய நாடுகளில் நிலவுகின்றது.[17]

'இத்தனைக்கும் இவர்கள் யார்?' என தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். நான் சொல்லட்டுமா?

இவர்கள் எல்லோரும்

— ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள்!
— ஒரே மொழியைப் பேசுபவர்கள்!
— ஒரே மதத்தை - கிறிஸ்தவத்தை - சேர்ந்தவர்கள்!
— ஒரே சுவர்க்கத்தை வேண்டி பிரார்த்திப்பவர்கள்!
— மனிதர்கள்!

இவை, இவர்கள் இணங்கி வாழ்வதற்கான எத்தகைய அதியுயர்ந்த காரணிகள். இருந்தும் எவ்வளவு பயங்கரமான நிறவெறி; எத்தனை உயிர் வதைகள்; எவ்வளவு சொத்து செல்வங்கள் சீரழிவு!

- எல்லாவற்றிற்கும் மேலாக, இவர்கள் ஏற்றுள்ள கிறிஸ்தவ மதம் கூட நிறவெறியின் எதிரில் தோற்றுப் போய் விட்டதே!
  ஆச்சரியமாய் இல்லை?

இக்கொடுமைக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் கருத்தரங்குகள் நடத்தப் படுகின்றன; தீர்மானங்கள் எடுக்கப் படுகின்றன; அறிக்கைகளும் வந்த வண்ணம் உள்ளன. ஆனால், நிற வேற்றுமை நீங்கும் என்ற எதிர்பார்ப்பு நிறைவேற இன்னும் சில நூற்றாண்டுகள் சென்றாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. அந்த அளவுக்கு ஒவ்வொரு வெள்ளை (கிறிஸ்தவரது) உள்ளத்திலும் உணர்விலும் கறுப்பு (கிறிஸ்தவரைப்) பற்றிய நிற வெறுப்பு ஆழப்பதிந்துள்ளது. அதைக் கிறிஸ்தவத்தால் கூட அழிக்க முடியாது என்பதுதான் தெளிவான உண்மை!

1948 டிசெம்பர் 10 ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 'மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம்' ஒன்றை நிறைவேற்றியது. அந்தப் பிரகடனத்தின் உறுப்புரை 2ல் 'நிறவேற்றுமை பாராட்டப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்' எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும், இப்பிரகடனத்தை நிறைவேற்றிய அதே ஐக்கிய நாடுகள்சபை அமைந்துள்ள அமெரிக்காவில் நிற வேற்றுமைக் கொடுமைகளுக்குக் குறைவில்லை; இன்றும் அவை நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன!

— அப்படியாயின் அந்தப் பிரகடனத்திற்கு
அந்த மக்கள் எந்த மரியாதையும் கொடுக்கவில்லை
என்பது புலனாகின்றது அல்லவா!

---

17. Saudi Gazette, Daily Paper in Saudi Arabia, 12. 7. 93, Page : 7.

இஸ்லாம் இந்த நிற வேற்றுமைக்கு சாவுமணி அடித்து பல நூற்றாண்டுகள் கடந்து விட்டன. முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் இது ஒரு பிரச்சினையேயல்ல. வெள்ளையரோ கறுப்பரோ இரண்டு முஸ்லிம்கள் எங்காவது சந்தித்துக் கொண்டால் கை கொடுத்து,

— 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்'
"அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அருளும்
உங்கள் மீது உண்டாவதாக!" என்று ஒருவர் மொழிய,

— 'வ அலைக்கு முஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹ்'
"அதே விதமாக அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும்
அருளும் உங்களுக்கும் உண்டாவதாக!" என
மற்றவர் மறுமொழி பகர்வார்!

இது எத்தகைய உயர்ந்த நிலை என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த நிலை, 1400 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட மகத்தான இஸ்லாமியப் புரட்சியின் விளைவாகும். இஸ்லாம் அத்தகைய மன மாற்றத்தை மக்களிடம் கொண்டு வருவதற்குத் துணையாக அமைந்தது காலத்தால் அழியாத அதன் தெய்வீகக் கோட்பாடுகளாகும்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின்போது ஆற்றிய உரையை 'மனித உரிமைப் பிரகடனம்' எனக் குறிப்பிடலாம். அந்த அளவுக்கு அதன் கருத்துக்கள் மனித உரிமைகளுக்கு வலுவூட்டுவனவாக அமைந்துள்ளன. இன்றைய அறிவியல் உலகம் கூட அவ்வுரையின் ஒவ்வொரு சொல்லிலிருந்தும் பாரிய பயன்கள் பெறுமளவுக்கு, சிந்தனைத் தேக்கத்தில் வீழ்ந்திருப்பதைத்தான் காணக்கூடியதாய் உள்ளது. இல்லாவிட்டால் இன்றுங்கூட நிற வெறி இத்தனை அக்கிரமங்களைக் கட்டவிழ்த்து மக்களை கொன்றொழிப்பது எப்படி சாத்தியமாக முடியும்?

அந்த உரையில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மனித சமத்துவம் பற்றி குறிப்பிடுகையில்:

● "மக்களே!
உங்கள் இறைவன் ஒருவனே!
உங்கள் ஆதித் தந்தையும் ஒருவரே!
நீங்கள் அனைவரும் ஆதமின் வழித்தோன்றல்கள்.
ஆதமோ மண்ணினால் படைக்கப் பட்டவர்.
அறிந்து கொள்ளுங்கள்!
ஓர் அரபியருக்கு அரபியல்லாதவர் மீதோ
அரபியல்லாதவருக்கு ஓர் அரபியர் மீதோ
சிவப்பு நிறத்தவருக்கு கறுப்பு நிறத்தவர் மீதோ
கறுப்பு நிறத்தவருக்கு சிவப்பு நிறத்தவர் மீதோ
இறையச்சத்தைக் கொண்டல்லாது
வேறு எந்த வழியிலும்

மேன்மையோ சிறப்போ கிடையாது.
நிச்சயமாக,
உங்களில் மேன்மையானவர் யாரென்றால்
அல்லாஹ்வின் மீது அதிக அச்சம் உடையவராவார்!"

என்று ஆணித்தரமாக மொழிந்தார்கள். அன்று முதல் அந்த உரையின் கருத்துக்கள் முஸ்லிம்களது வாழ்க்கைப் பயணத்தின் சிந்தனைச் சுவடுகளாகி விட்டன.

பல நூறு உதாரணங்களில் ஒன்றைப் படியுங்கள் :

இஸ்லாத்தைத் தழுவியவர் பிலால் (றலி)* அவர்கள். அவர் நிறத்தால் ஒரு கறுப்பர்; இனத்தால் நீக்ரோவர்; கல்வியறிவால் குறைந்தவர்; பரம ஏழையுங்கூட, அவரது இவ்வம்சங்களே அவரை ஓர் அடிமையாக, ஒதுக்கப்பட்டவராக வைப்பதற்குப் போதிய காரணிகளாயின.

ஆனால், அவர் எப்பொழுது இஸ்லாத்தைத் தழுவினாரோ அப்பொழுதே அவரது தரித்திர நிலை நீங்கியது. அவர் அரேபியாவில் உயர் குலமாகக் கருதப்படும் குரைஷி குலத்தவரின், அவர்களது தலைவர்களின் அந்தஸ்துக்கு உயர்ந்து விட்டார்; சமமாகி விட்டார்!

— தொழுகைக்கு அழைப்பு-அதான்-விடுக்கும் முதலாமவராக நியமிக்கப்பட்டு கண்ணியப் படுத்தப் பட்டார்!
— முஹம்மத் (ஸல்) அவர்களின் பொருளாளராக நியமனம் பெறும் கௌரவத்தைப் பெற்றார்!
— முஹம்மத் (ஸல்) அவர்களின் இரண்டாவது பிரதிநிதியாக (கலீஃபாவாக) ஆட்சி புரிந்த உமர் ஃபாருக் (ரலி) அவர்கள் போன்ற தலைவர்கள்கூட அவரை "யா செய்யதீ!" "என்னுடைய தலைவரே!" என்று அன்புடன் அழைக்கும் கௌரவத்தைப் பெற்றார்!
— இன்றும் அவரது பெயரைக் கேட்பவர்கள், "ரலியல்லாஹு அன்ஹு" எனக் கூறத் தவறுவது இல்லை!

இவற்றிலிருந்து அவரது ஆழ்ந்த இறை நம்பிக்கை, இஸ்லாமிய பற்று, நற்குணம், சிறப்பு நிறைந்த பண்புகள் போன்றவை கவனத்தில் கொள்ளப் பட்டனவேயன்றி, அவரது குலம், கோத்திரம், நிறம், பொருளாதார நிலை என்பன கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது விளங்குகிறது அல்லவா!

இந்த விதமாக, இஸ்லாம் நிற வேற்றுமைக்கு அன்று வைத்துவிட்ட முற்றுப்புள்ளி இன்றும் அப்படியே இருக்கின்றது; என்றும் அது அப்படியே இருக்கும் - இன்ஷா அல்லாஹ்!

---

* (ரலி) : 'ரலியல்லாஹு அன்ஹு' என்பதன் சுருக்கம். இது வருமிடங்களில் இதனை முழுமையாக மொழிவது அவசியம். இதன் கருத்து : "அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்ளட்டும்" என்பதாகும்.

## மொழி வேறுபாடு!

அல்லாஹ்வின் பேரருட்களில் மொழியும் ஒன்று. இது மனிதர்கள் தமது உள்ளங்களில் உதிக்கின்ற எண்ணங்களை வெளிக்கொணர்ந்து பகிர்ந்து கொள்ள உதவும் மிகச் சிறந்ததொரு இயற்கைச் சாதனம். இதன் மூலம் மனிதன் அடைந்துள்ள, அடைந்துவரும் பயன்கள் இவ்வளவுதான் என அளவிட்டுக் கூற முடியாது.

இச்சாதனம் - மொழி பல்வேறு வகையான சிந்தனைகளின் வளர்ச்சிக் குத் துணையாகின்றது. அதன் விளைவாக அந்தந்த சிந்தனை ரீதியான இலக் கியங்கள் பெருமளவு உருவாகி, உலகமெங்கும் பரவலாயின. இந்த வகையில் ஒரு மொழியைப் பேசுபவரின் இலக்கியங்களும் அவை சார்ந்த கலாசார பண் பாடுகளும் மற்றொரு மொழியைப் பேசுபவரின் சிந்தனைக்கும் அது சார்ந்த கலாசார பண்பாடுகளுக்கும் நேர்முரணாக அமையும் நிலை உருவானது.

உதாரணமாக, கம்யூனிஸத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது 'மதம் மனிதனுக்கு அபின் போன்றது!' என்ற கருத்தைக் கொண்டது. எனவே, அதன் இலக்கியங்கள் யாவும் அந்தக் கருத்துக்கு அமைவாகவே இருக்கும். எனவே, இவ்விலக்கியங்களை எந்த வகையிலும் மதத்தை விரும்புபவனால் அங்கீகரிக்க முடியாது. இந்த வகையில் பல மொழிகளைப் பேசுபவரிடையே தத்தமது மொழிக்கு மாறான மொழியொன்றை ஏற்பதிலும் கற்பதிலும் சில சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன.

என்றாலும், ஒவ்வொரு மொழியையும் மனித மேம்பாட்டை மனதிற் கொண்டு அதனதன் இடத்தில் வைத்து பயனடைய முனைந்தால் ஏற்படும் நல்ல விளைவுகளை வரையறுத்துக் கூற முடியாது. அந்த அளவில் மனிதர்கள் யாவரும் தத்தமது மொழிகள் மீது பற்றும் பாசமும் கொள்வது தவறேயல்ல.

எனினும், மொழி மீதான பற்றும் பாசமும் எல்லை மீறி வெறியாக - மொழி வெறியாக - மாற விடுவதுதான் ஆபத்து. அதனால், அனர்த்தங்கள் அன்றி வேரேதும் விளையாது.

இந்தியாவில், பல மானிலங்களில் ஹிந்தி மொழியும் மாநில மொழிக ளும் பிரயோகத்திற்குக் கொண்டுவருவதில் எத்தகைய சிக்கல்கள் உருவாயின; எத்தகைய கலவரங்கள் ஏற்பட்டன என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இன் றும் அந்த உணர்வுகள் அவ்வப்போது தலைதூக்கி வருவது மறுப்பதற்கில்லை.[18]

---

18. சென்னையில் வெளிவரும் 'தினமணி' பத்திரிகையில் இப்படியொரு விளம்பரம்:

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இறுதி ஊர்வலம்
தாய்த்தமிழ் மீட்கும் முதல் ஊர்வலம்

இது இறுதி ஊர்வலம் இல்லை! தனித்தமிழ் இயக்கத்தைத் தமிழர்கள் கையில் ஏந்தும் முதல் ஊர்வலம்! 'ஆட்சியிலும், கல்வியிலும், நீதி மன்றத்திலும், திருக்கோவிலிலும், இசையிலும், நம் தாய்த் தமிழை அரியணை ஏற்றவும், இழந்த பெருமைகளை மீட்கவும் தமிழர்களை அணியாக்கி விட்டோம்!'

தாய்லாந்து, பல்கேரியா, பர்மா போன்ற நாடுகளில் ஆட்சியாளர்களே மொழிவெறி கொண்டு, சிறுபான்மை மக்களுக்கு எத்தனைக் கொடுமைகள் இழைத்து வருகின்றனர் என்பதை உலகமே பார்த்துக் கொண்டுள்ளது.

சின்னஞ்சிறிய ஸ்ரீலங்காவை எடுத்துக் கொள்ளுங்கள். இருப்பதோ இரண்டு மொழிகள்தான் - சிங்களமும் தமிழும்! ஆனால், எத்தனைப் பிரச் சினைகள், போராட்டங்கள், அழிவுகள் ஏற்பட்டுவிட்டன.[19]

நீங்கள் இஸ்லாத்தை, இஸ்லாமிய வரலாற்றை சிறிது ஆராய்ந்து பாருங்கள். இஸ்லாமிய உலகில் எத்தனையோ போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன என்பது உண்மைதான்; மறுக்கவில்லை. அவை கொள்கை சார்ந்த போராட் டங்களேயன்றி, ஒரு மொழிக்காக, மொழிவெறி கொண்டு நடத்தப்பட்ட போராட்டங்கள் அல்ல.

இஸ்லாத்தைத் தீமைக்கெதிரான கொள்கையாக ஏந்திச்சென்ற முஸ்லிம் கள் வென்றெடுத்த நாடுகள் பல. அந்த நாடுகளில் வாழ்ந்த மக்கள் பேசிய மொழிகள் எதனையும் அழிக்கவோ, புறக்கணிக்கவோ எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, அந்தந்த நாடுகளின் மொழிகளை அபிவிருத்தி செய்து, அவற்றின் மூலம் இஸ்லாமியக் கருத்துக்கள் முன்வைக் கப்பட்டன.

● "அவர்கள் (தமிழக இசுலாமியர்கள்)
இசுலாமிய இலக்கியங்களைத்
தமிழில் படைத்து

---

புறப்பட்டு விட்டீர்களா?

16. 6. 95 வெள்ளி பிற்பகல் 2 மணி
27 - தென்மேற்கு போக் சாலை, தியாகராய நகர், சென்னை - 17

சிலம்பொலி சு. செல்லப்பன்
ஒருங்கிணைப்பாளர், தமிழ்ச்சான்றோர் பேரவை, சென்னை - 20, தொலைபேசி : 418466.

பார்க்க : தினமணி, ஜூன் 14, 1995

19. 1956 ஆம் ஆண்டு, அப்பொழுது ஆட்சியில் இருந்தவர்கள் "24 மணி நேரத்தில் சிங்களம் அரச கரும மொழி" என்றார்கள்; அதை அமுல்நடத்த உரிய நடவடிக்கைகள் எடுத்தார்கள். இனத்துவேசம் வளர்ந்தது; சிங்கள - தமிழ் இனங்கள் கடுமையாக மோதிக் கொண்டன. நாடளாவிய ரீதியில் கலவரம் மூண்டு

— வர்த்தக நிலையங்கள், பாதைகள் மற்றும் உண்டானவற்றிலான பெயர்ப்பலகைகள், அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவற்றிலான தமிழ் எழுத்துக்களுக்குத் தார் பூசுதல்
— வாகனங்களில் சிங்கள 'ஸ்ரீ' எழுத்து பொறித்தல்
— தமிழ் மக்கள் போர்முரசு கொட்டுதல்
— பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல்

என்பன பெருமளவில் நடந்தன. விளைவுகள் பாரதூரமாக இருந்தன.
ஒரு விஷயம்! எத்தனையோ வேதனைகளையும் அழிவுகளையும் சுமந்துவந்த மேற்கானும் நடவடிக்கைகளில் ஒன்றான வாகனங்களில் பொறிக்கப்பட்ட சிங்கள 'ஸ்ரீ' எழுத்து இன்று எங்கே? உண்மையில், அது வந்த வழியும் வேகமும் அறியாது அமைதியாகப் போய் விட்டது; போகும்படி செய்யப்பட்டது! அப்படியாயின் அதை வாகனங்களில் பொறிக்க எடுத்த நடவடிக்கைகளின் போது விளைந்த அனர்த்தங்களுக்கு என்ன பொருள்?
நீங்கள் நிதானமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

தமிழ் மொழியையும் வளர்த்தெடுத்ததில்
பங்களிப்பு செலுத்தி இருக்கிறார்கள்!"[20]

என்ற கூற்று என் கருத்தை மெய்ப்பிக்கின்றது. இப்போக்கு மற்றும் பல மொழிகளிலும் கடைப்பிடிக்கப்பட்டதற்கு ஏராளமான ஆதாரங்கள் வரலாற்று நூல்களில் உள்ளன.[21]

அன்று மட்டுமல்ல, இன்றும் மொழி தொடர்பான இஸ்லாத்தின் கருத்து மாறவில்லை. முஸ்லிம்கள் எந்தெந்த மொழிகளைப் பேசுகிறார்களோ எழுதுகிறார்களோ அவற்றின் வளர்ச்சிக்காக, அடுத்த மொழியொன்றுக்குப் பாதகம் வராமல் உழைப்பதில் முன்னணி வகிக்கின்றனர். இதற்குக் காரணம் மொழி பற்றிய இஸ்லாத்தின் தாராளத் தன்மையே!

## சாதிப் பாகுபாடு

அல்லாஹ்வின் படைப்புக்கள் யாவற்றிலுமே அதியுயர்ந்த படைப்பு மனிதனாகும். அவனுக்கு அறிவு எனும் பேரருள் வழங்கப்பட்டுள்ளது. அவனே எண்ணற்ற புதுமைகளை, வியத்தகு சாதனைகளைப் புரிந்துள்ளான். அவனது பெருமுயற்சிகளின் விளைவுகளுக்கு இவ்வுலகமே சான்றாக உள்ளது. அத்தகைய மனிதனைச் சாதியின் பெயரால் பாகுபடுத்தி ஒதுக்கி வைப்பது எத்தகைய அறிவீனம் என நினைத்துப் பாருங்கள். அந்த அறிவீனம் இன்று உலகின் ஒரு பகுதியில் நிகழ்ந்து வருகிறது - அதுவும் மதமொன்றின் பெயரால்! அப்படி ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது ஒரு சில பேர் அல்லர்; பல கோடி பேர்களாவர்!

இந்தியாவில்தான் பல்லாண்டு காலமாக இக்கொடுமை நிகழ்ந்து வருகிறது. 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்று கூறி மனிதர்களில் ஒரு சாரார் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டு வருவது பற்றிய செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் காணக் கூடியதாய் உள்ளன.

இதிலுள்ள அதிசயம் என்னவென்றால் எல்லாமே இந்து மதத்தின் பெயரால் நடப்பதுதான். இப்படி பாதிக்கப்பட்டவர்களே கூறுகின்றார்கள்:

டாக்டர் பீ. ஆர். அம்பேத்கர் கூறியதாவது:

● "தீண்டப்படாத மக்கள்
விலையுயர்ந்த துணிகளை அணிந்தால்
அடித்துத் துன்புறுத்தப் படுகிறார்கள்.
பித்தளை, ஈயம் போன்ற
உலோகப் பாத்திரங்களைப் பயன்படுத்தினால்
நிர்மூலப்படுத்தப் படுகின்றார்கள்.
விளை நிலங்களை உருவாக்கி

---

20. 'தமிழக அரசியலும் முஸ்லிம்களும்', சென்னையிலிருந்து வெளிவரும் 'சமரசம்' இருவார இதழில் க. திருநாவுக்கரசு எழுதிய கட்டுரை, 1 - 15 ஜூலை 95, பக் : 4.

21. படிக்கவும் : ஆர். பீ. எம். கனி பி. ஏ., பி. எல் எழுதிய, 'இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்' வெளியீடு : அருள் நூல் பதிப்பகம், தென்காசி, முதற்பதிப்பு: 1963.

அங்கே ஒரு வீட்டைக் கட்டினால் அது கொளுத்தப்படுகின்றது.
தீண்டப்படாதவர்கள் உடலிலே
பூணூல் அணிந்து கொண்டால் அடி உதை.
இறந்த பிராணிகளை அகற்ற மறுத்தால்,
இறந்துபோன மாட்டின் இறைச்சியை உண்ண மறுத்தால்,
காலுரையுடன் ஷூ போட்டு சாலையிலே நடந்து போனால்,
இந்துக்களின் முன்னால்
சிரந்தாழ்த்திப் பணிந்து போகவில்லை என்றால்,
ஜாதி இந்துக்களினால் அவர்களுக்கு
இழைக்கப்படும் கொடுமைகள் சொல்லி மாளாது!"[22]

இக்கொடுமைகளும் இவை போன்ற இன்னும் பல சித்ரவதைகளும் நிகழ்வதற்கான பின்னணி என்ன? தூண்டுதல்கள் எங்கிருந்து கிடைக்கின்றது? போன்ற வினாக்களுக்கும் அவரே விடை கூறியுள்ளார்:

● "சாதியென்பது ஒருவித மனநோய், மனத்தளவிலானது,
இந்நோய்க்கான ஆணிவேர்கள்
இந்து மதப் போதனைகளேயாகும்.
நாம் சாதீயத்தை, தீண்டாமையைக் கடைப்பிடிக்கிறோம்.
ஏனென்றால், நாம் வாழ்கின்ற இந்து மதம்
அவ்வாறு நமக்கு ஆணையிட்டுள்ளது!"[23]

இச்சாதிக் கொடுமையிலிருந்து மீட்சி பெற என்ன செய்ய வேண்டும் என்பதையும் அம்பேத்கர் அவர்களே குறிப்பிடுகின்றார்:

● "பண்டைய மதம் என்பதாலேயே - ஒருவன்,
அம்மதத்தில் தொற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று
ஒரு முட்டாள் மட்டுமே சொல்ல முடியும்.
அறிவு ஜீவியான எவனும் இவ்வாதத்தை ஏற்க மாட்டான்.
'இன்று நீங்கள் வாழும் சூழ்நிலையிலேயே என்றும் வாழுங்கள்'
என்று சொல்லப்படும் அறிவுரை விலங்குகளுக்குப் பொருந்தும்.
ஆனால் மனிதனுக்கு ஒருபோதும் பொருந்தாது. (எனவே)
முழு மனித வாழ்வு பெற மதம் மாறுங்கள்;
அமைப்பு ரீதியில் ஒன்றுபட மதம் மாறுங்கள்;
சுயபலம் பெற்றிட மதம் மாறுங்கள்;
சமத்துவத்தை அடைந்திட மதம் மாறுங்கள்;
விடுதலையை வென்றிட மதம் மாறுங்கள்;
குடும்ப வாழ்க்கையில் மகிழ்வடைய வேண்டுமானால்
மதம் மாறுங்கள்"[24]

---

22. 'இந்துமத மாற்றம் ஏன்?', டாக்டர் பீ. ஆர். அம்பேத்கர், வெளியீடு: தலித் சாகித்ய அகாடமி, 32 - 4 th st., Venkatespuram new colony, Dr. Ambedker College Rd, Madras - 600012, (1988) Page: 12, 13

23. மேற்படி நூல், பக்: 30

24. 'இந்துமத மாற்றம் ஏன்?' டாக்டர் பீ. ஆர். அம்பேத்கர், பக்: 34, 51

இவ்வாறு கூறும் அவரும், 'தாழ்த்தப்பட்டவர்கள்' என முத்திரை குத்தப் பட்ட மற்ற இந்துக்களும் எவ்வளவு சிரமங்களை அனுபவித்திருப்பர் என நினைத்துப் பாருங்கள்.

இதேபோன்று மற்றொருவர் - டாக்டர் அ. சேப்பன் என். பீ. பீ. எஸ் (DGO) என்பவர் - சாதி இந்துக்களால் 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்போருக்குத் தரப்படும் கொடுமைகளை தனது நூலொன்றில்[25] விவரித்துள்ளார். அவற்றைக் கீழ்க்கண்டவாறு தொகுத்து நோக்க முடியும்:

- உயர்சாதி இந்துக்களின் வீடுகளில்
  - — பறையடித்தல்
  - — மலம் அள்ளுதல்
  - — பிணம் சுடுதல்
  - — செத்த மாடு சுமத்தல்
  - — தேநீர்க் கடைகளில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தனியான பாத்திரத்தில் தேநீரோ தண்ணீரோ அருந்துதல்
- அவ்வுயர்சாதி இந்துக்களின் எதிரில்
  - — குடை பிடிக்காதிருத்தல்
  - — செருப்பணியாதிருத்தல்
  - — உயர்வான ஆடை, ஆபரணங்கள் அணியாதிருத்தல்
  - — சமமாக அமராது தரையில் அமருதல்
- அவ்வுயர்சாதி இந்துக்களின்
  - — கோயிலினுள்ளே செல்லாதிருத்தல்
  - — கோயிலுக்கு வெளியேயிருந்து தெய்வத்தைக் கும்பிடுதல்
  - — கோயிலுக்கு வெளியேயிருந்து மேளம் அடித்தல்

போன்ற எண்ணற்ற கொடுமைகள் செய்து, மனிதத்துவத்தைப் புதைக்கும் ஈவிரக்கமற்ற தன்மைக்கு இலக்கணம் வகுத்துள்ளனர் உயர்சாதி இந்துக்கள் எனக் குறிப்பிடுகிறார் டாக்டர் சேப்பன் அவர்கள்.

இந்த விதமாக

— கொடுமைப்படுத்துபவர்கள் இந்துக்கள்!
— கொடுமைப்படுத்தப் படுபவர்கள்: அவர்களும் இந்துக்கள்!

இப்படிக் கொடுமைப்படுத்த காரணம், அவர்கள்

— சாதியால் தாழ்ந்தவர்களாம்!
— தீண்டத் தகாதவர்களாம்!

இவற்றின் விளைவாக லட்சக் கணக்கான 'தாழ்ந்தவர்கள்' என நாமம் சூட்டப்பட்ட இந்துக்கள் "இந்து மதமே வேண்டாம்!" என வெளியேறி வேறு மதங்களில் இணைந்து கொண்டனர்.

---

25. 'விடுதலை பெற துடிப்பதேன்?', முதலாம் பதிப்பு - ஆகஸ்ட் 1991
வெளியீடு: பாக்தாத் புக் சென்டர், 81 - அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை - 1.

— டாக்டர் அம்பேத்கரின் தலைமையில் இந்து மதத்தைத் துறந்து சென்ற பல லட்சம் மக்கள்!

— ரஹ்மத் நகராக மாறிய மீனாட்சிபுரம்!

— இன்னும் பல கிராமத்தவர்கள் முஸ்லிம்களாகியமை!

— இந்தியாவெங்கும் இடம்பெற்றுவரும் விடுதலைப் போராட்டங்கள்!

— தினமும் வெளிவரும் அறிக்கைகள், கட்டுரைகள், கவிதைகள்

— சிந்தனையைத் தூண்டும் நூல்கள்

ஆகியன சாதிக் கொடுமையைச் சாடும் சான்றுகளாக உள்ளன.

இப்பொழுது, இந்த சாதிப் பாகுபாடு பற்றிய இஸ்லாமியக் கருத்து என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இஸ்லாத்திற்கு 'சாதிப் பாகுபாடு' என்பது முற்றிலும் அன்னியமானது. இஸ்லாத்தின் போதனைகள் எதிலுமே சாதி வித்தியாசம் சார்ந்த கருத்துக்கள் ஒன்றிரண்டேனும் நீங்கள் கண்டுகொள்ள மாட்டீர்கள். மாறாக, எவர்கள் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வாழ்வதற்கு வந்துவிடுகிறார்களோ அவர்கள் ஒரு தாய் பெற்ற மக்களாக கொள்கையால் கட்டுண்டு விடுகின்றார்கள். பொதுவாக, 'தீண்டத் தகாதவர்கள்' என்றொரு கூட்டம் எங்கேயாயினும் இருப்பதாக இஸ்லாம் குறிப்பிடவில்லை; முஸ்லிம்களும் அப்படி யாரையும் ஒதுக்கி வைக்கவில்லை. இஸ்லாம் அடித்தளமாகக் கொண்டிருப்பது மனிதனின் இறை நம்பிக்கை சார்ந்த அறிவையும் செயலையுமன்றி பிறப்பையும் தொழிலையும் மற்றும் இவற்றையொத்த அம்சங்களையும் அல்ல என்பதை நீங்கள் இஸ்லாத்தைப் படித்தால் புரிந்து கொள்வீர்கள்.

இஸ்லாமிய சிந்தனையாளரும் அல்குர்ஆன் விரிவுரையாளருமான மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் கூறும் ஓர் அருமையான கருத்தைக் கேளுங்கள்!

● "இஸ்லாம் என்பது குடும்ப ரீதியாகவோ
பரம்பரை ரீதியாகவோ கிடைக்கிற பொருளல்ல. எனவே,
தந்தையிடமிருந்து மைந்தனுக்கும்,
மைந்தனிடமிருந்து பேரனுக்கும்
தானாகவே அது கிடைத்துவிட முடியாது.
பிராமணனுக்குப் பிறந்த ஒருவன்
எவ்வளவு அறியாமையோடு இருந்தாலும்,
எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும்,
அவன் உயர்ந்தவனாகவே கருதப்படுவான்!
ஏனெனில், அவன் பிராமணன் வீட்டில் பிறந்திருக்கிறான்.
எனவே, உயர் வகுப்பானாகத்தான் கருதப்படுவான்!
சக்கிலியனுக்குப் பிறந்த ஒருவன் அறிவிலும் செயலிலும்
பிரமாணனைவிட எல்லா வகையிலும்
சிறந்து விளங்கினாலும்,

அவன் பிராமணனைவிடத் தாழ்ந்தவனாய்த்தான் கருதப்படுவான்.
ஏனெனில், அவன் சக்கிலியனின் வீட்டில் பிறந்திருக்கிறான்.
எனவே, அவன் தாழ்ந்தவனாய்த்தான் கருதப்படுவான்.
ஆனால், இதெல்லாம் இஸ்லாத்தில் பொருந்தாது.
இங்கு இறைவனே திருக்குர்ஆனில் தெளிவாகக் கூறியிருக்கிறான்:
— 'உண்மையில், அதிக கண்ணியம் வாய்ந்தவர்
உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம்!' (49:13)
இப்றாஹீம் (அலை) அவர்கள்
சிலைகளை வணங்குகிறவனின் வீட்டில் பிறந்தார்கள்.
ஆனால், அவர்கள் இறைவனைத் தெரிந்து கொண்டார்கள்;
அவனுடைய கட்டளைக்கு அடிபணிந்தார்கள். எனவே,
இறைவன் அவர்களை உலகம் முழுவதற்கும் தலைவராக்கினான்.
நூஹ் (அலை) அவர்களின் மகன்
திருத்தூதரின் வீட்டில் பிறந்தான்.
என்றாலும், அவன் இறைவனைத் தெரிந்துகொள்ளவில்லை;
இறைக் கட்டளைக்குப் பணியவில்லை. எனவே,
அவனுடைய குடும்பத்தைப் பொருட்படுத்தாமல்,
உலகமே பார்த்து படிப்பினை பெறும் வகையில்
அவனை இறைவன் தண்டித்தான்!"[26]

இக்கூற்றிலிருந்து, இஸ்லாம் மனிதனை எதனைக் கொண்டு வேறுபடுத்தி நோக்குகின்றது என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு இருப்பீர்கள். நிச்சயமாக, சாதிப் பாகுபாடு இதில் இல்லை என்பது நன்கு அறியப்படும் உண்மையாகும்.

அடுத்து, முஸ்லிம்களின் வணக்கத்தை - தொழுகையை - எடுத்துக் கொள்ளுங்கள். அது உடலுக்கு சிரசு போல! அவ்வளவு பிரதானமானது. அந்தத் தொழுகைக்கான அழைப்பை - அதானை - நீங்கள் செவிமடுத்து இருப்பீர்கள். ஆனால், அதில் என்ன சொல்லப்படுகின்றது என்று விளங்கிக்கொள்ள எப்பொழுதாவது முயன்றீர்களா?

அந்த அழைப்பின் சுருக்கம் இதுதான்:

" அல்லாஹு அக்பர்"
— அல்லாஹ்வே மிகப் பெரியவன்!

" அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ்"
— அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று
சான்று பகர்கின்றேன்!

" அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்"
— முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று
சான்று பகர்கின்றேன்!

---

26. குத்பாத் பேருரை நூல் 1 (இறை நம்பிக்கை வாழ்வின் அடிப்படை), இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட் சென்னை - 12 வெளியீடு, 10வது பதிப்பு - May 1994, பக் : 12, 13.

“ஹய்ய அலஸ் ஸலாத்”
— தொழுகையை நோக்கி விரைந்து வாருங்கள்!

“ஹய்ய அலல் ஃபலாஹ்”
— வெற்றியை நோக்கி விரைந்து வாருங்கள்!

“அல்லாஹு அக்பர்”
— அல்லாஹ்வே மிகப் பெரியவன்!

“லாஇலாஹ இல்லல்லாஹ்”
— அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை!

இவ்வழைப்பில் குறுகிய இன, மொழி, தேச, சாதி, வர்க்க வேறுபாடுகள் ஏதேனும் தெரிகிறதா எனப் பாருங்கள். மாறாக, இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை எடுத்துரைத்து, அதன் வழியில் வணக்கம் புரியவும் வெற்றி பெறவும் விரைந்து வருமாறு அழைக்கப்படுவதை நீங்களே உணர்ந்துகொள்ள முடியும். முழு மனித சமுதாயத்தையும் படைத்தவன் பக்கம் விடுக்கப்படும் இவ்வழைப்பு எவ்வளவு சிறப்பானது என சிந்தித்துப் பாருங்கள். தினமும் ஐந்து வேளைகள் விடுக்கப்படும் இவ்வழைப்புக்கு நிகரான மற்றொரு அழைப்பு உலகின் எத்திசையிலாவது இருப்பதாக உங்களால் கூறமுடியுமா?

இனி, இவ்வழைப்பை செவிமடுத்ததும் பள்ளிவாயலை நோக்கி விரைபவர்களை நோக்குங்கள். அவர்களில் பல ரகமான மக்கள் இருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

— பரம்பரை முஸ்லிமும் இருப்பான்; பத்து நாட்களுக்கு முன்னர் இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிமும் இருப்பான்!
— நாடாளும் மன்னனும் இருப்பான்; சாதாரண குடிமகனும் இருப்பான்!
— முதலாளியும் இருப்பான்; தொழிலாளியும் இருப்பான்!
— பெரும் பணக்காரனும் இருப்பான்; பரம ஏழையும் இருப்பான்!
— சுகதேகியும் இருப்பான்; சொத்தியும் இருப்பான்!
— கறுப்பனும் இருப்பான்; வெள்ளையனும் இருப்பான்!
— படித்தவனும் இருப்பான்; படியாதவனும் இருப்பான்!
— குட்டையனும் இருப்பான்; நெட்டையனும் இருப்பான்!
— அரபு மொழியைப் பேசுபவனும் இருப்பான்; அல்லாத மொழி களைப் பேசுபவரும் இருப்பார்கள்!
— அரபு நாட்டவனும் இருப்பான்; அல்லாத பல நாட்டவரும் இருப்பார்கள்!
— உயர் தொழில் புரிபவனும் இருப்பான்; குப்பைத் தோட்டியும் இருப்பான்!

எனினும், இவர்களுக்கிடையில் எத்தகைய வித்தியாசமும் பாராட்டப் படுவதில்லை. இவர்களில் எவர்கள் முதலில் பள்ளிவாயலுக்கு வருகின்றார் களோ அவர்களுக்கே தொழுகைக்கான வரிசைகளில் முதலிடம் உரித்து. அதைத் தட்டிப் பறிக்க எந்தப் பெரிய மகானும் சக்தி பெற மாட்டார். எவருமே தமது அந்தஸ்தை, மேன்மையைக் காட்டி தொழுகையின்போது முதலிடம் கோரி நிற்க முடியாது.

ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது, எவர்கள் அல்லாஹ்வின் மீது அன்பும் அச்சமும் கொண்டு அவன் கட்டளைப்படி வாழ்கின்றார்களோ அவர்கள் மேல்நிலை மக்களாவர் என்றும், தான்தோன்றித் தனமாகவும் தப்பும் தவறுமாகவும் வாழ்பவர்கள் கீழ்நிலை மக்களாவர் என்றும் கணிக்கப்படுவர். இக்கணிப்பு குலம், நிறம், சாதி போன்றவற்றின் அடிப்படையிலன்றி அறிவு செயல் என்பவற்றின் அடிப்படையிலேயே அமைகின்றது என்பதை நீங்கள் மறந்துவிடலாகாது.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

- "மனிதர்களுக்கு
  இரக்கம் காட்டாதவர்களுக்கு
  அல்லாஹ்வும் இரக்கம் காட்ட மாட்டான்."[27]

இந்த நபிமொழியில் மனிதர்களுக்கு இரக்கம் காட்டுவது பற்றியே குறிப்பிடப்படுகின்றது. அன்றி மனிதருள் ஏதோவொரு குழு அல்லது சாதி குறிப்பிடப்படவில்லை என்பது நீங்கள் கவனிக்கத் தக்கது.

## வர்க்க பேதம்

உலக நாடுகள் பலவற்றில் உருவான சிற்சில புரட்சிகளுக்கும் போராட் டங்களுக்கும் வித்திட்டது 'வர்க்க' உணர்வே என்பதை நீங்கள் நிதானமாக சிந்தித்தால் தெரிந்து கொள்வீர்கள். இந்த வர்க்க உணர்வின் மையக் கரு 'பணம்' ஒன்றுதான்!

மனிதன் இவ்வுலகில் வாழ்வதற்குப் பணம் தேவை என்பதை யார்தான் மறுக்க முடியும்? ஆனால், 'பணம்தான் வாழ்க்கை!', 'வாழ்வே பணம் தேடுவதற் குத்தான்!' என்று இலட்சியம் வகுத்துக் கொள்வதும், உள்ளவர் - இல்லாதவர் களிடையே வெறுப்புணர்வையும் பகைமையையும் தோற்றுவிப்பதும் எவ்வ ளவு பிழையானது; பிரச்சினைகளைக் கொண்டுவருவது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

உண்மையில், மிக நீண்ட காலமாக இத்தவறு உலகத்தை பெரும் சங்கடங்களுக்கு ஆளாக்கி வந்துள்ளது எனக் கூறலாம்; இன்றும் இந்நிலை இருக்கத்தான் செய்கின்றது.

---

27. அறிவிப்பவர்: ஜரீர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள், ஆதாரம்: புகாரி, முஸ்லிம்.

காரணம் என்ன?

மனிதன் வாழப் பிறந்தவன். அந்த வாழ்வை ஏனைய உயிரினங்களின் வாழ்வைப் போன்று அமைத்துக்கொள்ள முடியாது. அதைவிட நல்ல முறையில் அமைத்துக் கொள்வது அவசியம். ஏனெனில் அவன் மனிதனாக பிறந்திருக் கிறான்; அவனுக்கு அறிவு என்றொரு ஒப்புயர்வற்ற பொருள் இருக்கின்றது. எனவே, ஒழுங்கான வாழ்க்கைக்கு அவசியமானவற்றைத் தேடிப் புறப்படு கின்றான். அவனுள் ஒரு சாராருக்கு வாய்ப்பு வசதிகள் சிறப்பாக அமைந்து விடுகின்றன; மறு சாராருக்கோ அவ்வாறு எதுவும் அமைந்துவிடவில்லை.

வாய்ப்பு வசதிகள் நன்கு அமையப் பெற்றவர்கள் முதலில் தமது முயற்சிகளை ஒழுங்காகவே மேற்கொள்கின்றனர். அத்தகைய வாய்ப்புக்கள் பெறாது பின்தங்கி விட்டவர்களுடன் அன்பாக நடந்து, உதவி ஒத்தாசைகள் புரிந்து வாழலாயினர். எனினும், காலம் மாறி, பணமும் பொருளும் தம்மிடம் வந்து குவியும் நிலை உருவானபோது, அனேகரது குணம் மாற ஆரம்பித்தது; அதனால் செல்வம் சேர்க்கும் முறைகளில் தப்பும் தவறும் கையாளப்படுகின்றன. ஏழைகளுக்கு உதவிய கரங்கள் சுருங்கிக் கொள்கின்றன. ஆரம்பத்தில், ‘வாழ்வ தற்கே பணமும் பொருளும்’ என்றிருந்த நிலை மாறி, அதுவோர் ஆசையாகி, பேராசையாகி, வெறியுணர்வாகி, ‘பணமும் பொருளும் தேடிக் குவிப்பதற்குத் தான் வாழ்க்கை’ என்றாகி விடுகின்றது. அத்துடன் சுகபோக வாழ்வு, பட்டம், பதவி, சமூக அந்தஸ்து, அதிகாரம் போன்ற பலவற்றையும் பெற்று ‘வணங்கா முடி’களாக வாழவேண்டும் என்ற ஆசையும் அவர்களை ஆட்கொண்டு விடுகின்றது.

இந்த நிலைக்கு ஒருவன் வந்துவிட்டால் அவனிடம் நீதி, நியாயம் இருக்காது; பணம் சேர்க்கும் முறைகளில் தூய்மை இருக்காது; “எப்படியாவது, எவர் கழுத்தை முறித்தாவது பணத்தைச் சேர்க்க வேண்டும்; பொருளைத் திரட்ட வேண்டும்; ‘நானே பெரியவன்’ என்ற நிலையை அடைய வேண்டும்!” என்ற வெறியுணர்வுதான் அவனிடம் மிகைத்து நிற்கும்.

இக்கட்டத்தில், பணமோ பொருளோ தேடும் வாய்ப்பு வசதிகள் ஒழுங் காக அமையப் பெறாத மக்களின் - ஏழைகளின் - உழைக்கும் சக்தியை, திறமை யை, ஆற்றலை, சிரமத்தை இவன் அற்ப விலைக்கு, குறைந்த கூலிக்கு சுரண்டிக் கொள்ள முனைவான். உழைப்புக்கேற்ற ஊதியமும், வாழ்க்கைக்கான அடிப் படைத் தேவைகளும் அந்த ஏழை மக்களுக்குக் கொடுக்கப் பெறமாட்டார்கள். இதனால், அந்த ஏழைகள் நாளாந்தம் நலிவுற்று, பரம தரித்திரர்களாக மாறி, பசியிலும் பிணியிலும் உழன்று, துயரெனும் சாக்கடையில் வீழ்ந்து மீள முடியாது தத்தளிப்பர். அதேவேளை, அவர்களது உழைக்கும் சக்தியைச் சுரண்டி பணமும் பொருளும் குவித்துக் கொண்டவனோ பெரும் செல்வத்துக்கும், மாட மாளிகைகளுக்கும், சொந்தக்காரனாகி குபேர வாழ்வு வாழ்வான். இதை வேறுவிதமாகச் சொல்வதாயின், ‘ஒருவன் தனது உழைக்கும் சக்தியை சின்ன விலைக்கு விற்றுவிட்டு துன்பத்தில் உழல்கின்றான்; அந்த விலைக்கு அவனது உழைப்பை வாங்கியவனோ இன்ப உலகில் உல்லாசமாக பவனி வருகின்றான்!’ எனச் சொல்ல முடியும்.

குறிப்பிட்ட ஒரு சூழலில் இத்தகைய நிலைமை உருவாகும் பொழுது அச்சூழலில் வாழும் பணம் படைத்தவர்கள் ஏழைகள் ஆகியோர் மத்தியில் வெறுப்பும் வேதனையும், காழ்ப்புணர்ச்சியும் கடின போக்கும் உருவாகி விடுகின்றன. பின்னர், அவை அடிதடிகள், கொலை கொள்ளைகள், தொடரான மற்றும் பல சச்சரவுகள் எனப்பரிணமித்து, பாதகங்கள் விளைவிக்க ஆரம்பித்து விடுகின்றன.

இவ்வாறுதான் வர்க்க பேதத்திற்கான அடித்தளம் உருவானது எனக் குறிப்பிடலாம். இன்று நேற்றல்ல, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இது கிரமமாக, படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது. ஆரம்பத்தில் இவ்விரு சாரார் மத்தியிலும் இயக்க அமைப்பு இருக்கவில்லை. அவ்வப்போது அவரவர் தேவை கருதி, எதையாவது செய்வார்கள்; அவற்றைத் தொடர்ந்து சண்டைகள் மூண்டு, அச்சண்டைகளின் தாக்கத்தைப் பொறுத்து அது நீடித்து நின்று சச்சரவுகளைக் கொடுக்கும். எல்லாம் முடிந்த பின்னர், அவரவர்கள் தத்தமது அன்றாட வாழ்வுடன் சங்கமமாகி விடுவார்கள்.

எனினும், காலவோட்டத்தில், இவ்விரு சாரார் மத்தியில் பகைமை பாரிய அளவில் வலுவடைந்து, விரிசல் அதிகமாகி, உணர்வுகள் தனித்தனியே குவிந்து, இறுதியில் இயக்க வடிவம் பெறலாயிற்று. அவ்வியக்க வடிவம், பல இயக்கங் களுக்கு இடம் தந்து, இப்போது இரண்டு உலக முகாம்களாக பரிணாமம் பெற்று நிற்கின்றன.

அவையாவன:

— தனியுடைமையைக் கட்டிக் காத்து வளர்த்து வரும்
முதலாளித்துவக் கொள்கை (Capitalism)

— தனியுடைமை அழிவுற்று
செல்வமனைத்தும் பொதுவாக வேண்டும் எனக் கூறும்
பொதுவுடைமைக் கொள்கை (Communism)

இவை இரண்டினது கெடுபிடிகளும், ஒன்றையொன்று அழித்துக் கொண்டு உலகை ஆள எடுத்துவரும் நடவடிக்கைகளும் போராட்டங்களும் முழு மனித சமுதாயத்திற்கும் ஆக்கத்தைவிட அழிவையே தந்துவிட்டன என்று கூறுவதற்கான சான்றுகள் ஏராளம் உள்ளன.

அடிப்படையில் இந்த இரண்டு கொள்கைகளுமே பிழையானவை. அதனால், இவையிரண்டும் தமது எதிப்பார்ப்புக்களை நிறைவு செய்துகொள்ள கைக்கொள்ளும் வழிமுறைகளும் பிழையானவை என்பதில் ஐயமேயில்லை.

முதலாளித்துவக் கொள்கையின் தனியுடைமைப் போக்கானது எத்த கைய கட்டுப்பாடும் இல்லாத சுதந்திரத் தன்மையைக் கொண்டதாகும். செல்வத்தைச் சேர்த்து சுகபோக வாழ்வை நடத்திச் செல்வதில் அதற்கு எந்த விதமான வரையறைகளும் இல்லை. எதையும் செய்து எப்படியும் செல்வத்தைக் குவிக்கலாம் என்ற அதன் பாதையில் ஒழுக்கம், பண்பாடு, நீதி, நேர்மை, உண்மை என்பன மதிக்கப்படுவது இல்லை. சிலவேளை, முதலாளித்துவ வாதிகளின்

உதட்டில் இச்சொற்கள் நர்த்தனமாடலாம். ஆனால், பொருள் திரட்டும் பொழுதும், அதற்கான வழிகள் வகுத்து நடவடிக்கை எடுக்கும் பொழுதும் இவை கவனத்தில் கொள்ளப்படுவது இல்லை. விதிவிலக்கான சிலர் ஆங்காங்கே இருக்கலாம். நான் பொதுவான நிலையையே குறிப்பிடுகின்றேன்.

மறுபுறம், பொதுவுடைமை(கம்யூனிஸ)க் கொள்ளை மனிதனுக்கு எத்தகைய சுதந்திரத்தையும், சுயமாக சிந்தித்து, உழைப்புச் சக்தியைக் கூட்டிக் கொள்வதன் மூலம் பொருளாதார உயர்வை அடையும் வாய்ப்பையும் வழங்க மறுக்கும் தன்மையைக் கொண்டதாகும்.

பொதுவுடைமைக் கொள்கை சார்ந்த நாட்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் குழுவொன்றே முழு அதிகாரமும் பெற்றதாய் இருக்கும். அதன் விருப்பு வெறுப்புக்கமையவே அந்நாட்டு மக்கள் தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு எதிராகக் கருத்து வெளியிட எவரும் சக்தி பெறமாட்டார் கள். இது பணம் படைத்தவர்களால் சுரண்டப்பட்டவர்கள் எதிர்பார்த்த விடிவுக்கு நேர்மாறான விளைவாகும்.

உண்மையில், பொதுவுடைமை(கம்யூனிஸ)க் கொள்கையும் ஒரு வகையான முதலாளித்துவ அமைப்பின் மறுபெயர் எனக் குறிப்பிடலாம். இதில் ஆயிரக் கணக்கான முதலாளிகள் இல்லை. மாறாக, அந்த ஆயிரக் கணக்கான அதிகாரம் இல்லாத முதலாளிகளை அழித்தொழித்துவிட்ட, முழுமையான அரசியல் அதிகாரமும், வரையறையற்ற வலிமைகளும் மற்றும் உரிமைகளும் உடைய ஒரு சிலரைக்கொண்ட குழுவொன்று, ‘அரசு’ என்ற பெயரில் ஆதிக்கம் செலுத்தும்!

இதனை ஆங்கிலத்தில் அழகாக, "கம்யூனிஸ்ம் ஈஸ் அ ஸ்டேட் கெப்பிட் டலிஸ்ம்" (Communism is a State Capitalism) என்பார்கள். இதன் கருத்து: "பொது வுடைமை என்பது அரசு அதிகாரம் பெற்ற ஒரு முதலா ளித்துவ அமைப்பு" என் பதாகும். இக்கொள்கையின் தாயகமான சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்து, 70 வருட காலம் இருந்துவந்த இரும்புத்திரை அகன்றபோதுதான் அதன் உண்மையான அவலட்சணத் தோற்றம் எத்தகையது என உலக மக்கள் பார்க்கலாயினர்.

நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய மற்றொரு முக்கியமான விடயம் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன்:

— முதலாளித்துவம் மதங்களைக் கருவியாகக் கொண்டு
தன்னை வளர்த்துக்கொள்ள முனையும் ஒரு கொள்கை!

— கம்யூனிஸமோ மதங்களை நிராகரித்துக் கொண்டு
தன்னை வளர்த்துக்கொள்ள முனையும் ஒரு கொள்கை!

இந்தவகையில் இக்கொள்கை இரண்டினதும் நிலை ஒன்றுதான். இவற் றின் நோக்கு பணமும் அதன் மூலம் அமையப் பெறும் வாழ்வும்தான். அந்தப் பணம் எவ்வாறு பெறப்பட வேண்டும் என்பதில் இரண்டுக்கும் இடையே

எத்தகைய வேறுபட்ட வழிமுறையும் இல்லை. அதனால், விபசாரம் புரிவது, மது அருந்துவது, சூதாட்டத்தில் ஈடுபடுவது போன்ற அழிவையும் இழிவையும் தரும் பாவச் செயல்கள்கூட இவற்றின் பார்வையில் உழைப்புத் துறைகள் என்றாகி விட்டன. விளைவுகளோ மிகவும் பயங்கரமானவையாக இருப்பதை எல்லோரும் காண்கின்றார்கள். ஆனால், இவற்றிலிருந்து மீட்சிபெற மாற்று வழி என்ன என்பதைத்தான் பலரும் விளங்கிக் கொள்ள முற்படவில்லை.

இனி, இஸ்லாம் இந்த வர்க்க முரண்பாட்டை எப்படி நீக்குகின்றது என்பதைப் பாருங்கள்.

இஸ்லாமியக் கருத்தில் மனிதன் இறைவனின் பிரதிநிதியாவான். இவ்வுலகையும் இதிலுள்ள எல்லாப் பொருட்களையும் 'இறைவனின் திருப்திக்குரிய' விதத்தில் நிர்வகிக்கும் பொறுப்பு மனிதன்மீது சுமத்தப்பட்டுள்ளது.

அல்குர்ஆன் கூறுகின்றது:

● "உங்களைப் பூமியில்
பிரதிநிதிகளாக ஆக்கியவனும் அவனே!"[28]

இப்பொறுப்பில் மனிதன் வெறுமனே விடப்படவில்லை. அவனுக்கு அல்லாஹ் அறிவையும் சிந்தித்து செயற்படும் ஆற்றலையும் வழங்கினான்; வாழ்வதற்கு அவசியமான வசதிகளை வழங்கினான்; தன் பொறுப்பை நிறைவேற்றுவது எப்படி என்பதைத் தெளிவுபடுத்தி வழிகாட்டும் வாழ்க்கை முறையொன்றை வழங்கினான் - அந்த வாழ்க்கை முறைக்குப் பெயர் 'இஸ்லாம்' என்பதாகும்.

இங்கு நான் 'இறை திருப்தி' என்றொன்றைக் குறிப்பிட்டுள்ளேன். "அப்படியாயின் அதற்கு மாறான ஒன்றும் இருக்கின்றதா?" என்று நீங்கள் கேட்கலாம். நிச்சயமாக இருக்கின்றது. அதன் பெயர் 'மன இச்சை' என்பதாகும். இறைதிருப்திக்கு ஏற்பவோ மன இச்சைக்கு அடிமைப்பட்டோ வாழ்வதற்கான எண்ணம் ஊற்றெடுப்பது ஒரே இடத்தில் - உள்ளத்தில் தான். ஆனால், விளைவுகளைப் பொறுத்து இரண்டும் இரு துருவங்களாகும்.

இறை திருப்தி இஸ்லாத்தை அடித்தளமாகக் கொண்டது. எவர்கள் இஸ்லாத்தின் வழியில் தன் வாழ்வை நடத்திச் செல்கிறார்களோ அவர்கள் மட்டுமே இறை திருப்தியைப் பெறமுடியும். மாறானவர்கள் முஸ்லிம் பெயர்களை வைத்துக் கொண்டிருந்தாலும் இறை திருப்தியைப் பெற முடியாது. சிலர், "ஒரு செயலின் விளைவு நல்ல விதமாக அமையுமாயின் வழிமுறை எப்படி இருந்தாலும் பரவாயில்லை!" எனக் கூறுவார்கள். இஸ்லாம் இக்கருத்துடன் இணக்கம் கொள்வதில்லை; இப்போக்கிற்கு இறை திருப்தியும் கிடைக்க மாட்டாது. மாறாக, இறைவனின் கோபமும் தண்டனையுமே கிடைக்கும்.

மன இச்சை இறை திருப்திக்கு நேர் எதிரானது. அதற்கு வெறும் உலகத் தேவைகளே உந்துதல் வழங்குபவையாக உள்ளன. அத்தேவைகளைப்

---

*28. அல்குர்ஆன் 6: 165*

பெற்றுக்கொள்ள மனிதர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் முயற்சியை மேற்கொள்வர். அந்த வகையில் மன இச்சைக்குத் தனியான ஒரு கொள்கை இல்லை. அதன் தேவைகளைப் பெற்றுக்கொள்ள எச்சந்தர்ப்பத்தில் எந்த வழிமுறை சாதகமாக அமைகிறதோ அதுதான் அதற்குரிய கொள்கை. அந்த வகையில் மன இச்சை ஒரு பயங்கரமான, எப்பொழுது எதைச் செய்யும் என நிர்ணயித்து சொல்ல முடியாத 'மனிதனின் எதிரி' எனக் குறிப்பிடலாம்.

எவனொருவன் இறைதிருப்தியை ஒதுக்கித் தள்ளிவிட்டு தன் மன இச்சை யின்படி நடக்க பழகி விடுகின்றானோ அவன் இலகுவில் அதன் பிடியிலிருந்து விடுபடமாட்டான்.

அல்லாஹ், நபி (ஸல்) அவர்களிடம் கேட்கின்றான்:

"தனது மன இச்சையைத் தன் கடவுளாக்கிக் கொண்டவனின்
நிலை குறித்து என்றேனும் நீர் சிந்தித்ததுண்டா?
இத்தகையவனை நேர்வழியில் கொண்டுவரும் பொறுப்பை
நீர் ஏற்க முடியுமா?"[29]

இந்த உலகிலுள்ள அனேகமான கொள்கைகள் இந்த மன இச்சையின் மாற்றுப் பெயர்களைக் கொண்டவையாகும். அதனால்தான் நெறி தவறிய பாவ மான செயல்கள் யாவும் இவற்றால் அங்கீகரிக்கப்பட்டு அமுலுக்கு வந்துள்ளன. வர்க்க உணர்வை ஊட்டும் வகையில் மனிதனின் இலட்சியமே 'பணமும் பொரு ளும் சேர்த்து உல்லாசமாக வாழ்வதுதான்!' என்ற கருத்தை ஏற்படுத்தி, அதனூ டாக பகைமைக்கு வித்திட்டதும் இந்த மன இச்சையே. இதன் வழியில் தவறான இலக்குகளும் அதை அடைவதற்கான தவறான முறைகளுமே காணப்படும்.

இறை திருப்தி முற்றிலும் நல்ல இலக்கையும் அதை அடைவதற்கான தூய வழிமுறைகளையும் கொண்டதாகும். இதனை முன்னிறுத்தித் தான் இஸ்லாம் மனிதன் மத்தியில் நிலவிய வர்க்க வேறுபாட்டை நீக்கியது எனக் குறிப்பிடலாம். இதனை இஸ்லாம் நான்கு கட்டங்களில் அமுல்படுத்தியது.

1. மனிதன் தன் மன இச்சையின் ஊடாக பணத்திற்குக் கொடுத்த இடத்தை இஸ்லாம் இறை திருப்திக்குக் கொடுத்தது. அந்த ரீதியில் மனித உள்ளம் இறை திருப்தியிலேயே நிலைத்திருப்பதற்கான ஆன்மிகப் பயிற்சிகளைத் தொடராக வழங்கியது.

2. பணம் படைத்தவனோ ஏழையோ எல்லோரும் அல்லாஹ்வின் அடியார்கள். தம் செயல் குறித்து அவன் சந்நிதானத்தில் விளக்கமளிக்க வேண்டியவர்கள். எனவே, எல்லோர் மத்தியிலும் ஐக்கியமும், இணக்கமும், சகோதரத்துவ வாஞ்சையும், அல்லாஹ்வை அஞ்சி வாழும் உணர்வும் இருக்க வேண்டும் என்ற கருத்தை உருவாக்கியது.

---

*29. அல்குர்ஆன் 25: 43*

3. தவறான உழைப்பு முறைகள், ஏழைகளின் சிரமத்தை சூறையாடல், எல்லை மீறிய சுகபோக வாழ்வு, ஏழ்மையில் உழன்று தவித்தல் போன்றவை இல்லாத, மத்திமமாக வாழ்வதற்கான சமூக அமைப்பை ஏற்படுத்தியது.

4. இவற்றை மீறுவோரை ஒழுங்கின்பால் கொண்டுவருவதற்கு பாரபட்சமற்ற முறையில் விசாரணை செய்வதற்கான நீதி முறைமையும் அமுலுக்குக் கொண்டு வந்தது.

அல்லாஹ்வின் அருளால் இவை நடைமுறைக்கு வந்து சொற்ப காலத்தில் மனிதன் மத்தியில் நிலவிய வர்க்க வேறுபாடு நீங்கியது. உண்மையில் இஸ்லாமிய அமைப்பில் பெரும் பணம்படைத்தவர்கள் இருந்தார்கள்; பரம ஏழைகளும் இருந்தார்கள். ஆனால், பணத்தால் வருகின்ற அதிகார உணர்வும் மமதையும், ஏழ்மையால் வருகின்ற தாழ்வு மனப்பான்மையும் சிறுமையுணர்வும் அங்கு, அந்த மக்களிடையே தலைகாட்டவில்லை.

ஒருவனின் உழைக்கும் திறன் அவன் அங்கம்வகிக்கும் சமூகத்துக்குக் கிடைத்த அரும் சொத்தாகும். அதை அவசியமற்ற முட்டுக்கட்டைகளைப் போட்டு தடுப்பதற்கு இஸ்லாம் ஒருபோதும் விழைந்தது இல்லை. மாறாக, அவனது ஆகுமான உழைப்புக்கு இஸ்லாத்தின் மூலம் வலுவூட்டலே கிடைத்தது எனலாம். அத்தகைய உழைப்பிலிருந்து விரும்பிக் கொடுக்கும் தானதருமங்கள், கட்டாயமாகக் கொடுக்க வேண்டிய ஸகாத், பிரிந்து போக வேண்டிய வாரிசுரிமைச் சொத்துக்கள் போன்றவை மூலம் குறித்த நபரின் உறவினர்களும் மற்றும் ஏழைகளும் பயனடையும் வகையில் பொருளாதாரத் துறையில் பல சீர்திருத்தங்களை இஸ்லாம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வகையில் குறிப்பிட்ட ஒரு நபர் உழைத்த பெரும் செல்வம் அவரிடமே தேங்கி விடாது பலர் மத்தியில் பிரிந்து செல்வதற்கு வழிவகுக்கப்படுகின்றது.

மற்றைய கொள்கை வழிவந்த சமூகங்களிலுள்ள பணம் படைத்தவர்களுள் பெருமளவினர் அரசு வற்புறுத்தல் காரணமாகவும் தண்டனைகளைப் பயந்தும் தம் சொத்திலிருந்து ஏக்கத்துடன் அரசுக்குக் கொடுக்கின்றனர்; அல்லது குறுகிய நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்கு வாரியிறைக்கின்றனர். ஆனால், இஸ்லாத்தைத் தன் கொள்ளையாக ஏற்றவர்கள் அல்லாஹ்வின் திருப்தியை நாடி மனமுவந்து வாரி வழங்குகின்றனர்.

உண்மையில் மன இச்சைக்கு இணக்கமானவன் வாழ்வு பரிதாபகரமானது. அவன் ஏற்றுக்கொண்ட கொள்கைகள் அவனை உலக ஆசாபாசங்களை அனுபவித்துவிட்டு மரணிக்கும் ஒருவனாகவே ஆக்கிவிடுகின்றன. சில வேளை, அவன் உழைத்துக் குவித்தவை அவனுக்கே பயனில்லாமலும் போய் விடுகின்றன. அவனது நிலை புல் மேய்ந்து திரியும் ஆடு மாடுகளைவிட மாறுபட்டது அல்ல.

ஆனால், இறை திருப்திக்கு இணக்கமானவன் வாழ்வு புனிதம் நிறைந்ததாகவே இருக்கும். அவன் ஏற்றுக்கொண்ட இஸ்லாம் அவனை தூய சிந்தனை

யுடன் பணியாற்றவும், அவனது செல்வத்தைத் தேவையுள்ளவர்களுக்கு வாரி வழங்கவும் உந்துதல் வழங்கும். அவன் மரணிக்கும் பொழுது மன நிறைவுடனும், அல்லாஹ்வின் அருட்பரிசுகளை பெறும் உணர்வுடனும் மரணிக்க முடியும். இப்படி வாழ்ந்தவர்கள் பற்றிய குறிப்புக்கள் வரலாற்று ஏடுகளை அலங்கரித்துக் கொண்டுள்ளன.

இஸ்லாமிய சமூகமொன்றில் எந்த மனிதனும் அவனது பணம், அந்தஸ்து என்பவற்றைக் கொண்டு அளவிடப்படுவதில்லை. அவன் எந்த அளவுக்கு இஸ்லாமிய வழி நின்று இறை திருப்தியை நாடி பணிபுரிந்தானோ அந்த அளவுக்கு நினைவு கூறப்படுபவனாக இருப்பான்.

இஸ்லாம் வர்க்க பேதத்தை அடியோடு தகர்த்தெறியக் கருவியாகக் கொண்ட 'இறை திருப்தி', ஒருவனது உள்ளத்தில் வரப்பெறுவான் என்றால் அவனை விடவும் பாக்கியசாலி யார் இருக்க முடியும்?

இதுவரை எடுத்துக் காட்டியவற்றிலிருந்து, அல்லாஹ்வின் அருள் மார்க்கமான இஸ்லாம்

— இன நிற வேறுபாடுகள்
— மொழிவெறி உணர்வுகள்
— சாதிக் கொடுமைகள்
— வர்க்க முரண்பாடுகள்

போன்ற பாபகரமான தீமைகளிலிருந்து மனிதனைப் பாதுகாப்பதில் கண்ட வெற்றியினைப் பார்த்தோம். சுருக்கமான இவ்விளக்கங்களில் இருந்து உங்கள் முயற்சி தொடருமாயின் இன்னும் அதிக விளக்கம் கிடைக்கப் பெறுவீர்கள், இன்ஷா அல்லாஹ்.

குறிப்பு:

முஸ்லிம்களின் முதல் ஆலயத்திற்கு 'கஃபா' என்று பெயர். இது மக்கா வில் உள்ளது. கடந்த 1400 ஆண்டு காலமாக உலகின் நான்கு திக்கிலும் இருந்து முஸ்லிம்கள் சாரிசாரியாக இங்கு வந்து குழுமுவர் - 'ஹஜ்' எனும் கடமையை நிறைவேற்ற!

அப்படி வருபவர்களிடையே இனம், நிறம், மொழி, தேசம், வர்க்கம், அறிவு, அந்தஸ்து, தொழில் போன்ற பல்வேறு வித்தியாசங்கள் உடைய மக்கள் இருப்பர். எனினும், இந்த வித்தியாசங்கள் காரணமாக ஒரேயொரு முஸ்லிமா யினும் சங்கடத்திற்கு ஆளாக்கப்பட்ட செய்தி இல்லை. இது எத்தகைய சமத் துவ, சகோதரத்துவ உணர்வு என்பதை எண்ணிப் பாருங்கள்.

உண்மையில், மனித வரலாற்றை நோக்கும்பொழுது, இஸ்லாம் ஒன்று மட்டுமே இவ்வுயரிய சமத்துவ உணர்வுடைய மக்களை உருவாக்கியமைக்கு உரிமை கொண்டாட முடியும் என்ற உண்மையை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

# இஸ்லாத்தில் பெண்கள்!

"இஸ்லாம் ஆண்களைப் போலவே பெண்களையும் சமத்துவமாக நடத்துவது இல்லை. அவர்கள் அடிமைகள் போல் வீடுகளில் அடைத்து வைக்கப்படுகின்றார்கள். சாதாரண மனிதாபிமான உரிமைகள்கூட அவர்களுக்கு வழங்கப்படுவது கிடையாது!"

இவ்வாறு யாரேனும் உங்களிடம் கூறியிருக்க முடியும்; குற்றம் சுமத்தியிருக்க முடியும். நீங்களும் பெண்கள் தொடர்பான இஸ்லாத்தின் நிலை என்னவென அறியாததால் அவற்றை நம்பியிருக்கக் கூடும். எனவே, இவற்றைப் பற்றிய உண்மையை நீங்கள் அறிவது அவசியம். அப்பொழுது இஸ்லாம் பெண்களை எத்தகைய உயர்ந்த அந்தஸ்தில் வைத்துள்ளது என்பதை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.

## மற்ற சமூகங்களில் பெண்கள் நிலை!

அதற்கு முன்னர், முஸ்லிமல்லாத சமூகங்களில் பெண்கள் பற்றி நிலவும் கருத்துக்கள் என்ன? அவர்கள் எத்தகைய அந்தஸ்தில் வைக்கப்பட்டுள்ளார்கள்? எப்படி நடத்தப்படுகின்றார்கள்? என்பன போன்ற விடயங்களை நீங்கள் தெரிந்து கொள்வது நல்லது. அப்பொழுது, இஸ்லாத்தில் முஸ்லிம் பெண்களின் நிலையைப் புரிந்து கொள்வது மிகவும் எளிது என நினைக்கின்றேன்.

பேராசிரியர் அப்துர் ரஹ்மான் ஐ. தோய் எழுதுகிறார்:

"மனித இனத்தில் தோன்றிய
கீழ்ப் பிறவியே பெண்!" என்று
பண்டைய மதங்களும் கலாசாரங்களும்
பெண்ணைச் சித்தரித்துக் காட்டுகின்றன.
புகழ்பூத்த நாகரிகங்களையுடைய
ஸமாரியா, மெஸபொத்தேமியா, கிரேக்கம்,
ரோம சாம்ராஜ்ஜியம், இந்தியா, சீனா போன்ற
நாடுகளில் கூட பெண்ணின் நிலை
பரிதாபகரமாகவே இருந்துள்ளது!

அதற்கான உதாரணங்களாவன:

"ஸமாரியாவில் ஓர் ஆண் திருடினால்
அவனுக்குரிய தண்டனை மென்மையாகவே இருக்கும்!
ஆனால், ஒரு பெண் தனது கணவனிடம் திருடினால்கூட
கடுமையான தண்டனைக்கு ஆளாவாள்!
அவள் பக்கத்து வீடொன்றில் திருடினால்
அவளுக்குரிய தண்டனை, ஒன்றில்

பக்கத்து வீட்டாரால் அவளது மூக்கு
வெட்டி வீசப்படும். அல்லது அவளது கணவன்
அவளுடைய இரண்டு செவிகளையும் வெட்டி வீசுவான்.[A]
அதே போன்று, ஒரு பெண்
தனது கணவனுக்குத் தெரியாமல்
வீட்டை விட்டு வெளியேறிப் போகும்போது,
மற்றொரு பெண் அவளுக்கு அடைக்களம் கொடுத்தால்
அவ்விருவருமே தமது செவிகளை இழப்பதற்கான
குற்றம் புரிந்தவர்களாவர்.[B]

"மெஸபொதேமியர் மத்தியில்
கற்பழிப்பு விபசாரம் என்பன
சர்வசாதாரணமானவையே!
அவர்களுடைய ஒரு பெண்
கருச்சிதைவு காரணமாகக் குற்றவாளியானால், அவள்
கருச்சிதைவின் பின் உயிருடன் இருந்தாலும் இல்லா விட்டாலும்
கழுவில் ஏற்றப்படுவாளேயன்றி
பூமியில் புதைக்கப்பட மாட்டாள்![C]

"கிரேக்கத்தில்,
சாக்ரடீஸியர் வார்த்தைகளில் சொல்வதாயின்,
உலகளாவிய குழப்பங்களுக்கும், அழிவுகளுக்கும்
வித்திடும் ஒரு கருப்பொருளே பெண்!
சாக்ரடீஸியர்கள் கூறுவார்கள்:
'நாகம் தீண்டினாலும் சுகப்படுத்தலாம். ஆனால்,
பெண்களின் சூழ்ச்சிக் குணத்தை
இல்லாமலாக்குவது சாத்தியமற்றதே![D] என்று.
கிரேக்கத்தில்,
தட்டுமுட்டுச் சாமான்கள் வாங்குவது விற்பது போலவே
பெண்களும் நடத்தப்பட்டனர்.
ஒரு பெண்ணின் விலை
அவளுடைய அழகு, தகுதி என்பவற்றுக்கமைய
வித்தியாசப்படும். மேலும்,
ஒரு பெண் பண்டமாற்று ரீதியில்
மிருகங்களுக்குப் பகரமாக
பரிமாற்றம் செய்யப்படுபவளாகவும் இருந்தாள்.
ஒரு கிரேக்கக் கணவன்
அற்ப கருத்து வேற்றுமை காரணமாகவும்
தனது மனைவியைத் துரத்திவிட முடியும்![E]
"ரோமர்களின் சட்டத்தின் எதிரே ஒரு பெண்
எத்தகைய மதிப்பும் இல்லாதவள் ஆவாள்.
அவள் எந்த நீதிமன்றத்திலும் ஒரு வாதியாக
ஒருபோதும் ஆஜராக முடியாது![F]
அவள் தனது சுயபுத்தியைப் பயன்படுத்தி,

சரி பிழை பார்த்து நடக்க முடியாத,
மற்றொருவரின் பாதுகாப்பில் இருக்க வேண்டிய,
ஓர் அப்பாவியாகவே கருதப்பட்டாள்.
அவளுடைய சொத்துக்கள் யாவுமே
அவள் என்று விவாகம் செய்து கொள்கின்றாளோ அன்றே
அவளது கணவனின் அதிகாரத்தினுள் கைமாறி விடுகின்றன.
அவள் சுயமாக உழைக்கவோ
சொத்து செல்வங்கள் வைத்துக் கொள்ளவோ முடியாது.
அவள் யாருக்காகவும் சாட்சி சொல்ல முடியாது.
அவள் எதுவும் வாங்கவோ விற்கவோ
உடன்படிக்கைகள் செய்யவோ முடியாது.

“இந்தியப் பெண் நடத்தப்படும் விதம்
மிகவும் பரிதாபகரமானது; வெட்கக் கேடானது.
சானக்கியா கூறியுள்ளார்:
‘ஒரு சமுத்திரத்தையும், ஓர் இராணுவ வீரனையும்,
நகங்களும் கொம்பும் உடைய மிருகங்களையும்,
ஓர் அரசனையும், ஒரு பெண்ணையும் நம்பக் கூடாது?!’[G] என்று
இன்னும் அவர் கூறியுள்ளதாவது:
‘ஒருவர் - ஏமாற்றுதல், மோசடி, சூழ்ச்சி என்பன
கற்றுக்கொள்ள வேண்டுமாயின்,
அதற்கு மிகவும் பொருத்தமானவள் பெண்!’[H] என்று.
மேலும், அவர் தெரிவிப்பதாவது:
‘நெருப்பு, நீர், ஒரு முட்டாள், ஒரு பாம்பு,
ஓர் அரச குடும்பம், ஒரு பெண் - இவை யாவும்
ஒருவனின் அழிவுக்கு வித்தாக அமைய முடியும். எனவே,
இவை தொடர்பாக எச்சரிக்கையுடன் இருப்பது நன்று!’[I] என்று.
மனு நூலில்:
‘ஒரு பெண் பொய் பேசுவது அவளது இயல்பே’[J] என்றுள்ளது!
முஸ்லிம்கள் இந்தியாவில்
காலூன்றும் காலம் வரை
இந்துப் பெண்கள் பெரும்பாலும் நிர்வாணமாகவும்,
எத்தகைய வெட்க உணர்வுமின்றி
தமது மார்பகங்களை வெளியில் காட்டிக்கொண்டு
திரிபவர்களாகவுமே இருந்தனர்![K] என்றுமுள்ளது!
மிகவும் மனிதாபிமானமற்ற கொடுஞ்செயல் என்னவெனில்
மரணித்த கணவரை சிதையில் வைக்கும்பொழுது
உயிருடனுள்ள அவரது மனைவியையும்
எரியும் அக்கினிக் குண்டத்தில் தள்ளி எரியச் செய்வதாகும்.
‘சதி’ எனும் இக்கொடுஞ்செயல்
முஸ்லிம் ஆட்சியாளரால் நிறுத்தப்பட்டது!
“கிறிஸ்தவ மதத்தில்
பெண்கள் மிக மோசமானவர்களாக
சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளனர்.

முந்தைய கிறிஸ்தவ மதக் குருக்களான
புனித பர்னாட் (St. Bernard)
புனித அந்தோனியார் (St. Antony)
ஸைப்பிரியன் (W. Cyprian)
புனித ஜெரோம் (St. Jerome)
புனித தெமஸ்ஸீன் (St. Demascene)
ஆகியவர்கள் முறையே
— 'பெண் நரகத்தின் வாயில்!'
— 'ஷைத்தானின் ஆரம்ப உருவம்!'
— 'தீமைகள் அனைத்தினதும் அன்னை!'
— 'தீண்டுவதற்குத் தயாராக இருக்கும் ஒரு தேள்!'
— 'வேல் சுமந்திருக்கும் ஒரு பேய்!'
— 'பொய்மையின் மகள்!'
— 'நரகத்தின் விருப்புக்குரியவள்!'
— 'அமைதியின் சத்துரு!' என்று
பெண்களைப் பலவாறாக இகழ்ந்துரைத்துள்ளனர்!
'பெண் கொண்டுவந்த பாபச்சுமை காரணமாக
காலமெல்லாம் பிராயச்சித்தம் வேண்டி வாழவேண்டும்!'
எனவும் கூறியுள்ளனர்!

"புனித கிரிகோரி தவ்ன்மதுர்குஸ் (St. Gregory Taunmaturgus) இவ்வாறு கூறியுள்ளார்:
'நான் ஆண்கள் அனைவரிலும்
கற்புள்ள ஒருவரைத் தேடினேன், காணவில்லை. சில வேளை, ஆயிரம் ஆண்களுள் ஒருவரிடம் கற்பு நிலை இருக்கலாம்.
ஆனால், பெண்களிடம் அதுவும் அறவே இருக்காது![L]

புனித கிரிகோரி நேஸியேரியம் (St. Gregory of Naziarium)
மேலும் ஒருபடி மேலே சென்று,
'மூர்க்கக் குணம் படைத்தது ட்ரகன்,
தந்திரக் குணம் கொண்டது குரங்கு,
இந்த இரு குணங்களும் ஒருசேரக் கொண்டவள் பெண்!'[M] என்று கூறியுள்ளார்.

இவை குறிப்பிட்ட ஒருவர் - பேராசிரியர், அப்துர் ரஹ்மான் ஐ. தோய் அவர்களின் தேடுதலில் கிடைத்த தகவல்கள்.[30]

---

30. The Quranic Understanding of the Rights of Woman, Article by Prof. Abdur Rahman I.Doi Appeared in 'The Muslim World League Journal' (English) K.S.A. July/August '88, Page:14-16.
A- Hawkes.J., The First Great Civilisation, London, 1973, P. 82-183
B- Ibid P. 183
C- Ibid P. 183
D- Condlelle.M., and Mehale.J., 'Woman in World Terms', State University New York 1975, P. 8
E- Haring Bernard, Marriage in the Modern World, Cork, 1965, P. 100
F- Ibid, P. 150
G- Chanakya, Chakniti 1:15

இஸ்லாத்தில் பெண்கள் நிலை தொடர்பாக அறியும் முன்னர் இன்னும் சில மேற்கோள்களைத் தரலாம் என நினைக்கின்றேன். பொறுமையுடன் மிக நிதானமாக நீங்கள் இவற்றைப் படிக்க வேண்டும். இந்த மேற்கோள்கள் யாவும் கலாநிதி ஜமால் ஏ. பதவி அவர்களது 'இஸ்லாத்தில் பெண்ணின் அந்தஸ்து'[31] என்ற நூலில் காணப்படுபவையே.

"இந்தியாவில் (பெண் மீதான) அடிமைத்தனம்
ஓர் அடிப்படைக் கோட்பாடாகும்.
பெண்களை இரவு பகலாகத் தம்மைச் சார்ந்து நிற்கும் நிலையில்
அவர்களது பாதுகாவலர்களால் வைத்துக் கொள்ளப்படுவது
அவசியமென மனு நூல் கூறுகின்றது.
வாரிசுரிமைச் சட்டம் தந்தை வழி சார்ந்ததே. அதாவது,
பெண்கள் தவிர்ந்த ஆண்கள் வழிவரும் பரம்பரை சார்ந்ததே![அ]

"எந்தப் பெண் தனது மனம், பேச்சு, உடல் என்பன
அடிமைத்தனத்திற்குரியனவாக வைத்துக் கொள்கின்றாளோ
அவள், இவ்வுலகிலும் மறுமையிலும் ஈடேற்றம் பெறுவாள்;
அவள் தன் கணவனுடன் சேர்ந்து வாழும்
இல்லமும் அவ்வாறு இருக்கும் என்று
நல்ல மனையாள் ஒருத்தியைப் பற்றிக் குறிப்பிடும்
இந்து கிரந்தங்கள் கூறுகின்றன!"[ஆ]

"ரோமர் சட்டத்தின்படி,
ஒரு பெண் வரலாற்றுக்கு உட்பட்ட காலத்திலும்
முழுமையாக மற்றவர் தயவில் வாழ்பவளே.
அவள் மணமுடிக்கும்போது
அவளும் அவளது சொத்து செல்வங்களும்
கணவன் அதிகாரத்திற்குள் சென்று விடுகின்றன . . .
ஓர் அடிமையைத் தன் தேவைக்கு
விலை கொடுத்து வாங்குவதுபோல், ஒரு கணவன்

---

H- Ibid, 12:17
I- Ibid, 14:12
J- Manu, Manu Smiriti., 5:147
K- Basham, A.L., The Wonder that was India, London, 1967, P. 123
L- Paeds ii, 283, P. 189
M- Fore Details on the Pathetic Condition and Sufferings of Women, See: Doi, A. Rahman.I., 'Woman in Shariah, Zaria, 1980, PP. 20-34

31. These quotations are from the book 'The Status of Woman in Islam' by Dr. Jamal A. Badawi, Published by World Assembly of Muslim Youth, P.O.Box 10845, Riyadh 11443, K.S.A.
அ. The Encyclopedia Britannica, 11th Edition, 1911, Vol: 28, P. 782
ஆ. In Mace, David and Vera, 'Marriage East and West', Dolphin Books, Doubleday and Co., Inc., N.Y., 1960
இ. The Encyclopedia Britannica, 11th Edition, 1911, op.cit., Vol:28, P. 782
ஈ. Encyclopedia Americana International Edition, Vol: 29, P.108
உ. Mace, David and Vera, Marriage East and West, op.cit., PP. 80-81

வாங்கும் விலைப் பொருளே அவள்!
ஒரு பெண் சமூக, பொது விடயங்களில் ஈடுபட முடியாது....
அவள் ஒரு சாட்சியாக, ஜாமீன்தாரியாக, போதகராக முடியாது.
ஒரு மேற்பார்வையாளராக, ஸ்வீகாரம் எடுப்பவளாக அல்லது
எடுக்கப்படுபவளாகவும், உடன்படிக்கைகள் செய்பவளகாவும் முடியாது."இ

"சாதாரண ஆங்கில சட்டத்தின்படி:
ஒரு பெண், அவளுடையது எனக்கொண்டிருந்த
நிலையான சொத்துக்கள் யாவும் திருமணத்தின்போது
அவளது கணவனின் சொத்துக்களாக மாறிவிடுகின்றது.
அவர்கள் கணவன் மனைவியாக வாழும்போது
காணிகளிலிருந்து வரும் குத்தகைப் பணம்,
தோட்டத்துரவுகளிலிருந்து வரும் வருமானம்
போன்றவற்றுக்கு அவனே உரிமையாளன்.
காலம் செல்ல, மனைவியின் இணக்கமின்றி
அவளது நிலையான சொத்துக்களை
அவளுடைய கணவன் மாற்றுவதைத்
தடைசெய்ய அவசியமான சட்டங்களை
ஆங்கில நீதிமன்றங்கள் கொண்டு வந்தன. ஆனால்,
அவன் (கணவன்) தன்னுரிமையை விட்டுக்கொடுக்காது
அவற்றின் வருவாயைத் தொடர்ந்து எடுத்து வருகிறான்.
அத்துடன், மனைவியின் சொந்த சொத்துக்களிலும்
அவனது அதிகாரமே மிகைத்துள்ளது.
அவன் விரும்பியவாறு அவற்றை செலவு செய்யும்
உரிமையைப் பெற்றுள்ளான்."ஈ

"எமது கிறிஸ்தவ மரபுரிமை
சில அற்பமான தீர்ப்புகளை வழங்குவதிலிருந்து
விடுபட்ட ஒன்றாக எவரும் நினைத்துவிடக் கூடாது.
ஆரம்ப கால கிறிஸ்தவப் பாதிரிகள்
பெண்களைத் தாழ்த்திப் பேசியதை விடவும்
தரங்கெட்ட பேச்சை வேறு எங்கும் கேட்க முடியாது.
லெக்கீ (Lecky) எனும் வரலாற்று ஆசிரியர் கூறுவதாவது:
(அந்தப் பாதிரிகளின் குறிப்பிடத்தக்கதும் நகைப்புக்கிடமானதுமான
எழுத்துக்கள் எப்படிக் கொடுமையினைத் தூண்டுகின்றன என்றால் ......
'பெண்ணானவள் நரகத்தின் வாயிலையும்
மனிதத் தவறுகளின் தாய்மையையும்
பிரதிநிதித்துவப் படுத்துபவளாவாள்.
அவள், தான் ஒரு பெண் என்ற நினைப்பு
வரும்போதெல்லாம் வெட்கப்பட வேண்டும்.
அவள் உலகத்திற்குக் கொண்டுவந்த தீமைகளுக்கெல்லாம்
பிராயச்சித்தம் தேடுபவளாகவே வாழ வேண்டும்.
அவளது அழிவை நினைவுறுத்தும் உடைக்காக
அவள் வெட்கப்பட் வேண்டும்.

குறிப்பாக, சைத்தானின் மிகவும் சக்திவாய்ந்த கருவியாகப்
பயன்படும் அவளது அழகுக்காக
அவள் வெட்கப்பட வேண்டும்.') என்றுள்ளன!
மேலும், புனித டர்டுல்லியன் (St. Tertullian) என்பவரின்
கருத்துக்கள் மிகவும் புண்படுத்துவதானவை. அவர் கூறியுள்ளார்:
'நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஏவாள் (Eve)
என்பது உங்களுக்குத் தெரியுமா?
உங்கள் மீது இறைவன் விதித்த தண்டனை
இன்னும் நடைமுறையில் உள்ளது.
குற்றம் புரிந்தவர்கள்
கட்டாயமாக வாழ்ந்தாக வேண்டும்.
நீங்கள் ஷைத்தானின் வழி வந்தவர்கள்;
நீங்கள் தடைசெய்யப்பட்ட அந்த மரத்தை
நெருங்கக் கூடாதவர்கள்;
நீங்கள்தான் இறை கட்டளையை
முதலாவதாகப் புறக்கணித்தவர்கள்;
சைத்தான் அவரை (ஆதமை) தாக்குவதற்கு சக்தி பெறாத போது
நீங்கள் தான் அவரைத் தூண்டி விட்டவர்கள்;
ஆணின் மீது படிந்த இறையுணர்வை மிக இலகுவாக
அழித்தவர்களும் நீங்கள் தாம்;
உங்களது கீழ்ப்படியாமை காரணமாகவே,
அதுதான் மரணம்-
ஆண்டவனின் குமாரரைக்கூட தன்னுள் எடுத்துக் கொண்டது.' என்று!
பெண்ணின் தாழ்ந்த நிலையை
உறுதிப்படுத்திய கிறிஸ்தவ சபை
அவள் முன்னர் அனுபவித்து வந்த
உரிமைகளையும் பிடுங்கிக் கொண்டது!'"[2]

இத்தகைய மேற்கோள்கள் எண்ணிலடங்காத அளவு இருக்கின்றன. இவ்வாறு, பெண்ணினத்தைப் பற்றி மிகவும் தரங்கெட்ட, இழிவான கருத்துக்களும், இவற்றுக்கமைவான நடவடிக்கைகளும் கொண்ட சமூகங்களில் பெண்கள் எத்தகைய வேதனைகளை அனுபவித்திருப்பர் என நினைத்துப் பாருங்கள்.

பெண் என்பவள்
— பாவத்தின் சின்னம்
— இழிந்த பிறப்பு

போன்ற கருத்துக்கள் வலுவடைந்த நாடுகளில், அவள் மிகக் கேவலமாகவே நடத்தப்பட்டாள்; ஆண்களின் அற்ப ஆசையைத் தணிக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் எச்சில் இலை போல் தெருவில் எறியப்பட்டாள்; அங்கும் அவளது நிலை பரிதாபகரமாகவே இருந்தது எனலாம்.

இன்றும், இந்தியாவில் பெண்கள் தேவதாசிகளாகக் கருதப்படும் கேவலம் இருக்கத்தான் செய்கிறது. அவ்வாறு, மதத்தின் பெயரில் மறைவறை

களில் இந்துப் பெண்கள் விலை போகிறார்கள். கணவனை இழந்த இளம் பெண்கள் கணவனின் எரியும் சிதையில் - நெருப்புக் குண்டத்தில் - எறிந்து துடிக் கத் துடிக்கச் சாகடிக்கப்படும் மதாசாரம் பின்பற்றப்படும் பரிதாபம் மறைந்து விடவில்லை.[32]

வேறு பல நாடுகளிலும் பெண்கள் நிலை இப்படித்தான் இருந்தது; இருக்கின்றது. இஸ்லாம் வருவதற்கு முன் அரேபியாவில் கூட பெண்கள் நிலை தாழ்ந்திருந்ததுடன், பெண் பிள்ளை பிறந்தால் உயிருடன் புதைக்கும் கொடிய வழக்கமும் இருந்தது.

## பெண் விடுதலை இயக்கங்கள்

இத்தகைய நிலையில்தான் மேற்குலகில் 'பெண்கள் விடுதலை' இயக்கங்கள் தோற்றம் பெறலாயின. அவை பெண்களின்

— பாதுகாப்பு
— இழந்த உரிமைகளை மீளப்பெறல்
— முழு அளவிலான சுதந்திரம்
— ஆண்களுக்குச் சமமான சமூக அந்தஸ்து
— ஆண்களைப் போல் உழைப்பில் ஈடுபடுவது

போன்றவைகளைத் தமது கோரிக்கைகளாக மக்கள் மன்றத்தில் சமர்ப்பித்தன. அதனைத் தொடர்ந்து அவற்றை வென்றெடுக்கவென போராடவும் முற்பட் டன. இப்போராட்ட முறைகள் வேறு பல நாடுகளில் வதைப்பட்டுக் கொண்டி ருந்த பெண்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாகப்பட்டன. அவர்களும் வரிந்து கட்டிக் கொண்டு, களத்தில் குதித்து செயற்பட ஆரம்பித்து விட்டனர்.

இவற்றின் விளைவாக, 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய சட்டங்களில் சில நல்ல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அம்மாற்றங்கள் மணமுடித்த பெண்கள் தனக்கென சொத்து வைத்துக் கொள்ளவும், உடன்படிக்கைகள் செய்யவும் சட்ட ரீதியான அனுமதியை வழங்கின.

எனினும், பெண்ணினத்தைத் தரக்குறைவாக மதித்து வந்தவர்கள் கருத்துக்களிலோ, அவற்றை அடியொட்டிய நடவடிக்கைகளிலோ பாரிய அளவிலான எத்தகைய மாற்றங்களும் நிகழவில்லை. ஆனால், வேறு சில வேதனை தரும் நிகழ்வுகள் இடம்பெறலாயின. அவை, காலங்காலமாக மக்கள் மத்தியில் நிலைத்து நற்பயன்களைத் தந்த சமூகக் கட்டுக்கோப்பு, நல் லொழுக்கம், நற்பண்புகள் போன்றவற்றின் அடித்தளங்கள் உடைப்பெடுத்

32. 1987 செப்டம்பர் 4 ஆம் திகதி ராஜஸ்தான் மாநில டெயோரலா கிராமத்தில் அழகே உருவான 18 வயதுடைய 'ரூப் கன்வர்' என்ற இள நங்கை தன் கணவனது உடலை எரித்துக் கொண்டிருந்த நெருப்புக் கிடங்கில் எறியப்பட்டு துடிதுடித்து இறந்துபோன செய்தி உலகையே குலுக்கியது எனலாம்.
பார்க்க: 'உடன்கட்டை ஏறுதல்' கட்டுரை, தினகரன் வாரமஞ்சரி, லேக்ஹவுஸ், கொழும்பு-1, (10, 11, 91)

தமை; பெண்களின் கட்டுப்பாடற்ற சுதந்திரம், ஆண்களுடனான வரையறை யற்ற தொடர்புகள் என்பன காரணமாக எங்கும் சீரழிவு உருவாகியமை; அமைதியற்ற சூழல் தோற்றுவிக்கப்பட்டமை; குடும்ப அமைப்பு குட்டிச் சுவராகியமை என்று குறிப்பிடலாம்.

இவற்றின் விளைவாக, பெண் சமூக ரீதியில் தனித்து விடப்பட்டாள்; தன் வாழ்வை ஓட்டுவதற்கும், குடும்பத்தில் தன் சுயாதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் 'அவளும் உழைத்தாக வேண்டும்' என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

இந்த நிர்ப்பந்தமான நிலை, அவளுடைய

— இயல்புக்கு மாறான கடின உழைப்பு
— குறைந்த ஊதியம்

போன்றவற்றைக்கூட பொருட்படுத்தாது ஆண்களைப் போன்று கஷ்டப்பட்டு உழைக்கத் தூண்டப்பட்டாள். அவ்வாறு உழைக்கச் சென்ற அவளது அச்சம், அடக்கம், வெட்கம் போன்ற பெண்மைக்குரிய சிறப்பம்சங்கள் அவளிட மிருந்து படிப்படியாகக் குறைந்து செல்லலாயின; இவை அறவே இல்லாமலாகி விட்ட பெண்கள் ஏராளம்; அதேவேளை, வெகு சில விதிவிலக்கான நல்ல பெண்களும் இல்லாமலில்லை. மறுபுறம், தீய எண்ணங்கொண்ட பெரும் பாலான ஆண்களிடமிருந்து இவள் தன்னை, தன் ஒழுக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வது பெரும் சிரமமாயிற்று. அந்த வகையில் தவறில் மாட்டிக் கொண்டு தன்னை இழந்து கொண்ட பெண்கள் இவ்வளவுதான் எனக் கணக்கிட்டுக் கூற முடியாது.[33]

---

33. ஜெனீவாவில் தனது தலைமையகத்தைக் கொண்ட 'சர்வதேச தொழிலாளர் அமைப்பு' (International Labour Organization) உலகெங்கும் பெண்கள் அனுபவித்து வரும் பாலியல் தொந்தரவு தொடர்பாக 300 பக்க அறிக்கை யொன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கைப் பற்றி அவ்வமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களான மைக்கள் ஹன்ஸேன் (Michael Hansene), கொன்ஸ்டன்ஸ் தோமஸ் (Constance Thomas) ஆகியோர் பத்திரிகைகளுக்கு மேலதிக செய்திகளும் கொடுத்துள்ளனர்.

அவ்வறிக்கைப்படி உலகின் பல நாடுகளில் தொழில்புரியும் பெண்கள் பார தூரமான பாலியல் தொந்தரவுகளுக்கு இலக்காக்கப்படுகின்றனர். ஆனால் சில நாடுகளில் மட்டுமே இதைக் கண்டிக்கும் சட்டங்கள் உள்ளன.

இவ்வமைப்பு ஆய்வுகள் நடத்திய 23 நாடுகளில் உழைப்புக்குச் செல்லும் பெண்கள் மிக மோசமான பாலியல் தொந்தரவுகளுக்கு இலக்காக்கப்பட்டுள் ளனர். சில நாடுகளில் உடலுறவு கொள்ள பெண்கள் இணங்க வேண்டும் என வற்புறுத்தப்பட்டுள்ளனர். பொதுவாக பலவாறான பெண் களும் குறிப்பாக அழகிய பெண்கள் இப்படி பாலியல் தொந்தரவுக் கஷ்டத்தை அனுபவிக்கின் றனர்.

கீழ்க்காணும் நாடுகளில் பெண்கள் அனுபவிக்கும் பாலியல் தொந்தரவு விகிதாசாரம் வருமாறு:

- அமெரிக்கா (1980) 42%
- ஆஸ்திரியா (1986) 30.5%
- செக்கோஸ்லொவேகியா 17.5% உடல்ரீதியானவை, 35.8% பேச்சு ரீதியானவை
- டென்மார்க் 11% - இதன் விளைவாகத் தொழில் இழந்தோர் 8%
- ஜெர்மனி 6%
- பிரான்ஸ் 21%
- டச்சு 58%
- பிரிட்டன் 74%
- ஸ்பெய்ன் 27%
- நோர்வே 41%

இவை தொடர்பாக ஆண்களையோ பெண்களையோ குறை காண்பதில் எத்தகைய பயனும் இல்லை. ஏனெனில், தவறு நடப்பதற்கான சூழலும், சந்திப்பும், தூண்டுதல் தரும் அம்சங்களும் அமைந்துவிட்டால் அது நடப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும். அதனால் பெருமளவு பாதிக்கப்படுவது பெண்களே ஆவர்.

இவ்வாறு, பல வகையான கஷ்டங்களுக்கு மத்தியில் உழைப்பைக் கவனித்துவிட்டு வரும் அவளுக்கு தனது இல்லத்திலும் அவளே நேரடியாக ஈடுபட்டு, கவனித்து, செய்ய வேண்டிய பல பணிகள் காத்து நிற்கின்றன. அவள் தன் இல்லத்துக்கு வெளியே பல மணி நேரம் பாடுபட்டு உழைத்து விட்டு வருகின்றாளே என்பதற்காக அவை எதுவும் குறைந்துவிடப் போவதில்லை.

இவை எல்லாமாகச் சேர்ந்து அவளை விரக்திக்கும் வேதனைக்கும் ஆளாக்கி விடுகின்றன. இதனால் பாதிப்புறும் கணவன்-மனைவி உறவுகள், வீட்டுச் சூழல், பிள்ளைகளின் வாழ்வு என்பன அவளுக்கு வாழ்க்கையை நரகமாக்கி விடுகின்றன.

உண்மையில், அவள் எவற்றைக் கோரி தன் இல்லத்திற்கு வெளியே வந்து போராடினாளோ அவைகளே அவளது அமைதியான வாழ்வுக்கு வேட்டு வைப்பவைகளாக மாறிவிட்டன. இதற்கு விதிவிலக்காகத் தொழில் செய்து கொண்டும், தங்களது ஒழுக்கத்தைப் பாதுகாத்துக் கொண்டும் சீராகக் குடும்பத்தை நடத்திச் செல்லும் பெண்கள் ஆங்காங்கே இல்லாமலில்லை. ஆனால், அத்தகைய சில பெண்களைக் கடந்த பொதுவான நிலை இதுதான்.

பெண்ணினத்தை இழிவுபடுத்தும் நோக்குடன் வெளியிடப்பட்ட கருத்துக்களும், அவை சார்ந்த நடவடிக்கைகளும் எவ்வகையிலும் ஏற்கத் தக்கவையல்ல. அவை மனிதாபிமான உணர்வுகளுக்கு மாறானவை; கண்டித்து, ஒதுக்கப்பட வேண்டியவை.

அதேவேளை, பெண்கள் தமது விடுதலைக்காக - விமோசனத்திற்காக எழுப்பிய குரல், எடுத்த மாற்று நடவடிக்கைகள் என்பன அமைந்த வழிமுறைகளும் சரியன்று.

இந்த இரு பக்கத் தவறுகளும் இணைந்து பெண்ணினத்தின் நலனுக்கு - நல்வாழ்விற்கு நெருப்பூட்டின என்றுதான் குறிப்பிட வேண்டும். அந்த

---

இந்த விகிதாசாரம் பற்றி கருத்து வெளியிட்ட கொன்ஸ்டன்ஸ் தோமஸ் "இவை மிகச் சரியானவை எனக் கூற முடியாது. காரணம், 60% வீதமான பாலியல் தொந்தரவுகள் அறிவிக்கப்படாதுள்ளன" எனக் கூறியுள்ளார்.

பெண்கள் இவ்வாறு தொந்தரவு படுத்தப் படுவது போக, பிரிட்டனில் 1991ல் 14% ஆண்கள் பெண்களால் பாலியல் தொந்தரவுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் உலக நாடுகளில் இப்போதுதான் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. அனேகமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெண்கள் பாலியல் தொந்தரவு பயங்கரமாக இருக்கும் என இவ்வமைப்பு கருதுகின்றது.

-Philippine Times Journal (International Edition) 14. 12. 1992, Page:15)

அளவிற்கு அவர்கள் வாழ்வு சிக்கலாகியுள்ளது. இந்தச் சிக்கலை அவிழ்த்து விடவென அண்மைக் காலத்து மேற்கத்திய அறிஞர்கள் வெளியிட்ட கருத்துக் கள் நடைமுறைக்கு வந்த போது நிலைமை மேலும் சிக்கலாகி விட்டதைத்தான் மேற்குலகம் காட்டிக் கொண்டுள்ளது.

இந்நிலையில், பெண்கள் தொடர்பான இஸ்லாத்தின் நோக்கும் போக்கும் எத்தகையன என மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்.

இஸ்லாத்தில் பெண்கள் நிலை சர்ச்சைக்குரிய ஒன்றல்ல என்பதை நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதைச் சர்ச்சைக்குரிய ஒன்றாக எடுத்துக்காட்டி இஸ்லாத்திற்கு அவப் பெயரைத் தேடித்தர விழைந்தவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளும், மேற்கத்திய சிந்தனைகளுக்கும், பணத்துக்கும், ஒழுக்கங்கெட்ட வாழ்வுக்கும் இரையான முஸ்லிம் பெயர் தாங்கிகளுமாகும்.

## ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்து ....

இஸ்லாம் பெண்களை நோக்கும் விதம் தனியானது; சிறப்பானது; கண்ணியம் பொருந்திய தன்மையுடையது. அது ஒருபோதும் பெண்களை இழிவாகப் பேசியது இல்லை; குறைத்து மதிப்பிட்டதும் இல்லை; ஆண்களின் ஆசையைத் தீர்த்து வைக்கும் அடிமைகளாகவோ, ஆண்களுக்குக் களிப்பூட்டும் சந்தைப் பொருளாகவோ ஆக்கி வைக்கவும் இல்லை. மாறாக, ஆண்களுக்குரிய அதே கண்ணியம், மரியாதை, மாண்பு என்பவற்றைக் கொண்டு பெண்களும் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தை வழங்கி, கடமைகளை நிறைவேற்ற வழிகாட்டுகின்றது. அக்கடமைகளில் தவறிவிடும் ஆண்களைக் கண்டிக்கும் இஸ்லாம், மாற்று நடவடிக்கைகள் மூலம் பெண்களைப் பாதுகாக்கவும் ஆக்க பூர்வமான திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது என்பதைத் தொடர்ந்து இதைப்படிக்கும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்:

- "மனிதர்களே!
உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த
உங்களின் இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள்.
மேலும் அதே ஆன்மாவிலிருந்து
அதனுடைய துணையை அவன் உண்டாக்கினான்.
மேலும் அவை இரண்டின் மூலம் (உலகில்)
அதிகமான ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான்."[34]

- "மேலும், அல்லாஹ் உங்களினத்திலிருந்தே
உங்களுக்குத் துணைவியரை அமைத்தான்;
அத்துணைவியர் மூலம் உங்களுக்கு

34. அல் குர்ஆன் 4 : 1

மகன்களையும் பேரன்களையும் வழங்கினான்.
மேலும், நல்ல நல்ல பொருள்களை
உங்களுக்கு உணவாகக் கொடுத்தான்.
பிறகு என்ன, இவர்கள் (இவை அனைத்தையும்
பார்த்து புரிந்தும்கூட) அசத்தியத்தை மேற்கொள்கிறார்களா?
அல்லாஹ்வின் பேருபகாரங்களை நிராகரிக்கின்றார்களா?"[35]

இந்த இறை வசனங்களிலிருந்து மனித இனத்தின் தோற்றம் ஓர் ஆண் ஒரு பெண்ணில் இருந்து ஆரம்பமானது எனப் புரிந்து கொள்வீர்கள். அன்றிலிருந்து இவ்விருவரது இணைப்பில் உலகம் இயங்கி வருகின்றது.

இப்படி இயங்கும் ஆண்களும் பெண்களும் அவரவர் இயல்புக்கு இயைந்தவாறு தத்தமது பங்கைச் செலுத்தும் பொறுப்புடையவர்கள் ஆகின்றனர். அப்பொறுப்புக்களை, அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து ஒழுங்காக நிறைவேற்றும் வரையில் பிரச்சினை இல்லை. எப்பொழுது இந்நிலை மாறி அமைகின்றதோ, அப்பொழுது இருவரதும் சீரான வாழ்க்கை ஓட்டத்தில் சிக்கல்கள் தோன்றுவது தவிர்க்க முடியாது போகின்றது.

## பெண் தாழ்த்தப்படவில்லை!

அல்லாஹ்வின் பார்வையில் ஆண்களை விடத் தாழ்ந்தவர்களாக பெண்கள் காணப்படுவதில்லை.

அவன் கூறுகின்றான்:

● "ஆண்கள் மற்றும் பெண்களில்
எவர்கள் முஸ்லிம்களாகவும், நம்பிக்கையாளர்களாகவும்,
கீழ்ப்படிபவர்களாகவும், வாய்மையாளர்களாகவும்,
பொறுமையுடையோராகவும்,
அல்லாஹ்வின் முன்னிலையில் பணிபவர்களாகவும்,
தானதர்மம் செய்பவர்களாகவும், நோன்பு நோற்பவர்களாகவும்,
தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாப்பவர்களாகவும்
இன்னும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருபவர்களாகவும்
இருக்கின்றார்களோ, திண்ணமாக, அவர்களுக்காக
அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும்
தயார் செய்து வைத்துள்ளான்."[36]

## இருவருக்கும் பங்குண்டு!

"ஆண்கள் கெடுவதற்குப் பெண்கள்தான் காரணம்; ஆதம் (அலை) அவர்கள் தன் கட்டுப்பாட்டை இழந்ததும் பெண்ணால் தான்!" என்று கிறிஸ்

35. அல் குர்ஆன் 16 : 72 36. அல் குர்ஆன் 33 : 35

தவத்தில் கூறப்படுவதுபோல் இஸ்லாத்தில் கூறப்படவில்லை. இஸ்லாத்தில், இருவரும் தவறிவிட்டார்கள் என்றுதான் கூறப்படுகின்றது. பின்னர் அல்லாஹ் விடம் மன்னிப்பை வேண்டினார்கள்; அவனும் அவர்களை மன்னித்தான்.

- "... ஆயினும் ஷைத்தான் அவரைக் குழப்பினான்.
'ஆதமே! உமக்கு நிலையான வாழ்வையும்
அழியாத அதிகாரத்தையும் தரக்கூடிய
ஒரு மரத்தைக் காண்பிக்கவா?' எனக் கேட்டான். இறுதியில்
(கணவன்-மனைவியாகிய) அவ்விருவரும்
அம்மரத்தின் பழத்தைப் புசித்து விட்டார்கள்.
உடனே அவ்விருவரின் மர்மஸ்தலங்கள்
பரஸ்பரம் வெளிப்பட்டுவிட்டன. மேலும்,
இருவரும் சுவனத்தின் இலைகளால்
தங்களை மறைத்துக் கொள்ளலாயினர்.
ஆதம் தம்முடைய இறைவனுக்கு மாறுசெய்தார்.
நேர்வழி தவறினார்.
பிறகு, அவருடைய இறைவன் அவரைத் தேர்ந்தெடுத்தான்.
மேலும் அவருடைய பாவமன்னிப்புக் கோரிக்கையை
ஏற்றுக்கொண்டு அவருக்கு நேர்வழி அருளினான்."[37]

## உயர்ந்த அந்தஸ்து

இஸ்லாம் பெண்ணைப் பேய், ஆன்மா இல்லாதவள், இழிபிறவி, தீமையின் தாய், நரகத்தின் தலைவாயில் என்றெல்லாம் குறிப்பிடவில்லை.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

- "உலகம் முழுவதும் சில நாட் பொருள்களாகும்.
அப்பொருள்களிலெல்லாம்
தலைசிறந்தது
நல்லொழுக்கமுள்ள மனைவியாவாள்!"[38]

மற்றொரு முறை அவர்கள் மொழிந்தார்கள்:

- "தாயின் பாதத்தடியில்
சேயின் சுவனம் உண்டு!" என்று.

## பெண்ணைத் தூற்றாதீர்!

மேலும், தூய பெண்களைத் தூற்றுவதை அல்லாஹ் வன்மையாகக் கண்டிக்கின்றான்:

---

37. அல் குர்ஆன் 20 : 121

38. அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ரு பின் ஆஸ் (ரலி), ஆதாரம் : முஸ்லிம்

- எவர்கள் கற்புடைய பெண்கள்மீது அவதூறு சொல்லி
பின்னர், நான்கு சாட்சிகளைக் கொண்டுவரவில்லையோ
அவர்களுக்கு எண்பது சாட்டையடி கொடுங்கள்.
இனி, அவர்கள் கூறும் சாட்சியத்தை
என்றைக்கும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.
மேலும், அவர்களே தீயவர்கள்."[39]

"கற்புடைய, கள்ளங்கபடமற்ற,
இறைநம்பிக்கை கொண்ட பெண்கள் மீது
எவர்கள் அவதூறு கூறுகின்றார்களோ
அவர்கள் இம்மையிலும் மறுமையிலும்
சபிக்கப்பட்டுள்ளார்கள்.
அவர்களுக்குக் கடும் வேதனையும் இருக்கிறது.[40]

அல்லாஹ்வினதும் அவன் தூதரினதும் இக்கூற்றுக்கள், இஸ்லாம் பெண் இனத்திற்கு வழங்கியுள்ள அந்தஸ்தை நன்கு தெளிவுபடுத்துகின்றது. ஆண்கள் ஒரு பாதி என்றால் அதன் மறு பாதி பெண்கள். எனவே, அந்தத் தரத்தில் அவர்களது தூய்மை கணிக்கப்பட வேண்டியது நம் கடமை.

## சமமானவர்கள்; சரிநிகரானவர்களல்லர்!

இஸ்லாத்தின் பார்வையில் ஆண்களும் பெண்களும் சமமானவர்கள் என்பது மறுப்பதற்கில்லை. அதன் கருத்து அவர்கள் ஆண்களுக்கு சரிநிகராக இருக்கிறார்கள் என்பதல்ல என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அவர்கள் அவ்வாறு சரிநிகராக இல்லாதிருப்பதற்குக் காரணம் அவர்களின் உடல், உணர்வு, இயல்பு ஆகியவற்றில் இயற்கையாகவே அமைந்துவிட்ட தன்மைகளே!

— ஆணின் உடல் ஒரு வகையில் அமைந்தது;
பெண்ணின் உடல் மற்றொரு வகையில் அமைந்தது!

— ஆண் வலிமை மிக்கவன்;
பெண் மென்மை மிக்கவள்!

— ஆண் உடனடியாகக் கோபமுறும் இயல்புடையவன்;
பெண் பொறுமையைத் தனதாக்கிக் கொண்டவள்!

— ஆண் எத்தகைய சூழல் தாக்கத்தையும் சமாளித்துக்கொண்டு
வெளியில் சென்று செயற்படக் கூடியவன்;
பெண் அந்த வகையில் பலயீனமானவள்!

— ஆணினால் பிள்ளைப் பெற முடியாது;
பெண்ணோ பிள்ளைப் பெற்று, பாலூட்டி, சீராட்டி
வளர்க்கும் பக்குவத்தைத் தன்னுள் கொண்டவள்!

---

39. அல் குர்ஆன் 24 : 4    40. அல் குர்ஆன் 24 : 23

— ஆண் மாதம் முழுவதும் ஒன்றுபோல் இயங்க முடியும்;
பெண் மாதத்தின் சில நாட்கள்
இயற்கையான உபாதை காரணமாகச் சோர்வடைவாள்;
சுறுசுறுப்பாக இயங்க முடியாதிருப்பாள்!
மேலும், பெண் கர்ப்பவதியாகிவிடும் காலங்களிலும்
பிள்ளை பிரசவத்தின் முன்பின் காலங்களிலும்
பெரும் உள, உடல் ஒழுங்கின்மைக்கு இலக்காகியிருப்பாள்!

இவற்றை அனுசரித்துத்தான் ஆண்களும் பெண்களும் இயங்க வேண்டும்; தத்தமது பணிகளைச் செய்ய வேண்டும். அன்றி, வேறுவிதமாகச் செயற்பட முனைந்தால் வாழ்வில் நிம்மதியே இல்லாது போய்விடும் என்பதில் ஐயமில்லை.

பொதுவாக ஆண் பெண் இருவரிடமும் இறையுணர்வு இருக்க வேண்டும். அவ்வுணர்வுடன் ஆண் தனது இல்லத்திற்கு வெளியேயுள்ள கடமைகளைச் சீராகச் செய்து, நேர்மையாக உழைத்து, குடும்ப உயர்வுக்கான ஆக்கப்பணிகளில் அயராது ஈடுபட வேண்டும்; குடும்பத்தைத் தலைமைத் தாங்கிக் கட்டுக்கோப்பாக வழிநடத்திச் செல்ல வேண்டும்.

அதேவேளை, பெண் தனது கணவனின் தலைமையை ஏற்று, அவனுக்குக் கட்டுப்பட்டு, தனதில்லத்தை அன்பு, இரக்கம், பொறுமை போன்ற பண்புகளால் அலங்கரிக்க வேண்டும்; இறையுணர்வு, கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பன தன் பிள்ளைகளிடம் மிளிரச் செய்ய வேண்டும்.

இவ்வாறு குடும்ப வாழ்வு அமையுமாயின் - அது எத்தகைய சிறப்பான, இரு சாராரதும் இன்ப வாழ்வுக்கு உரமூட்டுகின்ற, மகிழ்வும் மன நிறைவும் தருகின்ற ஒன்றாக இருக்கும் என எண்ணிப்பாருங்கள்.

இஸ்லாம் இந்த ரீதியில், வாழ்வுக்குப் பயனுள்ள முறையில் பெண்கள் நிலையை நோக்குகின்றது; வழிகாட்டுகின்றது; நடைமுறைப்படுத்த விழைகின்றது.

## அது அவர்களது உரிமை!

குடும்ப வாழ்விற்கு வித்திடும் பிரதான அம்சம் திருமணம். அதனால் தான், "ஒரு மனிதன் மணம் புரியும்போது மார்க்கத்தின் பாதியைப் பூரணப் படுத்துகின்றான்..."[41] என்று நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்.

எனினும், திருமணம் தொடர்பான பெண்ணின் உரிமையையோ சுதந்திரத்தையோ பறிப்பதற்கு இஸ்லாத்தின் அனுமதி கிடையாது.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

---

41. அடிக்குறிப்பு எண் 9 ஐப் பார்க்கவும்.

- வளர்ந்ததொரு பெண்பிள்ளையிடம்
(அவளது திருமணம் பற்றிய) அனுமதியைக் கேட்க வேண்டும்.
அவள் மௌனமாக இருந்தால் அதுவே அனுமதியாகும்.
அவள் இணங்காவிட்டால்,
அவள் மீது நிர்ப்பந்தம் கூடாது!"[42]

மற்றொரு முறை மொழிந்தார்கள்:

- முன்னர் மணமுடித்த
(விதவையான அல்லது விவாகரத்தான) பெண்ணின்
சம்மதம் கிடைக்கும் வரை
அவளுக்குத் திருமணம் செய்து வைக்காதீர்கள்.
ஒரு கன்னி(ப் பெண்ணு)க்கும் (அவளது)
சம்மதம் கிடைக்கும் வரை
திருமணம் செய்து வைக்காதீர்கள்.
அப்பொழுது அவர்கள் கேட்டார்கள்:
'அவளுடைய சம்மதத்தை எப்படி அறிவது' என்று
'அவள் மௌனமாக இருப்பதே
(சம்மதத்திற்கான அறிகுறி)' என்று
நபி (ஸல்) அவர்கள் பதில் கூறினார்கள்."[43]

ஒரு சம்பவம் இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது:

"நபி (ஸல்) அவர்களிடம் வந்த ஒரு பெண், "தனது தந்தை தன் சம்மதத்தைப் பெறாது ஒருவரை மணமுடிக்கும்படி பலவந்தப்படுத்துகிறார்" என்றாள். நபி (ஸல்) அவர்கள் அந்தத் திருமணத்தை அவள் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ உரிய தெரிவை அவளுக்கு வழங்கினார்கள். பின்னர், அவள் கூறினாள்: நான் இத்திருமணத்தை ஏற்கின்றேன். எனக்குத் தேவைப்பட்டதெல்லாம் பெண்கள் மீது கணவர்களை திணிக்கும் உரிமை பெற்றோர்க்குக் கிடையாது என்பதை அவர்களுக்கு அறிவிப்பதே."[44] என்று!

## இணங்கி வாழ்வீர்!

இஸ்லாத்தில் திருமணம் ஓர் இபாதத்-இறை வணக்கமாகும். எனவே, அதை சீராக வைத்துக்கொள்ள அவசியமான அத்தனை அறிவுரைகளையும் இஸ்லாம் வழங்குகின்றது.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

- "எந்த ஒரு முஃமினான மனிதனும்,
எந்த ஒரு முஃமினான பெண்ணிடமும்
வெறுப்பு கொள்ளக் கூடாது.

42. அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : திர்மிதீ, அபூதாவுத், நஸஈ
43. அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புகாரி, முஸ்லிம்
44. Woman in Islam, Said Abdullah Seif Al Hatimy, Islamic Publications Ltd., Lahore (1979) PP.25

அவளது ஒரு குணம் அவனுக்கு
வெறுப்பைத் தரக்கூடியதாக இருந்தால்,
மற்றொரு குணம் அவன் விரும்பத்தக்கதாக அமையலாம்."[45]

மீண்டும் மொழிந்தார்கள்:

- உங்களில் எவரும் தமது மனைவியை
அடிமையை அடிப்பது போன்று அடித்துவிட்டு
பிறகு (அன்று) பகல் கழிந்ததும்
அவளுடன் உடலுறவு கொள்ளத் தயாராகிவிடுவது கூடாது."[46]

இப்படி ஆண்களுக்கு அறிவுரை பகர்ந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பெண்களுக்குக் கூறியவை:

- ஒரு மனிதன் தனது மனைவியைப்
படுக்கைக்கு அழைக்கும்போது அவள் (வர) மறுத்தால்,
அதனால் அவன் அதிருப்தியுற்று இரவைக் கழித்தால்,
விடியும்வரை வானவர்கள்
அப்பெண்ணைச் சபித்துக் கொண்டேயிருப்பர்." [47]

மீண்டும் மொழிந்தார்கள்:

- தனது கணவன் திருப்தியோடும்
மகிழ்வோடும் இருக்கும் நிலையில்
ஒரு பெண் மரணம் அடைந்து விட்டால்
அவள் சுவனம் புகுவாள்!"[48]

## பிணக்கு வந்தால் . . .

இவ்வாறு கணவன் மனைவி இருவரிடையே இணக்கத்தைத் தோற்றுவிக்கும் வகையில் தந்த நபியுரைகளும், நடந்துகாட்டிய முன்மாதிரிகளும் ஏராளமுள்ளன. இவற்றைக் கடந்து அவர்கள் மத்தியில் இணக்கம் வராது பிணக்கம் வந்தால் அவற்றைத் தீர்த்துக் கொள்ளவும் அழகான வழிமுறைகள் தரப்பட்டுள்ளன.

இஸ்லாத்தின் விவாகரத்து முறை கணவன் மனைவி இருவரையும் இணக்கத்திற்கு கொண்டுவரும் வகையிலேயே அமைந்துள்ளது. இணக்கமே வராது என்ற இறுதி நிலையிலேயே விவாகரத்துக்கான அனுமதி கொடுக்கப் படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

- அல்லாஹ் அனுமதித்துள்ளவற்றில்
அவனுக்கு மிகவும் வெறுப்பானது
விவாகரத்தாகும்."[49]

---

45. ஆதாரம் : முஸ்லிம்
46. ஆதாரம் : புகாரி, முஸ்லிம்
47. புகாரி, முஸ்லிம்
48. திர்மிதீ, ஹாகிம்
49. அபூதாவுத்

இஸ்லாம், கணவன் மனைவி இருவரது உறவைப் பாதுகாக்கவும் பெண்களின் நலனைப் பாதுகாக்கவும் எடுக்கும் படிமுறையான முயற்சிகள் தன்னிகரற்றவை.

முதலாவதாக, கணவன் மனைவி இருவரும் தமது பிணக்கைத் தாமே தீர்த்துக்கொள்ள வழிகூறும் இஸ்லாம், அதனால் நல்ல விளைவு காணா விடத்து இப்படிக் கூறுகின்றது:

- "மேலும் கணவன் மனைவிக்கிடையே
  உறவு முறியுமோ என நீங்கள் அஞ்சினால்,
  கணவனின் உறவினரிலிருந்து ஒரு நடுவரையும்,
  மனைவியின் உறவினரிலிருந்து மற்றொரு நடுவரையும்
  நியமியுங்கள்.
  அவ்விருவரும் உறவைச் சீர்படுத்த நாடினால் அல்லாஹ்வும்,
  அவ்விருவருக்குமிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவன்."[50]

இது தொடர்பாக அல்லாஹ் மேலும் கூறுகின்றான்:

- நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்து
  அவர்களின் (இத்தா) தவணை,
  முடியும் தருவாயை அடைந்துவிட்டால்,
  நல்ல முறையில் அவர்களை உங்களுடன் வாழச் செய்யுங்கள்.
  அல்லது நல்ல முறையில் அவர்களை அனுப்பி விடுங்கள்.
  ஆனால், வரம்பு மீறும் எண்ணத்துடனும்
  தொல்லை கொடுக்கும் எண்ணத்துடனும்
  அவர்களை நீங்கள் தடுத்து நிறுத்தாதீர்கள்."[51]

இத்தகைய சில வசனங்கள் மூலம் இறைவன் விவாகரத்தை இலகுவாக முடித்து வைக்கின்றான் என நீங்கள் முடிவுக்கு வந்துவிடாதீர்கள். இது தொடர்பாக இன்னும் எத்தனையோ அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு இறுதியில் தான்- இணக்கமே வராதபோதுதான் விவாகரத்துக்கான வாயில் திறக்கப்படுகின்றது. இதன் கருத்து, இணங்கி வாழவே முடியாத கணவன் மனைவியரை பலவந்தமாகச் சேர்த்து வைத்து அவர்களது வாழ்வை நரகமாக்கி வைப்பது ஆகாது என்பதுதான். இந்த விடயத்திலும் பெண்கள் நிலை எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றது என்பதை நிதானமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

## மறுமணம் உண்டு!

இஸ்லாத்தின் மற்றொரு சிறப்பம்சம், அது பெண்களுக்கான மறுமணத்தை அங்கீகரித்து இருப்பதுதான். மாறாக, செத்த கணவனுடன் உயிருடன் உள்ள மனைவியைச் சிதையில் வைத்து துடிதுடிக்க எரிக்கப்படும் இந்து மத முறைக்கு ஒப்பான எதுவும் இஸ்லாத்தில் இல்லை. எனவே, முறைப்படி விவாகரத்தான பெண்களுக்கும், கணவர்கள் மரணிப்பதன்மூலம் விதவை

---

50. அல் குர்ஆன் 4 : 35 51. அல் குர்ஆன் 2 : 231

களான பெண்களுக்கும் விடிவு உண்டு; வளமான வாழ்வு உண்டு என்று நம் பிக்கை வைக்க முடியும்.

அல்லாஹ் அருளுகின்றான்:

- "நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்து
அவர்கள் தங்கள் (இத்தா) தவணையைப் பூர்த்தியாக்கினால்
பிறகு அவர்கள்,
தங்களுக்குரிய துணைவர்களை
நேர்மையான முறையிலும்
பரஸ்பர பொருத்தத்தின் அடிப்படையிலும்
திருமணம் செய்துகொள்ள விரும்பினால்
அவர்களை நீங்கள் தடுக்காதீர்கள்."[52]

- "உங்களில் எவரேனும்
மனைவியரை விட்டு மரணமடைந்துவிட்டால்,
அந்த அவருடைய மனைவியர்
நான்கு மாதம் பத்து நாட்கள்
தாமாகக் காத்திருக்க வேண்டும்.
அப்படித் தங்களின் தவணையைப் பூர்த்திசெய்துவிட்டு
தங்கள் தனிப்பட்ட விஷயத்தில்
(தம் விருப்பத்துக்கொப்ப)
ஒழுங்கான முறையில் செயல்பட
அவர்களுக்கு உரிமையுண்டு."[53]

## அவள் அடிமை அல்லள்!

இஸ்லாத்தைப் பொறுத்தவரையில், திருமண வாழ்வில் 'ஆணுக்குப் பெண் அடிமை' என்ற கருத்து அறவேயில்லை. சில மதங்களில் 'கணவனே கண்கண்ட தெய்வம்!' என்பார்கள். இஸ்லாத்தில், இப்படிக் கூறுவது பெரும் பாவமாகும்.

அல்லாஹ் கூறுவது இப்படித்தான்:

- "அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும்
நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும்
இருக்கின்றீர்கள்."[54]

ஒருவனுக்கோ ஒருத்திக்கோ ஆடை எத்தனை நெருக்கமானது; சுகத்தைத் தருவது; மானத்தை மறைத்துக்கொள்ள உதவுவது; அழகைத் தருவது என்பது எல்லோரும் அறிந்ததே. அத்தகைய எல்லாம் அமைந்ததுதான் திருமண உறவு என்பதை அல்லாஹ் இப்படிக் கூறுகிறான். அதோடு இவ்வசனம் கணவன்-மனைவி இருவருக்கும் இடையே ஒருவகையான சமநிலை இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது. அந்தச் சமநிலை முற்றிலும் அன்பைக் கொண்டதாகும்.

---

52. அல் குர்ஆன் 2 : 232 53. அல் குர்ஆன் 2 : 234 54. அல் குர்ஆன் 2 : 187

## தாயாக ....

ஒரு பெண், தாயின் அந்தஸ்தில் அடையும் கௌரவமும், கிடைக்கப் பெறும் மரியாதையும் சொல்லுந்தரமன்று.

ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து,

- "அல்லாஹ்வின் தூதரே! நான் அடிபணிந்து நிற்பதற்கும் மற்ற வர்களை விடவும் சிறப்பானவராகக் கருதுவதற்கும் உரியவர் யார்? எனக் கேட்டார்.
"உங்கள் தாய்!" என நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்.
"அதன் பின் யார்?" அவர் மீண்டும் கேட்டார்.
"உங்கள் தாய்!" மீண்டும் அதே பதில்!
"அதன் பின் யார்?" வந்தவர் மீண்டும் கேட்டார்.
"உங்கள் தாய்தான்!" நபி (ஸல்) அவர்களின் நாவசைந்தது.
நான்காவது முறையாக "அடுத்தவர் யார்?" எனக்கேட்ட பொழுது, "உங்கள் தந்தை!" என்றார்கள் நபிகளார் அவர்கள்.[55]

இஸ்லாம், வாரிசுரிமையைப் பொறுத்தவரையிலும் பெண்ணுக்குத் தீங்கிழைக்கவில்லை. ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் அதில் பங்குண்டு என்பதைத் தெட்டத்தெளிவாகக் கூறிவிட்டது.

இதோ அல்லாஹ்வின் நிர்ணயம்:

- "(மரணமடைந்த) தாய், தந்தையரும்
நெருங்கிய உறவினரும்
விட்டுச் சென்ற சொத்தில்
ஆண்களுக்குப் பங்குண்டு. (அது போல)
தாய் தந்தையரும் நெருங்கிய உறவினரும்
விட்டுச் சென்ற சொத்தில்
பெண்களுக்கும் பங்குண்டு.
அச்சொத்துக் குறைவாகவோ, அதிகமாகவோ
இருந்தாலும் சரியே!
இந்தப் பங்கு அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்டதாகும்."[56]

## கல்வியும் தொழிலும்!

இஸ்லாத்தை அடித்தளமாகக் கொண்டு ஒரு சமூகம் கட்டியெழுப்பப் படுகின்றபோது, அங்கு பெண்கள் சார்ந்த கடமைகளும் ஏராளம் வந்து விடுகின்றன. அவற்றை ஒழுங்காக நிறைவு செய்வதற்கு பெண்களின் பல்துறை சார்ந்த பணிகள் ஒரு கட்டாயத் தேவையாக அமைந்து விடுகின்றது. அவற்றை நிறைவேற்றப் போதிய கல்வியறிவு இருப்பது அவசியம். இஸ்லாம் இவற்றுக்குத் தடையாக இல்லை. உண்மையில் முஸ்லிம்கள் கல்வியறிவு பெறுவது அவர் களது உரிமை மட்டுமன்றி, தவிர்க்கமுடியாத கடமையுமாகும்.

55. 'அன்புள்ள அம்மா', நஸீம் காஜி, (1980) பக்கம் : 17 56. அல் குர்ஆன் 4 : 7

அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது:

- "ஓதுவீராக!
மேலும், உம் இறைவன்
எத்தகைய மாபெரும் அருட்கொடையாளன் எனில்,
அவனே எழுதுகோலின் மூலம் கற்றுக்கொடுத்தான்;
மனிதனுக்கு-
அவன் அறியாதிருந்தவற்றையெல்லாம்
கற்றுக் கொடுத்தான்!"[57]

இவ்விறை வசனத்தின் மூலம் அறிவின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வசனத்தைப் படியுங்கள்:

- "அறிந்தோரும் அறியாதோரும்
சமமாக முடியுமா?
அறிவுடையவர்கள்தாம்
நல்லுரைகளை ஏற்கின்றார்கள்."[58]

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

- "அறிவைத் தேடிப்பெறுவது
அனைத்து முஸ்லிம்களதும்
அதி உயர்ந்ததொரு கடமையாகும்."[59]

இங்கு 'அனைத்து முஸ்லிம்களதும்' எனக் குறித்துக் காட்டப்படுவது ஆண்கள்-பெண்கள் எல்லோரையும் உள்ளடக்கியேயாகும்.

ஒரு பெண் தொழில் புரிய முற்படும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான ஏழு அம்சங்கள் இருக்கின்றன. இவை எக்கட்டத்திலும் தவிர்க்க முடியாதவை. தவிர்த்தால் மற்றைய சமூகப் பெண்கள் - குறிப்பாக ஐரோப்பியப் பெண்கள் சந்தித்த அதே வேதனை தரும் நிலையை இவர்களும் சந்திப்பர்.

1. ஒரு பெண் தனது பெண்மைக்கும்
அது சார்ந்த இயல்புக்கும்
ஏற்ற தொழிலையே பெற வேண்டும்.

2. அவள் மனைவியாகவும் தாயாகவும்
ஆற்றவேண்டிய தன் இல்லத்துக் கடமைகளை
உதாசீனம் செய்யும் அளவுக்கு
அவள் செய்யும் தொழில்
முன்னுரிமை பெற்றுவிடக் கூடாது.

57. அல் குர்ஆன் 96 : 3-5 58. அல் குர்ஆன் 39 : 9 59. ஆதாரம் : புகாரி

3. அவளது தொழில் மக்களிடையே
ஒழுக்கக் கேட்டைப் பரப்பும்
ஒன்றாக இருக்கக் கூடாது.
மார்க்கத்தால் தடைசெய்யப்பட்ட
வியாபாரமாகவோ மற்றும் செயல்களை
ஊக்குவிப்பனவாகவோ இருக்கக் கூடாது.
அவளது மார்க்கக் கடமைகளை மற்றும்
ஒழுக்கம், அந்தஸ்து, நற்பண்புகள் ஆகியவற்றை
பாதிப்பனவாக இருக்கக் கூடாது.
மேலும், தவறான செயல்களின்பால்
அவளைத் தூண்டுவனவாகவும் இருக்கக் கூடாது.

4. அவளது தொழில் அவளை
ஆண்களுடன் கலந்திருக்கும்படி
பலவந்தப்படுத்தும் ஒன்றாக இருக்கக் கூடாது.

5. அவளது நடை உடை பாவனை எல்லாமே
இஸ்லாமியப் போதனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டும்.
ஆண்கள் மத்தியில்
அவளது பார்வையைத் தாழ்த்துதல்,
அவர்களுடனான அவசியமற்ற,
உரையாடல்கள், சிரிப்பு என்பன தவிர்த்தல்,
உடலைக் குலுக்கி, கால்களைத் தட்டி நடக்காதிருத்தல்,
பொது இடங்களில்
தன்னை அலங்கரித்துக் கொண்டும்,
வாசனைத் திரவியங்கள் பூசிக்கொண்டும்
செல்லாதிருத்தல் என்பன
தவறாது பின்பற்றி நடக்க வேண்டும்.

● அல்லாஹ் இவ்வாறு கட்டளையிடுகின்றான்:

— "மேலும், (நபியே!)
இறைநம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும்:
அவர்கள் தங்களுடைய பார்வைகளைப் பேணிக்
கொள்ளட்டும்.
தங்களுடைய வெட்கத் தலங்களைப் பாதுகாக்கட்டும்.
தங்களுடைய அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும்;
அதிலிருந்து தாமாக வெளியே தெரிகின்றவற்றைத் தவிர!
மேலும், தங்களுடைய மார்புகள் மீது
தங்கள் முந்தானையைப் போட்டுக் கொள்ளட்டும்."[60]

— "மென்மையாகப் பேசாதீர்கள். ஏனெனில்,
உள்ளத்தில் கெட்ட எண்ணத்தைக் கொண்டிருக்கும்
யாரேனும் ஒருவன் சபலம் கொள்ளக்கூடும்."[61]

---

*60. அல் குர்ஆன் 24 : 31* *61. அல் குர்ஆன் 33 : 32*

● நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

— "உலகில் தனது கணவனுக்கல்லாது (மற்றவர்களுக்காக)
தன்னை அழகுபடுத்தித் திரியும் பெண்ணின் நிலை
மறுமையின் இருளைப் போன்றதாகும்.
அங்கு எதுவித ஒளியும் இருக்க மாட்டாது."[62]

— "ஒரு பெண் மணம் பூசி
அதன் வாடையை மக்கள் நுகரும் வகையில்
அவர்களைக் கடந்து போவாளாயின்
அவள் ஒரு விபச்சாரியாவாள்."[63]

— "ஆண்களைப் போன்று ஆடை அணியும் பெண்களும்,
பெண்களைப் போன்று ஆடை அணியும் ஆண்களும்
நம்மைச் சேர்ந்தவர்கள் அல்லர்."[64]

— நாணம் (ஈமான்) விசுவாசம் சார்ந்தது;
விசுவாசமோ சுவனத்திற்குரியது."[65]

6. அவள் செய்யும் தொழில்
குடும்பத்தினுள் அமைதியின்மையை கொண்டுவரக் கூடாது.
எனவே, முதலில் தன் கணவனது அனுமதியைப் பெற வேண்டும்.
திருமணம் முடிக்காத பெண்ணாயின்
பெற்றோர் அல்லது பாதுகாவலர்
அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
இதனால், பிறகு வரும் பிரச்சினைகளைத்
தவிர்த்துக் கொள்ள முடியும்.

7. அவளது தொழில்
அவள் கொண்டுள்ள இயற்கையான பெண்மை இயல்பைப்
பாதிப்பதாக அமைந்துவிடக் கூடாது.
மனித சமுதாயத்தின் பாதி பெண்ணினம்;
அவர்களது தேவைகளும் கணக்கற்றவை.
அதேபோன்று பிள்ளைகளும் ஏராளம். எனவே,
அவர்களது தேவைகளைக் கவனிக்கக்கூடிய
ஆசிரியைகளாக
வைத்திய நிபுணர்களாக
தாதிகளாக
மற்றும் இவற்றுக்கு இணையான
தொழில்கள் செய்வதில் தவறு இல்லை.

இப்படியெல்லாம் பார்த்துத் தொழில்புரிய முடியுமா என நீங்கள் கேட்க மாட்டீர்கள். அன்றாடம் காணும் காட்சிகளைப் பொறுத்து இதற்கு உங்கள்

---

62. ஆதாரம் : திர்மிதீ 63. 'ஹிஜாப் அதன் அவசியம் என்ன?', கலாநிதி செய்க் முஹம்மத் பின் இஸ்மாயில், (1994), பக் : 40 64. மேற்படி நூல், பக் : 40 65. ஆதாரம் : திர்மிதீ

மறுப்பு இருக்காது. ஆனால், இவற்றைப் பேணாமலேயே வாழ்ந்துவிட்ட சில பெண்களுக்கு இவை வேம்பாய்க் கசக்கும். என்றாலும் அவர்களது உள்ளுணர்வு இவற்றுடன் இணக்கம் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. உண்மையில், இஸ்லாம் இத்தகைய வரம்புகளை இடுவதன் நோக்கம் பெண்களை அடக்கி ஒடுக்கவோ, அல்லது கால்களுக்குக் கீழே போட்டு மிதிக்கவோ அல்ல. மாறாக, அவர்களது கண்ணியம், ஒழுக்கம், நற்பண்புகள் ஆகியவற்றைப் பாதுகாத்து, பெண்மைக்குரிய இலட்சணத்துடன் வாழச் செய்வதாகும்.

## சமூகப் பணிகளில் ....

இதேவேளை, இதே வரம்புகளைப் பேணி ஒரு பெண் சமூகப் பணிகளில் ஈடுபடுவதையும் இஸ்லாம் தடைசெய்யவில்லை. அவர்களுக்கு ஆன்மாவும் உள்ளமும் உணர்வும் இருப்பதை சில மதங்கள் போன்று நிராகரிக்காத இஸ்லாம், அவற்றின் வெளிப்பாடுகளைப் பக்குவமாக வெளிக்கொணரவும் சந்தர்ப்பம் அளிக்கின்றது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமூகப் பணிகளில் ஈடுபட்ட பெண்கள் ஏராளமானோராவர்.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

- "மணமுடிக்காத இளம் கன்னிகளும்
  எப்பொழுதும்போல் திரை மறைவில் இருக்கின்ற
  தக்க வயது வந்துவிட்ட பெண் பிள்ளைகளும் அல்லது
  எப்பொழுதும்போல் திரை மறைவில் இருக்கின்ற
  மணமுடிக்காத கன்னிப் பெண்களும்
  மாதவிடாயுள்ள பெண்களும்
  வெளியில் வந்து (மார்க்கம் அனுமதிக்கின்ற)
  நல்ல செயல்களிலும்
  பேணுதலுள்ள விசுவாசிகளின் சன்மார்க்கக் கூட்டங்களிலும்
  கலந்துகொள்ள வேண்டும். ஆனால்,
  மாதவிடாயுள்ள பெண்கள்
  முஸல்லாவை (தொழுகையை) விட்டு விலகி இருக்க வேண்டும்."[66]

இஸ்லாம் அல்லாத மற்ற மதங்கள் பலவற்றில் சுகமாக இருக்கும் பெண்களையே "எட்டி நில்!" எனக்கூறும்பொழுது இங்கு மாதவிடாயுள்ள பெண்களுக்கு எத்தகைய உயர்வு தரப்படுகின்றது என எண்ணிப் பாருங்கள். ஆனால், இவ்வனுமதியைப் பெண்கள் தவறாகப் பயன்படுத்தக் கூடாது; துஷ்பிரயோகிக்கக் கூடாது.

வரலாற்றைப் பார்க்கின்றோம்:

— அபூஜஹ்ல் எனும் இஸ்லாத்தின் எதிரி சுமய்யா (ரலி) அவர்களைப் பிடித்து பலவிதமான சித்ரவதைகள் செய்தான். "நான் சொல்வது போல், அல்லாஹ்வையும், அவன் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்

66. ஆதாரம் : புகாரி (அரபு-ஆங்கிலம்) Vol : 1, பக் : 192, ஹதீஸ் எண் : 321

களையும் இகழ்ந்து, எம்முடைய கோத்திரக் கடவுளரைப் புகழு" எனச் சொன்னான். அப்பொழுது சுமய்யா அவர்கள் மெதுவாக ஆனால் உறுதியாக, "சீ ... நீயும் உனது கடவுளரும். உனக்கு அழிவு வரட்டும். உனது விகாரமான முகத்தைப் பார்ப்பதை விட மரணமே சிறப்பானது" என்றார். அவர் உடனே ஷஹீதாக்கப்பட்டார். இஸ்லாத்துக்காக உயிர் துறந்த முதல் பெண்மணி அவராவார்.[67]

— யத்ரிப் (மதீனா) நகரிலிருந்து நபி (ஸல்) அவர்களுக்கு அழைப்பு விடுக்க வந்த முதல் குழுவில் - 75 பேரில் - இருவர் பெண்கள் ஆவர். அவர்கள் நுஸைபா (ரலி) அவர்களும் அஸ்மா (ரலி) அவர்களுமாவர்.[68]

— உஹத் போரில் ஆயிஷா (ரலி) அவர்களும் உம்மு ஐமன் (ரலி) அவர்களும் மற்றும் சில பெண்களும் பங்குகொண்டனர். அவர்களது பணி யுத்த வீரர்களுக்கு நீர் வழங்குவதும், காயமடைந்தோரை கவனிப்பதுமாகும். நபி (ஸல்) அவர்களுக்குக் காயமேற்பட்டபோது வைக்கோலும் பழைய பாயும் கொண்டு வந்து சுட்டு, அவற்றின் சாம்பலைக் காயத்தில் வைத்துக் கட்டியவர் ஆயிஷா (ரலி) அவர்களாவர்.[69]

— அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் ஹதீஸ் கலையைக் கற்றுக் கொடுக்கும் ஒருவராகத் திகழ்ந்தார்.[70]

— அலி (ரலி) அவர்களது சந்ததியில் வந்த 'நஃபீஸா' எனும் பெண் ஹதீஸ் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தார். அவரின் போதனை வகுப்புக்களில் இமாம் சாபிஈ (ரஹ்) அவர்களும் கலந்துகொண்டு அறிவைப் பெற்றுள்ளார்.[71]

— பக்தாதில் வாழ்ந்த ஷெய்கா சுஹதா அவர்கள் இலக்கியம், அணியிலக்கணம், கவிதையாத்தல் போன்றவற்றில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார்.[72]

இவ்வாறு, வாழ்வின் பல்வேறு துறைகளிலே ஈடுபாடுகொண்டு உழைத்த பெண்களின் எண்ணிக்கையை வரையறுத்து 'இவ்வளவுதான்' எனக் கூற முடியாது. இதேவேளை, அவர்கள் தமது வணக்க வழிபாடுகள், கணவனுக்கும் குடும்பத்துக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் ஆகியனவற்றையும் கண்ணுங்கருத்துமாக நிறைவேற்றவும் தவறவில்லை.

---

67. Woman in Islam, Said Abdullah Seif-al-Hatimy (1979), Page:50
68. மேற்படி நூல், பக்கம் : 51
69. மேற்படி நூல், பக்கம் : 51
70. Woman in Islam, B. Aisha Lemu and Fathima Heeran, (1978), Page : 16
71. மேற்படி நூல், பக்கம் : 16
72. மேற்படி நூல், பக்கம் : 16

## பெயரை இழக்க வேண்டியது இல்லை!

மேற்கத்திய உலகில் பெண்கள் திருமணம் செய்தவுடன் தமது தனித்துவத்தை இழந்து விடுகின்றனர்; தமது பெயர்களை இழந்து கணவரின் பெயர்களைத் தமதாக்கிக் கொள்கின்றனர். உதாரணமாக: டெலீஸியா என்ற பெண் ஜோன் என்பவரை மணமுடித்தால், அவளது பெயர் நீங்கி, அவள் 'திருமதி ஜோன்' என்றாகி விடுகின்றாள். இந்த நோய் முஸ்லிம்களில் சிலரிடமும் பரவியுள்ளது. அதனால் அமீனா என்பவள் அப்துல்லாஹ்வை மணமுடித்தவுடன் 'திருமதி அப்துல்லாஹ்' என்று ஆகிவிடுவதன் மூலம் தன் பெயரை இழந்து விடுகின்றாள். இது இஸ்லாமிய முறையன்று. உண்மையில் 'ஆணுக்குப் பெண் அடிமை' என்ற கருத்துடைய மற்றைய சமூகங்களின் வழிமுறை.

இஸ்லாத்தில், ஒரு பெண் மணமுடித்தாலும் அவளது பெற்றோர் இட்ட பெயரை இழக்க வேண்டியது இல்லை; அதை மாற்றித் தன் பெயரை வைத்துக் கொள்ளும்படி கணவனும் கூறமுடியாது. ஆயிஷா (ரலி) அவர்கள் மணமுடித்த பின் 'திருமதி முஹம்மத்' என தன் பெயரை மாற்றிக் கொள்ளவில்லை. அவர்கள் மரணிக்கும் வரை 'ஆயிஷா பிந்தி அபூபக்கர்' (அபூபக்கரின் மகள் ஆயிஷா) என்றே அழைக்கப்பட்டார். இப்படியே இஸ்லாமியப் பெண்கள் எல்லாக் காலங்களிலும் அழைக்கப் படுகின்றனர். ஆனால், இன்று சில முஸ்லிம் பெண்கள் தன் பெயரை இழந்து கணவரின் பெயரை வரிந்து கட்டிக்கொண்டிருப்பதற்கு அறியாமை தான் காரணம் எனக் கூற வேண்டும்.

சகோதரரே, சகோதரியே! இதுவரை நாம் பார்த்தவற்றிலிருந்து இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கியுள்ள அந்தஸ்தையும் கொடுத்துள்ள உரிமைகளையும் காண்கிறீர்கள் அல்லவா! அதேவேளை, மற்றைய சமூகங்களில் பெண்களின் நிலையையும் பார்க்கின்றீர்கள். இந்நிலையில், முஸ்லிம் பெண்களுக்கு இஸ்லாத்தில் தீங்கிழைக்கப்படுவதாக எப்படிக் கூற முடியும்?

இப்படிக் குற்றம் சுமத்துபவர்கள், மற்றைய சமூகப் பெண்கள் போன்று அரை நிர்வாண ஆடையணிந்து, ஆண்களுடன் சமமாக உழைக்கவும் மற்றும் காரியங்களில் ஈடுபடவும் முஸ்லிம் பெண்கள் வரவில்லை என்பதையே பெருங் குறையாகக் காண்கின்றார்கள். அப்படி வந்துவிட்ட பெண்கள் நிலையை அவர்கள் நேர்மையுள்ளத்துடன் நோக்கினால், முஸ்லிம் பெண்கள் நிலையைப் போற்றுவர் என்பதில் ஐயமில்லை.

இஸ்லாம் பெண்களின் இயற்கையை, இயல்பை, உடற்கூற்றுத் தன்மைகளை மதித்து, அவற்றுக்குப் பங்கம் ஏற்படுத்தாதுள்ள கடமைகளில் ஈடுபடத் தடைவிதிக்கவில்லை என்பதை மேலே தந்துள்ள மேற்கோள்கள் மூலம் அறிந்திருப்பீர்கள்.

## பொறுப்பும் வெகுமதியும்

ஆனால், ஒரு முக்கியமான அம்சம். எந்தப் பெண்ணும் தன்மீது பொறுப்பாக அமைந்துவிட்ட,

— தொழுகை போன்ற கடமைகள்
— கணவனுக்குச் செய்ய வேண்டிய அன்புப் பணிவிடைகள்
— பிள்ளைகளைச் சீராக வளர்த்தல்
— தன் இல்லத்தை அமைதியின் , பாதுகாப்பின் இடமாக வைத்துக் கொள்ள தம்மாலானவற்றைச் செய்தல்.

போன்றவற்றை உதாசீனம் செய்யுமளவுக்கு தன் வெளி வேலைகளை வைத்துக் கொள்ளக்கூடாது. அதனால் அவளுக்கும் மற்றும் எல்லோருக்கும் துன்பமே அன்றி இன்பம் வரவே வராது. இவற்றை நண்குணர்ந்து பணிபுரியும் பெண் களுக்கு இறைவனிடம் இருந்து கிடைக்கும் வெகுமதிகளில் எக்குறையும் இருக்காது.

அல்லாஹ் வாக்களிக்கின்றான்:

● "ஆணாயினும் பெண்ணாயினும்
எவர் இறைநம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில்
நற்செயல் புரிகின்றாரோ
அவரை (இவ்வுலகில்) தூய வாழ்வு வாழச் செய்வோம்.
(மறுமையிலும்) அத்தகையோர்க்கு, அவர்களின் உன்னதமான
செயல்களுக்கு ஏற்ப நாம் கூலி வழங்குவோம்."[73]

ஓர் உண்மை!

முஸ்லிம் பெண்ணுக்குக் கிடைத்துள்ள இந்தக் கண்ணியம், மதிப்பு, மரியாதை, அந்தஸ்து என்பன எதுவுமே அவள் விடுதலைப் போராட்ட இயக்கங்கள் நடத்தி, கோரிக்கைகள் விடுத்துப் பெற்றுக் கொண்டவை அல்ல. இஸ்லாம்தான் அவற்றைக் கொடுத்தது. அதுவும் அவள் கேளாமலேயே, ஒரு வீதப் போராட்டம்கூட நடத்தாமலேயே அவை அவளது வாழ்வில் வந்தமர்ந்து கொண்டன. இனியென்றும் மாற்றவோ திருத்தவோ நீக்கவோ முடியாத அளவுக்கு அவை நிலைபெற்று விட்டன.

## பலதார மணம்!

இனி, நாம் பலதார மணம் தொடர்பாக சில முக்கியமான அம்சங்களை நோக்குவோம்.

'பலதார மணம்' என்ற பேச்சு எங்காவது எழுகின்றது என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது எல்லாவிதமான ஏச்சும் பேச்சும், தரக்குறைவான கண்டனங்களும் விமர்சனங்களும் வருவது இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம் களின் மீதுமாகும். இது விஷயத்தில் எல்லா மதப் பிரமுகர்களும் சமூகப் பற்றுடையோரும் ஓர் அணி. இஸ்லாமும் முஸ்லிம்களும் தனி அணி!

உண்மையில், இத்தகைய சுவைக்குதவாக் கண்டனங்களுக்கும் விமர் சனங்களுக்கும் கீழ்க்காணும் காரணிகளில் ஒன்று, இரண்டு அல்லது மூன்றுமே அமையக் காணலாம்.

---

73. அல் குர்ஆன் 16 : 97

— பலதார மணம் பண்டைய காலம் முதல் எத்தகைய கட்டுப்பாடும் இல்லாது எல்லா சமூகங்களிலும் நடைமுறையில் இருந்து வருவது பற்றிய அறியாமை.

— ஒழுங்கற்ற இந்த வழக்கத்திற்கு இஸ்லாம் ஓர் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கொண்டு வந்தமைப் பற்றிய அறியாமை.

— எந்த வகையிலாவது இஸ்லாத்தை எதிர்க்க வேண்டும் என்ற வேண்டாத உணர்வு.

எனவே, இது பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற உணர்வு உங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் என நினைக்கின்றேன். இதிலும், இஸ்லாத்தின் நிலையை அறிவதற்கு முன் வேறு சிலவற்றை அறிவது அவசியம்.

பலதார மணம் இன்று நேற்று அல்ல; வரலாற்றுக்கு உட்பட்ட காலத்தில் மட்டுமல்ல, அதற்கு முற்பட்ட காலத்திலும் இருந்துள்ளது என்பதை ஏடுகள் கூறுகின்றன.

## இந்துக்களிடம் . . .

— இராமனின் தந்தையான தசரத மன்னன்
சமகாலத்தில் மூன்று மனைவியரைக் கொண்டிருந்தான்.
கௌஸல்யா, கைகேயி, சுமித்ரா என்பன அவர்களது பெயர்கள்.
இவர்களைத் தவிர
நூற்றுக்கணக்கான வைப்பாட்டிகளையும்
ஆசைநாயகிகளாக அவன் கொண்டிருந்தான்![74]

— கிருஷ்ணனுக்கு பிரபல்யமான மனைவியர்
எட்டு பேர்களாவர்.
ருக்மணி
சத்யபாமா
ஜாம்பாவதி
காளிந்தி
மித்ரபிந்ரா
சத்யா
பத்ரா
லக்ஷ்மனா
இவர்களல்லாமல் இன்னும் 16,100
மனைவியரை அவன் கொண்டிருந்தான்! [75]

— பிதர் மனுவிற்கு பத்து மனைவியர்
இருந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது![76]

74. 'இராமனும் கிருஷ்ணனும் ஒரு புதிர்', அறிஞர் அம்பேத்கர், தலித் சாகித்ய அகடமி, சென்னை -12, பக்:2
75. மேற்படி நூல், பக் : 46, 47
76. 'பலதார மணம் பாவமா? பரிகாரமா?', கணியூர் இஸ்மாயீல் நாஜி, சாரா பதிப்பகம், சென்னை-1, (1990), பக் : 14

— அயிடேரியா பிராமன் நாட்டு மன்னன்
ஹரேஜ் சந்திராவுக்கு
100 மனைவியர் இருந்தனர்![77]

## இந்துக்கள் தொடர்பான நூல்களில் . . .

கலாநிதி அ. ச. அல்டேகர் என்பவர் 'The Position of Women in Hindu Civilization' எனும் நூலில் குறிப்பிடுகிறார்:

"ஒருதார மணம் ஹிந்து சமுதாயத்தில் மேலோங்கி இருந்தது.
வேதம் கூறும் பல கடவுள்களும்
ஒருதாரத்தை உடையவர்களாக இருப்பினும்
நடைமுறையில் பலதார மணம் என்பது
பொருளாதாரத்தில் மேலோங்கி நின்றவர்களிடமும்
ஆளும் வர்க்கத்தினரிடமும் அதிகம் இருந்தது!"[78]

கி.பி. 1408ல் மறைந்த பிரபல விஞ்ஞானி அபூரைஹான் அல் பைரூனி இந்தியாவில் வாழ்ந்து சமஸ்கிருத மொழியைக் கற்றவர். அதன் மூலம் இந்திய கலாச்சார பாரம்பரியத்தினை ஆழமாக ஆராய்ந்தவர். அவ்வாராய்ச்சிகளின் பயனாக, அரபு மொழியில் 'கிதாபுல் ஹிந்த்' என்றொரு நூல் உருவானது. அதில் அவர் குறிப்பிடுகிறார்:

— "இங்கு ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நான்கு மனைவி வரை
திருமணம் செய்ய அனுமதி இருக்கிறது.
அதற்கு மேல் மணம் புரியக் கூடாது. எனினும்
நான்கு மனைவியரில் ஒருத்தி இறந்துவிட்டால்
அந்த இடத்தை மற்றொரு பெண்ணை
மணம் முடிப்பதைக் கொண்டு நிறைவு செய்யலாம்.
அதேநேரத்தில் பெண்களின் நிலையென்ன?
கணவன் மரணித்தபின் அவளுக்கு
மறுமணம் செய்ய அனுமதியில்லை . . .
இந்து சமூகத்தில் சிலரின் கருத்துப்படி
வர்ணாசிரம அடிப்படையில் பலதார மணம் புரியலாம்.
பிராமணர்கள் நான்கு மனைவியர் வரையிலும்
ஷத்திரியர்கள் மூன்று மனைவியர் வரையிலும்
வைசியர்கள் இரண்டு மனைவியர் வரையிலும்
சூத்திரர்கள் ஒரு மனைவியையும் திருமணம் செய்யலாம்.
இந்நான்கு பிரிவினர்கள் தங்கள் ஜாதியிலோ அல்லது
தங்களைவிடத் தாழ்ந்த ஜாதியிலோ மணம் புரியலாம்.
ஆனால், தங்களைவிட உயர்சாதிப் பெண்ணை மணம் புரியக்
கூடாது:;.[79]

---

77. 'பலதார மணம் பாவமா? பரிகாரமா?', கணியூர் இஸ்மாயீல் நாஜி, சாரா பதிப்பகம், சென்னை-1, (1990), பக் : 14 78. மேற்படி நூல், பக் : 13 79. 'பலதார மணம் பாவமா? பரிகாரமா?', கணியூர் இஸ்மாயீல் நாஜி, சாரா பதிப்பகம், சென்னை-1, (1990), பக் : 15, 16

## சீனாவில் . . .

— "பலதார மணம் சீனாவில் நடைமுறையில் இருந்தது.
ஒருவன் முதல் மனைவியைக் கொண்டுள்ள வேளையில்
அவன் விரும்பினால்
மேலதிக மனைவியரையும் வைத்துக் கொள்ளலாம்.
முதல் மனைவியினுடையவும் அடுத்த மனைவியரதும்
பிள்ளைகள் யாவரும்
அவர்களது தந்தையின் சட்டரீதியான பிள்ளைகள் ஆவர்."[80]

## ஆபிரிக்காவில் . . .

— ஆபிரிக்க மக்களது திருமண வாழ்வு தொடர்பான
கணிப்பீடு ஒன்று எடுக்கப்படுமாயின்
அதிகமான அளவில் பலதார மணம் இருப்பதைக் காணலாம்.
நூற்றுக்கு இருபது வீதமான ஆண்கள் பலதார மணம்
புரிந்தவர்களே."[81]

## இலங்கையில் . . .

"பராக்கிரம மாமன்னனின் (மனைவி) மகாராணி ரூபவத்தீ தேவி - அவர் ஸ்ரீ மெக மன்னனின் பரம்பரையில் வந்தவர்; ராமனுக்கு சீதை போல் மன்னனுக்குப் பிரியமானவர்; நூற்றுக்கணக்கான அந்தப்புர பெண்கள் மத்தியில் மன்னன் மீது எல்லையில்லா அன்புடைய மனைவியானவர்; தனது கணவர் அன்றி இந்திரனைக்கூட புல் இலை அளவுக்குக் கூட மதியாதவர்; இனிமையானவர்; நற்குணமிக்கவர்; ஆடல் பாடல்களில் திறமைமிக்கவர்; அறிவு நுட்பம் மிகுந்தவர்; பதிபக்தியில் உயர்வானவரும் தூய ஒழுக்கமும் உடையவர் - இவர் ரூபவத்தீ தேவி - தங்கத்தில் பிரகாசிக்கும் மகா சைத்தியத்தை (தாகபவை) நகரின் மத்தியில் அமைத்தார்."

— மகா வம்சம், அத்தியாயம் 73 (பொலொன்னருவையை புனருத் தாரணம் செய்தல்) பக்கம் 492, தொகுப்பு: குணபால வீரசேகர, நீதிமன்ற ரோடு, கம்பஹ, இலங்கை, (25.01.1955)

★ இது விடயம் இன்னும் விளக்கமாக திரு. டீ. எச். எஸ். அபயரத்ன தொகுத்து, திரு. சய்மொன் டி சில்வா முதலி அவர்கள் சரிபார்த்து, அனுமதித்து, 1922ல் கொழும்பு 'கிரந்த்த பிரகாசக' அச்சகத்தில் திரு. ஜே. டி. பெர்நான்து என்பவரால் அச்சிட்டு வெளியிடப் பட்ட, 'சிங்கள மகா வங்சய'வில் உள்ளது. பார்க்க: பக்: 343

★ பராக்கிரமபாகு எனவும் அழைக்கப்படும் இம்மன்னன் சிறந்த பௌத்த பக்தியுடையவன் எனவும் கூறப்படுகிறது.

---

80. 'Woman in Islam', Said Abdullah Seif Al Hatimy, (1979), Page : 58
81. மேற்படி நூல், பக் : 66

## யூத மதத்தில் . . .

"ராஜாவாகிய சாலொமோன்
பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல்,
மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும்,
சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியினரான
அனேகம் ஸ்திரீகளில் ஆசை வைத்தான்."[82]
"அவனுக்குப் பிரபுக்கள் குலமான
எழுநூறு மனையாட்டிகளும்
முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்."[83]

"அப்படியே அப்சலோமுக்கு உப்பரிகையின் மேல்
ஒரு கூடாரத்தைப் போட்டார்கள்;
அங்கே அப்சலோம்
சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக,
தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான்."[84]

## கிறிஸ்தவத்தில் . . .

அமெரிக்காவில் உள்ள ஒரு கிறிஸ்தவ மதப் பிரிவான 'மோர்மன்கள்' (Mormons)* பலதார மணத்தின் காரணமாக தமது தீர்க்கதரிசனம் வெற்றியடைந்துள்ளது எனக் கருதுகின்றனர். . . . அவர்களின் தலைவர்களுள் ஒருவரான 'யன்க்' (Young) என்பவர் சுமார் 20 மனைவியரைக் கொண்டிருந்தார். அந்தப் பிரிவினரைச் சேர்ந்த யாரேனும் ஒரு நபரின் மனைவியிடம், பலதார மணத்தைப் பற்றிக் கேட்டால், "நான் யாரோ ஒருவனின் ஆசைநாயகியாக இருப்பதைவிட கண்ணியமான மற்றொருவரின் பத்தாவது மனைவியாக இருப்பதைப் பெரிதும் விரும்புகின்றேன்" என்று கூறி விடுவார். இதனால் என்ன விளங்குகிறது என்றால், ஆசைநாயகி என்றோ ஒருநாள் கைவிடப்பட்டு அனாதையாவாள்; அதேவேளை சட்டப்படி ஒருவரின் மனைவியானவள் பாதுகாப்பைப் பெறுவாள் என்பதுதான்.[85]

மேற்கைரோப்பிய கிறிஸ்தவ நாடுகளிலும், அமெரிக்காவிலும் பலதார மணம் இரண்டு விதத்தில் இருந்து வருவது உலகமே அறிந்த விஷயமாகும்.

1. முறைப்படி திருமணம் செய்த மனைவி இருக்கும் அதேவேளை ஆசை நாயகிகளை (Mistress) வைத்துக் கொள்வது. இதற்கு அளவு இல்லை. எத்தனை வேண்டுமாயினும் வைத்துக் கொள்ளலாம் என்ற

82. பரிசுத்த வேதாகமம், (1960), 1 - இராஜாக்கள் 11: 1
83. மேற்படி நூல், 1 இராஜாக்கள் 11: 3
84. மேற்படி நூல், 2 - சாமுவேல் 16: 22
85. 'Woman in Islam', Said Abdullah Seif Al Hatimy, (1979), Page : 69
* Mormons : Members of the Church of Jesus Christ of Latter days Saints Founded by Joseph Smith in 1830 in Utah: USA.

நிலை இருக்கின்றது. இதனால் துன்பத்தில் விழுவது பெண்களே. எது வரை தனது ஆசைநாயகனைத் திருப்திப்படுத்தும் அழகும் சல்லாப உணர்வும் அவர்களிடம் இருக்குமோ அதுவரை எப்படியோ வாழ்வு ஓடும். அவை அற்றுப் போனபின் அவர்கள் தெருவில் வீசப்பட்டு நிரந்தர பரத்தையர்களாகி விடுகின்றனர்.

2. ஒருத்தியுடன் கொஞ்ச காலம் வாழ்ந்தபின், அவளை விவகாரத்து செய்து விட்டு மற்றொருத்தியை விவாகம் செய்வது, இப்படிப் பல ஆயிரக்கணக்கான ஆண்கள் பல பெண்களை விவாகம் செய்கின்றனர். பெண்கள்கூட இப்படி ஒருவனுடன் வாழ்ந்து சொற்ப மாதங்களில் அல்லது இரண்டொரு வருடங்களில் அவனை விவகாரத்து செய்துவிட்டு மற்றொருவனை நாடும் வழக்கத்தைக் கைக்கொண்டுள்ளனர். இதனால் மேற்கில் விவகாரத்து என்பது வரையறையின்றி இடம்பெற்று வருகின்றது.*

இவை மேலோங்கி ஒழுக்கக் கேடும், விபச்சாரமும் மற்றும் நோய்களும் பெருகிவிட்ட மேற்கில் - குறிப்பாக பிரிட்டனில் ஒருவன் சட்டரீதியாக இரண்டாவது ஒரு பெண்ணை மணமுடிப்பதைத் தடைசெய்துள்ளனர். ஆனால், இயற்கைக்கு முற்றிலும் முரணான, மிருகங்கள் கூட நாடிச் செல்லாத தன்னினச் சேர்க்கைக்கு சட்டத்தின் பாதுகாவலை வழங்கியுள்ளனர் என்றால் எவ்வளவு கேவலம் என எண்ணிப் பாருங்கள்.

## இன்றைய இந்தியாவில் . . .

*1981ல் எடுக்கப்பட்ட ஓர் ஆய்வின்படி ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைத் திருமணம் செய்யும் வழக்கம் கீழ்க்கண்டவாறு இருந்துள்ளது:*

| | |
|---|---|
| — முஸ்லிம்கள் | 4.3% |
| — இந்துக்கள் | 5.6% |
| — பௌத்தர் | 8.-% |
| — பழங்குடி மக்கள் | 15.-% |

*ஆதாரம்:* Deccan Herald, Bangalore (24. 4. 84)[86]

Registrar General of India வெளியிட்ட ஓர் அறிக்கையின்படி 1961-ஆம் ஆண்டில் பலதார மண முறை கீழ்க்கண்டவாறு இருந்துள்ளது:

| | |
|---|---|
| — ஜைன மதத்தினர் | 9% |
| — தமிழ்நாட்டு முஸ்லிம்கள் | 4% |
| — இந்துக்கள் | 5.5% |

ஆதாரம்: ஸ்டேட்ஸ்மன், கல்கத்தா. (28. 9. 84)[87]

* அடிக்குறிப்பு எண் 02 ஐப் பார்க்கவும்

86. 'பலதார மணம் பாவமா? பரிகாரமா?' கணியூர் இஸ்மாயில் நாஜி, 1990, பக். 17

87. மேற்படி நூல்: பக். 18

88. மேற்படி நூல் பக்: 18

இந்திய அரசின் கல்வி மற்றும் சமூக நல அமைச்சு 1974ல் ஆராய்ந்து சமர்பித்த ஓர் அறிக்கை கீழ்க்கண்டவாறு பலதார மணம் அமுலில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது:

| இனம் | **1930 - 40** | **1941 - 50** | **1951 - 60** |
|---|---|---|---|
| பழங்குடி மக்கள் | 9.53% | 17.53% | 17.98% |
| இந்துக்கள் | 6.79% | 7.15% | 5.06% |
| முஸ்லிம்கள் | 7.29% | 7.04% | 4.31% |

(ஆதாரம்: Radiance, Delhi 24. 11. 85)[88]

குறிப்பு: முஸ்லிம்கள் மத்தியில் பரதார மணம் குறைந்து வந்துள்ளதைக் கவனிக்கவும்.

பொதுவாக, பிரித்தானியக் கலைக் களஞ்சியம் குறிப்பிடும் ஓர் அம்சம் உங்கள் கவனத்தை ஈர்க்கும் என நினைக்கின்றேன்:

● "மனித இயல் அறிஞர் ஜோர்ஜ் மர்டாக் என்பவர்
மேற்கொண்ட ஆய்வொன்றின்படி,
250 கலாச்சாரங்களைக் கொண்ட இனங்களில்
193 இனங்களைச் சார்ந்தவர்கள் மத்தியில்
ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை
மணமுடிக்கும் பழக்கம் இருக்கின்றது.
அவருடைய 1949 ஆம் ஆண்டு அறிக்கையின்படி
554 இன மக்களில் 415 இன மக்கள்
பலதார மணம் புரியும் பழக்கமுடையவர்களாவர்.
அதேவேளை, இஸ்லாமிய சட்டம் அனுமதித்துள்ள போதிலும்
முஸ்லிம்களிடையே பலதார மணத்தைவிட
ஒருதார மணமே அதிகமாகக் காணப்படுகின்றது."

— ஆதாரம்: Encyclopedia Brittanica, vol: 7, 1983, Page:155[89]

## இஸ்லாம் அறிமுகப் படுத்தியதல்ல!

இதுவரை எடுத்துக்காட்டிய மேற்கோள்களை நடுநிலை நின்று நிதானமாக நோக்குங்கள். அப்பெழுது 'பலதார மண முறை' இஸ்லாம் புதிதாகக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்திய ஒன்றல்ல; அது எத்தகைய ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாது பல்வேறு விதங்களில் தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கம் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

இஸ்லாம் அதற்கு ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கொண்டுவந்ததன் மூலம்

— ஆண்கள் நியாயமாக நடக்கவும்
— பெண்கள் உரிய பாதுகாப்பைப் பெறவும்

வழி செய்தது. எனவே, பலதார மணத்தையிட்டு இஸ்லாத்தைத் தாக்குவதிலோ முஸ்லிம்களை இகழ்வதிலோ என்ன பொருளிருக்கின்றது?

89. : 'பலதார மணம் பாவமா? பரிகாரமா?' கணியூர் இஸ்மாயில் நாஜி, 1990, பக்.19

## இஸ்லாத்தில் பலதார மணம்!

இஸ்லாம் பலதார மணத்தை அனுமதித்துள்ளது; அவ்வளவுதான். அன்றி, தொழுகையை நிறைவேற்றுவது போலவோ, நோன்பு நோற்பதைப் போலவோ, 'ஒவ்வொரு முஸ்லிமும் பல பெண்களை மணமுடித்தே ஆகவேண்டும்' என இஸ்லாம் சட்டம் விதிக்கவில்லை; கட்டளை பிறப்பிக்கவும் இல்லை. இதுவோர் அனுமதி மாத்திரமே!

இந்த அனுமதி எப்போது, எத்தகைய கட்டத்தில், ஏன் தரப்பட்டது என்பதை நீங்கள் அறிவது அவசியம்.

சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான உஹதுப் போர் நடந்து முடிந்த வேளை. பல நபித்தோழர்கள் ஷஹீதாக்கப்பட்டுவிட்டனர். அதனால் அவர்களது மனைவியர் விதவைகளாகினர்; பிள்ளைகள் தந்தையரை இழந்து நிர்க்கதிக்கு ஆளாயினர். இக்கட்டத்தில் இவர்களை இப்படியே பாராமுகமாக விட்டுவிடுவது மனிதாபிமான உணர்வுகளுக்கு மாறுபட்டதாகும்.

இந்நிலையில் இறைவன் மொழிந்தான்:

● "அனாதை(ப் பெண்)களுடன்
நீதமாக நடக்க இயலாது என்று நீங்கள் அஞ்சினால்
உங்களுக்கு விருப்பமான பெண்களை
இரண்டிரண்டாக
மும்மூன்றாக
நான்கு நான்காக
மணமுடித்துக் கொள்ளுங்கள். ஆனால்,
(அவர்களிடையே) நீதமாக நடந்திட முடியாது என்று
நீங்கள் அஞ்சுவீர்களாயின்
ஒரு பெண்ணை மட்டும் மணமுடித்துக் கொள்ளுங்கள்."[90]

இவ்வசனம், அனாதைப் பெண்களுடன் நீதமாக நடப்பதையே குறிக்கோளாகக் கொண்டு பலதார மணத்திற்கு அனுமதி அளிப்பதை நீங்கள் அவதானிக்க முடியும். எனவே, பல பெண்களை மணமுடிப்பவர்கள் அவர்களுக்கு நீதமான முறையில் ஊண், உடை, உறைவிடம் வழங்க வேண்டும்; ஒழுக்க, சமூக ரீதியான பாதுகாப்பை வழங்க வேண்டும்; அவர்களது பிள்ளைகளை நேர்மை தவறாது பராமரிக்க வேண்டும்; அதற்கு ஏற்ற உள, உடல், பொருளாதார வளம் பெற்றவர்களுக்கே இந்த அனுமதி. அதுவும் குறிப்பிட்டதொரு வரையறையுடன் - இரண்டிரண்டு, மும்மூன்று அல்லது நான்கு நான்கு என்ற கட்டுப்பாடுடன்!

இவ்வாறு இல்லாதபட்சத்தில், ஒருவர் ஒரு பெண்ணை மனைவியாகக் கொள்வதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்வது அவசியம். மாறாக, யார்

*90. அல் குர்ஆன் 4: 3*

யாரும் தம் ஆசையைத் தீர்த்துக்கொள்ள எத்தனைப் பெண்களையும் மண முடிப்பதையோ, சட்டத்திற்குப் புறம்பாக ஆசைநாயகிகளை வைத்துக் கொள் வதையோ இஸ்லாம் ஒருபோதும் அனுமதிப்பது இல்லை. இஸ்லாத்தின் கட்டுப் பாடுகளுடன் கூடிய இவ்வேற்பாடு எத்தகைய பயனுடையது; தற்கால உலகப் பிரச்சினைகளைக்கூட தீர்க்க வல்லது என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் அதிசயித்துப் போய்விடுவீர்கள்.

பலதார மணம் அவசியப்படும் கட்டங்களைப் பின்வருமாறு பகுத்துப் பார்க்க முடியும்:

— பிறப்பு ரீதியாக ஆண்களைவிட பெண்கள் அதிகமாகுதல்
— போர் போன்றவை மூலம் ஆண்கள் மரணித்தல்
— ஆண்களின் அதிகமான காம வேட்கை
— மனைவி மலட்டுத்தன்மை உடையவளாயிருத்தல்
— மனைவி நிரந்தர நோயாளியாயிருத்தல்

இங்கு நான் எடுத்துக் காட்டியுள்ள முதலிரண்டு காரணிகளை நாம் கவனத்தில் கொள்வோம்.

கம்பூச்சியாவில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் இது நடைபெற் றது. சுமார் 10 வருடங்களுக்கு மேல் நடைபெற்ற இந்தப் போரின் விளைவாக சுமார் 13½ லட்சம் ஆண்கள் கொல்லப்பட்டுவிட்டனர்.

இதன் மறு விளைவைப் பாருங்கள்:

— மணமுடித்த பல லட்சம் பெண்கள் விதவைகளாயினர்!
— அவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகள் அனாதைகளாகி தெருவுக்கு வந்து விட்டனர். அவர்களின் உணவு, உடை, சுகாதார வசதிகள் போன்றவைகளைக் கவனிப்பது அப்பெண்களுக்குப் பெரும் சிரம மாகி விட்டது!
— மணமுடிக்க வேண்டிய பெண்களுக்குக் கூட ஆண்கள் பற்றாக்குறை ஏற்பட்டது.

உண்மையில் அங்கு ஐந்து பெண்களுக்கு ஓர் ஆண் என்ற வீதம் ஏற்பட்டு விட்டது. இந்தப் பேராபத்தான நிலையில் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற ஒருதார கருத்து சாத்தியமானதா என நீங்கள் கூறுங்கள். அழகான சொற்றொடர்கள் அல்ல; நடைமுறை சாத்தியமான பரிகாரமே அந்த மக்களுக்குத் தேவைப் படுகின்றது.

எனவே, அந்தப் பெண்களின் ஒழுக்கம், பாதுகாப்பு, தனித்துவம் என்ப வற்றையும், அவர்களது பிள்ளைகளின் நல்வாழ்வு, எதிர்காலம் என்பவற்றையும் கருத்தில் கொண்டு இதை நோக்க வேண்டும்.

அவ்வாறின்றி, 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதில் யாரேனும் விடாப்பிடியாக இருந்தால், பெரும் போட்டா போட்டிகளுடன் ஆண்கள் தேர்வு நடந்து அத்தகைய திருமணங்கள் நடந்து முடிந்தால், எஞ்சிய கம்பூச்சியப் பெண்களை என்ன செய்வது என அவர்கள் கூறவேண்டும்.

அவர்களை

— கடலில் தள்ளுவதா? அல்லது,

— கழுத்தை நெறித்து கொன்று புதைப்பதா? இன்றேல்,

— அவர்களும் தமது இச்சையைத் தீர்த்துக் கொள்ளவும், தேவைகளைப் பெற்றுக் கொள்ளவும் யாரோ ஒருத்தியை மணமுடித்த ஒருவனிடம் தான் வரவேண்டும். வேறு ஆண்கள்தான் இல்லையே. இந்நிலையில், அவர்களை விபசாரக் குற்றம் சுமத்தி குற்றக்கூண்டில் ஏற்றுவதா? அத்துடன்,

— அவர்களது பிள்ளைகளை அங்குமிங்கும் விரட்டியடித்து எதிர்கால குற்றவாளிகளை உருவாக்குவதா?

உண்மையில் இத்தகைய மிக இக்கட்டான கட்டமொன்றில் அவர்களுக்குப் பலதார மணம் ஒன்றே பரிகாரமாக முடியும்.

இது ஒரேயொரு உள்நாட்டுப் போரின் விளைவாக எழுந்த பயங்கரமான நிலைமையே.

— முதலாவது உலகப்போரில் இறந்த ஆண்கள், சுமார் 10 மில்லியன்களாகும்.[91]

— இரண்டாவது உலகப்போரில் இறந்த ஆண்கள், சுமார் 60 மில்லியன்களாகும்.[92]

மேலும், 25 வருடங்களாக நடைபெற்ற வியட்னாம் போர், 10 வருடங்களுக்கு மேல் நடைபெற்ற கொரியப் போர், மூன்று முறை நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் போர்கள், அடுத்தடுத்து நடைபெற்ற எண்ணற்ற இஸ்ரேலிய - அரபு நாட்டுப் போர்கள், 13½ ஆண்டுகள் நடைபெற்ற ரஷ்ய - ஆஃப்கன் போர், போக்லாந்தில் பிரிட்டன் செய்த கொடுமைகள், பொஸ்னியா, ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்ற குடியரசுகள் போன்றவற்றில் ரஷ்யாவும் மேற்கு நாடுகளும் இணைந்து கட்டவிழ்த்து விட்டுள்ள போர்கள், ஈராக் - ஈரான் போர், ஈராக் - குவைத் போர், ஹிட்லர் கொன்றொழித்த பல லட்சம் பேர், சோமாலிய உள்நாட்டுப் போர் போன்றவற்றின் மூலமாக எத்தனைக் கோடி ஆண்கள் போர் புரியச் சென்று கொல்லப்பட்டிருப்பர் என எண்ணிப்பாருங்கள். அதோடு, நமக்கு நன்கு தெரிந்த இந்திய இனக்கலவரங்கள், இலங்கை வடக்கு கிழக்குப் பகுதிகளிலான போர், ஜே. வீ. பீ. இயக்கம் தொடர்பாக பரவலாக இடம்பெற்ற படுகொலைகள் எத்தனை ஆயிரம் ஆண்களின் உயிர்களைக் குடித்திருக்கும். "இப்போர்கள், கலவரங்களின் போது பெண்களும் இறந்திருப்பார்களே" என

91, 92. Woman in Islam, Said Abdullah Seif al Hatimy, Page. 92.

நீங்கள் கூற முடியும். அது உண்மையும்தான். ஆனால், அவ்வாறு இறக்கும் பெண்களின் வீதத்தை ஆண்களுடன் ஒப்பிடும்போது மிக மிகக் குறைவு என்பதை நீங்கள் உணர வேண்டும். காரணம், ஆண்கள் போர்களிலும் மற்றும் கலவரங்களிலும் நேரடியாகவே ஈடுபடுபவர்கள் என்பதாகும்.

இப்பொழுது நீங்களே கூறுங்கள். இத்தகைய பேராபத்தான நிலை எங்கேனும் உருவாகிவிட்டால் அதைக் கண்டும் காணாததுபோல் மௌனமாக இருக்க முடியுமா? அல்லது அந்நிலைக்குப் பொருத்தமற்றதும் பயன் தராதது மான தத்துவங்களைச் சுமந்துகொண்டு தம்முன்னேயுள்ள உடனடிப் பிரச் சினைக்குப் பரிகாரம் காணாதிருக்க முடியுமா? அதனால் உருவாகும் ஏனைய சமூக, பொருளாதார, ஒழுக்கப் பிரச்சினைகளுக்கு என்ன பரிகாரம் காண்பது?

## அதிகரித்த காம வேட்கை!

மற்றொரு அம்சத்தையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று ஏராளமான குடும்பங்களில் உட்பூசல்கள் நிறைய உள்ளன. அவற்றுள் சில வெளி உலகுக்குத் தெரிந்துவிடுகின்றன. ஆனால் பலது 'தாம் திருப்தியாகத்தான் இருக்கின்றோம்' என்ற போர்வையால் போர்த்திக் கொண்டு மானம் மரியாதைக்குப் பயந்து வாழ்வதன் மூலம் மறைக்கப் பட்டுள்ளன.

இத்தகைய நிலைமைக்கு ஆண்களிடம் காணப்படும் அதிகமான காம வேட்கையும் ஒரு காரணியாகும். அதனைப் பூரணமாகத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு தன் மனைவியிடம் கிடைக்காத கட்டுப்பாடில்லாத கணவர்கள் அதற் கான வேறு வழிகளைக் காணுகிறார்கள். சிலர் 'சின்ன வீடு' வைத்துக் கொள் கின்றனர்; பலர் மாற்றான் மனைவியுடன் உறவு கொள்கின்றனர். அதனால் கணவன் - மனைவி இருவரிடையே மட்டுமல்லாது வேறு பல குடும்பங்களிலும் பிணக்கும் பிரச்சினைகளும் உருவாகி விடுகின்றன. அதனால் குடும்பங்களில் அமைதி கெடுவதுடன், பிள்ளைகளின் எதிர்காலமும் முற்றாகப் பாதிக்கப்பட்டு விடுகிறது.

இதற்கு என்ன பரிகாரத்தை 'ஒருவனுக்கு ஒருத்தி' கருத்துடையோர் தரப் போகின்றார்கள்? அத்தகைய கணவர்கள் செய்யும் பாப காரியத்தைக் கண்டும் காணாதது போல் விட்டு விடுவதா? அல்லது ஒழுங்கான பரிகாரம் ஒன்றை வழங்குவதா?

## மனைவி நிரந்தர நோயாளியாயின் . . . . .

சிலரது மனைவியர் நிரந்தர நோயாளிகளாக இருப்பர். அந்த நிலையில் அவர்களது கணவர்களின் உடற் தேவைகளை உரிய முறையில் அவர்களால் நிறைவு செய்வது சாத்தியமில்லை. இந்தக் கட்டத்தில் "காலமெல்லாம் என் னோடு வாழ்ந்து, என் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்தவளாயிற்றே

இவள். எனவே, நானும் அவளுக்காக என்னை, என் உணர்வுகளை அடக்கிக் கொண்டு வாழ்வேன்!" என்று சில கணவர்கள் முடிவெடுக்கலாம். இது பாராட் டத்தக்க ஓர் அம்சம் என்பதில் ஐயமில்லை. எனினும், இது இத்தகைய நிலைக்கு ஆளான எல்லா ஆண்களாலும் சாத்தியமானதா? யாரோ வெகு சிலருக்கு சாத்தியமான இந்நிலையை வைத்து எல்லா ஆண்களுக்குமான பொது முடி வொன்று எடுப்பது பரிகாரமாக அமையும் எனக் கருதுகிறீர்களா? நிச்சயமாக இத்தகைய பொது முடிவொன்று பரிகாரமாக அமையாது என்றுதான் நீங்கள் சொல்வீர்கள்.

அப்படியாயின் கீழ்க்காணும் பரிகாரங்களில் ஒன்றைத்தான் காண வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

— நோயுற்ற தமது மனைவியரை தம்மோடு வைத்துக்கொண்டே வேறு பெண்களுடன் தகாத உறவை வைத்துக் கொள்வது. அல்லது,
— நோயுற்ற தமது மனைவியரை விவாகரத்துச் செய்துவிட்டு வேறு பெண்களை விவாகம் செய்துகொள்வது. அல்லது
— நோயுற்ற மனைவியர் தம்மோடு இருக்க, வேறு பெண்களை விவாகம் செய்வது.

இவற்றில், முதலாவது பரிகாரத்தை எந்த வகையிலும் ஏற்க முடியாது. அது பெரும் பாவங்களில் ஒன்றாகும். அதனால் சமூகக் கட்டுக்கோப்பு உடைப் பெடுத்து, விபசாரம் பெருகி, உலகமே நாற்றம் தரும் சாக்கடையாகப் பரிணமிக் கும். இன்றைய உலகம் இதற்குச் சான்றாகவுள்ளது. மேலும், இந்த வழியில் பிறக்கும் பிள்ளைகளுக்கு யாருமே பொறுப்பாளிகளாக இருக்கப்போவதில்லை. அவர்கள் எதிர்கால கிரிமினல் குற்றவாளிகளாக மாறவும் முடியும். அதோடு இந்தப் பரிகாரம் பல பயங்கர நோய்களையும் கொண்டுவரும்.

இரண்டாவது பரிகார முறை முற்றிலும் மனிதாபிமானமற்றதே. அத்த கைய பெண்கள் சுகதேகிகளாக இருந்த காலமெல்லாம் இன்பம் அனுபவித்து விட்டு இயலாமை அவர்களைத் தொட்டபோது, அதுதான் நோயுற்றபோது 'போடி' என விவாகரத்து செய்தனுப்புவதும், வேறு பெண்களை மணமுடித்து சுகமனுபவிப்பதும் ஈவிரக்கமற்ற தன்மையாகும்.

மூன்றாவது பரிகார முறைக்கு பலதார மணத்தின் மூலம் ஓர் அழகிய வழியை இஸ்லாம் தருகின்றது. இவ்வழிமுறை ஏற்கப்படும் பட்சத்தில் ஆண் - பெண்களிடையே தகாத உறவுகள் பெருமளவுக்குக் குறைந்துவிடும்; விபச்சாரம் பெருக்கெடுக்காது; நோயால் அவதியுறும் பெண்களும் 'தமது கணவரால் ஒதுக் கப்படுவோம்' என்ற அச்சமின்றி வாழ முடியும். அனாதைக் குழந்தைகள் பிறப் பதும் பெருமளவுக்குக் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். பொதுவாக, குடும்பங் களில் ஓர் அமைதியான சூழ்நிலை உருவாகும்.

## மலட்டுத் தன்மை

சில மனைவியருக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லை. அவர்கள் மலட்டுத் தன்மை உடையோராய் இருப்பதே அதற்குக் காரணம். பொதுவாக, திருமண வாழ்வு இன விருத்திக்குரிய பிரதான ஓர் வழிமுறையாகக் கருதப்படுகின்றது. எனவே, பிள்ளைகள் தேவையென்பது தவிர்க்க முடியாததோர் அம்சமாகும். இது மட்டுமன்றி ஒவ்வொரு தந்தையும் தனக்குப் பிள்ளை வேண்டும் என்ற ஆசையுடையவனாகவே இருக்கின்றான். தன் அன்பைப் பகிர்ந்து கொள்ளவும், தன் வம்சாவளியை நிலைபெறச் செய்யவும், தனக்கடுத்துத் தன் பொறுப்புக் களை ஏற்று நடத்தவும் தனக்கு பிள்ளைகள் வேண்டும் என ஏக்கமுறுகிறான்.

இந்நிலையில் அவன் கீழ்க்காணும் மூன்று பரிகாரங்களைத் தன் கவனத் தில் கொள்ள முடியும்.

1. 'பிள்ளைகள் வேண்டும்' என்ற ஆசையை அடக்கிக் கொண்டு, அதை முற்றாக மறந்து வாழ்தல்
2. பிள்ளைபெற முடியாத தனது மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு வேறு பரிகாரம் காணல்
3. பிள்ளைகள் சுவீகாரம் எடுத்து அவற்றுக்குத் தன் பெயரை வழங்கல்

இஸ்லாம் மனித வாழ்வை நோக்கும் இயற்கையான அமைப்புக்கு இவை மூன்றுமே பொருத்தமானவை அல்ல. ஒருவரின் இயற்கைக்கும் இஸ்லாமிய சட் டத்திற்கும் இணக்கமான ஆசைகளை அடக்கிக்கொள்ள வேண்டும் என்றோ சாகடித்துக்கொள்ள வேண்டும் என்றோ இஸ்லாம் கூறவில்லை. மாறாக, அந்த ஆசைகளைச் சரியாக இனங்கண்டு கண்ணியமான முறையிலும் சட்டத்திற்கு இணக்கமாகவும் தீர்த்துக்கொள்ள வழி காண்பது அவசியம். அன்றி, ஆசை களை அடக்கி, சாக்டிப்பது வாழ்க்கை அமைப்பின் ஓர் அங்கம் அல்ல.

அதோடு, மனைவியை விவாகரத்துச் செய்வதும் நியாயமாகக் காணமுடி யாது. காரணம், அவளுக்குப் பிள்ளை இல்லாதிருப்பது அவளது குற்றம் அல் லவே. எனவே, அவளது தவறல்லாத ஒன்றுக்கு அவளைத் தண்டிப்பது எந்த வகையில் நியாயமாக முடியும்? அடுத்து, அல்லாஹ்வின் பார்வையில் விவா கரத்து பெரும் வெறுப்புக்குரிய செயல் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. மேலும், குறிப்பிட்ட மனைவி கணவனின் துணையை வேண்டியவளாகவும், அவளைப் பராமரிக்க வேறு எவரும் இல்லாதவளாகவும் இருப்பாள். அத்து டன், அவர் விவாகரத்து செய்த அவளை 'பிள்ளை பெறாத மலடி' எனக் கருதி வேறு எவரும் மணமுடிக்க முன்வரவும் மாட்டார்கள். இக்கட்டத்தில் அவளை விவாகரத்து செய்து தனித்துவிடப்படுவது எவ்வளவு கொடுமை என நினைத் துப் பாருங்கள்.

அதேவேளை, பிள்ளைகளை சுவீகாரம் எடுப்பதும் ஏற்புடையீது அல்ல. ஒவ்வொரு பிள்ளையையும் அதனதன் உண்மையான தந்தையின் பெயரிலேயே அழைக்கப்படவேண்டும் என்பது இஸ்லாத்தின் தீர்வாகும். தந்தையின் பெயர் அறியாதவர்கள் சகோதரர்கள் என்றே அழைக்கப்பட வேண்டும்.

அல்லாஹ்வின் கட்டளையைப் பாருங்கள்:

● "அல்லாஹ் எந்த மனிதனுள்ளும்
இரு இதயங்களை அமைத்திடவில்லை.
நீங்கள் ளிஹார் (கணவன் தன் மனைவியைத்
தன் தாய்க்கு ஒப்பிடுகின்றதைச்) செய்கின்ற
உங்கள் மனைவிகளை உங்களுடைய அன்னையராய்
அவன் ஆக்கவுமில்லை. மேலும்,
அவன் உங்களுடைய வளர்ப்பு மகன்களை
உங்களின் சொந்த மகன்களாய் ஆக்கவுமில்லை.
இவை நீங்களே உங்கள் வாய்களிலிருந்து
வெளிப்படுத்தும் வெறும் வார்த்தைகளாகும். ஆனால்,
அல்லாஹ் சத்தியத்(தின் அடிப்படையிலான)தைக் கூறுகின்றான்.
மேலும்; அவனே நேரிய வழியின் பக்கம் வழிகாட்டுகின்றான்.
வளர்ப்பு மகன்களை
அவர்களின் சொந்தத் தந்தையுடன் சேர்த்து அழையுங்கள்.
இது அல்லாஹ்விடம் மிக்க நீதமானதாகும். ஆனால்,
அவர்களுடைய தந்தையர் யார் என்று
நீங்கள் அறியவில்லையாயின்,
அவர்கள் உங்களுடைய மார்க்கம் சார்ந்த
சகோதரர்களாகவும் நண்பர்களாகவும் இருக்கிறார்கள்.
தெரியாமல் நீங்கள் ஏதேனும் பேசிவிட்டால்,
அதற்காக உங்கள் மீது எவ்விதக் குற்றமும் இல்லை. ஆயினும்,
மனப்பூர்வமாக நாடி நீங்கள் கூறினால்
அது நிச்சயம் குற்றமாகும்.
அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும்
கருணையாளனாகவும் இருக்கின்றான்."[93]

இதன் கருத்து, தந்தையை அறியாப் பிள்ளை அனாதரவாக விடப்பட வேண்டும் என்பதல்ல. உண்மையில், இன்று சுவீகாரத்தை நோக்கும் விதத்தில் அல்ல அத்தகைய பிள்ளைகளுக்குப் பாதுகாப்பும் உதவி ஒத்தாசையும் புரிவது, அதற்கு வேறு வழிமுறைகள் உள்ளன. எப்படியோ, உண்மையான தாய் தந்தையரின் இடத்தை வேறு எவராலும் நிறைவுசெய்ய முடியாது. அதனை நிரூபிக்கும் எண்ணற்ற சம்பவங்கள் எங்கும் காணப்படுகின்றன.

இந்த மூன்று வழிமுறைகளுடனும் இஸ்லாம் உடன்பாடு கொள்ளவில்லை. மாறாக, அது தனது வழிமுறையைப் பரிகாரமாக முன்வைக்கின்றது. அது தான் பலதார மண முறையை ஏற்று மற்றொரு திருமணம் புரிவதாகும். இப்பரிகாரம் அவன் தன் ஆசையை சாகடித்துக்கொண்டு வருந்தச் செய்யாது; அவனுடைய பிள்ளை பெறா மனைவியை விவாகரத்துச் செய்யும் துரதிருஷ்ட நிலைக்கும் ஆளாக்காது; அத்துடன் யாரோ ஒருவரின் பிள்ளையை சுவீகாரம் எடுப்பதன் மூலம் வரும் தொல்லைகளைச் சுமக்கச் செய்யவும் மாட்டாது. பொதுவாக, இவ்விரண்டாவது திருமணம் அவனுக்கும் அவனது முதல் மனைவிக்கும் திருப்திகரமாகவே அமைய முடியும், இன்ஷா அல்லாஹ்.

93. அல்குர்ஆன் 33: 4, 5

இதுவரை, பெண்களின் சிற்சில குறைபாடுகள் காரணமாக ஆண்கள் பலதார மணம் புரிவதற்குள்ள அனுமதியை - இயற்கை சார்ந்த பரிகாரத்தைப் பார்த்தீர்கள். இதை உங்கள் உள்ளம் ஏற்றுக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

எனினும், 'இதே குறைபாடுகள் ஆண்களிடம் இருந்தால் பெண்கள் சம காலத்தில் பல கணவர்களை மணந்துகொள்ள முடியுமா?' என்ற ஒரு வினா உங் கள் உள்ளத்தில் எழலாம். இதற்கு இஸ்லாத்தில் அறவே அனுமதி இல்லை. அதோடு, இது தொடர்பான சில நியாயங்களை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முதலாவதாக, பெண்களின் இயற்கையான தன்மை, குணப் பண்புகள் என்பன சமகாலத்தில் ஓர் ஆணையே நாடி நிற்கும்; அந்த ஓர் ஆண்மீது அன்பு செலுத்துவது, அவனது உடற் தேவை உட்பட மற்றும் தேவைகளைக் கவனிப் பது என தனித்து நிற்கும். அன்றி, அவள் தனது ஒரு கணவன் மீதுள்ள அன்பை, பாசத்தை சமகாலத்தில் பல கணவர்களுக்குப் பிரித்துப் பங்குபோடும் தன்மை உடையவளும் அல்லள். அத்துடன், சமகாலத்தில் பல ஆண்களின் உடற்தேவை களை நிறைவு செய்வதற்கும் மற்றும் தேவைகளைக் கவனிப்பதற்கும் அவளு டைய உடற்கூற்றுத் தன்மையும் இடந்தரமாட்டாது. இதனை வாழ்வில் வழுக்கி விழுந்து சோரம் போன பெண்களும், சினிமா, இரவு விடுதிகள் (Night Clubs) என்பவற்றால் பல ஆண்களுக்குக் களிப்பூட்டி களைத்துப்போன பெண்களும், தாம் ஓர் ஆணின் அன்பில், அரவணைப்பில் வாழ ஆசைப்படுவதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

இரண்டாவதாக, ஒரு பெண் சமகாலத்தில் பல கணவர்களை மண முடித்த நிலையில் அவள் பிள்ளை பெறுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அப் பொழுது, அந்தப் பிள்ளை எந்தக் கணவருடையது என எப்படி நிர்ணயிப்பது என்ற பிரச்சினை எழும்; அதோடு, அந்தப் பிள்ளையும் "நான் இன்னாருடைய மகன் அல்லது மகள்" என்று துணிவுடன் கூற முடியாது வெட்கித்து வாழும் நிலை உருவாகும்; அத்துடன் வாரிசுச் சொத்தை பிரித்து வழங்குவதிலும் சிக்கல் தோன்றும்; மேலும், 'இவன் என்னுடைய பிள்ளையா!' என்ற மன உருத்தலுக் குத் தொடராக ஆட்படும் ஒரு கணவன் புயங்கரமான முடிவுகளைக்கொண்டு செயற்படவும் முடியும். இன்னோரன்ன பல காரணங்களால் இது தகாததொரு செயல் என இஸ்லாம் கருதுகின்றது. நமது புத்தியும் இதை ஏற்றுக்கொள்ளும்.

## பலதார மணம் வேண்டும்!

'போர்கள் காரணமாக ஆண்கள் குறைந்து பெண்கள் கூடுகின்றனரே என்ன செய்யலாம்' என்பது தொடர்பாக ஆராயவென கி.பி.1650ல் நியுரன்பர்க் (Nurenberg) எனுமிடத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டின் இறுதியில் ஆண்கள் ஒரு மனைவியைவிடக் கூடுதலான பெண்களை மணம் புரிய அனுமதிப்பதென்று முடிவெடுக்கப்பட்டது.[94]

---

94. 'Woman in Islam', Said Abdullah Seif Al Hatimy, Paga: 65

இதே போன்ற பிரச்சினையை ஆராய்வதற்கென கி. பி. 1948ல் ஜெர்மனியில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் பலவிதமான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அதில் பங்குபற்றிய இஸ்லாமிய அறிஞர்களான கலாநிதி முஹம்மத் யூசுஃப், கலாநிதி மூஸா என்போர் இஸ்லாமியப் பலதார மணத்தை ஒரு பரிகாரமாக சமர்ப்பித்தனர். அவர்களுக்கு உடனடியாகக் கிடைத்த பதில் கிண்டல், கோபம், வெறுப்பு, மறுப்பு என்பன கலந்த சுடு சொற்களாகும். ஆனால், ஆய்வு ஆழமாகச் செல்லச்செல்ல, 'இஸ்லாமியப் பலதார மண முறை தான் பரிகாரம்; அதைத் தவிர வேறு வழியில்லை' என்ற முடிவுக்குத்தான் அவர்களால் வரமுடிந்தது.

எனவே, முடிவெடுத்தனர்:

— 'இஸ்லாமியப் பலதார மணம்
ஒன்றே பரிகாரம்!' என்று.[95]

1901 ஏப்ரல் 20 ஆம் திகதி, ஒரு பெண் எழுதிய கடிதமொன்றை அப்போது லண்டனில் வெளிவந்த 'ட்ருத்' (Truth) சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டு, பின்னர் லாகோஸில் வெளிவந்த 'ரெகோர்ட்' (Record) வாராந்த சஞ்சிகையில் மறு பிரசுரம் செய்யப்பட்டிருந்தது.

அக்கடிதத்தின் சுருக்கம் இதுதான்:

— "தற்போது வாழ்விழந்து தவிக்கின்ற
பெண்கள் எண்ணிக்கை பெருமளவு கூடியுள்ளது.
இது எமது சமூகத்தை வந்தடைந்துள்ள
பெரும் சாபக்கேடும் தொல்லையுமாகும்.
ஒரு பெண் என்ற நிலையில்
நான் இந்தப் பெண்களின் நிலையை
மிகுந்த அனுதாபத்துடன் நோக்குகிறேன். எனினும்,
எனது அனுதாபமும் இரக்க உணர்வும்
இவர்களது தரித்திர நிலையை மாற்றுவதற்கோ, அல்லது,
பிரச்சினைகளை நல்ல விதமாகத் தீர்த்து வைப்பதற்கோ
உதவ முடியுமா?
தோமஸ் சொன்னதுதான் மிகச் சரியானது.
அவர் நோயைச் சரியாக இனங்கண்டு
அதற்கான மருந்தை எழுதிக் கொடுத்துள்ளார்.
அவர் எழுதிக்கொடுத்த மருந்து இதுதான்:
'பெண்கள் அனுபவிக்கும் துன்பம் தீர்ந்து
சிறந்த குடும்பப் பெண்களாக வேண்டுமாயின்
ஒருவன் ஒருத்திக்கு மேல் மணமுடிக்கும்
பலதார மணத்தை அனுமதிக்க வேண்டும்.'
'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற திருமண முறை
ஐரோப்பாவுக்குத் துன்பத்தைத் தருவதாகும். அத்துடன்

95. 'Woman in Islam', Said Abdullah Seif Al Hatimy, Paga: 65

நமது சமூகத்துக்குக் களங்கத்தையும் பொறுப்பையும் தரும்
தவறான பிள்ளைகள் பிறப்பதற்கும் காரணமாகும்.
இதனால் யாருக்கு என்ன பயன்? உண்மையில்
பலதார மணத்தை அனுமதித்தால்
இந்நிலை உருவாக மாட்டாது."

இக்கடிதம் எழுதப்பட்ட வேளையில் லண்டனில் மாத்திரம் 800,000க்கும் 1,000,000க்கும் இடைப்பட்ட பரத்தையர்கள் இருந்துள்ளனர். இக்கடிதத்தை எழுதிய பெண் இன்றிருந்தால்...?[96]

'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கருத்தை வலியுறுத்தும் நாடுகள் பலவற்றில் வைப்பாட்டிகள், நண்பிகள் என்ற முறையில் பெண்கள் சோரம் போகின்ற நிலை பெருமளவில் இருக்கின்றது. அத்துடன், விபச்சாரம் இரகசியமாக நடப்பதுடன் பகிரங்கமாக, தொழில் ரீதியாக நடத்துவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன் பயங்கர விளைவைப் பாருங்கள்:

"1959 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியான 'இட்டிலாஅத்' (Itila'at) என்ற ஆங்கில இதழ் 'Out of every ten British children one is Bastard' என்ற தலைப்பில் ஒரு செய்தியைப் பிரசுரித்திருந்தது. அச்செய்தி இதுதான்:

— லண்டன் நகர மருத்துவ அதிகாரி
டாக்டர் இஸட். ஏ. ஸ்காட் சமர்ப்பித்த அறிக்கையின்படி
லண்டனில் பிறக்கின்ற 10 குழந்தைகளில்
ஒன்று முறை தவறிப் பிறக்கின்றது. இப்படி
முறை தவறிப் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை
வருடந்தோறும் அதிகரித்து வருகின்றது.
1957ல் 33, 838 குழந்தைகள்
முறை தவறிப் பிறந்துள்ளன.
அடுத்த ஆண்டு அந்த எண்ணிக்கை
53, 433 ஆக அதிகரித்துள்ளது.

"1989 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதிய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (Madras) வெளியிட்ட செய்தியொன்றின் தகவல்களாவன:

1986 - 87 ஆண்டுகளில் சேகரித்த புள்ளிவிவரங்களின்படி
முறை தவறிப் பிறந்த முழந்தைகளின் வீதம்
டென்மார்க்கில் 43.8 ஆகவும்
பிரான்ஸில் 21.9 ஆகவும்
பிரிட்டனில் 20.9 ஆகவும் இருந்துள்ளது.

---

96. 'அல் மராஅ பய்ன அல் ஃபிக்ஹ் வல் கானூன்', கலாநிதி முஸ்தபா அஸ்ஸிபாஈ,
'Woman in Islam', Said Abdullah Al Hatimy, Page: 70

"1960 ஆம் ஆண்டு செப்டெம்பர் 12 ஆம் திகதி 'Hindustan Times' எனும் இந்தியத் தினசரி பத்திரிகை 'More out of than in' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. அதன் முக்கியமான ஒரு பகுதி இவ்வாறு காணப்பட்டது.

— ஐக்கிய நாடுகள் சபை சார்பாக வெளியிடப்படும்
'டிமோக்ரஃபிக் ரிவீவ்' (Demografic Review) எனும் இதழின்
1959 ஆம் ஆண்டு மலரில்
சில புள்ளிவிவரங்கள் மூலம்
ஒரு செய்தி உறுதி செய்யப்பட்டது. அது என்ன?
நவீன காலத்தில்
சட்டத்திற்குட்பட்டு பிறக்கும் குழந்தைகளைவிட
சட்டத்திற்குப் புறம்பான முறையில் பிறக்கும் குழந்தைகளே அதிகம்.
சில நாடுகளில் அதன் வீதம் 60% ஆகும்.
பனாமா போன்ற நாடுகளில்
நான்கு குழந்தைகளில் மூன்று குழந்தைகள்
முறை தவறிப் பிறந்தவை.
அதாவது பாதிரியாரின் அனுமதியோ
சட்டரீதியான திருமணமோ
இன்றிப் பிறந்த குழந்தைகள் 75% ஆகும்.
லத்தீன் அமெரிக்காவில் இது இன்னும் அதிகம். ஆனால்,
முஸ்லிம் நாடுகளில் முறை தவறிப் பிறக்கும் குழந்தைகள்
ஏறக்குறைய இல்லை என்றே சொல்லலாம்.
மற்ற முஸ்லிம் நாடுகளைவிட
ஐரோப்பிய நாகரிகத்தை நேசிக்கும் எகிப்தில்கூட
முறை தவறிப் பிறக்கும் குழந்தைகள் ஒரு சத வீதத்திலும் குறைவே.
முஸ்லிம் நாடுகள் மட்டும் இத்தீமையிலிருந்து தப்பிக்கக் காரணம்
அங்கு பலதார மணம் நடைமுறையில் இருப்பதே!"[97]

இப்பொழுது நீங்களே கூறுங்கள். எப்படியெல்லாமோ ஒழுங்கீனமாக இருந்த பலதார மண முறையை ஒழுங்குபடுத்தி, இத்தனைதான் மணமுடிக்க வேண்டும் என்று வரம்பிட்டு, பெண்களுக்கு உரிய பாதுகாப்பையும், உலகுக்கு ஒழுக்கம் பற்றிய ஒரு கோட்பாட்டையும் வழங்கிய இஸ்லாத்தின் ஏற்பாட்டில் என்ன தவறு இருக்கின்றது?

ஆயினும், நீங்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது.
— இஸ்லாம்
பலதார மணத்தை அனுமதித்துள்ளது. அன்றி,
அதனைக் கட்டாயக் கடமையாக்கவில்லை.
ஒருவர் அதைச் செய்வதும் செய்யாமல் விடுவதும்
அவரின் விருப்பம், தேவை, வசதிகள்
என்பவற்றைப் பொறுத்து அமைகின்றது!

97. 'பலதார மணம் பாவமா? பரிகாரமா?, கனியூர் இஸ்மாயில் நாஜி, பக்: 30, 31, 46, 47

# இஸ்லாத்தில் மாமிசம் உண்ணல்!

உயிரினங்களைப் படைத்த இறைவன் அவற்றுக்கு உணவை வழங்கும் பொறுப்பையும் ஏற்றுள்ளான்.

இதோ அவன் மொழிவதைக் கேளுங்கள்:

- "அல்லாஹ்தான்
உங்களைப் படைத்தான்;
பின்னர் உங்களுக்கு உணவளித்தான் ..."[98]

- "எத்தனையோ பிராணிகள் உள்ளன;
அவை தாமே தமது உணவைச்
சுமந்துகொண்டு திரிவதில்லை.
அல்லாஹ் அவற்றுக்கு உணவளிக்கின்றான்.
உங்களுக்கும் அவன்தான் உணவளிக்கின்றான்.
அவன் யாவற்றையும் செவியுறுபவனாகவும்,
நன்கறிபவனாகவும் இருக்கின்றான்."[99]

இப்படி உணவு வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அல்லாஹ் எல்லா உயிரினங்களுக்கும் ஒரே வகையான உணவை வழங்கவில்லை. அவை பலதரப்பட்டவை.

— சில உயிரினங்கள் புல் மேய்ந்தும், இலை, செடி கொடிகள் என்பவற்றை உணவாகக் கொண்டும் வாழ்கின்றன.

— சில உயிரினங்கள் பூச்சி புழுக்களை உணவாகக் கொண்டு வாழ்கின்றன.

— சில உயிரினங்களின் வாழ்வு மாமிசத்தில்தான் தங்கியுள்ளது.

— இத்தகைய எண்ணற்ற உயிரினங்கள் மத்தியில்
வாழும் மனிதன் மாத்திரம் சமகாலத்தில்
தானிய வகைகள், தாவர வகைகள்,
பழ வர்க்கங்கள் உட்பட
மாமிசமும் உணவாகக் கொள்கின்றான்.

உங்களுக்குத் தெரியும் மனிதன் என்னென்ன மாமிச வகைகளை உணவாகக் கொள்கின்றான் என்று. சில நாட்டவர் நாயை, பூனையை, எலியை, பாம்பைக்கூட சுவைத்து உண்ணுகின்றார்கள். ஆனால், இஸ்லாம் 'எந்த மாமிசத்தையும் உண்ணலாம்' என்ற எண்ணத்திற்குத் தடைபோட்டு "இவற்றை மட்டும் உண்ணுங்கள்" என்ற அனுமதியை வழங்கியுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்:

---

98. அல்குர்ஆன் 30: 40 99. அல்குர்ஆன் 29: 60

● "(இயற்கையாக) செத்த பிராணியும்,
இரத்தமும், பன்றி இறைச்சியும்,
இறைவனல்லாத மற்றவர் பெயர்கூறி
அறுக்கப்பட்ட பிராணியும்,
கழுத்து நெரிக்கப்பட்டும், அடிபட்டும்,
உயரத்திலிருந்து வீழ்ந்தும், மோதப்பட்டும்
இறந்த பிராணிகளும் உங்களுக்குத் தடுக்கப்பட்டவையாகும்.
மேலும், கொடிய விலங்குகளால் கடித்துக்
குதறப்பட்ட பிராணிகளும் (தடுக்கப்பட்டவையாகும்.)
— ஏவற்றை உயிருடன் அறுத்து விட்டீர்களோ - அவற்றைத் தவிர!
இன்னும் பலிபீடங்கள் மீது அறுக்கப்பட்ட பிராணியும்
உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது."[100]

மேலும், நபி (ஸல்) அவர்களது நன்மொழிகள் பலவற்றின் மூலம் 'எவற்றை உண்ணலாம்; எவற்றை உண்ணக் கூடாது' என்ற விளக்கங்களையும் நாம் பெற முடியும்.

பொதுவாக, 'மாமிசம் உண்பதற்கு, சில வரையறைகளுடன் இஸ்லாம் அனுமதி தந்துள்ளது' என்பதை நம் கவனத்தில் கொள்வது நல்லது. இது வெறும் அனுமதியே தவிர 'முஸ்லிம்கள் மாமிசம் உண்ணவே வேண்டும்' என்றதொரு கட்டளையல்ல. எனவே, இதனை அனுசரித்து எந்த முஸ்லிமும் மாமிசம் உண்ணலாம்; அல்லது உண்ணாமலும் விடலாம். இது ஒவ்வொரு முஸ்லிமினதும் விருப்பத்தைப் பொறுத்ததேயாகும்.

எனினும், மிகவும் வேதனை தரும் விடயம் என்னவெனில், வேறு மதங்களைச் சேர்ந்த சிலர், 'இது பிழையான அனுமதி' என்று கூறுவதுடன் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் தூற்றவும், தாக்கவும் தவறவில்லை. சில கட்டங்களில் இத்தகைய விமர்சனங்கள் எல்லை கடந்துபோய் கலவரங்களுக்குக்கூட வழிவகுத்துள்ளன.

— இது அவர்களது அறியாமை!
— எதையும் பரந்த அளவில் திறந்த மனதுடன்
ஆராய்ந்து பார்க்கத் தவறியதால் அல்லது
அப்படிப் பார்க்கத் தயாரில்லாததால்
வந்த வினை!

நீங்களும் அத்தகையவர்களில் ஒருவராக இருக்கக் கூடாது. எனவே, ஆராய்ந்து பார்க்கும்படி அன்புடன் வேண்டி நிற்கின்றேன்; அதற்கான சில விளக்கங்களைத் தந்து நிற்கின்றேன்.

அல்லாஹ்வின் படைப்புக்களில் மிக சிரேஷ்டமானவன் மனிதன். இவனைத் தனது 'கலீஃபா - பிரதிநிதி' என இறைவன் குறிப்பிடுகின்றான். எனவே, இந்தப் பொறுப்பில் இவன் ஆற்றவேண்டிய மகத்தானதொரு கடமை

100. அல்குர்ஆன் 5: 3

யுண்டு. அதற்குப் பயன்படும் விதத்திலேயே அல்லாஹ்வின் ஏனைய எல்லாப் படைப்புக்களும் அமைந்துள்ளன. அத்தகையவற்றில் பிரதான ஒன்றே உணவு எனப்படுவது. இவ்வுணவில் அடங்கப் பெறுவதே மாமிசமும். இந்த வகையில் தான் மாமிசத்தை உணவாகக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதை இறைவனே ஆகுமாக்கியுள்ளபோது சிற்றறிவுள்ள மனிதன் 'ஆகாது' என எப்படி வாதாட முடியும்?

மனிதன் எத்தகைய ஆபத்துமின்றி, ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்பதை உலகின் எந்த மதமும் மறுக்கவில்லை; எந்த சிந்தனையாளரும் 'கூடாது' எனக் கூறவில்லை. வெறும் உலகியல் ரீதியாகப் பார்க்கும்பொழுது கூட நவீன கொள்கைகள் கூறுவதும், அவற்றை ஏற்ற நாடுகள் போராடுவதும் மனிதன் உண்டு உடுத்து வாழவேண்டும் என்பதற்குத்தான். இஸ்லாம் அந்தவகை யில் மற்றெல்லா மதங்களையும் கொள்கைகளையும் மிகைத்துக்கொண்டு, இம்மை மறுமை இரண்டிற்கும் பாலமிட்டு வழிகாட்டுகின்றது. அதன்படி, அவனது நல்வாழ்விற்கு அனுகூலமானதை ஏற்று, வளர்த்து, பாதுகாத்துப் பயன் பெறுகின்றான்; பாதகமானவற்றை அழித்துப் பாதுகாப்பைப் பெறுகின்றான்.

மனிதனுக்குத் தீங்கு விளைவிப்பவற்றில் நுளம்பு, மூட்டைப்பூச்சி, பேன், எலி, தேள், பூரான், பாம்பு, கொசு மற்றும் விஷக் கிருமிகள் போன்றவை ஏராள மாய் இருக்கின்றன. இவற்றை எவருமே விட்டுவைப்பதில்லை;

— கண்ட இடத்தில் கொன்று விடுகின்றனர்!
— நீங்களும்தான் கொல்வீர்கள்!

உங்கள் வீட்டில் செல்லமாக வளர்ந்த நாய்க்கு பைத்தியம் பிடித்து விடுகின்றது. அதனால் பலருக்கும் உயிராபத்து உண்டு என்பதை அறிந்த பின்னரும் நீங்கள் அதைத் தடவிக் கொடுப்பீர்களா? அல்லது கொன்று புதைப்பீர்களா?

நிச்சயமாக, அந்த பைத்தியம் பிடித்த நாயை எங்கிருந்தாலும் தேடிப் பிடித்து கொன்றுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பீர்கள். அப்படித்தானே சகோதரரே, சகோதரியே!

— ஏன் கொல்கின்றீர்கள்?
— உங்கள் கருணையுள்ளம் எங்கே போயிற்று?

என்று எவரும் கேட்டால் 'யார் இந்த மடையன்?' என்று ஏறிட்டுப் பார்ப்பீர் கள். ஏனெனில், அந்த வெறிநாயால் உங்களுக்கு, உங்கள் மனைவி மக்களுக்கு மட்டுமல்ல, உங்கள் வீட்டுப் பகுதியில் வாழும் அனைவருக்கும் ஆபத்து என்பது தான் காரணம்!

நீங்கள், பச்சைப் பட்டாடை போர்த்தியது போன்று கண்களுக்குக் குளிர்ச்சியூட்டும், ஆயிரக் கணக்கான ஏக்கர்களைக் கொண்ட வயல்வெளியைக் காண்கின்றீர்கள். அது அந்த அழகைப் பெறுவதற்கு, எப்படி உழுது, உரமிட்டு, பண்படுத்தப்பட்டிருக்கும் என எண்ணிப் பாருங்கள்.

அதேபோல, மேட்டு நிலங்களிலுள்ள பயனில்லாத செடி கொடிகளை வெட்டி, பின்னர் உரமிட்டு, பண்படுத்தி எத்தனை வகையான தாவரங்கள் பயிரிடப்படுகின்றது என்பதையும் எண்ணிப்பாருங்கள்.

பின்னர், நெற்கதிர்களையும், தாவரங்களையும் பாதுகாக்கவென விதவிதமான கிருமி நாசினிகளைத் தெளிப்பதையும் நீங்கள் காண்கின்றீர்கள். இறுதியாக மக்கள் யாவரும் நெல்லையும் தாவரங்களையும் உணவாகப் பயன்படுத்துகின்றனர்.

இப்பொழுது, பூமியைப் பண்படுத்துவதிலிருந்து, நெல்லை அறுவடை செய்தும், தாவரங்களை வெட்டியும் பிடுங்கியும் வீட்டுக்குக் கொண்டுவரும் வரையிலான வேலைகளில், எத்தனை லட்சம் சின்னஞ்சிறு உயிரினங்கள், பூச்சி, புழுக்கள் சாகின்றன; அல்ல, சாகடிக்கப்படுகின்றன என்பதையிட்டு சிந்தித்துப் பாருங்கள்.

— இக்கட்டங்களில், இவற்றில் ஈடுபடுபவர்க்குக்
கருணை பிறப்பதில்லையே! ஏன்?
— நெஞ்சங்கள் இறுகி விட்டனவா? எனக் கேட்பது முறையாகுமா?

மேலும் கேளுங்கள். கடல், குளம், குட்டை, ஆறு என்பவற்றில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. நீங்கள் பயணம் போகும்போதுகூட ஆற்றோரங்களில் குந்திக்கொண்டு மீனுக்காக ஏங்கியவண்ணம் தூண்டில்களைப் போட்டுக் கொண்டிருப்பவர்களைக் கண்டிருப்பீர்கள். அந்தந் தூண்டிலிலும் துடிக்கத் துடிக்க ஒரு புழு மாட்டப்பட்டிருக்கும் - மீனுக்கு இரையாக! மீன் தூண்டிலில் மாட்டிக் கொண்டால் எப்படித் துடிக்கின்றது என்பதையும் நீங்கள் கண்டிருப்பீர்கள். அப்படித் துடித்துத் துடித்தே அது செத்துவிடும். இத்துடன் இது முடிவடைவதில்லை!

— மீன் வளர்க்கும் திட்டம்
— இறால் வளர்க்கும் திட்டம்

போன்ற பல திட்டங்கள் உள்ளன. அவற்றைக் கவனிக்கவென தனியான திணைக்களங்களும் உள்ளன. இவையெல்லாம் மீன்கள் மீது கொண்ட அன்பினால் செய்யப்படும் ஏற்பாடுகள் என எவரும் கூற முடியுமா? உண்மையில் இவ்வேற்பாடுகள் யாவற்றினதும் இறுதி நோக்கம் அவற்றை உணவாகக் கொள்வதல்லவா! அதிலும் மீனைக் கருவாடாக்கும் பொழுது, அவற்றைப் பிளந்து, உப்பிட்டு, வெயிலில் காயப்போடும் கொடுமையெல்லாம் நடக்கின்றதே!

— எங்கே கருணை?
— "ஏன் இப்படிச் செய்கிறார்கள்" என யார் கேட்டார்கள்?

இன்னும் கேளுங்கள். இன்று கோழி வளர்ப்பு சர்வதேச மட்டத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. லட்சக் கணக்கான கோழிகளைக் கொண்ட பண்

ணைகள் உலகெங்கும் உண்டு. சின்னஞ்சிறு கிராமங்களில்கூட நூறு, இருநூறு, ஐநூறு, ஆயிரம், இரண்டாயிரம் என்று கோழிகள் வளர்க்கும் சிறு பண்ணைகள் வைத்துள்ள சாதாரண மக்கள் ஏராளம். ஏன் இந்தக் கோழிகளை வளர்க்கின்றார்கள்?

— இன்று கோழிக்கறி பிரதான உணவாகும்.
— அவற்றின் முட்டை மற்றொரு பிரதான உணவாகும். அத்துடன்,
— ஆட்டிறைச்சி
— ஆட்டுப்பால்
— பன்றி இறைச்சி*, ஒட்டக இறைச்சி

என்பனவும் உண்ணுபவர்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது. எந்த மதத்தைச் சேர்ந்த எவராயினும் இவற்றில் எதையேனும் உணவாகக் கொள்வதில்லை எனக் கூற முடியாது. இவற்றில் எதையேனும் உணவாகக் கொள்ளும் மதக் குருக்கள்கூட இல்லாமலில்லை!

பேராசிரியர் எம். எஸ். ஜெயபிரகாஷ் கூறுகிறார்:

"வேதகாலத்து ஆரியர்கள் பசுவைக் கொன்று, அதன் இறைச்சியைப் புசித்தும் வந்தனர் என்பதுதான் உண்மை. வேதகால சமூக - பொருளாதாரத் துறையில் பசுவுக்கு மிகுந்த முக்கியத்துவம் இருந்துவந்தது.

வேளாண்மையோடு தொடர்புள்ள ஒரு நாடோடிக் கூட்டமாகத்தான் ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தனர். விவசாயமும் கால்நடை வளர்ப்பும் அவர்களின் முக்கிய தொழில்களாய் இருந்தன. அவர்களுடைய முக்கிய சம்பாத்தியம் கால்நடைகள்தான் - குறிப்பாக பசுக்கள். கன்று காலிகள் அதிகம் பெருக வேண்டும் என்பதற்காக அவர்கள் சிறப்பு வழிபாடுகள் நடத்தினர் என்று வைதீக நூல்கள் கூறுகின்றன.

யாகங்கள் நடக்கும்போது புரோகிதர்களுக்குக் கூலியாக வழங்கியது பசுக்களைத்தான்! கன்று காலிகள் காரணமாக கோத்திரங்களிடையே போர் மூளுவதும் உண்டு.

'கோத்திரம்' எனும் சொல் கூட ஆரியர்களின் சமூக வாழ்வின் பசுவுக்கு இருந்த முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டும். (கோ - பசு) ஒரே ஆலயத்தில் தங்களுடைய 'கோ'க்களுடன் வசித்து வந்த ஆட்கள் கோத்திரம் எனப்பட்டனர்.

இவர்கள் பசுக்களையும், காளைகளையும் உணவுக்காக கொன்று புசித்து வந்தனர் என்று வேத இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

விருந்தினர்களுக்கு பசு இறைச்சியைப் பரிமாறி உபசரிப்பதை உயர்ந்த மரபாக அவர்கள் பின்பற்றி வந்தனர். பசு இறைச்சியை விடச் சிறந்த உணவு வேறில்லை என்பது அவர்களின் நம்பிக்கை.

* இஸ்லாத்தில் பன்றி இறைச்சி உண்பது தடுக்கப்பட்டுள்ளது. எனவே, முஸ்லிம்கள் உண்பது இல்லை.

வேதகால யாகங்களில் ஒரு பிரதான சடங்கு பசுவதைதான்!

யாகங்களில் மிகச் சிறந்த யாகம் சோம யாகம்! ரிக் வேதத்தில் ஒன்பதாம் மண்டலம் முழுவதும் சோம யாகம் பற்றிய வர்ணணைகள் நிரம்பியுள்ளன!

'ஜந்து ஹோமம்' சோமயாகத்தின் முக்கியமான சடங்காகும். உயிர்ப் பிராணிகளை அக்னியில் அர்ப்பணித்தல் மட்டுமல்ல. அவற்றின் இறைச்சியை யாக முறைப்படி ரிஷிகள் உண்ணவும் செய்தனர்.

பசு, ஆடு, காளை, குதிரை, எருமை, மான் போன்ற பிராணிகள் தான் ஹோமத்திற்கு பயன்படுத்தப்பட்டன. யாகப் பசுவை மூச்சு திணற வைத்தோ, கழுத்தை நெரித்தோ கொல்வார்கள். கொன்ற பசுவை துண்டுகளாய் வெட்டி, ஒவ்வொரு துண்டாக எடுத்து ஹோமத்தில் இடுவார்கள். மொத்தம் முப்பத்தாறு துண்டுகளாய் வெட்டி, ஒவ்வொரு துண்டையும் ரிஷிகளில் ஒவ்வொருவராய் எடுத்து ஹோமம் செய்ய வேண்டும் என்பது நியதி. (ஐதரேய பிராமணம் 7 -1) யாகப் பசுவின் எந்தெந்த பாகத்தை யார் யார் ஹோமம் செய்ய வேண்டும் என்ற விவரத்தையும் வேத இலக்கியங்கள் தருகின்றன.

பிரஸ்தோ தாவ் - தாடை எலும்பும் நாக்கும்;
உத்காதாவ் - வயிறு;
பிரதிகர்த்தாவ் - கழுத்து;
மைத்ராவருணன் - வலது தொடையின் கீழ்பாகம்;
பிராம்ணாச்சம்ஸி - இடது தொடையின் கீழ்பாகம்;
அச்சாவாகன் - வலது தொடையின் மேல்பாகம்;
அக்னீதரன் - இடது தொடையின் மேல்பாகம்;
நேஷ்டாவ் - வலது முன்காலின் கீழ்பாகம்;
போதாவ் - இடது முன்காலின் கீழ்பாகம்;
அத்ரேயன் - வலது முன்காலின் மேல்பாகம்;
ஸதஸ்யன் - இடது முன்காலின் மேல்பாகம்;
அத்வர்யூ - முதுகோடு சேர்ந்த வலப்பக்கம்;
பிரதிபிரஸ்தாவ் - முதுகோடு சேர்ந்த இடப்பக்கம்;
கிராவஸ்துதன் - கழுத்து இறைச்சி;
சுப்ரமணியன் - தலை.

இதுமட்டுமல்ல, யாகப் பசுவின் வாலை 'கிருஹப்பத்னி'யும் மூத்திரப் பையை 'கிருஹபதி'யும் எடுக்க வேண்டும் என்பது விதி.

மேற்சொன்னவாறு பசுவை அணு அணுவாக வெட்டி, சுவைத்துண்ணும் சம்பிரதாயம் வேதகால இந்துக்களிடம் இருந்தது. புராதன கலாச்சாரத்திற்கு ஏற்ப பசு வதையைத் தடை செய்ய வேண்டும் என்று இன்றைக்கு கூறுபவர்கள், எதார்த்த சரித்திர சத்தியங்களை வெட்கமின்றி மறைக்கிறார்கள் என்றுதான் பொருள்."

நன்றி: சமரசம், இருவார இஸ்லாமிய சஞ்சிகை, தமிழ்நாடு இஸ்லாமிய நிறுவனம் வெளியிடுவது, 1995 மே 16 - 31, பக்: 2

இப்பொழுது,

— இவர்களது கருணை உணர்வுக்கு
என்னவாயிற்று எனக் கேட்கலாமா?

— யார் என்ன பதில் சொல்வார்கள்?

உண்மையில் எவரிடமும் கருணையுணர்வு இல்லாமல் போகவில்லை. யதார்த்தம் என்னவெனில் மனித வாழ்வின் நிலைப்பாட்டிற்கு உணவு தவிர்க்க முடியாததொரு தேவை. அவ்வுணவில் ஒன்றாக மாமிசமும் அமைகின்றது என்பதுதான்.

மனிதன் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் வாழ வேண்டும். அப்படியானால் மாத்திரமே அவன் ஆற்ற வேண்டிய பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்ற முடியும். இல்லாவிட்டால் அவனது ஆரோக்கியம் குன்றி, ஆபத்துக்களில் மாட்டி அகால மரணம் அடையவேண்டி வரும் என்பதை முன்னர் கூறினேன்.

எனவே, அவனது வாழ்வுக்கு

— ஆபத்தான உயிரினங்களைக் கொன்றொழிக்கின்றான்!

— இணக்கமான உயிரினங்களைக் கொன்று உணவாகக் கொள்கின்றான்!

இப்பொழுது, இதில் தவறில்லை என்று உங்கள் உள்ளம் கூறும். சில வேளை உங்கள் உள்ளம் "இது தவறு; ஏற்க முடியாது!" எனக் கூறுமாயின் அது யதார்த்தத்துக்கு இணக்கமாக இராது; நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துவராது. 'எந்தப் பொருளையும் நாசம் செய்யக்கூடாது; வீண் விரயம் செய்யக் கூடாது' என்பதில் இரண்டு கருத்துக்கள் இல்லை. ஆனால், அவற்றிலிருந்து நியாயமான பயனைப் பெறுவதைத் தவறு என யாரேனும் கூறினால் அது ஏற்கத்தக்க கருத்தாகக் கொள்ளமுடியாது.

இந்த வகையில்தான் பசுவின்

— பாலைப் பருகவும்

— மாமிசத்தை உணவாகக் கொள்ளவும்

— தோலை பல தேவைகளுக்காகப் பயன்படுத்தவும்

மனிதன் முற்பட்டிருக்கின்றான்; இஸ்லாமும் வரையறைகளுடன் இதை அனுமதித்துள்ளது.

இஸ்லாத்தின் கருணையுணர்வு எத்தகையது என்பதை ஒரு சம்பவத்தின் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

"ஒருநாள் ஒரு கிழட்டு ஒட்டகத்தை விரட்டிக்கொண்டு ஓடி வருகின்றார் ஒருவர். அவர் கையில் கத்தியும் இருக்கின்றது. அவ்வாறு ஓடிவந்த ஒட்டகம் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இருந்த இடத்தில் நின்றுவிட்டது. அதைத் துரத்தி வந்தவர் அங்கு வந்ததும், "ஏன் இந்தக் கிழட்டு ஒட்டகத்தை துரத்தி வருகிறீர்?" என இறைத்தூதர் அவர்கள் கேட்டார்கள்.

"இதற்கு வயதாகிவிட்டது. எதற்கும் பயனற்ற இதை அறுத்துச் சாப்பிட லாம் என்ற எண்ணத்தில் பிடிக்க முயல்கிறேன். ஆனால், அதுவோ என் கைக ளில் அகப்படாது ஓடிக்கொண்டிருக்கிறது!" என்றார் அதை விரட்டி வந்தவர்.

"எவ்வளவு நாட்கள் இவ்வொட்டகம் உம்மிடம் இருக்கின்றது?" என மீண்டும் கேட்டார்கள் நபிகளார் அவர்கள்.

"இதன் தாய் எங்கள் வீட்டு ஒட்டகம். அது ஈன்ற கன்றுதான் இது. சிறு கன்றிலிருந்தே இது எம் வீட்டில்தான் வளர்கின்றது!" என்று அதைத் துரத்தி வந்தவர் கூறியபொழுது,

"இதனால் நீங்கள் அடைந்த பயனேதும் உண்டா?" எனக் கேட்டார்கள் நபி (ஸல்) அவர்கள்.

"இது எங்களது ஏறுவாகனமாகப் பயன்பட்டுள்ளது; விவசாயத் தொழி லுக்கும் பயன்பட்டுள்ளது; பல கன்றுகளையும் ஈன்று தந்துள்ளது; நிறைய பால் தந்துள்ளது!" எனப் பதில் தந்தார் அதன் சொந்தக்காரர்.

இதனை செவிமடுத்த மாநபி (ஸல்) அவர்கள், "இவ்வளவு உதவிகள் புரிந்திருக்கின்ற இந்த ஜீவனை அறுத்து அதன் மாமிசத்தைப் புசிப்பதுதான் அதன் உதவிக்கு நீங்கள் செய்யும் நன்றிக் கைமாறா?" என்று கேட்டபோது அதைத் துரத்தி வந்தவர் பதிலறியாது விக்கித்து நின்றார்!

இதைத் தொடர்ந்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்:

● "இதை நீங்கள் அறுத்துப் புசிக்கக் கூடாது.
இதனிடம் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும்
பெற்றிருக்கின்ற உதவிகளுக்குக் கைமாறாக
இது இறக்கும் வரை உணவும், நீரும், உறைவிடமும்
கொடுத்துக் காப்பாற்றுங்கள். அத்துடன்,
இறந்துவிட்டால் ஒழுங்காகப் புதைத்து விடுங்கள்!"

அதைத்துரத்தி வந்தவரும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு, அதை அழைத்துச் சென்றார்."[101]

இத்தகைய கருணை சார்ந்த கட்டளைகள் பலவற்றைக் கருத்தில் கொண்டு, வரையறைகள் இட்டுத்தான் பசுவின் மாமிசமும் உண்ணுவதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது. அன்றி, "எடு வாளை; கொடு கழுத்தை" என்று இஸ்லாத்தின் அனுமதி அமையவில்லை. அப்படி யாரேனும் செய்தால் அது இஸ்லாத்தின் குற்றமும் அல்ல.

---

101. 'இஸ்லாமும் ஜீவகாருண்யமும்', கலைமாமணி கவி. கா. மு. ஷெரிப், சீதக்காதி நூல் வெளியீட்டகம், சென்னை - 2 (1988 - மே) பக்: 5, 6

இவற்றையெல்லாம் அறியாது "பசுவைக் கொல்வது பாபம்!" என்று கூறுபவர்க்கு ஏனைய எத்தனையோ உயிரினங்கள் கொல்லப்படுவது 'பாபம்' என்றோ 'தவறு' என்றோ விளங்கவில்லையா? அவைகளின் உயிர்கள் பசுவின் உயிரைவிடவும் தரங்குறைந்தவைகளா? அல்லது அப்படிக் கூறுபவர்கள் ஏற்றுள்ள மதங்களில், "பசுவதை மட்டும்தான் பாபமானது; மற்ற உயிர்களை வதைப்பது பாபமில்லை!" எனக் கூறப்பட்டிருக்கின்றதா? யார்யாரோ கூறுகின்றார்கள் என்பதற்காக எதையும் ஏற்பதைவிட நாமும் சற்று சிந்தித்துப் பார்ப்பது நல்லதல்லவா!

உயிரினங்களைக் கொல்வது மட்டுமல்ல, தேவைக்கன்றி, அநியாயமாக மரம், செடி கொடிகளை வெட்டி வீழ்த்துவதும் மிகவும் தவறான செயல் என்றே இஸ்லாம் கூறுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

- "ஒரு பூனை பசியில் வாடி இறக்கும் வரை
ஓர் அறையில் அடைத்துவைத்துத் துன்புறுத்திய
ஒரு பெண் நரகத்தில் நுழைந்து விட்டாள்.
அவள் அதற்கு உணவு கொடுக்கவும் இல்லை;
நீர் புகட்டவும் இல்லை;
பூமியில் உள்ள பூச்சி புழுக்களை
உண்ணவும் இடமளிக்கவில்லை."[102]

மேலும் அவர்கள் நவின்றார்கள்:

- "ஒரு விபச்சாரி பாதையில் செல்லும்பொழுது
தாகத்தினால் சாகும் நிலையில் இருந்த
ஒரு நாயைக் கடந்துசெல்ல நேரிட்டது.
அப்பொழுது, அவள் தனது காலுறையைக் கழற்றி
தலையிலிருந்த முந்தாணியுடன் பிணைத்து
(கிணற்றிலிருந்து) நீரை எடுத்து அதற்குப் புகட்டினாள்.
அதனால் அவளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது.
அப்பொழுது,
"மிருகங்கள் விடயத்திலும் எமக்குக் கூலியுண்டா?
என்று வினவப்பட்டது.
"உயிருள்ள ஒவ்வொன்றின் விடயத்திலும் கூலியுண்டு"
என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்."[103]

இத்தகைய நபி மொழிகள் இன்னும் ஏராளம் இருக்கின்றன. இவற்றை அனுசரித்து வாழும் முஸ்லிம்களும் உலகெங்கும் உள்ளனர்.

இப்படிச் சிந்தித்துப் பாருங்கள்:

---

102. அறிவிப்பவர்கள்: இப்னு உமர் (ரலி), அபூஹுரைரா (ரலி) ஆகியோர். ஆதாரம்: முஸ்லிம். ஹதீஸ் எண்: 2242.

103. அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், ஆதாரம்: புகாரி.

மனித வாழ்வின் தேவைக்கு, நிலைப்பாட்டிற்கு, பாதுகாப்பிற்கு என்று மூட்டைப் பூச்சியைப், பேனைக் கொல்வது சரியென்றால், பாம்மை, தேளைக் கொல்வது நியாயமென்றால், மீனை, கோழியை, முட்டையை, ஆட்டை உணவாகக் கொள்வது தவறில்லையென்றால்:

— பசுவை மாத்திரம் உணவாகக் கொள்வதில்
என்ன தவறு இருக்கின்றது?

— அது தவறு என்றால்,
'தவறு' எனக் கூறுபவர்களாலேயே
அதை உண்ணாதிருக்க முடியாதிருப்பதேன்?

— அதோடு, இதை எதிர்ப்பதில் உள்ள அழுத்தமும் வேகமும்
மதுக்கடைகளுக்கு எதிராக இல்லாதிருப்பதேன்?

இதை இன்னுமொரு கோணத்திலிருந்து சிந்தித்துப் பாருங்கள்:

பசு வருடத்திற்கு ஒருமுறை ஒன்றிரண்டு கன்றுகளையே ஈன்றெடுக்கும். அதேவேளை உலகளாவிய ரீதியில் அறுத்துண்ணும் பசுக்களின் எண்ணிக்கையோ பல லட்சம். அந்த வகையில் பசுவினமே அழிந்து, அவை வாழ்ந்த சுவடே தெரியாது போயிருக்க வேண்டும். ஆனால், பல நாடுகளில் லட்சக் கணக்கான பசுக்கள் இன்றும் இருக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது.

நாயை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் மாமிசத்தை வெகு சில மனிதரே உண்ணுகின்றனர். பொதுவாக நாய் மாமிசம் உண்பது வழக்கத்தில் இல்லை. நாய் வருடத்தில் இரண்டு முறையாவது குட்டி ஈனும். அதுவும் ஒன்றிரண்டல்ல. ஒருமுறைக்குக் குறைந்தபட்சம் மூன்றும் கூடியது ஆறு, ஏழு என்றும் இருக்கும். இந்த வீதத்தில் நாயினம் பெருகியிருந்தால் மனிதர்களால் எங்குமே நடமாட முடியாது போய்விடும்; நாய்கள் நமது கால்களில் முட்டி மோதிக் கொண்டிருக்கும்!

— அவ்வாறு நடக்கவில்லையே!
— இதன் மர்மத்தை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மனிதனுக்கு, பசு எந்த வகையில், எவ்வளவு பயனுள்ளது என்பதை அறிந்து அதைப் பெருகச் செய்தவனும், நாய் எந்த வகையில், எவ்வளவு பயனுள்ளது என்பதை அறிந்து அதன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியவனும் யார்? அந்த மாபெரும் ஞானமிக்க சக்தி எது?

— அவனை, அந்த மாபெரும் சக்தியை
'அல்லாஹ்' என்று
இஸ்லாம் அறிமுகப்படுத்துகின்றது!

மற்றொரு வகையிலும், மாமிசம் உண்பதற்கான இஸ்லாத்தின் அனுமதியை நோக்குவது மிகுந்த பயனுடையது. ஏனெனில், அதில், 'இஸ்லாம் ஓர் அனைத்துலக மதம்' என்பதற்கான சான்றை நீங்கள் காணலாம்.

உலகில் வாழும் எல்லா மனிதர்களுக்கும், எல்லா வகையான உணவுகளும், எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை. குறிப்பாக, துருவ நாடுகளில் வாழும் மனிதரது உணவு மீன், செம்மறியாட்டு மாமிசம் என்பனதான். "புலால் உண்ணக் கூடாது; மாமிசத்தை எட்டியும் பார்க்கக் கூடாது!" போன்ற கருத்துக்கள் அவர்களுக்கு ஒத்து வராது. அத்தகைய எந்தக் கொள்கையும் கோட்பாடும் சீரணிக்க முடியாத, ஏதோ சில மந்திரக் கதைகள் போல்தான் அவர்களுக்குத் தென்படும். காரணம், அவை அவர்களால் பின்பற்ற முடியாது என்பதுதான்!

எனவே, அவர்களைப் பொறுத்தமட்டில் கீழ்க்காணும் இரண்டு வழிகளில் ஒன்றையே பின்பற்ற வேண்டும்.

— 'மாமிசம் உண்ணக் கூடாது' என்ற
கொள்கையுடைய மதத்தை ஏற்று,
மாமிசம் உண்ணாமல் மாள வேண்டும்! அல்லது,

— மாமிசம் உண்பதன் மூலம்,
பின்பற்றுவதற்கு முடியாத அந்த மதத்தை
முதுகுக்கப்பால் தூக்கி எறிய வேண்டும்!

இவ்வாறின்றி, மாமிசத்தை மூக்குமுட்ட சுவைத்து உண்டுகொண்டே "மாமிசம் உண்ணாதே" எனத் தடைவிதிக்கும் மதத்தைப் பின்பற்றுவதாக எவரும் கூறுவதானது 'அவர் அந்த மதத்திற்கு விசுவாசமானவர் அல்லர்' என்பதற்குப் போதிய சான்றாக அமைகின்றது என்றுதான் கூற முடியும்.

இஸ்லாம் அத்தகைய சோதனைமிக்க கட்டமொன்றில் மனித சமுதாயத்தை நிறுத்தி வேடிக்கை பார்க்க முனையவில்லை. மாறாக, வேறு எத்தகைய உணவும் கிடைக்காது, மாமிசம் மட்டும் உண்டு வாழும் நிர்ப்பந்தத்திற்கு ஆளான ஒரு மனிதனோ, ஒரு சமூகமோ அல்லது ஒரு நாட்டு மக்களோ, மாமிசம் உண்பதற்கான இஸ்லாத்தின் அனுமதியை ஏற்று, மாமிசம் உண்டுகொண்டே இஸ்லாத்தைத் தமது மதமாகப் பின்பற்றவும் வழி பிறந்து விடுகின்றது. அவர்கள் 'மாமிசம் உண்பது - உண்ணாமல் விடுவது' என்ற இரு நிலைக்கிடையில் சிக்கிக்கொண்டு வாழ்வா அல்லது மதமா? என்ற சோதனைக்கு ஆளாக வேண்டியதில்லை. அவர்கள் பூரண மனத்திருப்தியுடன் வாழ்வுக்கு மதத்தை - இஸ்லாத்தை - வழிகாட்டும் கொள்கையாக ஏற்கலாம். உண்மையில் அத்தகையவர்களுக்கு இஸ்லாம் ஒரு வரப்பிரசாதமாகும்.

எனவே, மாமிசம் உண்பதற்குரிய இஸ்லாத்தின் அனுமதியை மிகக் குறுகிய வட்டத்தில், எல்லா வகையான உணவு வகைகளும் பெறக்கூடிய நாடுகளின் எல்லைகளைக் கருத்தில் கொண்டு நோக்குவது கூடாது. பதிலாக, அந்த அனுமதியை 'உலகம்' என்ற விசாலமான வட்டத்தை வைத்தே நோக்க வேண்டும்.

இவ்வாறு, சர்வதேச மட்டத்தில், எல்லாத் தேசங்களிலும், சூழல்களிலும் வாழும் அனைத்து மக்களுக்கும் பின்பற்ற இலகுவான விதத்தில் அமையாத பல மதங்கள் அழிந்துவிட்டன; அழிந்துகொண்டும் இருக்கின்றன. அல்லது,

அந்தந்த மதங்களில் இருப்பதாகக் கூறிக் கொண்டே அவற்றின் போதனைகளை தூக்கியெறிந்துவிட்டு வாழும் மக்களைக் காண முடியும். மாமிசம் உண்பது அத்தகைய மதங்களைச் சார்ந்த மக்களுக்கு நல்லதோர் உதாரணமாகும்.

இந்த வகையில், இஸ்லாம் எல்லா மக்களும் ஏற்று வாழத்தக்க, இயற்கையோடு இயைந்த மார்க்கம் என்பது தெளிவு. உண்மையில், அறிவு, ஆராய்ச்சி, புதுப்புதுக் கண்டுபிடிப்புக்கள் என விரிவடைந்து முன்னேற்றப் பாதையில் செல்லும் உலகுக்கு இஸ்லாம் ஓர் அருட்பிரவாகம் என்றுதான் குறிப்பிட வேண்டும். நீங்கள் தனிமையிலிருந்து சிந்தித்தால் இந்த முடிவே உங்களுக்குக் கிடைக்கும்.

இறுதியாக, ஒன்றைப் பசுமையாக உங்கள் உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளும்படி வேண்டி நிற்கின்றேன்.

அதாவது:

● இஸ்லாம் 'மாமிசம் உண்ணலாம்' என்ற
அனுமதியை மட்டுமே தந்துள்ளது. அன்றி,
அதைக் கட்டாயக் கடமையாக்கவில்லை!

இதுவரை எழுதியவற்றின் மூலம்

— மனித சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன!

— அவற்றைத் தீர்த்துக்கொள்ள வழிகாட்டும்
இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் என்ன!

— இஸ்லாத்தின் சில வழிகாட்டல்கள்
தொடர்பாக நிலவும் ஐயங்கள் என்ன!

— அவற்றின் யதார்த்தம் என்ன!

போன்ற பல விடயங்கள் தொடர்பாக நாம் சிற்சில விளக்கங்களைப் பார்த்தோம். இங்கு கூறப்படாத இன்னும் ஏதேனும் ஐயங்கள் உங்கள் உள்ளத்தில் இருக்கலாம். எல்லாவற்றுக்கும் அருமையான, ஆழமான விளக்கங்கள் இஸ்லாத்தில் உண்டு என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். 'நான் இங்கு எடுத்து இயம்பிய விளக்கங்கள்தான் இவை தொடர்பான முடிவான விளக்கங்கள்; இவற்றுக்கு அப்பால் எந்த விளக்கமும் இல்லை' எனவும் நீங்கள் கருதக் கூடாது. என் சிறிய அறிவுக்கு எட்டியவைதான் இவை. இவைகளைத் தனித்தனியாக நீண்ட ஆய்வுகள் செய்து எழுதிய தனித்தனி பெருநூல்கள் ஏராளமாய் உள்ளன. அவற்றைப் படிப்பதன் மூலம் இன்னும் அதிகமான விளக்கங்களை நீங்கள் பெறுவதற்கு முடியும்.

பொதுவாக, இதுவரை பெற்ற விளக்கங்கள் இஸ்லாம் தன்னிகரற்றதொரு மார்க்கம் என்பதற்குப் போதிய சான்றுகளாக இருக்கும் என நம்புகிறேன். தொடர்ந்து இதன் வழியில் சிந்தனையைச் செலுத்துவது உங்களைச் சார்ந்த பொறுப்பாகும்.

## எல்லாத் துறைகளுக்கும் இஸ்லாம்!

இஸ்லாம் ஒரு துறைக்கு மட்டும் வழிகாட்டும் மார்க்கம் அல்ல. நீங்கள் அதிகாலை தூக்கத்திலிருந்து விழிக்கும்போதே இஸ்லாமும் உங்களுக்கு வழிகாட்டத் தயாராகி விடுகின்றது. அதிலிருந்து, தூங்குவதற்கு என நீங்கள் மீண்டும் படுக்கைக்குப் போகும் வரை மட்டுமல்ல, அதற்கப்பால் உள்ள விவகாரங்களிலும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என வழிகாட்ட இஸ்லாம் தவறவில்லை. தனிநபர் வாழ்வு, அரசியல், பொருளாதாரம், குடும்பம், கல்வி, கலாச்சாரம், பண்பாடு . . . . இப்படி அதன் வழிகாட்டல்கள் வரும் துறைகள், மற்றும் அம்சங்கள் விரிவடைந்து செல்கின்றன.

அந்த வழிகாட்டல்களில் உள்ள விசேடம் என்னவெனில், அவை எதுவுமே மனிதனின் இயற்கைக்கு முரணானவை அல்ல என்பதுதான். எனவே அவற்றைப் பின்பற்றுவதில் எவருக்கும் எந்தக் கஷ்டமும் இல்லை; 'பின்பற்றி வாழ்வை சீராக அமைத்துக்கொள்ள வேண்டும்' என்ற மனம்தான் எல்லோருக்கும் தேவை.

அந்த மனம் உங்களுக்கு இருக்கின்றதா?

# இஸ்லாத்தில் இறை நம்பிக்கை

இனி, நாம் இஸ்லாத்தின் நம்பிக்கை சார்ந்த அம்சங்கள் என்ன எனப் பார்ப்போம்.

இஸ்லாத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டிய பிரதான அம்சம் இறைவனைப் பற்றியதாகும். ஒருவர் இஸ்லாத்தின் அருட்கடாட்சங்களைப் பெற்றுச் சுவைத்து, ஈருலக வெகுமதிகளுக்கும் உரித்துடையவர் ஆகவேண்டுமாயின், அவர் 'இறை நம்பிக்கை' எனும் பிரதான நுழைவாயில் ஊடாக இஸ்லாத்தின் பால் பிரவேசிக்க வேண்டும்.

இஸ்லாம் அந்த இறைவனை 'அல்லாஹ்' என்று அறிமுகப்படுத்துவதாக முன்னர் கூறினேன்.

அவனைப்பற்றி அல்குர்ஆன் பல இடங்களில் கீழ்க்காணும் கருத்துக்களுக்கமைய விரிவானதோர் அறிமுகம் தருகின்றது:

— அல்லாஹ் நித்திய ஜீவன்
(என்றென்றும் வாழ்பவன்) (2: 255)
— அவனைத் தவிர
மற்ற அனைத்தும் அழியக்கூடியவையே! (28: 88)

— எவருடைய பார்வையும் அவனை அடையாது;
அவனோ யாவற்றையும் பார்க்கின்றான்! (6: 103)

— அவனைப் போன்று வேறு எதுவும் இல்லை. (42: 11)

— அவன் எவ்வகையிலும் பிறப்பெடுப்பதில்லை.
வேறு ஒரு பொருளுடன் கலந்து விடுவதில்லை;
இணைவதில்லை. (5: 17)

— ஒவ்வொரு பொருளையும் படைத்தவன்;
முழு பிரபஞ்சமும் அவனுடைய படைப்பே! (6: 101)

— அவன் யாரையும் பெறவில்லை;
யாராலும் பெறப்படவுமில்லை. (112: 3)

— பிரபஞ்சம் முழுவதின் ஆட்சியதிகாரம்
நேரடியாக அவனிடத்தே இருக்கிறது. (36: 83)

— வானம், பூமி மற்றும் பிரபஞ்சம் முழுவதையும்
அவனே நிர்வகிக்கின்றான். (32: 5)

— அனைத்துக்கும் உணவளிப்பவன். (37: 5)

— வாழ்வையும் மரணத்தையும் படைத்தவன். (67: 2)

— அவனே வாழ்வை வழங்குகிறான்;
மரணத்தையும் அளிக்கின்றான். (53: 44)

— அனைத்துக்கும் அமைதியும் புகலிடமும் அளிப்பவன். (59: 23)

— மறைந்திருப்பவை, நிகழ்ந்தவை, நிகழக் கூடியவை
அனைத்தையும் அறிந்தவன். (2: 29, 59: 22)

— அனைத்தையும் செவிமடுப்பவன். (6: 13)

— அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவன். (2: 20)

— அனைத்தையும் மிகைத்தவன்;
அவனது தீர்ப்பை யாரும் எதிர்த்திட முடியாது. (59: 23)

— அவன் நுண்ணறிவாளன்; அவனது
எந்தப் பணியும் வீணானவை, இலக்கற்றவை அல்ல! (34: 1)

— அளவிலாக் கருணையுடையவன்;
இணையிலாக் கிருபை உடையவன். (1: 2)

— மிகவும் அன்புடையவன். (2: 207)

— அவனுடைய கருணையும் கிருபையும்
ஒவ்வொரு அணுவையும் சூழ்ந்திருக்கின்றது. (7: 156)

— நீதி செலுத்துபவன்;
மக்களிடம் முழு நீதியுடன் நடந்து கொள்பவன். (10: 4)

— யார் மீதும் அணுவளவும் கொடுமை புரியாதவன். (50: 29)

— அவனுடைய கட்டளைகள் அனைத்தும்
நீதியின் அடிப்படையிலானவை. (6: 115)

— அவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்பவரைப்
பழிவாங்குபவன். (3: 4)

— மன்னிப்புக் கோருபவருக்கு மன்னிப்பு அளிப்பவன். (85: 14)

— பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்பவன். (110: 3)

— நன்மைகளைப் பெரிதும் மதிப்பவன். (64: 17)

— தான் நாடியதைச் செய்யக் கூடியவன். (55: 16)

— பேசுகிறவன். (2: 253)

— தான் விரும்பும் வகையில் செயல்படுபவன். (3: 40)

— அவன் நாடுவது உண்டாகும்; அவன் நாட்டமின்றி
எதுவும் தாமாகவே நடப்பதில்லை. (76: 30)

— தன்னிறைவுடையவன்;
யாருடைய தேவையுமற்றவன்;அவனுக்குத் தேவையானது
எதுவுமில்லை. (35: 15)

— தனக்குத்தானே பெருமைக்குரியவன்;
மிகவும் சிறப்புடையவன்; கண்ணியமானவன். (11: 73)

— எந்த ஒரு குறையையும் விட்டுத் தூய்மையானவன்.
எல்லா சிறப்பு அம்சங்களும் கொண்டவன்.
அந்த உன்னத அந்தஸ்தை விட்டுத் தாழ்மையான அல்லது
அதற்கு முரணான எந்தத் தன்மையும் அவனிடம் இல்லை. (59: 23)

— ஒவ்வொரு தகுதியிலும் இணையற்றவன்.
அவனுடன் எதையும் ஒப்பிட முடியாது. (42: 11)

— வானம், பூமியில் நிகழும் எதுவொன்றையும் வைத்து
அவனது எதார்த்த நிலையை யூகிக்க முடியாது. (30: 26)

— வணக்கத்திற்குரியவன் அவன் ஒருவனே! (2: 163)

— பிரபஞ்சம் முழுவதும்
அவனுடைய மகிமையே படிந்திருக்கிறது. (45: 37)

— அவனைத் தவிர வேறு எவரிடமும்
இம்மியளவும் மேன்மையோ
வணங்கப்படுவதற்குரிய தன்மையோ இல்லை.
அவன் எதிரில் எல்லோரும் இயலாதவர்கள்; மேலும்
அவனது கட்டளைக்குக் கட்டுப்பட்டவர்கள்;
அவனது அடிமைகள்!

— அவனுடைய ஆட்சியதிகாரத்தில்
பங்கு கொள்ளும் அளவுக்கு
அவனுடைய அடியார்களில் யாருக்கும் தகுதியில்லை. (18:26)

மேற்காணும் அல்குர்ஆனின் அறிமுகம் மூலம் நீங்கள் அல்லாஹ்வைப் பற்றிய சில விளக்கங்களைப் பெறுவீர்கள்.* இவ்விளங்கங்களிலிருந்து இறைவனைப் பற்றிய இஸ்லாமியக் கருத்துக்கும், ஏனைய மதங்களில் நிலவும் கருத்துக்களுக்கும் இடையே எத்தகைய பாரிய வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

---

* அல்லாஹ்வைப் பற்றி முழுமையானதொரு விளக்கத்தைப் பெற நீங்கள் அல்குர்ஆனை முழுமையாகப் படிக்க வேண்டும். தமிழ்நாடு, இஸ்லாமிய நிறுவனம் வெளியிட்டுள்ள மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களின் மொழியாக்கமும் விளக்கக் குறிப்புகளும் அடங்கிய ‘திருக்குர்ஆன்’ பாகம் 1, பாகம் 2 ஆகியவற்றின் அட்டவணையில் ‘அல்லாஹ்’ என்ற தலைப்பில் உள்ள விடயங்களை அனுசரித்து குர்ஆனைப் படிக்கவும். அதிக விளக்கங்கள் பெற்றுக் கொள்வீர்கள், இன்ஷா அல்லாஹ்.

## பல தெய்வ வழிபாடு .....

"அல்லாஹ் ஒருவனே; அவனன்றி வேறு இறைவன் இல்லை" என்ற கருத்தை வழங்கும் இஸ்லாத்தில் பல தெய்வ நம்பிக்கைக்கு இம்மியளவும் இடமில்லை. அத்தகைய நம்பிக்கைக்குரிய அனைத்து வாயில்களையும் மூடி விட்ட இஸ்லாத்தில்

நம்பிக்கையிலும் நடைமுறையிலும்
சொல்லிலும் செயலிலும்
வணக்கத்திலும் வழிபாடுகளிலும்

பலதெய்வம் என்பதன் வாடைகூட வீசுவது இல்லை. மற்ற மதங்களில் ஆளுக்கொரு தெய்வம் இருப்பதை நீங்கள் காணலாம்; ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு தெய்வங்களைக் கும்பிடுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால், உலகின் ஒரு கோணத்திலிருந்து மறு கோணம் வரை வாழும் முஸ்லிம்கள் நம்பிக்கையில் இடம்பெற்றுள்ள ஒரே இறைவன் அல்லாஹ் மட்டுமே.

ஆங்கிலத்தில் 'கோட்' (God) என்பார்கள். அந்தச் சொல்லுக்கு 'கோட்ஸ்' (Gods) என்ற பன்மைச் சொல் உண்டு!

தமிழில் 'இறைவன்', 'தெய்வம்', 'கடவுள்' என்ற சொற்களுக்கு முறையே 'இறைவர்கள்', 'தெய்வங்கள்', 'கடவுளர்' என்ற பன்மைச் சொற்கள் உள்ளன. இப்படி, மற்றைய மொழிகளிலும் இறைவனைக் குறித்துக் காட்டும் பெயரிலேயே பன்மைக்கு - 'ஒன்றுக்கு மேல்' - என்ற கருத்துக்கு இடமுண்டு.

ஆனால், 'அல்லாஹ்' என்ற சொல்லுக்குப் பன்மைச் சொல்லொன்று இல்லை. உண்மையில், 'அல்லாஹ்' என்ற சொல்லே தன்னில் பங்காளி ஒருவரைச் சேர்த்துக் கொள்ளாது தனித்து நிற்கின்றது. இதிலிருந்து இஸ்லாம் கூறும் ஏகத்துவம், 'இறைவன் ஒருவன்' என்ற கருத்து அவனது பெயரிலேயே அமைந்து விட்டதை நீங்கள் அவதானிக்கலாம்.

குடும்பம், கல்விக்கூடம், காரியாலயம், அரசு போன்ற பலவற்றின் நிர்வாகம் சீராக இருக்க வேண்டுமாயின் அவற்றின் அதிகாரம் ஒருவர் கையில் இருக்க வேண்டும் என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். மாறாக, பலர் அல்ல, சம அதிகாரம் உள்ள இருவர் மட்டும் இருந்தாலே அவற்றின் ஒழுங்கு சீர்குலைந்து விடும்; கட்டுப்பாடு இல்லாது போய்விடும்; நற்பயன்களுக்கு மாறாக தீய பயன்களே கிட்டும்.

இது இப்படியாயின், இவ்வளவு பிரமாண்டமான பிரபஞ்சத்திற்கும், இதிலுள்ள எண்ணிலடங்காப் படைப்புக்களுக்கும், அவற்றைப் பரிபாலித்து, போஷித்து, பாதுகாத்து, ஒழுங்காக இயங்கச் செய்யும் இறைவர்கள் பலர் அல்லது இருவராவது இருக்க முடியுமா? அப்படி இருந்தால் இப்பிரபஞ்சம் சீராக, ஓர் ஒழுங்கின்படி இயங்க முடியுமா? நிச்சயமாக அப்படியில்லை

என்றும், இப்பிரபஞ்சத்தை ஒழுங்காக இயக்கும் இறைவன் ஒருவன்தான் என்றும் உங்கள் அறிவு சான்று பகரும் என்பதில் ஐயமில்லை.

இந்த வகையில் இஸ்லாத்தின் இறைக்கருத்து எவ்வளவு இயற்கையாகவும் சிறப்பாகவும் இருக்கின்றது என்பதைப் பார்த்தீர்களா?

## அவதாரம் எடுத்தல்

சில மதங்களில் இறைவன் மனித அவதாரம் எடுத்து வருவதாகக் கூறப் படுகின்றது. இக்கருத்து இஸ்லாமிய இறைக் கருத்துக்கு நேர் எதிரானதாகும்.

அல்லாஹ், ஒருபோதும் ஒரு மனிதராகவோ அல்லது வேறு ஏதாவது உயிரினமாகவோ அவதாரம் எடுத்து வருவது இல்லை. காரணம், அவன் அழிவே இல்லாதவன். ஏனைய எல்லாமே அழியக் கூடியன. மனிதனும் மற்றைய உயிரினங்களும் பிறந்து இறந்து விடுவன. மற்ற இயற்கைப் படைப்புக்களும் என்றோ அழியக் கூடியன. எனவே, அழியக்கூடியவை மூலமாக அழிவே இல்லாதவன் அவதாரம் எடுத்துத் தோற்றம் தருகின்றான் எனக் கூறுவதும் நம்புவதும் இறைவனைக் கேளி செய்வது போன்ற செயலாகும்.

சிலவேளை, அப்படி யாராவது நம்புவதாக வைத்துக் கொள்வோம். அவரிடம் நாம் இப்படி சில விளக்கங்களைக் கேட்கலாம்.

மனிதன் மற்றும் உயிரினங்களுக்கு பிறப்பு, பசி, தாகம், நோய், தூக்கம், சோர்வு, மலசலம் கழித்தல், பாலுணர்வு, இறப்பு போன்ற இன்னோரன்ன பலயீனங்கள் உள்ளன. இத்தகைய மனிதனாகவோ, மற்றொரு உயிராகவோ இறைவன் அவதாரம் எடுத்து வருகிறான் என்றால், இந்த எல்லாவிதமான பலயீனங்களும் அந்த இறைவனுக்கும் இருப்பதாக நம்ப முடியுமா?

இறை அவதாரப் புருஷர்கள் எனப் போற்றப்பட்ட எத்தனையோ பேர் செத்து மண்ணோடு மண்ணாகிப் போய்விட்டனர். அப்படியாயின் இறைவன் செத்து விட்டான் எனக் கொள்ள முடியுமா?

இஸ்லாம் இந்தக் கருத்தை அடியோடு ஏற்பதில்லை. அல்லாஹ் அவனில் அவனாக இருக்கின்றான். அன்றி, அவனது படைப்புக்கள் எதுவாகவும் ஆகி விடுவதில்லை.

## கற்பனைக்கு எட்டாதவன்!

மனிதனுக்குக் 'கற்பனா சக்தி' என்றொன்றை அல்லாஹ் வழங்கியுள் ளான். அந்தக் கற்பனா சக்தி எல்லோருக்கும் ஒரேவிதமாக அமைவது இல்லை. ஒவ்வொருவரதும் அறிவு, அனுபவம், திறமை, ஆர்வம் என்பவற்றுக்கமைய அது வித்தியாசப்படும். அத்தகையவர்களுள் ஆன்மிக ஆர்வம் மேலிட்டு அதில் அதிக

ஈடுபாடு கொண்ட பல மதத்தைச் சேர்ந்தவர்கள் இறைவனைப் பற்றிய கற்பனையில் ஈடுபடலாயினர். அத்தகைய ஈடுபாடுகள் மூலமே விதவிதமான விக்கிரகங்கள் தோற்றம் பெற்றன.

இஸ்லாம், இத்தகைய கற்பனைகள் மூலம் 'இறைவன் இப்படித்தான் இருப்பான்!' என்று நிர்ணயிப்பதை ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில், கற்பனை என்பது நிலையானது அல்ல; அத்துடன் அது வேறு சில இயல்பு களின் துணையின்றி இயங்கவும் முடியாது; அந்த இயல்புகளும் - அதாவது அறிவு, அனுபவம், திறமை, ஆர்வம் என்பன ஒருபோதும் முழுமையாக இருப் பது இல்லை. அவை மனிதன் தோன்றிய காலந்தொட்டு, அவ்வக்காலத் தேவை கள் சூழல்களைப் பொறுத்து இயங்கி, வளர்ந்து வருபவையே!

எனவே, நிலையில்லா இவற்றைக் கொண்டு நிலையான ஒருவனை - அல்லாஹ்வை - கற்பனை செய்து 'இப்படித்தான் இருப்பான்' என நிர்ணயிப் பது சாத்தியமற்றதே. அந்த வகையில் அவன் பேரில் விக்கிரகம் வடிப்பதும், சித்திரம் வரைவதும் பிழையானதே; பாப காரியமே!

## மனைவியும் மக்களும் . . . !

இறைவன் எல்லா வகையான தேவைகளிலிருந்தும் விடுபட்டவன்; தூய்மையானவன் என்பதை யாரும் மறுப்பது இல்லை. என்றாலும் அறிந்தோ அறியாமலோ அந்த இறைவனின் தூய்மைக்கு மாசு கற்பிக்கும் வேலை சில மதங்களில் நடைபெற்றுள்ளது. அதாவது, 'இறைவனுக்கு மனைவி உண்டு; மக்கள் இருக்கிறார்கள்' என்ற கருத்து உருவாக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக:

— பரமசிவனுக்குப் பார்வதி மனைவியாகவும்
வினாயகர், முருகர் இருவரும் பிள்ளைகளாகவும்
இருப்பதாக இந்து மதத்தில் கூறப்படுகிறது!

— இயேசு நாதர் இறைவனின் குமாரன் என்று
கிறிஸ்தவ மதம் கூறுகின்றது!

இஸ்லாம் இறைவனைப் பற்றி இத்தகைய முறைகேடான கருத்துக் களைக் கூறவில்லை. மாறாக, 'அவன் மிகத் தூய்மையானவன்; எவரது எந்தத் தேவையுமற்றவன்; எவருக்கும் பிறக்கவில்லை; எவரையும் மனைவியாகக் கொள்ளவில்லை; எவரையும் பெறவும் இல்லை' என்பதை எத்தகைய சிறு ஐயத்துக்கும் இடமளிக்காது கூறிவிட்டது.

● அல்லாஹ்
"யாரையும் பெறவில்லை;
யாராலும் பெறப்படவுமில்லை!" (அல்குர்ஆன் 112: 3)

என்பதுதான் இது தொடர்பான இஸ்லாத்தின் தெளிவான கருத்தாகும். இது பற்றி நீங்கள் சிந்தித்தால் 'இது எத்தகைய உயர்வான கருத்து' என்பதை நன்கு விளங்கிக் கொள்வீர்கள்.

## எல்லாவற்றையும் சூழ்ந்து நிற்கின்றான்!

அல்லாஹ்வைப் பற்றிய நம்பிக்கையை துறைகள் வாரியாகவோ, இம்மை - மறுமை என்றோ பிரித்து நோக்குவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. 'வணங்குவதற்குத்தான் அல்லாஹ்; வாழ்வது எப்படியும் எக்கொள்கைப்படியும் இருக்கலாம்' என்ற கருத்தை இஸ்லாம் முழுமையாக நிராகரிக்கின்றது.

அல்லாஹ் அண்ட சராசரத்தையும், அதனுள் அடங்கப் பெற்றவற்றையும், எல்லாக் காலங்களையும், எல்லாச் சூழல்களையும், எல்லா உயிரினங்களையும், எல்லாப் பொருட்களையும் - ஆக அணு முதல் அண்டம் வரையிலான அனைத்தையும் சூழ்ந்து நிற்கின்றான். இதன் கருத்து, 'அவன் எல்லாப் பொருட்களாகவும் இருக்கின்றான்' என்பது அல்ல; எல்லாப் பொருட்களிலும் அவனது தன்னிகரற்ற அதிகாரம் உண்டு என்பதாகும். அவன் வைத்த நியதிக்கு மாறாகவோ, ஏற்பாட்டுக்கு எதிராகவோ எவரும் எதுவும் செய்துவிட முடியாது.

## இறைவனை நாட . . . .

சில மதங்களில் இறைவனை நாடுவதற்கும், அவனிடம் தேவைகளைக் கேட்டுப் பெறுவதற்கும் குட்டி தெய்வங்களை வைத்துக் கொண்டுள்ளார்கள்; இறந்தவர்களின் அடக்கத்தலங்களை நாடுகிறார்கள்; சிலைகளுக்கு பல வகையான நைவேத்தியங்களை வைக்கிறார்கள். அதற்கு அவர்கள் கூறுவதெல்லாம், "நாம் வல்லமை பொருந்திய இறைவனை நேராக நாட முடியாது; எனவே, அவனுக்கு நெருக்கமானவர்கள் ஊடாகவே நாடுவது தான் அதிக பயன்களைப் பெற சிறந்த வழி" என்பதாகும்.

இஸ்லாம் இக்கருத்தை ஏற்பதில்லை. காரணம் இஸ்லாத்தில் குருத்துவ அமைப்பு இல்லை; அல்லாஹ்வுக்கும் அவனது அடியானுக்கும் இடையில் ஒரு தரகர் முறையை ஏற்படுத்தி வைக்கவில்லை; மாண்டவர்களின் அடக்கத்தலங்களில் போய் முறையிடுவதையோ, அவர்களுக்கு நைவேத்தியங்கள் வைத்து அவர்கள் ஊடாக அல்லாஹ்வை நாடுவதையோ அங்கீகரிக்கவில்லை.

அல்லாஹ், தன்னிடம் இப்படிப் பிரார்த்தனை புரியும்படி நமக்குக் கற்றுத்தருகின்றான்:

● "(யா அல்லாஹ்!) உனக்கே நாங்கள் அடிபணிகிறோம்.
மேலும் உன்னிடமே நாங்கள் உதவி கேட்கிறோம்."[104]

---

104. அல்குர்ஆன் 1: 4

மேலும் அவன் கூறுகிறான்:

● "நாம் மனிதனைப் படைத்தோம்.
அவனது உள்ளத்தில் எழுகின்ற
ஊசலாட்டங்களைக் கூட நாம் அறிகின்றோம்.
அவனது பிடரி நரம்பை விடவும் அதிகமாக
நாம் அவனிடம் நெருக்கமாய் இருக்கின்றோம்."[105]

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

"உங்கள் செருப்பின் வார் அறுந்தாலும்
அல்லாஹ்விடம் கேளுங்கள்"[106]

இவற்றிலிருந்து எதையும் நேரடியாக அல்லாஹ்விடம் கேட்க வேண்டும் என்பதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது என்பதைப் பார்க்கின்றோம். இது ஒரு வகையில் மனிதனுக்குத் தரப்பட்ட கௌரவம் என்று நாம் கருத வேண்டும்.

மனிதன் எல்லாக் காலங்களிலும், மற்றொரு மனிதனுக்கோ, இயற்கை சக்திகளுக்கோ, அல்லது பணம், பொருள், அற்புதங்கள் என்பனவற்றுக்கோ அடிமைப்பட்டு வாழ்ந்து வந்திருக்கின்றான். அதன் விளைவாக, அவன் அவற்றிடம் நேரடியாகவே தன் பிரார்த்தனைகளைச் சமர்ப்பித்தான். அல்லது அவற்றின் ஊடாக இறைவனிடம் பிரார்த்தனைப் புரியும் வழிமுறையைக் கைக்கொண்டான்.

இஸ்லாம் இந்த வழிமுறைகளைத் தகர்த்தெறிந்துவிட்டு அனைவரும் தம் தேவைகளுக்காக அல்லாஹ்வை நேரடியாக பிரார்த்திக்கும்படி செய்து விட்டது; இதன் மூலம் மனிதன் தன்னைப் படைத்த அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே அடிமை என்ற உணர்வை ஏற்படுத்தி வைத்ததுடன் அவனுக்கு சுய கௌரவத்தையும் வழங்கியது.

இதுவரை எடுத்துவைத்த கருத்துக்களிலிருந்து

— அல்லாஹ் ஒருவன்.
— அவனுக்கு இணை இல்லை.
— அவனே வணக்கத்திற்கு உரியவன்.
— அவனன்றி வேறு யாருக்கும்
நைவேத்தியங்கள் வைக்கக் கூடாது.
— அவனிடமின்றி வேறு எவரிடமும்
கையேந்திப் பிரார்த்தனை புரியக் கூடாது
— ஒட்டு மொத்தமாக
மனிதனின் முழுமையான அடிபணிதல்
அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே என்றிருக்க வேண்டும்.

என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

105. அல்குர்ஆன் 50:16 106. ஆதாரம்: புகாரி

அல்லாஹ்வின் மீது இந்த வகையான அடிமைத்தனமும், கீழ்ப்படிதலும், கட்டுப்பட்டு செயலாற்றும் தன்மையும் வராத வரையில் ஒருவன் தன்னை முஸ்லிம் எனக் கூறிக்கொள்ள முடியாது.

## இறைவன் இருக்கின்றான்!

சில ஒழுக்கக் கோட்பாடுகளை மட்டும் கொண்ட மதங்களும் நவீன கொள்கைகளும் 'இறைவன் உண்டா?' என்ற வேண்டாத வினாவை எழுப்பி, மக்களைத் தவறான வழிகளில் இட்டுச் செல்கின்றன. அவற்றின் இந்தக் கெடுமதிமிக்க போதனைகளால் ஆவது ஒன்றுமில்லை - மக்கள் கெட்டுக் குட்டிச் சுவராவதைத் தவிர!

'இறைவன் இருக்கின்றான்' என்பதற்கு இப்பிரபஞ்சமும், இதன் அமைப்பும், இவ்வமைப்புக்கு உட்பட்ட ஏனைய படைப்புக்களின் இயக்கத் தன்மையும், மேற்காணும் வகையில் வினா விடுப்பவர்களது உடலமைப்பும், அதன் அற்புதமான செயற்பாடும் போதிய ஆதாரங்களாகின்றன. அறிவின்மை எனும் பூட்டுக்களை உடைத்தெறிந்து, சிந்தனைக் கதவுகளைத் திறந்துவிட்டால் இந்த உண்மை வெளிச்சத்திற்கு வரும்.

எதற்கும் ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்:

ஒரு மாமரத்தின் மறைந்த மறுபக்கம் ....

ஒரு வித்திலிருந்து அது தனது பயணத்தை ஆரம்பிக்கின்றது.

பூமியில் ஊன்றப்பட்ட அவ்வித்து வேறு பல இயற்கைச் சக்திகளின் துணையுடன் பிரசவமொன்றுக்குத் தயாராகின்றது. சில நாட்கள் செல்கின்றன. ஒருநாள் அதிலிருந்து சின்னஞ்சிறிய செடியொன்று பிரசவித்து - முளைத்து - உலகை எட்டிப் பார்க்கின்றது. பிறகு, அது மெதுமெதுவாக வளர்ந்து கிளைகளும் இலைகளும் நிறைந்த பூரண மரமாகின்றது.

அதன் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் கனி தரும் பருவத்தை அடைகின்றது. அப்பொழுது மரமெங்கும் இலைகளுக்கிடையில் அரும்புகள் தோற்றம் தருகின்றன. அவை பின்னர் மொட்டாகி, மலராகி, காய்கள் தோன்றி, அதிலும் படிமுறையான வளர்ச்சிகள் கண்டு, கனியாகி மனிதர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் சுவைத்துண்ணக் கொடுப்பதற்குத் தயாராகி விடுகின்றது.

எனினும், அந்த மாமரத்தின் வளர்ச்சி நிற்கவில்லை; தொடர்கிறது. கனி தரும் பணியும் அதற்குரிய காலங்களில் நடைபெறுகின்றது. குறிப்பிட்ட ஒரு எல்லைக்காலம் வந்ததும் அதன் வளர்ச்சி நின்று தளர்ச்சி ஏற்படுகின்றது. ஆனால், கனி தரும் உயரிய பணி மட்டும் நிற்கவில்லை. அது அதன் தளர்ச்சிக்குத் தக்கவாறு படிப்படியாகக் குறைந்துகொண்டு போகின்றது.

இப்படியான இதன் பயணத்தில் ....

ஒருநாள், பாரிய பணியொன்றை நிறைவுசெய்த திருப்தியுடன் அந்த மாமரம் பட்டுப் போகின்றது; செத்து விடுகின்றது!

அந்த மாமரத்தின் இந்த வாழ்க்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?

— அந்த மாவிதையின் அமைப்பு
— அதிலிருந்து முளைத்த செடியின் தோற்றம்
— ஏனைய இயற்கை வளங்களான
பூமி, நீர், காற்று, வெப்பம் போன்றவற்றின் ஒத்துழைப்பு
— அதன் உரிய பருவத்தில் நடைபெறும்
கனி தரும் பணி
— குறித்த காலம் வந்ததும் - பணி முடிந்ததும் -
பட்டுப் போனமை

போன்ற யாவுமே தாமாக நடந்தனவா? இதை இந்த அமைப்பில் இயக்குபவன் - இறைவன் - என்றொருவன் இல்லையா? இந்த மாமரத்தின் வளரும் முறை, ஒழுங்கு, கனி கொடுக்கும் பருவம் போன்றவற்றை நேருக்கு நேர் பார்க்கும் நீங்கள், "இவற்றை ஒழுங்குற நடத்தி வைப்பவன் எவனும் இல்லை!" என்று யாரோ கூறுவதை நம்புவீர்களா? அத்துடன், உங்கள் உள்ளம் அவ்வாறு நம்புவதில் ஒத்து வருகிறது என நீங்கள் உணர்கின்றீர்களா?

மேலும், மாமரத்தின் அமைப்பில் பாரிய வித்தியாசம் எதுவுமே தெரிவதற்கில்லை. ஆனால்,

— எத்தனை வகையான ரகங்கள்!
— எத்தனை விதவிதமான வடிவங்கள்!
— எவ்வளவு வித்தியாசமான, மதுரமான சுவைகள்!

இத்தனை ஏற்பாடுகளையும் செய்து, பல வகையான, பல்வேறு சுவை யுடைய மாம்பழங்களை வழங்க வேண்டும் என்று அந்த மாமரமே நினைத்துக் கொண்டதா?

"இல்லை!" என்பதுதான் இறைமறுப்பாளர் ஒருவரின் பதிலென்றால், "இத்தனை ஏற்பாடுகளையும் செய்தவன் யார்?" என நாம் அவரிடம் கேட்கலாம்.

"எதுவும் இல்லை. எல்லாம் இயற்கை!" என்பதுதான் அவரது பதில் என்றால்:

"அந்த இயற்கையை, ஒழுங்கமைப்பைத் தனது அதிகாரத்தில் வைத்து இயக்கும் சக்தி எது?" என்ற மற்றொரு வினா எழுவதை அந்த மனிதன் தடுத்து, தட்டிக் கழித்துவிட முடியாது.

அதற்கான இஸ்லாத்தின் விடை இதுதான்:

- ஆழமான ஞானமும், நிகரில்லா பேராற்றலும் கொண்டு
  அம்மாமரத்தை மட்டுமல்ல,
  அகிலத்தையே ஓர் ஒழுங்கின்படி
  நடத்திச் செல்லும் அச்சக்தியின் பெயர்
  'அல்லாஹ்' என்பதாகும்!

அந்த அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வது இஸ்லாம் வேண்டி நிற்கின்ற பிரதான அம்சமாகும். இதுதான் இஸ்லாத்தின் ஆணிவேர். இந்த நம்பிக்கை இல்லாத எவரும் ஒருபோதும் முஸ்லிமாகிவிட முடியாது.

உண்மையில், 'முஸ்லிம்' என்பது ஓர் இனத்தினது பெயரல்ல; ஒரு சாதியினது அல்லது ஒரு நாட்டவரது பெயரும் அல்ல. எவர்கள் அல்லாஹ்வை முழுமையாக நம்பி, அவனுக்கு வணக்க வழிபாடுகள் செய்து, அவன் கட்டளையிட்டபடி வாழ்கின்றனரோ அவர்களுக்குரிய பெயராகும். அவர்கள் எந்த நாட்டை, சமூகத்தை, இனத்தை, சாதியைச் சேர்ந்தவர்களாயினும் சரியே.

ஒரு நபித்தோழர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! வேறு எவரிடமுமன்றி உங்களிடம் மட்டும் தெரிந்துகொள்ளக் கூடியவாறு இஸ்லாத்தைப் பற்றி ஏதாவது சொல்லுங்கள்" என்றார்.

அதற்கு பதிலளித்த நபி (ஸல்) அவர்கள்,

- "நான் அல்லாஹ்வை நம்புகிறேன்
  என்று மொழிந்து, பின்னர்
  அதில் உறுதியாக நிலைத்து நில்லுங்கள்" என்றார்கள் [107]

இறை தூதர் (ஸல்) அவர்களது இந்தப் பதிலிலிருந்து இஸ்லாத்தில் இறை நம்பிக்கை எந்த அளவு முக்கியமானது எனப் புரிந்து கொள்ளலாம். உண்மையில், இறைநம்பிக்கை இல்லாதவிடத்து இஸ்லாமேயில்லை என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறை நம்பிக்கையைத் தொடர்ந்து நம்பிக்கை கொள்ள வேண்டிய ஏனைய அம்சங்களாவன:

— வானவர்கள்
— வேதங்கள்
— இறை தூதர்கள்
— மறுமைத் தினம்
— விதி எனும் இறை நிர்ணயம்

என்று விரிவடைந்து செல்லும். இவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளங்கிக் கொள்வது பயனுடையதே.

---

*107. ஆதாரம்: முஸ்லிம்.*

## வானவர்கள்!

அல்லாஹ்வின் படைப்பினமான இவர்களை நம்புவது இஸ்லாத்தில் இரண்டாவது அம்சமாகும். இவர்களை அரபு மொழியில் 'மலாஇகா' எனக் கூறப்படும். கண்களுக்குப் புலப்படாத இவர்களுக்கு அல்லாஹ்வின் இறைமையில் எத்தகைய பங்கும் கிடையாது. அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றும் பொறுப்புடைய இவர்களும் அவனது அடிமைகளேயாவர். இவர்களால் அல்லாஹ்வுக்கு எதிராகச் செயற்பட முடியாது; பாப காரியங் களில் ஈடுபடவும் முடியாது.

இவர்களுள் பிரதானமானவர் பெயர் ஜிப்ரீல் (அலை) என்பதாகும். இவரது பொறுப்பு இறை செய்தியை இறை தூதர்கள் வசம் கொண்டு வந்து ஒப்புவிப்பதாகும். இவர்களையடுத்து இன்னும் பல முக்கியமான வானவர்கள் உளர். இவர்களின் எண்ணிக்கையை அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே.

"கண்களுக்குப் புலப்படாத இந்த மலாஇகாமார்களை எப்படி நம்புவது - நாம்தான் காணவில்லையே!" என நீங்கள் கேட்கலாம். எனினும், முக்கியமான இரண்டு அடிப்படைகளில் இக்கேள்வி அவசியமற்றதாகி விடுகின்றது என நினைக்கின்றேன்.

1. மனிதன் கற்காலத்திலிருந்து எத்தனையோ இயற்கையான அம்சங்களை நம்பி வந்துள்ளான்; இன்றும் நம்புகின்றான். அவற்றுள் பலவற்றை அவன் கண்ணால் பார்க்கவில்லை; காதால் கேட்கவில்லை; மூக்கால் நுகரவில்லை; கைகளால் தொட்டுப் பார்க்கவும் இல்லை. எனினும், அவற்றை நம்பினான்; நம்புகிறான். காரணம், அவற்றைப் பற்றிய அறிவுள்ளவர்கள் நம்பும்படி மொழிந்ததுதான்.

2. "மலாஇகாமார்கள் என்றொரு படைப்பினர் இருக்கின்றனர்; நம்புங்கள்" என்று மொழிந்தது முதலில் அல்லாஹ்வும், அப்பால் அவனது தூதர்களுமாகும்.

அல்லாஹ்வோ அவனுடைய தூதர்களோ ஒருபோதும் பொய்யுரைப் பவர்கள் அல்லர். எனவே, ஒரு முஸ்லிம் எத்தகைய வினாவும் எழுப்பாது வானவர்கள் மீது நம்பிக்கை கொள்வான் என்பதில் ஐயமில்லை.

## வேதங்கள்

அல்லாஹ், உலகில் வாழ்ந்த எல்லா மனிதர்களுக்கும் பல்வேறு காலகட் டங்களில் தனது வழிகாட்டல்கள் அடங்கிய வேதங்களை அருளியிருக்கின் றான். அவற்றில் சில வேதங்களின் பெயர்கள் மட்டுமே நமக்கு அறிவிக்கப் பட்டுள்ளன.

அவையாவன:

— நபி மூஸா (அலை) அவர்களுக்கு
அருளப்பட்ட 'தௌராத்'

— நபி தாவூத் (அலை) அவர்களுக்கு
அருளப்பட்ட 'ஸபூர்'

— நபி ஈஸா (அலை) அவர்களுக்கு
அருளப்பட்ட 'இன்ஜீல்'

— நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு
அருளப்பட்ட 'அல்குர்ஆன்'

இவற்றைத் தவிர, இன்றுள்ள பல மதங்களின் வேதக் கிரந்தங்கள் அல்லாஹ்வால் அருளப்பட்டவையா இல்லையா என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கூற முடியாது. எனவே, ஒரு முஸ்லிம் பெயரறிந்து மேற்கூறப்பட்ட வேதங்களையும் மற்றவற்றைப் பொதுவாகவும் அல்லாஹ் அருளியவை என நம்புவது இஸ்லாமிய நம்பிக்கை சார்ந்த மூன்றாவது அம்சமாகும்.

அல்லாஹ் அருளிய அனைத்து வேதங்களிலும் இறுதியானது அல்குர்ஆனாகும். இதில் முந்திய எல்லா வேதங்களினதும் போதனைகளின் சாராம்சம் அடங்கப் பெற்றுள்ளது. எனவே, எவரொருவர் அல்குர்ஆனைத் தன் வேத நூலாக ஏற்றுப் பின்பற்றுகின்றாரோ அவர் அதற்கு முந்திய வேத நூல்களையும் ஏற்றவர் ஆகின்றார். இதன்படி முன்னைய வேதங்கள் நம்பிக்கைக்கு மட்டும் உரியனவாகும் பொழுது, அல்குர்ஆன் நம்பிக்கைக்கும் நடைமுறை வாழ்வில் பின்பற்றுவதற்கும் உரியதாக அமைந்துவிடுகின்றது.

"அல்குர்ஆனுக்கு முந்திய வேதங்கள் சத்தியமானவையாயின் மற்றொரு புதிய வேதத்தின் - அல்குர்ஆனின் - அவசியம் என்ன?" என யாரேனும் கேட்க முடியும்.

உண்மையில், அவ்வேதங்கள் அருளப்பட்ட ஆரம்ப நிலையில் சத்தியமானவையாகவே இருந்தன. அந்த நிலையில் அவற்றைத் திரிபுபடுத்தாது பின்பற்றியவர்களும் இறையன்புக்குரிய தூயவர்களே. எனினும், காலம் செல்லச்செல்ல அவற்றை ஏற்றுக்கொண்ட மக்களே அவற்றின் அசல் வடிவத்தைக் கெடுத்துவிட்டார்கள். அவற்றிலிருந்த இறை கருத்துக்களுடன் தம் கருத்துக்களையும் கலந்து விட்டார்கள். மேலும், பல திருத்தங்கள், கூட்டல் குறைத்தல்கள், நீக்கல்களும் செய்து விட்டார்கள். இறுதியில் அசல்கள் இடத்தில் நகல்கள் அமர்ந்து கொண்டன.*

---

* பைபிள் எத்தகைய திரிபுகளுக்கு ஆளாகியுள்ளது என்பதை விளங்கிக் கொள்ள கீழ்க்காணும் நூல்களைப் படிக்கவும்.

1. 'Let the Bible speak' written by abdul Rahman Dimashkiah
2. 'Christian - Muslim Dialogue', written by Dr. H. M. Bagil M. D.

மேலும், முந்திய வேதங்கள் குறிப்பிட்டதொரு சமூகத்திற்கு, குறிப்பிட்டதொரு காலத்தின் தேவையையும் அந்த வகையிலான போதனைகளையும் கொண்டு அருளப்பட்டவையாகும். அன்றி, அவை எதுவுமே முழு உலகத்துக்கும் உரிய பொது வேதங்களாக அருளப்படவில்லை.

இந்த இரண்டு காரணிகளை அடியொட்டி அல் குர்ஆன் அருளப்பட்டதாகக் கொள்ளலாம். அல்குர்ஆன் முழு உலகுக்கும் எல்லா மக்களுக்குமான இறுதி வேதமாகும். இதன்பின் வேறு வேதங்கள் என்றுமே அருளப்பட மாட்டாது.**

"அப்படியாயின் முன்னைய வேதங்களுக்கு ஏற்பட்ட அதே கதி அல்குர்ஆனுக்கும் ஏற்படாதா? மக்கள் இதில் தம் கைவரிசையைக் காட்ட மாட்டார்களா?" என மீண்டும் வினவப்படலாம்.

இது ஒருபோதும் நடவாது. அல்குர்ஆன் அருளப்பட்ட காலந்தொட்டு இன்று வரை இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் தோல்வியுற்று குர்ஆனின் எதிரில் மண்டியிட்டதையே கேட்கின்றோம். குறிப்பாக, அல்குர்ஆனுக்கு எவரும் எத்தகைய தீங்கும் செய்ய முடியாமல் இருப்பதற்குக் காரணம் இதைப் பாதுகாக்கும் பொறுப்பை இதை அருளிய அல்லாஹ்வே ஏற்றிருப்பதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

● "திண்ணமாக
இந்த நல்லுரையை நாம்தான் இறக்கி வைத்தோம்.
மேலும் நாமே இதனைப்
பாதுகாப்போராகவும் இருப்போம்"[108]

# இறை தூதர்கள்!

அல்லாஹ் மனிதரை நல்வழிப்படுத்த பல வேதங்களை அருளினான் என மேலே பார்த்தோம். அத்துடன் அவன், "நீங்கள் எப்படியும் இந்த வேதங்களைப் புரிந்து, எப்படி வேண்டுமானாலும் பின்பற்றுங்கள்" என்று மனிதரை நட்டாற்றில் விடவில்லை. மாறாக, இவ்வேதங்களைத் தெளிவாகப் புரிந்து, அவற்றுக்கேற்ப வாழ்ந்து, ஈருலக நற்பயன்களைப் பெறுவது எப்படி என்பதைக் கற்றுக் கொடுத்து, முன்மாதிரியாக வாழும் மனிதப்புனிதர்களை அவர்களிலிருந்தே தோற்றுவித்தான். அவர்களையே 'இறை தூதர்கள்' என இஸ்லாம் அறிமுகப்படுத்துகின்றது. பொதுவாக அரபு மொழியில் அவர்களுக்கு 'நபி' என்றும் 'ரஸூல்' என்றும் கூறப்படும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

** அல்குர்ஆனைப் பற்றி அதிக விளக்கம் பெற அடுத்துவரும் அத்தியாயத்தைப் படிக்கவும்.
*108. அல்குர்ஆன் 15: 9*

● "அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்
(நம்முடைய) தூதர் வராத
எந்த சமுதாயத்தினரும் (பூமியில்) இருக்கவில்லை."[109]

இவ்வாறு உலகுக்கு அனுப்பப்பட்ட இறை தூதர்களின் எண்ணிக்கை ஓரிலட்சத்து இருபத்து நான்காயிரம் என மார்க்கம் வழிவந்த கருத்துக்களிலிருந்து காண முடிகின்றது. உலகில் தோன்றிய முதல் மனிதரான ஆதம் (அலை) அவர்களே ஓர் இறைதூதர்தான். இவர்கள் எல்லோரும் கொள்கையாலும் போதனையாலும் ஒரே அணியைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த இறை தூதர்கள் யாவரினதும் பெயர்களை அல்லாஹ் நமக்கு அறிவிக்கவில்லை.

அது பற்றி அவனே குறிப்பிடுகின்றான்:

● "(நபியே!) நிச்சயமாக நாம் உமக்கு முன்னர்
தூதுவர்கள் பலரை அனுப்பியிருக்கின்றோம்.
அவர்களில் சிலருடைய சரித்திரத்தைத்தான்
நாம் உமக்குக் கூறியிருக்கின்றோம்.
அவர்களில் பலருடைய சரித்திரத்தை
நாம் உமக்குக் கூறவில்லை."[110]

இப்படித் தோன்றிய தூய இறை தூதர்களில் இருபத்தைந்து பேர்களுடைய பெயர்களையே அல்லாஹ் நமக்கு அறிவித்துள்ளான். அவர்களில் இறுதியானவர் முஹம்மத் (ஸல்) அவர்களாவர்.

அந்த இறைதூதர்களின் பெயர்களாவன:

1. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
2. நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
3. இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
4. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
5. இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
6. இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
7. யஃகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
8. யூஸுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
9. லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
10. ஹூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
11. ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
12. சுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
13. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
14. ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

109. அல்குர்ஆன் 35: 24 110. அல்குர்ஆன் 40: 78

15. தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
16. சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
17. ஐயூப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
18. துல்கிஃப்லி அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
19. யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
20. இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
21. அல்யஸஃ அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
22. ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
23. யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
24. ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
25. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்.

பொதுவாக உலகில் தோன்றிய இறை தூதர்களையும், குறிப்பாக இங்கு பெயர் கூறப்பட்டவர்களையும் வாய்மை மிக்கவர்கள், தூயவர்கள், தீயன, பாபங்களிலிருந்து முற்றிலும் தூரமானவர்கள், மக்களுக்கு வழிகாட்டவந்த மனிதப் புனிதர்கள் என நம்புவது இஸ்லாமிய நம்பிக்கை சார்ந்த நான்காவது அம்சமாகும். இங்கு அல்லாஹ் பெயர் குறித்துக் காட்டுபவர்களைத் தவிர வேறு எவரையும் பெயர் கூறி 'இவர் ஓர் இறை தூதர்' எனக் கூறுவது இஸ்லாத்தின் அங்கீகாரம் பெறாத கூற்றாகும்.

இறை தூதர்கள் யாவரிலும் இறுதியானவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எனப் படித்தோம். மற்றைய இறை தூதர்கள் யாவருமே குறிப்பிட்டதொரு சமூகத்துக்கு, தேசத்துக்கு என்றே அனுப்பப் பட்டவர்களாவர். ஆனால், முஹம்மத் (ஸல்) அவர்களோ முழு உலகுக்கும், எல்லா மக்களுக்கும் பொதுவான இறை தூதராக அனுப்பப்பட்டவராவார்கள். அவர்களுக்குப் பின் உலக முடிவு வரை இனியொரு இறை தூதர் வருவது இல்லை.

முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முந்திய இறை தூதர்களது போதனைகள் வாழ்வு, மார்க்கத்தை நிலைநாட்டுவதில் எடுத்த முயற்சிகள் என்பன எக்குறையும் இல்லாது முழுமையாக பெறக்கூடிய நிலையில் இல்லை. அந்த அளவுக்கு அவை சிதைக்கப்பட்டுள்ளன. அதேவேளை முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்வின் சிறு அசைவுகூட சிதைக்கப்படாது அப்படியே பதிவு செய்து பாதுகாக்கப் பட்டுள்ளது. அவர்கள் 1400 வருடங்களுக்கு முன் வாழ்ந்து சென்று போன ஒருவர் போலல்லாது, இன்று இப்பொழுது எம்முடன் வாழ்ந்து வழிகாட்டு பவர் போன்று நினைக்குமளவுக்குத் தூய்மையாக அவர் வாழ்வு பாதுகாக்கப் பட்டுள்ளது.* அந்த வாழ்வு தொடர்பானவற்றைப் பதிவு செய்வதிலும் பாது காப்பதிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவற்றையும் நீங்கள் நோக்கினால் பிரமித்து விடுவீர்கள்.

எனவே, ஏனைய எல்லா இறை தூதர்களையும் முன்னர் கூறியவாறு நம் பிக்கை கொள்வது அவசியம். ஆனால், மிகுந்த நம்பிக்கை வைப்பதுடன் பின்

---

* முஹம்மத் (ஸல்) அவர்களது சிறப்புப் பற்றி அடுத்து வரும் அத்தியாயமொன்றில் படிக்கவும்.

பற்றி வாழ்வதற்கான முன்மாதிரியைப் பெற வேண்டியது முஹம்மத் (ஸல்) அவர்களிலாகும். இது ஓர் கட்டாயக் கடமை.

அல்லாஹ் கூறுகின்றான்:

● "அல்லாஹ்வின் மீதும்
இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து,
அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு
நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம்
ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது."[111]

## மறுமை நாள்!

மறுமையை நம்பவேண்டும் என்பது இஸ்லாமிய நம்பிக்கை சார்ந்த ஐந்தாவது அம்சமாகும்.

இது தொடர்பாக நம்பிக்கை கொள்ள வேண்டியவைகளை பேரறிஞர் மௌலானா செய்யத் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் தெளிவுபடுத்தி யுள்ளார்கள்.

அவைகளாவன:

1. ஒருநாள் அல்லாஹ், முழு உலகையும், படைப்பினங்களையும் அழித்து விடுவான். அந்த நாளின் பெயர் 'கியாமத்' ஆகும்.

2. பிறகு இறைவன் அனைவருக்கும் மறுவாழ்வு அளிப்பான். அனைவரும் அல்லாஹ்வுக்கு முன் ஆஜராவார்கள். அதற்கு 'மஹ்ஷர்' என்று பெயர். (அதுவே இறுதித் தீர்ப்பு நாள்)

3. எல்லா மக்களும், தங்கள் உலக வாழ்வில் எதை எதைச் செய்தார்களோ அவை முழுமையும் கொண்ட செயல் பட்டியல் இறைவனின் நீதி மன்றத்தில் சமர்ப்பணமாகும்.

4. அல்லாஹ், ஒவ்வொருவருடைய நல்ல கெட்ட செயலையும் நிறுத்துப் பார்ப்பான். யாருடைய நற்செயல் இறைவனின் துலாக்கோலில் தீய செயலைக் காட்டிலும் பாரமானதாயிருக்குமோ அவரை மன்னித்து விடுவான். யாருடைய தீய செயலின் தட்டுத் தாழுமோ அவருக்குத் தண்டனை அளிப்பான்.

5. யார் மன்னிப்புப் பெறுகிறார்களோ அவர்கள் சுவர்க்கம் புகுவார்கள். யாருக்குத் தண்டனை வழங்கப்படுகிறதோ அவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள்."[112]

---

111. அல்குர்ஆன் 33: 21

112. 'இதுதான் இஸ்லாம்', மௌலானா மௌதூதி (ரஹ்), இஸ்லாமிய நிறுவனம், சென்னை வெளியீடு, (1994 ஆகஸ்ட்), பக்: 141

## அறிவும் சுதந்திரமும்!

அல்லாஹ்வின் ஓர் உயர் படைப்பான மனிதன் நல்வாழ்வு பெறுவதற்கு, இஸ்லாம் எனும் வாழ்க்கை முறையைக் கொடுத்தான் என்பதை நாம் முன்னர் விளக்கமாகப் பார்த்தோம். எனினும், மனிதன் இஸ்லாத்தை ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்று அவன் பலவந்தப்படுத்தவில்லை.

மாறாக மனிதனுக்கு

— சிந்திக்கக்கூடிய ஆற்றலைக் கொடுத்தான்
— நல்லது கெட்டதைப் புரிந்துகொள்ளக்கூடிய திறமையைக் கொடுத்தான். அத்துடன்,
— இவற்றைத் தான் விரும்பியவாறு பயன்படுத்தும் சுதந்திரத்தையும் கொடுத்தான்.

அல்லாஹ்வின் இவ்வேற்பாடு காரணமாக ஒருவன் இஸ்லாத்தை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ உரிமையும் சுதந்திரமும் பெறுகின்றான். இது எத்தகைய உயர்ந்த ஏற்பாடு என்பதை கீழுள்ள விவரங்களைப் படித்தபின் நீங்கள் உணருவீர்கள்.

ஓர் உதாரணத்தைக் கூறுகின்றேன்:

நீங்கள், உங்களை ஒரு கல்லூரி மாணவன் அல்லது மாணவி என நினைத்துக் கொள்ளுங்கள். அக்கல்லூரியில் உங்களுக்கென ஒரு பாடத்திட்டம் உண்டு. அது நீங்கள் வாழும் நாட்டின் கொள்கைக்கமைய உருவாக்கப்பட்டதாகும். அதன்படி உங்களுக்குரிய பாடங்களை ஆசிரியர் நடத்துவார். வருட இறுதியில் உங்கள் கரங்களில் சில வினாத்தாள்கள் தரப்படும். அவை வருட முழுவதும் நீங்கள் கற்றவற்றை அனுசரித்துத் தயாரிக்கப்பட்டவையே.

நீங்கள் படிக்கும்பொழுது, "நன்றாகப் படிக்க வேண்டும்; காலத்தை வீணாகக் கழிக்கக் கூடாது" என உங்கள் பெற்றோரும், ஆசிரியர்களும் மற்றும் உங்கள் நலன் விரும்பிகளும் கூறுவர். எனினும், படிப்பில் கவனம் செலுத்தும் சுதந்திரம் உங்களுக்கு இருந்தது. 'படிக்கலாம் அல்லது படிக்காமலும் விடலாம்.' என்ற தெரிவு உங்களுக்கு இருந்தது.

அதேபோன்று, நீங்கள் பெற்றுக்கொண்ட வினாத்தாள்களிலும் 'இந்த விடையைத்தான் எழுத வேண்டும்' என்ற நிர்ப்பந்தம் எவரிடத்திலிருந்தும் உங்களுக்கு இல்லை. எனவே, நீங்கள் அந்த வினாத்தாள்கள் தொடர்பாக எதுவும் செய்யும் சுதந்திரத்தைப் பெற்றுள்ளீர்கள். அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி சரியோ பிழையோ, விரும்பிய விடையை நீங்கள் எழுதலாம்; அல்லது அவ்வினாத்தாள்களில், அவற்றுக்கு சம்பந்தமில்லாத எதையும் கீறி வைக்கலாம்; அல்லது அவற்றைக் கிழித்து வீசிவிட்டு பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறலாம்.

நீங்கள், உங்களுக்குத் தரப்பட்ட சுதந்திரத்தைப் பயன்படுத்தி அவ்வினாத் தாள்கள் தொடர்பாக எப்படி நடந்து கொள்கிறீர்களோ அதற்கேற்ப உங்களுக்கு மகிழ்வைத் தரும் நல்லதோர் எதிர்காலம் அமையும், அல்லது வேதனையைத் தரும் இருண்ட வாழ்வு அமையும்.

சிலவேளை, உங்களுக்குப் பாடம் சொல்லித்தந்த ஆசிரியர் "நீ இதைத்தான் படிக்க வேண்டும்; அதைப் படிக்கக் கூடாது" என்று கண்டிப்பான கட்டளை பிறப்பித்தால், அல்லது வருட இறுதியில் வழங்கும் வினாத்தாள்களில் "இந்த விடையைத்தான் நீ எழுத வேண்டும்" என்ற பலவந்தம் இருந்தால், உங்களுக்காக, உங்கள் அறிவை அளவிடும் பரீட்சையொன்றை வைப்பது அர்த்தமற்றது; வேடிக்கையானது என நீங்கள் நினைப்பீர்கள். உண்மையும் அதுதான். இத்தகைய பரீட்சை ஒன்றின் விளைவாக ஒருவரின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பது முற்றிலும் தவறானது என்பதை உங்கள் அறிவு உங்களுக்குக் கூறும். ஏனெனில், இவற்றில் உங்கள் அறிவுக்கோ திறமைக்கோ எத்தகைய வேலையும் இல்லாதிருப்பதாகும்.

அல்லாஹ், முற்றிலும் இந்த விதமாகத்தான் இஸ்லாம் தொடர்பாக மனிதர்களுடன் நடந்து கொள்கின்றான்.

"நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அதன்படி வாழுங்கள். விமோசனம் பெறுவீர்கள்" என்று அடிக்கடி போதனை புரிவது இருந்தாலும் அதை ஏற்பதிலும் பின்பற்றுவதிலும் மனிதனுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது; அவனது தெரிவுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அதோடு, என்றோ ஒருநாள் அவனது உலக வாழ்வு முடிவடைந்துவிடும்; அவன் மரணமடைந்து விடுவான்.

அதன் பின்னர் மறுமையில், அவன் வாழ்வு தொடர்பான விசாரணைக்காக அல்லாஹ்வின் முன் கொண்டுவரப்படுவான். அந்த விசாரணை மண்டபத்தில் அவன் எவரது உதவி ஒத்தாசையுமின்றி தனித்து நிற்பான். அப்பொழுது அவன் இவ்வுலகில் செய்த சிறிய பெரிய எல்லாச் செயல்களும் எல்லாத் தகவல்களும் கொண்டுவரப்படும். அவற்றில் எதுவும் விடுபடாதவாறு விசாரணை நடக்கும். இறுதியில், இஸ்லாத்தை ஏற்று நன்மை செய்தான் எனக் காணப்பட்டால், அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்று சுவர்க்கம் புகுவான். அதே போன்று அவன் இஸ்லாத்தை நிராகரித்துத் தான்தோன்றித்தனமாக, பாவங்கள் செய்து வாழ்ந்ததாகக் காணப்பட்டால் வல்லமையுள்ள அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி நரகம் செல்வான்.

இது மனிதனுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம், தெரிவு செய்யும் உரிமை என்பன மூலம் அவனே முயன்று பெற்றுக்கொண்ட முடிவாகும்.

இவ்வாறின்றி, "நான் சொன்னபடியே இஸ்லாத்தை ஏற்று வாழனும்; அதில் ஓர் அணுவும் வித்தியாசப்படக் கூடாது; அந்த உரிமையும் சுதந்திரமும் உங்களுக்கு இல்லை!" என்று அல்லாஹ் முடிவாகவே மொழிந்திருந்தால் அந்த மனிதனை விசாரிப்பதும், வெகுமதியோ தண்டனையோ வழங்குவதும் அர்த்த

மற்றது; வேடிக்கையானது என்றாகிவிடும். பரிபூரண ஞானம் கொண்ட அல்லாஹ், அந்த மனிதனைப் பொறுத்து அவனே முடிவெடுக்கும் வகையில் தனது மார்க்கத்தை - இஸ்லாத்தை வழங்கி, அதன்படி வாழ்வது அல்லது வாழாதிருப்பது என்ற இரண்டில் ஒன்றைத் தெரிவுசெய்யும் உரிமையையும் வழங்கியமை, அவனுடைய தன்னிகரற்ற ஆற்றலை நிரூபிக்கும் வகையில் அமையப்பெற்றதாகும்.

இதன்படி மனிதன் தன் புத்தியைப் பயன்படுத்தி இஸ்லாத்தைத் தெரிவு செய்து வாழ்ந்தால் அவனது வாழ்வு ஈருலகிலும் ஒளிமயமானதாக இருக்கும்; மாறாக அவன் நடந்தால், இருள் சூழ்ந்த பாதையில் அவன் தன் பயணத்தை மேற்கொண்டுள்ளான் என்றே கூறவேண்டும். முன்னையது அவனுக்கு சுவனத்தையும், பின்னையது அவனுக்கு நரகத்தையும் சொந்தமாக்கிவிடும்.

## மறுமை நம்பிக்கையின் மற்றொரு அவசியம்!

மற்றொரு வகையில் பார்க்கும் பொழுதும் இத்தகைய விசாரணை, அதைத் தொடர்ந்து வழங்கும் வெகுமதிகள் அல்லது தண்டனைகள் என்பன உள்ள மறுமை வாழ்வு அவசியமே என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

இந்த உலகம் தற்காலிகமானது; என்றோ ஒருநாள் முற்றிலும் சின்னா பின்னமாகி அழிந்து விடும். அதேபோன்று மனித வாழ்வும் மிகவும் குறுகிய காலத்தை உடையது. எனவே, அவனது எல்லா நல்ல செயல்களுக்கும் சமமான வெகுமதிகள் கொடுப்பதும், எல்லாத் தீய செயல்களுக்கும் சமமான தண்டனைகள் கொடுப்பதும் இங்கு சாத்தியமானது அல்ல.

இப்பொழுது இப்படிச் சிந்தித்துப் பாருங்கள்!

நெஞ்சில் நிறைந்த நபிமணி (ஸல்) அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த 63 வருட காலத்திலும், ஒரு சின்னஞ்சிறு தவறான செயலில் ஈடுபடவோ அல்லது பாவமொன்றைச் செய்யவோ இல்லை என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. அவர்கள் மொழிந்த கருத்துக்களும் செய்த பணிகளும் முற்றிலும் நன்மையானவையே. அவர்கள் காட்டிய வழியில் வாழ்ந்த, வாழ்ந்துவரும் கோடிக்கணக்கான மக்கள் அவர்களது உன்னதமான பண்புகள் பற்றி உயர்வாகப் பேசுகின்றார்கள். இதன் பின்னரும் அவர்களது வழியில் எண்ணற்ற மக்கள் அணிதிரண்டு அழகு வாழ்வைப் பெறப்போகின்றார்கள் என்பதற்கான சான்றுகள் ஏராளம்!

ஆனால், அவர்கள் அனுபவித்த துன்பங்களை நினைத்துப் பாருங்கள். அவை ஒன்றா இரண்டா?

அவர்கள் பசியில் வாடினார்கள்; கற்களால் அடிக்கப்பட்டார்கள்; எதிரிகள் அவர்கள் போகும் பாதையில் முற்களைப் பரப்பினார்கள்; அவர்களுடைய பொன்மேனியில் அழுகி நாற்றமெடுக்கும் ஆட்டுக் குடலைப் போட்டு அசிங்கப் படுத்தினார்கள். இப்படி எண்ணற்ற கொடுமைகள் தொடரவே அவர்கள் தாம் பிறந்து வாழ்ந்த மக்காவை விட்டு மதீனாவுக்குப் போனார்கள்.

அப்படியாயின் அவர்களது வாழ்வு முழுவதும் புனிதம் நிறைந்ததாய், பாருக்கே வழிகாட்டுவதாய் அமைந்ததற்கான வெகுமதிகள் எதுவும் இல்லையா? துன்பங்கள் தான் வெகுமதிகளா?

அதேவேளை, மறுபக்கம் சோவியத் ரஷ்யாவின் கொடுங்கோலனாக ஆட்சி புரிந்த கம்யூனிஸத் தலைவன் ஸ்டாலின் பற்றி உங்களுக்குத் தெரியும் என நினைக்கிறேன். அவன் தனது போக்கை ஏற்காதவர்களை கொடூரமாகக் கொலைசெய்து தீர்த்துக் கட்டினான் என்பது உலகறிந்த விஷயம். 1935 முதல் 1939 வரை தன்னுடைய போக்குக்கு விரோதமானவரைச் சுத்தம் செய்யும் இயக்கமொன்றை நடத்திச் சென்றான். அதன் மூலம் லட்சக் கணக்கான சோவியத் மக்களை பல வகையான சித்ரவதைகள் கொடுத்து கொன்று குவித்தான்.[113]

மற்றொருவன் ஜெர்மனிய சர்வாதிகாரி ஹிட்லர். அவன் இந்நூற்றாண்டில் வாழ்ந்த அலுகோசுவன். அவன் கொடூரமான மிருகங்கள் கூட வெட்கப்படுமளவுக்கு லட்சக் கணக்கான மக்களை இருட்டறைகளில் பூட்டிவைத்து, நச்சுப் புகை மூலம் கொலை செய்தான்.

இப்படி மிகவும் குரூகமாக, புதைகுழிகளின் மேல் ஆட்சி நடத்திச் சென்ற இந்த இருவரது வாழ்வு சுகபோகமாகவே கழிந்தது.

அப்படியாயின், அவர்கள் செய்த லட்சக் கணக்கான படுகொலைகளுக்கும் பாவ செயல்களுக்கும் சமமான தண்டனை எங்கே எப்பொழுது கொடுப்பது? அல்லது இன்பங்கள்தான் அவர்கள் செய்துவிட்ட அடாச் செயல்களுக்கு உரிய் பரிசா?

1993 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி ஸ்பெயினிலுள்ள ஒரு நீதிமன்றத்தில், ஒரு கொலையாளிக்கு 1338 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதன் விபரம் இதுதான்:

"1991 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒருநாள்
ஜுவான் ஜோஸ் சுபெய்தா சுபெல்டியா என்பவன்
ஒரு வாகனத்தில் வைத்த குண்டு வெடித்ததன் விளைவாக
9 பேர் கொல்லப்பட்டு, 44 பேர் படுகாயம் அடைந்தனர்.
இதை விசாரணை செய்த நீதிமன்றம்
வாகனத்தில் குண்டு வைத்ததற்காக 27 வருடங்களும்
கொல்லப்பட்ட 9 பேருக்கும் 27 வருடங்களாக 243 வருடங்களும்
படுகாயமடைந்த 44 பேருக்கும் 24 வருடங்களாக 1056 வருடங்களும்
இக்கொடுமையில் ஈடுபட்டதற்காக 10 வருடங்களும்
அவன் கொண்டு சென்ற வாகனத்தில்

113. 'A History of the World' Marvin Perry, Houghton Mifflin Co., Boston, Massachusetts, U.S.A., (1989), Printed in Philippine, Page: 669

கள்ள எண் தகடு பொறுத்தி இருந்ததற்காக் 2 வருடங்களும்
மொத்தம் 1338 வருடங்கள்
சிறைத் தண்டனை வழங்கப்பட்டது."[114]

இந்தத் தீர்ப்பு பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஒருவன் ஆகக்கூடினால் இவ்வுலகில் 150 வருடங்களுக்கு மேல் வாழ்வது இல்லை. 150 வருடங்கள் வாழ்வதே அபூர்வம். இதை அந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி அறியாமல் இல்லை. எனினும், அப்படி ஒரு தண்டனையை அவனுக்கு வழங்கிவிட்டார். இதன் கருத்து என்னவெனில், அவன் செய்த பாபச்செயல் அவனது வாழ்வுக் காலத்தையும் கடந்து தண்டனை அனுபவிக்கும் அளவுக்குக் கொடுமையானது என்பதுதான். அப்படியாயின் அவன் செத்தபின் எஞ்சும் கால சிறை வாசத்தை எங்கு அனுபவிப்பது? சொல்லுங்கள் பார்க்கலாம்.

இவை சில உதாரணங்களே. நீங்கள் சற்று சிந்தித்தால் இத்தகைய ஆயிரம் உதாரணங்களைக் காண்பீர்கள். இவற்றிலிருந்து மரணத்தின் பின் விசாரணையும், வெகுமதி அல்லது தண்டனை வழங்கலும், அது தொடர்பான நல்லதோ கெட்டதோ ஒரு வாழ்வும் அவசியம் என்ற முடிவுக்கு நீங்கள் வருவீர்கள். அன்றி, மனிதனின் இவ்வுலக வாழ்விலான நல்லதும் கெட்டதுமான செயல்களுக்குச் சமமான வெகுமதியோ அல்லது தண்டனையோ வழங்குவது இவ்வுலக அமைப்பில் சாத்தியமில்லை என்பதைத் தர்க்கமேயின்றி ஏற்றுக் கொள்வீர்கள். அப்படித்தானே!

## மறு பிறப்பு . . . ?

நீங்கள் மற்றொரு விடயத்தையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, இஸ்லாத்திலான மறுமை வாழ்வு தொடர்பான நம்பிக்கை சிற்சில மதங்களில் உள்ள 'மறு பிறப்பு' பற்றிய நம்பிக்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

மறுபிறப்பு என்றால் என்ன?

"இவ்வுலக வாழ்விலான வினைப் பயன்கள், முன்னைய வினைப் பயன்கள் காரணமாக எதிர்கால வாழ்வுகளில் பிறப்புக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு பிறவி எடுப்பது எனும் மீண்டும் மீண்டும் பிறப்பது என்பதே 'மறுபிறவி' என்று கூறப்படும். இதற்கு சிலர் 'மறுபிறப்பு' என்பார்கள். எனினும், 'மறுபிறவி எடுத்தல்' எனக்கூறுவதே மார்க்கத்திற்கு இணக்கமானது. வாழ்க்கைச் சக்கரத்தில் ஆரம்பம் தெரிவதில்லை. அநாதிகாலந்தொட்டு இந்த மறுபிறவி எடுத்தல் நடக்கின்றது. நற்செயல்களின் வினைப்பயனாக சுகபோக இடங்களிலும் துற்செயல்களின் வினைப்பயனாக வேதனைமிக்க இடங்களிலும் பிறப்பர். மனித வாழ்வு நற்செயலொன்றின் வினைப்பயனே. தேவலோகத்தில் பிறப்பதும் நற்செயல் ஒன்றின் வினைப்பயனே. மிருகங்களாக, மற்றும் நரகங்களில் பிறந்து துன்பம் அனுபவிக்க நேர்வதும் துர்நடத்தைகளின்

114. 'Arab News' Daily Paper in Saudi Arabia (26. 6. 93) Page: 20

வினைப்பயன்களாகும். பிரமலோகப் பிறப்பு தியானம் செய்வதன் மூலம் அமையும் வினைப்பயனே. அதுவும் நற்செயல்களின் வினைப்பயனொன்றாகும். நிர்வாண (மோட்ச) சுகம் காணுவதென்பது செயல்களின் தேய்வையே குறிக்கும். அது வரையில் உயிரினங்கள் பல்வேறு உலகங்களில் நடமாடும் நிலையில் வாழும். பல்வேறு செயல்களின் வினைப்பயனாக பல விதமான பிறப்புக்களை உயிரினங்கள் பெறுகின்றன."[115]

இதுதான் மறு பிறவி பற்றித் தரப்படும் விளக்கமாகும். இதன் முடிவு நிர்வாண (மோட்ச) சுகம் கிடைக்கப் பெறுவதன் மூலம் ஏற்படுகின்றது எனவும் கூறப்படுவதை நீங்கள் அவதானிக்கலாம்.

இக்கருத்தை நீங்கள் நம்புவீர்களா?
நீங்கள் நிதானமாகச் சிந்தித்துப் பதில் கூற வேண்டும்.
நாம் இது பற்றி இவ்வாறு சிந்திப்போம்:

இந்த மறுபிறப்புப் பற்றிய நம்பிக்கையின் அடிப்படையில் நோக்கும் பொழுது, இன்று உலகில் வாழும் மனிதர்கள் இதற்கு முந்திய ஜென்மமொன்றிலிருந்து, அதில் நன்மை செய்ததன் வினைப்பயனாக மனிதராய்ப் பிறந்துள்ளார்கள். அதேபோன்று, இன்று வாழும் ஏனைய ஜீவன்கள் முந்திய ஜென்மத்தில் செய்த பாபங்களின் வினைப்பயனாக அவ்வாறான பிறப்பைப் பெற்றுள்ளன. இதிலிருந்து விளங்குவது என்னவெனில், ஒருவரின் ஒரு பிறவியின் முடிவு, அவரின் நன்மையையோ தீமையையோ அடிப்படையாகக் கொண்டு மற்றொரு பிறவியின் ஆரம்பமாக அமைகின்றது என்பதே. அப்படியாயின், இந்த நம்பிக்கை உடையோரிடம் இப்படியொரு வினாவை விடுக்க முடியும்: அதாவது,

— இந்த உலகில் முதன் முதலில் இருந்தவர் யார்? அல்லது
வேறு எந்த உயிரினம் இருந்தது?

— "ஒரு மனிதன் இருந்தான்!" என்று அவர்கள் கூற முடியும்!

இந்த விடை தவறானதே. மனிதனாகப் பிறக்க, அதற்குமுன் மற்றொரு ஜென்மம் இருந்து, அதில் பல நன்மைகள் புரிந்திருக்க வேண்டும். அவற்றின் வினைப்பயனாகவே அவன் மனிதனாகப் பிறந்திருக்க வேண்டும். அப்படியாயின், "அதற்கு முந்திய ஜென்மத்தில் இருந்தவர் யார் அல்லது இருந்த உயிரினம் எது? என்ற வினாவை மீண்டும் விடுக்க நேருகின்றது என்பதை நீங்கள் காணலாம். இப்பொழுது,

— "ஒரு நாய் இருந்தது!" என்ற ஒரு விடையை அவர்கள் தரமுடியும்!

இந்த விடையும் தவறானதே. நாயாகப் பிறக்க, அதற்கு முன் மற்றொரு ஜென்மம் இருந்து, அதில் பல நாய்வேலைகள் செய்திருக்க வேண்டும். அவ்வாறின்றி நாயாகப் பிறக்க முடியாதே. பிறப்புக்கள் ஏற்படுவது வினைப்பயனின்

---

115. 'பௌத்த தர்மம்' (சிங்கள மொழி நூல்), பேராசிரியர் சாந்த இரத்நாயக்கா, வெளியீடு: எம். டீ. குணசேனா கம்பெனி, கொழும்பு - 11, ஸ்ரீலங்கா, முதல் பதிப்பு - 1984, பக்: 130

படியே என்று கொள்வதாயின், நாய்ப் பிறப்பும் ஒரு வினைப்பயனே. அப்படியாயின் அதற்கு முந்திய ஜென்மத்தில் இந்த நாயின் நிலையென்னவோ!

இவ்வாறு மனிதனாக, நாயாக, பூனையாக, கோழியாக, குரங்காக, எலியாக, மாடாக - அவை செய்த நன்மை தீமை என்பவற்றின் வினைப்பயனாகப் பிறப்பவற்றின் ஆரம்பம் என்ன? முதலில் யார், எந்த ஜீவன் இருந்தது?

இவ்வினா தொடர்பான பேராசிரியர் சாந்த இரத்நாயக்காவின் விடை என்னவெனில், "வாழ்க்கைச் சக்கரத்தின் ஆரம்பம் தெரிவதில்லை!" என்பதாகும். இதுதான் மற்றோரின் விடையுமாயின், அவர்கள் இந்த வினாவைத் தவிர்க்க முயற்சிக்கின்றனர் என்றுதான் கூற வேண்டும். உண்மையில், இந்த 'மறுபிறவி எடுத்தல்' கருத்தை முன்வைப்போர் வாழ்வுச் சக்கரத்திற்கு ஒரு முடிவு இருப்பதாகவும், அம்முடிவு நிர்வாண (மோட்ச) சுகம் பெறுவதன் மூலம் நிறைவுறுகிறது எனவும் கூறுகின்றனர். எமது வினா என்னவெனில், "ஆரம்பம் ஒன்றில்லையாயின் முடிவொன்று எப்படி இருக்க முடியும்?" என்பதே.

இக்கருத்தின் அடிப்படையில் பிரிதொரு வினாவும் எழுகின்றது. அதாவது, முந்திய ஜென்மத்தின் தீவினைப் பயனாக நாயாக மறுபிறவி எடுத்த ஒருவருக்கு, தான் தவறு செய்ததன் பயனாகவே இப்பிறவி தனக்குக் கிடைத்தது என சிந்திக்க முடியாது என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். நாய் எதையும் சிந்தித்து செயல்படும் தன்மை உடையதல்ல. மாறாக, அந்த நாய்ப் பிறப்பில் இன்னுமின்னும் நாய்த்தனமான செயல்களிலேயே அது ஈடுபட்டுப் பாவங்களை மலைபோல் குவித்துக் கொள்ளும். அதனால் அதற்கு என்றுமே விமோசனம் கிட்டமாட்டாது. இது மற்றைய பிறப்பினங்களுக்கும் பொருந்தும். இந்த வகையில் இவ்வுலகமே பாவங்கள் செய்யும் உயிரினங்களின் மொத்த இருப்பிடமாக அமைந்துவிடும்.

நீங்கள் சிந்திக்க வேண்டிய மற்றோர் அம்சமும் உண்டு.

ஒரு பிறவியில் ஒரு மனிதனோ அல்லது மற்றோர் உயிரினமோ நல்லது அல்லது கெட்டது என ஏதாவதொரு செயலைச் செய்வதாக வைத்துக் கொள்ளுங்கள். இது தொடர்பாக தவிர்க்க முடியாத சில வினாக்கள் எழுகின்றன.

அந்த வினாக்கள் இவைதான்:

— அந்த மனிதனோ அல்லது மற்றோர் உயிரினமோ
செய்துவிட்ட செயல் ஒன்றை
நன்மையானது அல்லது தீமையானது
என்று தீர்மானிப்பது யார்?
— அந்தத் தீர்மானத்துக்கு இசைவாக
மறு ஜென்மத்தில் இன்ன பிறப்பையே பெறவேண்டும் என
மிக நீதி நேர்மையாக முடிவெடுப்பவர் யார்?
— அவ்வாறு தீர்மானித்து முடிவெடுப்பவர்
உலகில் பிறந்த எத்தகைய சிரேஷ்டமான

மனிதராகவும் இருக்க முடியாது;
வேறு எந்த உயிரினமாகவும் இருக்க முடியாது. காரணம்,
இவ்விரு சாராரும் தமது நன்மை தீமைகளுக்கேற்ப
பிறவியெடுப்பவர்களேயாவர். எனவே,
இவர்களைவிடச் சக்திமிக்க, வல்லமை படைத்த
பிறப்பும் இறப்பும் இல்லாத நீதியாளன்
ஒருவன் இருக்க வேண்டும் - அவன் யார்?

— அது இறைவன் எனக் கூறுவார்களாயின்
அந்த இறைவன் ஒருவனா? அல்லது பலரா?

— "எதுவும் இல்லை. எல்லாம் தாமாகவே நடக்கின்றன"
என்பதுதான் விடையாயின், இதன் கருத்தென்ன?
'தாமாக' என்று ஏதாவது இருக்கின்றதா?
தாமாக நடக்கும் எதிலும் ஏதாவது ஒழுங்கு இருக்கிறதா?

இத்தகைய எண்ணற்ற வினாக்கள் இந்த மறுபிறப்பு அல்லது மறுபிறவிக் கொள்கை தொடர்பாக எழுவதை எவரும் தவிர்க்க முடியாது. உண்மையில், இது மிகவும் சிக்கல் நிறைந்த, புரிந்து கொள்ள முடியாததொரு கருத்தே. இக் கருத்தின் அடிப்படையில், மனிதன் மறு உலகத்திலான ஓர் உன்னத இலக்கை நோக்கமாகக் கொண்டு தன் வாழ்வை அமைத்துக்கொள்ள முடியாது. காரணம், 'எதுவும் இல்லாமை' எனும் மோட்ச நிலையை நோக்கிய, பல்வேறு பிறவிகள் எடுப்பதன் மூலம் அமைந்த நெடுந்தூரப் பிறப்புப் பயணத்திற்கு, 'இதுதான் குறிக்கோள்' என எதுவும் வகுக்கப்படாமையேயாகும்.

வாழ்க்கை என்றோ அழியக் கூடியதுதான். எனினும், அதற்கு தெளிவான நோக்கமும் இலட்சியமும், அதை அடைவதற்கான நேரிய பாதையும், அவற்றின் விளைவாக பெறக்கூடிய திட்டவட்டமான பயன்களும் இருக்க வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். அதற்கு இந்த மறுபிறப்புக் கொள்கை உங்களுக்கு எந்த வகையிலும் உதவ மாட்டாது என்பதே என் கருத்து. நீங்கள் சிந்தித்தால் இம்முடிவுக்கே வருவீர்கள்.

## இஸ்லாத்தில் மறுமை வாழ்வு!

இஸ்லாத்தில் கூறப்படும் மறுமை வாழ்வு தொடர்பாக இத்தகைய எந்தச் சிக்கலையும் நீங்கள் காண மாட்டீர்கள். அது மிகவும் தெளிவாகவே அமைந் துள்ளது.

இஸ்லாம் அதை இவ்வாறு முன்வைக்கின்றது:

சர்வ வல்லமையும், அதிகாரமும், ஞானமும் படைத்த ஒரே இறைவனான அல்லாஹ்வின் நியதிப்படி மனிதன் இவ்வுலகில் படைக்கப்பட்டான். அவன் இவ்வுலகில் வாழ்வதற்கு அவசியமான அத்தனை அம்சங்களும் கொடுக்கப் பட்டான். அப்படிக் கொடுக்கப்பட்டவற்றைப் பயன்படுத்தி அல்லாஹ்வின்

பிரதிநிதியாகக் கடமை புரிவதற்கும், அவன் நேர்மை தவறாது வாழ்வதற்கும் என்று இஸ்லாம் எனும் தெய்வீக வாழ்க்கை முறை கொடுக்கப்பட்டான். பின்னர், அதைப் புரிந்து கொள்வதற்குப் புத்தியும், ஏற்கவோ அல்லது மறுக் கவோ உரிய சுதந்திரமும் கொடுக்கப்பட்டான்.

இந்த மனிதனுக்கு இவ்வுலகில் ஓர் இறுதிநாள் வருகின்றது. அன்று அவன் மரணித்து விடுகின்றான். மரணத்தின் பின் மறு உலகில் தீர்ப்பு நாளன்று அல்லாஹ் இவனது வாழ்வு குறித்து விசாரணை செய்வான். அந்த விசாரணை யின் பின் எவர்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து, நபி (ஸல்) அவர்கள் காட்டிய வழியில், இஸ்லாத்தை ஏற்று வாழ்ந்ததாகக் காணப்படுவார்களோ அவர்கள் அல்லாஹ்வின் அன்பையும் சுவனத்தையும் பெறுவர். எவர்கள் அதற்கு மாறாக வாழ்ந்தார்களோ அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தையும் நரகத்தையும் பெறுவர்.

சிலவேளை, இவ்வுலகில் அல்லாஹ்வின் கட்டளைகளை மறந்து, பாவ செயல்களில் ஈடுபட்டு வாழ்ந்தவர்கள், தமது தவறை உணந்து, அல்லாஹ்விடம் மனமுருகி பாபமன்னிப்பு கேட்பதுடன், அல்லாஹ்வின் அன்பைப் பெறும் செயல்களில் ஈடுபாடுகொண்டு நடப்பார்களேயாயின் அவர்களை மன்னிக்க அல்லாஹ் போதுமானவன். இத்துடன் மனித வாழ்வு முற்றுப் பெற்று விடுகிறது. இதற்கப்பால் இன்னும் பிறப்புக்கள் இல்லை!

ஆகவே, மனிதன் பிறந்து, வாழ்ந்து, மரணித்த பின் அவனது செயல் களுக்கேற்ப மறு உலகில் அடையப் போகும் வெகுமதிகள் அல்லது தண்டனை கள் தொடர்பான இஸ்லாமியப் போதனையில் எத்தகைய தத்துவச் சிக்கலும் இல்லை. சாதாரண மனிதன் கூட இதை விளங்கிக் கொள்வான்.

மேலும், மறு உலக வாழ்வு தொடர்பான அம்சங்கள் அனைத்தையும் இஸ்லாம் 1400 வருடக்ளுக்கு முன்னர்தான் போதித்தது எனக் கருதுவது முற்றி லும்பிழையானது. இவை எல்லாமே உலகில் தோன்றிய முதல் மனிதரான ஆதம் (அலை) அவர்கள் காலத்திலிருந்தே உள்ளவை. உலகில் பல்வேறு காலங்களில் தோன்றிய எல்லா நபிமார்களும் இதையே போதித்தார்கள். பல சிதைவுகளுக்கு இலக்கான பைபிள்கூட மறுமை பற்றிய இவ்வுண்மைகளை மறைக்கவில்லை. அந்த நம்பிக்கை தான் இன்று முஸ்லிம்கள் மத்தியிலும் இருக்கின்றது.

இதற்கு மாறான நம்பிக்கைகள் யாவும் வேதங்கள் திரிபுபட்டு, மனிதனின் சிந்தனைகளும் அவற்றில் இடைச்செருகப் பட்டபோது உருவானவையே. அந்த வகையில் வந்ததே மறுபிறவி அல்லது மறுபிறப்பு தொடர்பான நம்பிக்கையும்.[116] அதனால்தான், அதில் அதிகமான சிக்கல்களும் குழப்பங்களும் காணப்படு கின்றன.

---

116. சில வருடங்களுக்கு முன்பு 'மறு பிறப்பு' என்ற அறிமுகத்துடன் சில சம்பவங்கள் இலங்கைப் பத்திரிகைகளில் பிரசுரமாயின. 'திடீரென சில பிள்ளைகள் தமது முற்பிறப்புப் பற்றிய கதைகள் சொல்லலாயின' என்ற அத்தகைய செய்திகளுக்குப் பத்திரிகைகளும், மறு பிறப்பை நம்புபவர் களும் அதிக முக்கியத்துவம் கொடுத்ததையும் காண முடிந்தது.

நீங்கள் இதைப் பற்றி சிந்தியுங்கள். அப்பொழுது இஸ்லாம் கூறுவதன் எதார்த்தத்தைப் புரிந்து கொள்வீர்கள், இன்ஷா அல்லாஹ்.

# இறை நிர்ணயம்!

இந்தப் பிரபஞ்சமும் இதிலுள்ள படைப்புக்கள் அனைத்தும் அணுவும் பிசகாது அல்லாஹ்வின் ஏற்பாட்டின்படியே இயங்குகின்றன என்பது இஸ் லாத்தின் நம்பிக்கை சார்ந்த ஆறாவது அம்சமாகும்.

இப்பிரபஞ்சம் இறைவனுக்குச் சொந்தமானதே. இதிலுள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மற்றும் கோள்கள், கடல், இப்பூமி, இதில் வாழும் மனிதன், மற்றும் உயிரினங்கள், மரம் செடி கொடிகள், நீர், நெருப்பு போன்ற எல்லாமே அல்லாஹ் நிர்ணயித்தபடி இயங்குபவைகள். மனிதனது கற்பனைகள், கருத்துக்கள்கூட அல்லாஹ்வின் நிர்ணயத்திற்கு உட்பட்டவையே. அல்லாஹ் வின் ஞானத்திற்குப் புறம்பாகவோ அவன் நிர்ணயித்த விதிமுறைக்கு மாறா கவோ எதுவும் இயங்க முடியாது.

இதன் கருத்து, மனிதன் இயங்குவதற்கான எல்லாச் சுதந்திர வாயில்களும் முழுக்க முழுக்க அடைக்கப்பட்டுள்ளன என்பதோ அல்லது அவையெல்லாம் தங்குதடையின்றி சர்வ சுதந்திரமாகத் திறந்துவிடப்பட்டுள்ளன என்பதோ அல்ல. மாறாக, மனிதன் சுதந்திரமாக இயங்குவதற்கான அறிவையும் ஆற்ற லையும் அல்லாஹ் வழங்கியுள்ளான். அதேவேளை, அவற்றில் தன் விதிமுறை

---

இவற்றையிட்டு நான் அதிக அக்கறையுடன் ஆராய்ந்தேன். அத்தகைய சில பிள்ளைகளை நேரில் கண்டு கதைத்துமுள்ளேன். உண்மையில் அவற்றில் மறு பிறப்பு என்று நம்பத்தக்க செய்தி கள் எதுவும் இல்லை.

அதற்கான காரணிகளாவன:

1. அக்கதைகளைக் கூறும் பிள்ளைகளின் கூற்றுக்களில் முன்னுக்குப்பின் முரணான பல கருத்துக்கள் காணப்படுதல்.

2. குறிப்பிட்ட ஒரு காலத்தின் பின் அந்தப் பிள்ளைகள் அவற்றை முற்றாக மறந்து விடுதல். அல்லது அவை பற்றி எதுவும் பேசாது மௌனமாதல்.

3. மறுபடி பிறந்ததாகக் கூறும் பிள்ளைகள் யாவருமே, அதற்கு முந்திய ஜென்மத்தில் இயற்கையாக மரணித்தவர்களல்லர். அவர்கள் அனைவருமே நூறு வீதம் - அடித்துக் கொலை செய்யப்பட்டோ, நீரில் மூழ்கியோ, மரத்திலிருந்து வீழ்ந்தோ, வாகனமொன்றில் மோதியதாலோ அல்லது மற்றொரு விபத்து வாயிலாகவோ மரணித்தவர்களே.

இயற்கையாக மரணிக்கும் எண்ணற்ற மனிதருள் ஒருவராவது முற்பிறப்புக் கதைகள் கூறவில்லை. அத்தகைய கதைகளைக் கூறிய அனைவரும் முற்பிறப்பில் விபத்தொன்றின் மூலம் மரணித்தவர்களே. அப்படியாயின் 'மறு பிறப்பு' விபத்துக்கள் மூலம் மரணித்தவர்களுக்கு மட்டும் உரியதா? மற்றவர்களுக்கு அவ்வாறு பிறப்பு ஏற்படுவது இல்லையா?

4. இவ்வாறு மறு பிறப்புக் கதை சொன்ன பிள்ளைகளின் எண்ணிக்கை சுமார் 25க்கு மேல் இல்லை. எனவே, 'மறு பிறப்பு' என்றொன்று இருக்குமாயின், மற்ற கோடிக்கணக்கான மக்களுக்கும் அது நேர்ந்திருக்க வேண்டுமே! அப்படியான செய்திகள் எதுவும் இல்லையே!

உண்மையில், இவை 'மறு பிறப்பு' என்று கூறுவதில் எந்த உண்மையும் இல்லை என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. எனவே, அப்பிள்ளைகள் அத்தகைய கதைகள் கூறுவது எந்த சந்தேகமுமின்றி உண்மையாயின் அவை வேறு ஏதோ கோளாறுகளாகத்தான் இருக்க வேண்டும்.

— ஆசிரியர்

யையும் வைக்க அவன் தவறவில்லை. இது அவனது அறிவில், ஆற்றலில், திற மையில் உள்ளதாகும்.

அல்லாஹ் அறிவிக்கின்றான்:

● "அல்லாஹ் நித்திய ஜீவன்,
(பேரண்டம் அனைத்தையும்) நன்கு நிர்வகிப்பவன்;
அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை.
அவன் தூங்குவதுமில்லை;
மேலும் சிற்றுறக்கமும் அவனைப் பிடிப்பதில்லை;
வானங்களிலும் பூமியிலுமுள்ள அனைத்தும் அவனுடையவையே!
அவனுடைய அனுமதியின்றி
அவனுடைய திருமுன் எவர்தான் பரிந்து பேச முடியும்!
அவர்களுக்கு முன்னாலிருப்பவற்றையும்,
அவர்களுக்குப் பின்னால் (மறைவாக) இருப்பவற்றையும்
அவன் நன்கு அறிவான்.
அவன் (அறிவித்துக் கொடுக்க) நாடுவதைத் தவிர,
அவன் ஞானத்திலிருந்து வேறெதையும்
எவரும் புரிந்துகொள்ள முடியாது.
அவனுடைய அரசாட்சி
வானங்கள் பூமி அனைத்திலும் பரந்து நிற்கின்றது.
அவற்றைப் பாதுகாப்பது
அவனைச் சோர்வுறச் செய்வதில்லை. மேலும்,
அவன் மிக உயர்ந்தவனும்
மகத்துவம் மிக்கவனுமாய் இருக்கின்றான்."[117]

இதுவரை ஒரு முஸ்லிம் நம்ப (ஈமான் கொள்ள) வேண்டிய ஆறு அம்சங் களை நாம் பார்த்தோம்.* இவற்றில் உறுதியான ஈமான் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

இந்த ஆறு அம்சங்களையும் வரிசைக் கிரமமாக அரபு மொழியில் இவ்வாறு கூறப்படும்:

ஆமன்து பிBல்லாஹி வ மலாஇகத்திஹீ
வ குத்துபிBஹீ வ ருஸுலிஹீ
வல் யவ்மில் ஆகிKHரீ
வல் கத்ரி KHஹைறிகி
வஷர்ரிஹீ மினல்லாஹி தஆலா.

ஒருவரிடம் இந்த நம்பிக்கை வந்துவிட்டால் அவர் முஸ்லிம் ஆகிவிடுகின் றார். அவ்வாறு முஸ்லிமானவுடன் அவரது நம்பிக்கை நாளாந்தச் செயலாகப் பரிணமிக்க வேண்டும். அவற்றை அடுத்து நோக்குவோம்.

117. அல்குர்ஆன் 2: 255
* சில அறிஞர்கள் இறை நிர்ணயம் பற்றிய நம்பிக்கையை இறை நம்பிக்கையுடன் இணைத்து ஐந்து அம்சங்களாக விளக்குகின்றார்கள். இதுவும் சரியானதே.

## கட்டாயக் கடமைகள்!

ஒரு முஸ்லிம் தன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயக் கடமைகள் ஐந்தாகும். அவை மார்க்கத்தின் தூண்கள் என இஸ்லாம் வர்ணிக்கின்றது.

அவையாவன:

1. "அல்லாஹ்வைத் தவிர
(வணங்குவதற்கும், வழிபடுவதற்கும்,
சட்டம் இயற்றுவதற்கும், கீழ்ப்படிவதற்கும்)
வேறு இறைவன் இல்லை" என்றும்,
"முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின்
அடிமையும் திருத்தூதரும் ஆவார்" என்றும் சான்று பகர்தல்.
2. தொழுகையை நிலை நிறுத்துதல்
3. ஸக்காத் கொடுத்து வரல்
4. ஹஜ் கடமையை நிறைவேற்றல்
5. ரமளான் மாதத்தில் நோன்பு நோற்றல்[118]

இவற்றைப் பற்றி சிறு விளக்கம் பெறுவது பயனுடையது எனக் கருதுகின்றேன்.

## சான்று பகர்தல்!

ஒருவர் முஸ்லிம் ஆனவுடன் இஸ்லாத்துடனான தனது உறவை, அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிபணிவது என்ற தனது உணர்வை கீழ்க்காணும் சொற்றொடரை மொழிந்து உறுதிபடுத்த வேண்டும். அதேவேளை, இதை மொழிபவரது உள்ளத்தில் இதற்கு மாறான எக்கருத்தும் கொள்கையும் இருக்கக் கூடாது; அதேபோல் அன்றாட வாழ்விலும் இதன் கருத்துக்கு மாறாக இயங்கும் நோக்கம் இருக்கக் கூடாது. இது முதலாவது கட்டாயக் கடமை.

இச்சொற்றொடர் அரபு மொழியில் இவ்வாறு அமைகின்றது:

- அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு
வ அஷ்ஹது அன்ன முஹம்மதன்
அப்துஹு வ ரஸூலுஹு

இதன் முதற் பகுதி
— அல்லாஹ் ஒருவன்
— அவனன்றி வேறு இறைவன் இல்லை
— அவன்தான் இப்பிரபஞ்சத்தைப் படைத்தவன்

---

118. அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி) அவர்கள். ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

— மனிதனையும் மற்றைய யாவற்றையும் படைத்தவன்
— எல்லா உயிரினங்களுக்கும் உரிய
பிறப்பை, வாழ்வை, மரணத்தை நிர்ணயிப்பவன்
— அவனே சட்டகர்த்தா
— கீழ்ப்படிவதற்குத் தகுதியானவன்
— வணக்கத்திற்கு உரியவன்
— பிரார்த்தனைகளை ஏற்பவன்
— மறுமையில் மனிதனை விசாரணை செய்பவன்
— நன்மை தீமைகளுக்கேற்ப
சுவனத்தையோ நரகத்தையோ தருபவன்

போன்ற கருத்துக்களைக் கொண்டுள்ளது.

இதன் இரண்டாவது பகுதி, முஹம்மத் (ஸல்) அவர்கள்
— அல்லாஹ்வின் அடிமையும்
அவனது தூதரும் ஆவார். அன்றி
— அல்லாஹ்வின் இறைமையில்
அவருக்கு எத்தகைய பங்கும் இல்லை.
— அவர் முழு மனித சமுதாயத்திற்கும்
வாழ்வின் சகல துறைகளுக்கும்
ஒப்பற்ற முன்மாதிரி ஆவார்.
— அவரது சொல், செயல், அங்கீகாரம்
எல்லாமே மனித வாழ்வுக்குரிய முன்மாதிரிகளாகும்.

போன்ற கருத்துக்களைக் கொண்டுள்ளது.

இச்சொற்றொடர் - கலிமா - தொடர்பான மிகச் சுருக்கமான விளக்கமே நீங்கள் மேலே காண்கிறீர்கள். இதற்கு விரிவான விளக்கம் உண்டு. பொதுவாக ஒருவர் இதை எத்தகைய சந்தேகமும் கொள்ளாது மனப்பூர்வமாக ஏற்று, நாவினால் மொழிகின்றாரோ அவர் மேற்காணும் பிரமாணங்களை அளிக்கின்றார் என்றாகி விடுகின்றது.

ஒட்டுமொத்தமாகக் கூறுவதாயின் ஒருவர் இக்கலிமாவை மொழியும் போது, அதை மொழிவதற்கு ஒரு நிமிடத்திற்கு முன்பிருந்த தனது கொள்கை, கோட்பாடுகள், மத நம்பிக்கைகள், இலட்சியங்கள், வாழ்க்கை முறைக் கருத்துக்கள், கலாசார பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், மத அநுட்டானங்கள், கொண்டாட்டங்கள், மற்றும் மன இச்சை சார்ந்த எண்ணங்கள் போன்ற யாவையுமே முழுமையாகப் புறக்கணித்துவிட்டு, அவற்றைக் குழிதோண்டி புதைத்துவிட்டு, இக்கலிமாவின் மூலம் வெளிப்படும் கருத்துக்களைத் தனதாக்கிக் கொள்கின்றார்; அவற்றையே தன் இலட்சியமாக, வாழ்வாக ஆக்கிக் கொள்கின்றார் என்றாகி விடுகின்றது. அதன்பின் வாழ்க்கையின் எது தொடர்பாகவும் அவர்க்கென்று சொந்தக் கருத்தொன்று இல்லாமலாகி, இஸ்லாமிய கருத்தே அவரது கருத்தாக மாறி விடுகின்றது.

இக்கலிமாவை இஸ்லாத்தை ஏற்கும்போது மட்டும்தான் மொழிய வேண்டும் என்பதில்லை. மாறாக, ஒரு முஸ்லிம் தினமும், வாழ்க்கை முழுவதும் மீட்டி மீட்டி நாவால் மொழிவதும், இதன் கருத்துணர்ந்து செயல்படுவதும் அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுத் தரும். இதனை வலியுறுத்தும் நபிமொழிகள் ஏராளமாய் உள்ளன.

## தொழுகை

ஒரு முஸ்லிம், அல்லாஹ்வுக்கான தனது அடிபணிதலை வெளிப்படுத்தும் இரண்டாவது கட்டாயக் கடமை தொழுகையாகும். இத்தொழுகை மற்ற மதங்களிலுள்ள வணக்கமுறைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

முதலாவதாக - இஸ்லாத்தில் தொழுகை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டும் உரியதாகும். அன்றி, மற்ற மதங்களில் நடைமுறையில் வணங்கப்படுவதற்கு உரியனவாக உள்ள சிலைகள், சித்திரங்கள், சூரியன், நாகம், நெருப்பு, மிருகங்கள், முனிவர்கள், மரங்கள், உத்தம மனிதர்கள் போன்ற எவருக்கும் எதற்கும் வணக்கம் செலுத்துவது இஸ்லாத்தில் இல்லை.

*அல்குர்ஆன் மொழிகின்றது:*

● *"கூறுவீராக:*
*நிச்சயமாக எனது தொழுகையும்*
*என்னுடைய வழிபாடுகளும்*
*என்னுடைய வாழ்வும்*
*என்னுடைய மரணமும்*
*அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியனவாகும்"*[119]

இரண்டாவதாக - தொழுகை நேரம் குறித்துத் தரப்பட்ட ஒரு வணக்கமாகும். எனவே, அந்தந்த நேரங்களைப் பேணித் தொழுது வருவது எல்லா முஸ்லிம்களதும் கடமையே.

*அல்லாஹ் கூறுகின்றான்:*

● *"உண்மையாகவே குறிப்பிட்ட நேரத்தில்*
*நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன்*
*இறைநம்பிக்கையாளர்கள் மீது*
*தொழுகை கடமையாக்கப் பட்டுள்ளது."*[120]

நாம் எமது உடலைச் சக்திமிக்கதாகவும், ஆரோக்கியமுள்ளதாகவும், நல்லபடி இயங்கக் கூடியதாகவும் வைத்துக்கொள்ள தினமும் உண்ணுகிறோம்; பருகுகிறோம். அன்றி வாரத்திற்கு ஒருமுறை என்றோ மாதத்திற்கு ஒருமுறை என்றோ உணவை உண்பதும் பானங்களை பருகுவதும் இல்லை. ஆனால் ஆன்மாவுக்கான உணவை மட்டும் வாரத்திற்கு ஒருமுறை என்றோ மாதத்திற்கு

*119. அல்குர்ஆன் 6: 162* *120. அல்குர்ஆன் 4: 103*

ஒருமுறை என்றோ அல்லது விரும்பிய வேளையில் என்றோ வைத்துக் கொண்டால் சரியென்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படித்தான் பிற மதங்களில் வணக்கங்கள் அமைந்துள்ளன.

ஆனால், இஸ்லாம் ஆன்மாவுக்கான உணவையும் தினமும், அதுவும் கட்டாயமாக ஐந்து வேளைகள் வழங்க வேண்டும் என ஆணை பிறப்பித்துள்ளது. அதாவது, அனைத்து முஸ்லிம்களும் தினமும் குறித்த வேளைகளில் தொழுது வரவேண்டும்.

தொழுகை ஒரு முஸ்லிமின் அன்றாட நடவடிக்கைகளிலிருந்து தனித்து விட்டதொரு கடமையல்ல. அது எல்லா நடவடிக்கைகளுடனும் பின்னிப் பிணைந்து நிற்கின்றது.

ஒரு முஸ்லிம் அமைதியாக தன் இல்லத்தில் இருக்கின்ற வேளையில், தொழுகைக்கு அழைப்பு விடுக்கப்படுவதை செவிமடுக்கின்றான். உடனே அதனை நிறைவேற்ற விரைகின்றான். அவனது இவ்விரைவு அப்படியான வேளையில் மட்டுமல்ல, அவன் தோட்டத்தில், வயல் வெளியில் வேலை செய்யும் பொழுதும், கடையில் வியாபாரம் செய்வது, காரியாலயமொன்றில் கடமை புரிவது போன்ற வேளைகளிலும் இருக்கும். அவன் கிராமத்தில் அல்லது நகரத்தில், கடலில் அல்லது கரையில் மட்டுமல்ல போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் தொழுகைக்குரிய நேரம் வந்தால் அதை நிறைவேற்றாது இருக்க மாட்டான்.

ஒரு முஸ்லிம் தூக்கத்திலிருந்து விழித்ததும் தன்னைச் சுத்தம் (வுளூஉ) செய்துகொண்டு முதலில் நிறைவேற்ற முனைவது தொழுகையையே. அந்த அதிகாலைத் தொழுகைக்குப் பெயர் 'ஃபஜர்' என்பதாகும். அதன் பின் பல பணிகளுக்கிடையே பகலில் 'லுகர்' தொழுகையையும், அந்தி சாய ஆரம்பித்த போது 'அஸர்' தொழுகையையும், அந்தி சாய்ந்த பின் 'மஃரிப்' தொழுகையையும், இறுதியாக அன்றைய அவனது கடமைகள் முடிந்த பின் 'இஷா' தொழுகையையும் நிறைவேற்றுகின்றான். இவ்வாறு, ஒரு முஸ்லிமின் அன்றாட கடமைகளில் ஒன்றாக தொழுகையும் அமைந்து விடுகின்றது.

மூன்றாவதாக - இந்த வானத்தின் கீழ் எந்த இடத்திலும் ஒரு முஸ்லிம் தன் தொழுகையை நிறைவேற்ற முடியும். அதற்கு அவசியப்படுவது உடற்சுத்தமும், உடைச் சுத்தமும், இடச்சுத்தமும் மட்டுமே. ஏதோவொரு தொழுகைக்குரிய நேரம் வந்துவிடுகின்றது என வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது அதற்கென நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாயல் ஒன்று கிடைத்தால் மிகவும் நல்லதே. பள்ளிவாயலில் கூட்டாக - ஜமாஅத்தாக - தொழக் கிடைத்தால் பாக்கியமே. தனியே தொழுவதைவிடக் கூட்டாகத் தொழுவதற்கு 27 வீத நன்மை அதிகமாக வழங்கப்படுமென இஸ்லாம் கூறுகின்றது. எனவே, முடிந்த வரை அவ்வாறு கூட்டாகத் தொழுவதற்கு முயல வேண்டும்.

அவ்வாறு கிடைக்காத பட்சத்தில் வயல் வெளியிலோ, காட்டினிலோ, கடைத் தெருவினிலோ, புகையிரதத்திலோ, விமானத்திலோ, வீட்டிலோ உரிய

தொழுகையை உரிய வேளையில் நிறைவேற்றியே ஆகவேண்டும். பாதையிலே ஓடும் வாகனத்தை நிறுத்தி வைத்துவிட்டு தொழுபவரை நீங்கள் கண்டிருக்கக் கூடும் என நினைக்கிறேன். தொழுகைகளை சுருக்கியும் சேர்த்தும் நிறைவேற்ற முறைகள் உண்டு. இந்த வசதிகள் தரப்படுவதற்குக் காரணம், தொழுகையில் அசிரத்தையாய் இருக்கக் கூடாது என்பதே.

நான்காவதாக, தொழுகையின் வெளிக்கிரியைகளும் உள்ளத்து உணர்வுகளும் ஒருமுகப்பட்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் தொழுகை உயிரோட்டம் உடையதாய் அமைய முடியும்; அதன் அபரிமிதமான பயன் களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

எனவேதான் தொழுகையில் ஈடுபடும் ஒருவர், வெளிக் கிரியைகள் எதிலும் இஸ்லாம் வரையறுத்துள்ளதற்கு மாற்றமான எதையும் செய்வதில்லை; பேசுவது, சிரிப்பது, அங்கிங்கு பார்ப்பது எவற்றிலும் ஈடுபடுவதில்லை. அதேவேளை இஸ்லாம் கூறிய பிரகாரம் நிலையில் நிற்பது, குனிவது, தரையில் நெற்றியை வைப்பது, குர்ஆன் வசனங்களை ஓதுவது, அல்லாஹ்வைப் புகழ்வது, பிரார்த்தனை புரிவது போன்றவற்றை ஒழுங்காக நிறைவேற்றுவார்.

வெளிக் கிரியைகள் இவ்வாறு அமையும் அதே சமகாலத்தில் அவரது உள்ளத்திலும் மகத்தானதோர் ஆன்மிகப் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக் கும். அந்த உள்ளம் அல்லாஹ்வுக்கு முற்றும் அடிபணிந்த உணர்வைப் பெற்று, அவன் இடும் கட்டளைகள் எவற்றையும் நிறைவேற்றத் தயாராகிவிடும்.

இவ்வாறு உள்ளும் புறமும் சீராக அமையும் பொழுது, தொழுகையின் பயன்கள் இவ்வளவுதான் என வரையறுத்துக் கூற முடியாது போய்விடும்.

ஐந்தாவதாக - தொழுகை மூலம் கிடைக்கப்பெறும் சில முக்கிய பயன் களை நாம் நோக்குவோம்.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு இறையடியானிடமும் கொண்டுவரும் பயன்களாவன:

— அல்லாஹ்வுடன் நெருங்கிய உறவு உருவாவது
— அல்லாஹ்வின் ஞாபகம் உள்ளத்தில் பசுமையாய் குடிகொள்வது
— தீமைகள், பாபங்களிலிருந்து விடுபடுவது
— உள்ளமும், உடலும் எப்பொழுதும் தூய்மையாய் இருப்பது
— அன்றாட செயல்களில் ஆகும் (ஹலால்) ஆகாததைப் (ஹராம்) பேணுவது.

பொதுப் பயன்களாவன:

— இஸ்லாத்தை ஒழுங்காக விளங்கவும்
நடைமுறைப்படுத்தவும் தூண்டுதல் வழங்குவது

— உடற் பயிற்சியையும்
இராணுவப் பயிற்சியையும் தருவது
— காலம் நேரம் தவறாது
எக்காரியத்திலும் ஈடுபடும் பயிற்சியைத் தருவது
— இறையடியார்கள் மத்தியில்
சமத்துவத்தைத் தோற்றுவிப்பது
— இறையடியார்களை
ஐக்கியப்படுத்துவது.
— மனதை ஒருநிலைப் படுத்தும்
பயிற்சியைத் தருவது
— எப்பொழுதும் உடற் சுத்தத்துடனும்
உளச்சுத்தத்துடனும் இருக்க உதவுவது
— தீயவர்களின் உறவிலிருந்து விடுபட்டு
நல்லவர்களின் உறவைத் தருவது
— அனைத்து முஸ்லிம்களும்
ஒரே தலைமைத்துவத்துக்குக் கட்டுப்பட்டு
வாழவும் செயற்படவும் தூண்டுவது
— இறையடியார்களிடையே
அன்பையும் நல்லுறவையும் ஏற்படுத்துவது
— அனைத்துக்கும் மேலாக உலகில் உள்ள
அசத்தியங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும்
முற்றாக ஒழித்துக்கட்டி, அவற்றின் இடத்தில்
சத்தியத்தையும் அதன் செயற்பாடுகளையும்
கொண்டுவரும் போராட்டத்தில் ஈடுபடும்
உணர்வையும், உறுதியையும் உளப்பாங்கையும்
தருவது தொழுகையின் மிகப்பெரும் பயனாகும்.

இப்படி, இன்னும் ஏராளமான பயன்கள் தொழுகையின் மூலம் கிடைக்கும். இவை மற்றைய மத வணக்கங்களில் காணும் பயன்களை விடவும் பன்மடங்கு வித்தியாசமானவை; சிறப்பானவை என்பதை நீங்கள் எளிதில் புரிந்து கொள்வீர்கள்.

இத்தொழுகை பற்றி இறைவன் குறிப்பிடுவதாவது:

● “. . . தொழுகையை நிலைநிறுத்துவீராக!
திண்ணமாக, தொழுகை
மானக்கேடான மற்றும் தீயசெயல்களைத் தடுக்கின்றது.
மேலும், அல்லாஹ்வை நினைவுகூர்வது
இதைவிடப் பெரிய விஷயமாகும்.”[121]

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

---

121. அல்குர்ஆன் 29: 45

- "அவ(இறை நிராகரிப்பாள)ர்களுக்கும்
  எம(இறை நம்பிக்கையாளர்களு)க்கும்
  இடையிலான எல்லைக்கோடு தொழுகையாகும்.
  எவர் தொழுகையை விட்டு விடுகின்றாரோ
  அவர் காஃபிராகி (இறை நிராகரிப்பாளராகி) விடுகின்றார்."[122]

இங்கு குறித்துக் காட்டிய ஐவேளைத் தொழுகைக்குப் புறம்பாக, வெள்ளிக் கிழமை - ஜும்ஆத் தொழுகை கட்டாயத் தொழுகையாக்கப் பட்டுள் ளது. இதல்லாத இன்னும் தொழுகைகள் - பெருநாள் தொழுகை என்றும் கட்டாயமில்லாத (சுன்னத்தான) தொழுகைகள் என்றும் உள்ளன.

## நோன்பு நோற்றல்

இஸ்லாமியக் கட்டாயக் கடமைகளுள் மூன்றாவது நோன்பாகும். ரமளான் மாதம் வந்துவிட்டால் முழு உலக முஸ்லிம்களும் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், வயோதிப்ர்கள் என்ற வேறுபாடின்றி மிகுந்த உற்சாகத்துடன் நோன்பு நோற்க முற்படுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். அந்த வகையில் ரம ளான் மாதம் முழுதும் முஸ்லிம்கள் உவகையுடன் காணப்படுவார்கள்.

ஒருவர் நோன்பு நோற்பதற்கென அதிகாலையில் உணவருந்துவதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது அதிகாலை 'ஃபஜர்' தொழுகைக்காக 'அதான்' - அழைப்பு விடுக்கப்படுவதை செவிமடுத்தால் அந்த உணவை அப் படியே வைத்து விட்டு எழுந்துவிடுவார். அதன்பின் ஒரு பருக்கை உணவை உட் கொள்ளவோ, ஒரு துளி நீரை அருந்தவோ மாட்டார். அப்படியே மாலை 'மஃரிப்' தொழுகைக்கான 'அதான்' ஒலி கேட்கும் வரை பசித்தும் தாகித்தும் இருப்பார். இதன் கால எல்லை சுமார் 13 மணி நேரமாகும்.

இக்கால எல்லையில் அவர் தனது மனைவியுடன் உடலுறவு கொள்வது, கூடாத பேச்சு, பார்வை, நடத்தை ஆகியவற்றில் ஈடுபடுவது போன்றவற்றையும் முற்றாகத் தவிர்த்துக் கொள்வார். அதேவேளை குர்ஆன் ஓதுவது, தொழுகை யில் அதிகமதிகம் ஈடுபடுவது, அல்லாஹ் விரும்பக்கூடிய நற்செயல்களில் ஈடுபடுவது போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்துவார்.

உண்மையில் நோன்பானது ஒரு முஸ்லிமுக்கான உயர்ந்ததொரு பயிற்சி யாகும். அல்லாஹ்வுக்குத் தன்னை அர்ப்பணித்துவிட்ட ஒரு முஸ்லிம் அவனது பாதையில் தொடர்ந்து நிலைத்து நிற்கவும், போராடி சத்தியத்தை நிலைநாட்ட வும் பசித்து, தாகித்து, ஆசைகளை அடக்கி, மற்றாரின் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து வைக்க வேண்டும். அதோடு, தனது உடலுறுப்புக்கள், உணர்வுக்ள், எண்ணங்கள் யாவையும் பக்குவப்படுத்தி இறை உவப்புக்குரிய முறையில் செயற்பட வைக்க வேண்டும். இந்த இரண்டு அம்சங்களும் நோன்பின் மூலம் நிறைவுறுகின்றது.

---

122. அறிவிப்பவர்: புரைதாஹ் (ரலி) அவர்கள். ஆதாரம்: அஹ்மத், திர்மிதீ, நிஸாஈ, இப்னு மாஜாஹ்.

நோன்பு முஸ்லிம்களிடம் மட்டுமல்ல, முஸ்லிமல்லாத கிறிஸ்தவர்கள், யூதர்கள், இந்துக்கள், பௌத்தர்கள் மற்றும் சமயத்தவர்களிடமும் இருந்து வருகிறது. ஆனால், எதார்த்தத்தில் அதன் அசல் வடிவை இஸ்லாத்தில் தான் காண முடிகிறது. சில மதங்களில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு பகலில் எதுவும் உண்ணக்கூடாது; ஆனால், எதுவும் பருகலாம் என்றுள்ளது. இதனை நோன்பு என நீங்கள் கூறுவீர்களா?

அல்லாஹ் கூறுகின்றான்:

- "இறை நம்பிக்கையாளர்களே!
உங்களுக்கு முன் இருந்த
(நபிமார்களைப் பின்பற்றிய)வர்கள் மீது
கடமையாக்கப்பட்டதுபோல்,
உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது.
(அதன் மூலம்) நீங்கள்
இறையச்சமுள்ளவர்களாய்த் திகழக்கூடும்."[123]

## ஸக்காத்*

இஸ்லாத்தின் நான்காவது கட்டாயக் கடமை ஸக்காத்தாகும். அல்குர் ஆனில் இதனை வலியுறுத்தும் பல வசனங்கள் இருக்கின்றன.

'ஸக்காத்' என்றால் 'தூய்மைப்படுத்துதல்' அல்லது 'சுத்தப்படுத்துதல்' என்று பொருள்படும். ஒரு செல்வந்தர் ஒரு வருட முடிவில் குறிப்பிட்ட ஒரு தொகை செல்வத்தைக் கொண்டிருந்தால் அதிலிருந்து 2½ வீதத்தைக் கணக் கிட்டு அல்லாஹ் குறித்துக் காட்டும் ஏழைகளுக்கும் தேவையுள்ளோருக்கும் கொடுக்க வேண்டும். அவ்வாறு ஸக்காத்தைக் கொடுக்கும் பொழுது குறிப்பிட்ட நபரின் செல்வம் தூய்மையடைகின்றது.

ஒரு செல்வந்தர் ஸக்காத் கொடுப்பது அவரது விருப்பத்தைப் பொறுத்த ஒரு செயலல்ல. மாறாக, அவர் அதை உரிய காலத்தில் முறைப்படி கொடுக்க வேண்டியது அவரது கடமையாகும். நபி (ஸல்) அவர்கள் காலத்திலும் அவர் களைத் தொடர்ந்து ஆட்சிபுரிந்த நான்கு கலீஃபாக்கள் காலத்திலும், அதற்குப் பின்வந்த இஸ்லாமிய ஆட்சிகளிலும் ஸக்காத் சேகரித்து வினியோகிக்கப் பட்டது. இன்றும் அவ்வாறு சேகரித்து வினியோகிக்கப்படும் வழக்கம் முஸ்லிம் சமுதாயத்தில் பரவலாகக் காணப்படுகின்றது.

மனிதர்களில் எல்லோரும் செல்வந்தர்களல்லர். பரம ஏழைகள், தேவைகள் பல உள்ளவர்கள், கடன் பட்டவர்கள், குடும்பப் பொறுப்புள்ளவர் கள் எனப் பல வகையானோர் அவர்களில் உள்ளனர். அவர்களின் அந்த நிலை அவர்களுக்குப் பல வகையான தொல்லைகளைக் கொண்டு வரும்; அவற்றின்

---

123. அல்குர்ஆன் 2: 183

* இது பற்றிய பூரண விவரங்களை இதற்கான தனியான நூல்களில் பார்க்கவும்.

விளைவாக அவர்களின் வாழ்வு இன்னுமின்னும் பிரச்சினைகளுக்குள் அமிழ்ந்து விட முடியும்.

ஸக்காத் இத்தகைய மக்களுக்கு பெரும் ஆறுதலைக் கொடுப்பதாக அமையும். மனிதனின் பரம தரித்திர நிலையிலிருந்து உயர்த்தி விடுவதாகவும் அமையும். எனவே, ஸக்காத் கொடுக்கக் கடமைப்பட்ட ஒருவர் அதைக் கொடுக்காவிட்டால் பெரும் குற்றவாளியாவார். அத்துடன், அவர்கள் ஈருல கிலும் பல கஷ்ட நஷ்டங்களைச் சந்திப்பர் என இஸ்லாம் கூறுகின்றது.

ஸக்காத்தைக் கொடுப்பதுடன் மேலதிக தானதருமங்கள் வழங்குபவர் கள் அல்லாஹ்வின் அன்புக்கும் அருளுக்கும் உரியவராவார்கள் என இஸ்லாம் கூறுகின்றது.

## ஹஜ்

இஸ்லாத்தின் ஐந்தாவது கட்டாயக் கடமை ஹஜ் செய்வதாகும். அல்லாஹ்வின் முதல் ஆலயமான 'கஃபா' அமையப் பெற்றுள்ள மக்காவரை சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்குரிய பொருளாதார வசதியும், உடல் சக்தியும் உள்ள ஆண் பெண் சகலரும் வாழ்வில் ஒரு முறையேனும் இதனை நிறைவேற்றுவது கட்டாயமாகும்.

இஸ்லாமியக் கடமைகளில் ஹஜ் தனியானதோர் இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. துல்ஹஜ் மாதம் வந்துவிட்டால் முழு உலகிலுமிருந்து லட்சக் கணக்கான முஸ்லிம்கள் கஃபாவை நோக்கித் தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் வந்து குவிவர். அவர்களிடையே நிறம், மொழி, தேசம், பழக்க வழக்கங்கள் என்பவற்றால் பல வேறுபாடுகள் இருக்கும். என்றாலும் மக்காவின் குறிப்பிட்ட எல்லைக்கு வந்துவிட்டால் அத்தனைப் பேரும் வெள்ளை உடையுடன் காட்சியளிப்பர். அல்லாஹ்வைப் புகழ்ந்தவர் களாகத் தங்களது ஹஜ் கிரியைகளில் ஈடுபட்டிருப்பர்.

இதேவேளை, முழு உலக முஸ்லிம்களும் தத்தமது நாடு, நகரங்கள், கிராமங்களில் ஹஜ் பெருநாளுடன் ஒட்டியதான வணக்க வழிபாடுகளில் ஈடு படுவர். இந்த வகையில் முழு உலகமும் ஹஜ் மயமானதாகக் காணப்படும்; ஒவ் வொரு முஸ்லிமின் உள்ளத்திலும் ஹஜ் கற்பிக்கும் தியாக உணர்வுகள் படிந்து வாழ்வை செம்மைப்படுத்தும்.

ஒரு வகையில், உலக முஸ்லிம்கள் தத்தமது இல்லங்களில் ஹஜ்ஜைக் கொண்டாடும் போது, அவர்களது பிரதிநிதிகள் 'கஃபா' எனும் மக்காவில் அமைந்த உலக இஸ்லாமியப் பாராளுமன்றத்திற்கு வந்து, வணக்கம் புரிந்து, உறவாடி, உரையாடி, உணர்வுகளைப் பெற்றுத் தத்தம் இடங்களுக்குத் திரும்பிப் போய் இஸ்லாமிய அமைப்பைக் கட்டியெழுப்ப முனைவதாகவும் இதை உருவகப்படுத்திப் பார்க்க முடியும்.

மக்காவிலுள்ள கஃபாவை நோக்கி மக்கள் திரண்டு வருவது இன்று நேற்றோ, நபி (ஸல்) அவர்கள் காலத்திலோ அன்றி வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே நடைபெற்று வருவதாக வரலாற்றாசிரியர் 'மூர்' (Muir) குறிப்பிடுகின்றார். பின்னர் அல்லாஹ்வின் கட்டளைப்படி இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது மைந்தரான இஸ்மாயில் (அலை) அவர்களுடன் சேர்ந்து அதைப் புனர்நிர்மாணம் செய்து எல்லா மக்களும் ஹஜ் செய்வதற்குப் பொது அறிவிப்புச் செய்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்களது காலத்தை அண்மிக்கும் பொழுது கஃபாவில் பலதெய்வ வழிபாடுகளும், அதனை நிர்வாணமாக வலம் வருவதும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நபி (ஸல்) அவர்கள் அவற்றை அடியோடு அகற்றி, மிகத் தூய வழியில், ஏகத்துவம் சார்ந்த முறையில் வழிபாடுகள் இடம்பெறச் செய்தார்கள். அன்று முதல் அவ்வாறே அவை நடைபெற்று வருகின்றன. இனி வரும் காலங்களிலும் ஹஜ் கிரியைகள் இன்னும் சிறப்பாக நடைபெறும், இன்ஷா அல்லாஹ்.

## பொதுவாக . . . .

இதுவரை நாம் பார்த்த ஐங்கடமைகளையும் அறிவுடனும் உண்மையான உள உணர்வுடனும் நிறைவேற்றும் ஒரு முஸ்லிம் தன்னைச் சுற்றி வாழும் மக்களின் வாழ்விலான தீமைகளைக் கண்டு கவலை கொள்கிறான். அவற்றை வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டு அவற்றினிடத்தில் நன்மைகளை நிலைநாட்ட முனைகிறான். அதற்காகத் தனது உயிர், உடைமைகள் மற்றும் யாவற்றையும் அர்ப்பணிக்கத் தயாராகின்றான்.

இத்தகைய போராட்டத்திற்கும், தியாகங்களுக்கும் உணர்வூட்டும் இஸ்லாத்தைப் போன்ற மற்றொரு மதத்தையோ கொள்கையையோ நீங்கள் காணமாட்டீர்கள்.

*அல்லாஹ் கூறுகின்றான்:*

- "மேலும் இவ்வாறே (முஸ்லிம்களான)
  உங்களை நாம் 'உம்மத்தன் வஸத்தன்' -
  சமநிலையுடைய சமுதாயமாக ஆக்கினோம்.
  நீங்கள் மக்களுக்குச் சான்று வழங்குபவர்களாகவும்,
  இறைதூதர் உங்களுக்குச் சான்று வழங்குபவராகவும்
  திகழ்ந்திட வேண்டும் என்பதற்காக!"[124]

மேலும், அவன் கூறுகின்றான்:

- "இனி மனித இனத்தைச் சீர்படுத்துவதற்காக
  தோற்றுவிக்கப்பட்டிருக்கும்
  மிகச் சிறந்த சமுதாயத்தவராய் நீங்கள் இருக்கிறீர்கள்.

---

*124. அல்குர்ஆன் 2: 143*

நீங்கள் நன்மை புரியும்படி ஏவுகின்றீர்கள்;
தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள்.
மேலும் அல்லாஹ் மீது நம்பிக்கை கொள்கின்றீர்கள்."[125]

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

- "உங்களில் எவரும் ஒரு தீமையைக் கண்டால்
தமது கையால் அதைத் தடுக்கட்டும்!
இயலாவிட்டால் தமது நாவால் தடுக்கட்டும்!
அதற்கும் இயலாவிட்டால் தமது உள்ளத்தால் தடுக்கட்டும்!
அதுவே ஈமானின் (விசுவாசத்தின்) பலவீனமான நிலையாகும்."[126]

இப்படித்தான் அல்லாஹ்வும், அவன் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் தீமைக்கெதிராக முஸ்லிம்களைத் தட்டியெழுப்பித் தயார்படுத்துகின்றார்கள்.

உண்மையில், நன்மை தீமைகள் பற்றிய சந்தேகத்திற்கு இடமில்லாத மிகத் துல்லியமான விளக்கம் இஸ்லாத்தில்தான் உண்டு. அதேபோன்று நன்மையை ஸ்தாபிக்கும் வழிமுறைகளும் தீமைகளை வேரறுக்கும் வழி வகைகளும்கூட திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் வழிகள் இஸ்லாத்தில்தான் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அதன் காரணமாகத்தான் மற்றெந்தக் கொள்கையையும் விடத் தீமைகளை ஒழித்துக்கட்டி நன்மைகளை நிலைக்கச் செய்வதில் இஸ்லாம் வெற்றி கண்டது.

இவற்றிற்கான வெகுமதிகள் குறுகிய இவ்வுலக வாழ்விலன்றி நீண்ட நிலையான மறுமை வாழ்வில் தருவதாக அல்லாஹ் வாக்களிக்கின்றான்:

- "உண்மையாக, அல்லாஹ்
இறைநம்பிக்கையாளர்களிடமிருந்து
அவர்களின் உயிர்களையும், உடைமைகளையும்
சுவர்க்கத்திற்குப் பகரமாய்
விலைக்கு வாங்கிக் கொண்டான்."[127]

## திறந்த மனதுடன் . . . .

அன்புள்ள சகோதரரே, சகோதரியே!

இதுவரை இஸ்லாத்தைப் பற்றி நான் முன்வைத்த கருத்துக்கள் உங்கள் சிந்தனைக்குரியன.

இஸ்லாம்

---

125. அல்குர்ஆன் 3: 110
126. அறிவிப்பவர்: அபூஸயீத் (ரலி) அவர்கள். ஆதாரம்: முஸ்லிம்
127. அல்குர்ஆன்6: 9 - 111

— தோற்றுவித்த ஒழுக்க மேம்பாடுடைய சமுதாயம்
— அது ஆற்றிய மகத்தான பணிகள்
— கூடாத விமர்சனங்கள், குழி பறிப்புகள்,
சிந்தனை ரீதியாகத் திரிபு படுத்திக் காட்டுபவைகள்,
இராணுவ ரீதியான தொடரான கெடுபிடிகள் போன்ற
பலமுனைத் தாக்குதல்களுக்கு மத்தியிலும்
அது உயிரோட்டத்துடன் நிலைத்து நின்று
வளர்ந்து பயன்படுதல்
— முஸ்லிம்கள் அனுடனான உறவை
இன்னும் இறுக்கமாகவும் நெருக்கமாகவும்
வைத்துக் கொள்ள ஆர்வங்கொண்டு விரைதல்
— முஸ்லிமல்லாத எண்ணற்ற அறிஞர்களும்,
சாதாரண மக்களும், ஆண் பெண் வேறுபாடின்றி
அதனை ஆராய்ந்து, சரிகண்டு, தமது மதமாக ஏற்று.
அதன் வளர்ச்சிக்காகப் பாடுபடல்

என்பன நீங்கள் திறந்த மனதுடன் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியன வாகும். அவ்வாறு இதில் கவனம் கொள்ளும் உங்களுக்கு வேறு வகையான சிந்தனைச் சிக்கல்கள், இடையூறுகள் எதுவும் வராது பார்த்துக் கொள்வது அவசியம். ஏனெனில், அவ்வாறானவை நீங்கள் இம்மார்க்கத்தைப் புரிந்து கொள்ள தடைகளாக முடியும்.

இதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

நீங்கள் இஸ்லாத்தை இன்னுமொரு மதத்துடன் அல்லது கொள்கை யுடன் ஒப்புநோக்கிப் பார்க்கலாம் - தவறில்லை; தடையும் இல்லை. ஆனால், அத்தகைய மதம் அல்லது கொள்கையை பூரண விசுவாசத்துடன் மனதில் இருத் திக்கொண்டு, இஸ்லாத்தை ஓரக்கண்ணால் வேண்டா வெறுப்புடன் பார்க் காதீர்கள். அத்தகைய பார்வைகள் ஒருபோதும் சரியான தெளிவைத் தரமாட் டாது. அத்துடன், ஓர் உண்மையைத் தேடிச் செல்பவர் அப்படி நடந்துகொள் வது நல்லதும் அல்ல.

மேலும், "நான் வாழையடிவாழையாகப் பெற்றுள்ள மதம் அல்லது கொள்கை சரியாயினும் பிழையாயினும் அதிலேயே இருந்துவிட்டுப் போகி றேன். புதிதாக மற்றொன்று எனக்குத் தேவையில்லை" என நீங்கள் வாளாதிருக் கவும் முடியாது; அப்படி இருக்கவும் கூடாது. ஏனெனில் நீங்கள் வாழும் சூழலில் தாண்டவமாடும் பலவிதமான தீமைகளும் பாவங்களும் எப்பொழு தாவது உங்கள் வீட்டிலும் குடிபுகுந்துவிட முடியும். அதனால் உங்கள் மனைவி மக்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் வாழ்வு நரகமாகிவிடும். எனவே, நீங்கள் அந்தத் தீமைகளையும் பாவங்களையும் முந்திக்கொண்டு அவற்றை அழித் தொழிக்க பொருத்தமான பரிகாரத்தைக் கண்டேயாக வேண்டும்.

சத்தியத்தைத் தேடிச்செல்வதில் நபி இப்றாஹீம் (அலை) அவர்களிடம் ஓர் அழகான முன்மாதிரி இருக்கின்றது. சிலை செதுக்கி வினியோகிப்பவரின் மகனான அவரது 'சத்தியத் தேடுதல்' பற்றி அல்லாஹ்வே அருள்மறையில்

இவ்வாறு குறிப்பிடுகின்றான்;

● "மேலும், இப்ராஹீம் தம் தந்தை ஆஜரை நோக்கி,
"சிலைகளையா நீங்கள் கடவுளாக்குகின்றீர்கள்?
நிச்சயமாக நீங்களும் உங்கள் சமூகத்தாரும்
பகிரங்கமான வழிகேட்டில் இருப்பதை நான் காண்கின்றேன்"
என்று கூறிய சந்தர்ப்பத்தை நீர் நினைவு கூரும்.
இவ்வாறே வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியமைப்பை
நாம் இப்ராஹீமுக்குக் காண்பித்துக் கொடுத்தோம்;
உறுதியான நம்பிக்கையுடையோரில் ஒருவராய்
அவர் திகழவேண்டும் என்பதற்காக! எனவே,
இரவு அவரை சூழ்ந்தபோது அவர் ஒரு நட்சத்திரத்தைக் கண்டு
"இதுதான் என்னுடைய இறைவன்" என்று கூறினார்.
ஆனால் அது மறைந்துவிட்டபோது,
"மறைந்து போகின்றவற்றை நான் நேசிப்பவனல்லன்" என்றுரைத்தார்.
பின்னர் ஒளி தரும் சந்திரனைக் கண்ட அவர்
"இதுதான் என்னுடைய இறைவன்" என்று கூறினார்.
ஆனால் அதுவும் மறைந்தபோது,
"என்னுடைய இறைவன் எனக்கு வழிகாட்டவில்லையெனில்
வழிதவறிய கூட்டத்தாருள்
நிச்சயமாக நானும் சேர்ந்திருப்பேன்" என்று கூறினார்.
பின்னர் ஒளிரும் சூரியனைக் கண்டபோது
"இதுதான் என்னுடைய இறைவன்,
இது எல்லாவற்றையும் விட மிகப் பெரியது" என்று கூறினார்.
ஆனால் அதுவும் மறைந்து போகவே,
"என் சமூகத்தவரே! நீங்கள் இறைவனுக்கு இணைவைக்கும்
அனைத்தை விட்டும் திண்ணமாக நான் விலகிவிட்டேன்.
வானங்களையும் பூமியையும் படைத்தவனின் பக்கம்
ஒரு மனத்துடன் என் முகத்தை நான் திருப்பி விட்டேன்!
மேலும், ஒருபோதும் நான் இணைவைப்பவர்களில்
உள்ளவனல்லன்" என்று கூறினார்."[128]

"மேற்காணும் இறைவசனங்கள் மூலம் இப்ராஹீம் (அலை) அவர்களின் ஆரம்பகாலச் சிந்தனைப் பாங்கு எவ்வாறு இருந்தது என விவரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நபித்துவம் வழங்கப்படுவதற்கு முன்பு அவர்கள் சத்தியத்தை அடைந்து கொள்வதற்கான சாதனமாய் அமைந்தது இந்தச் சிந்தனைப் பாங்கு தான். முழுக்க முழுக்க இணைவைக்கும் சூழலில் பிறந்து வளர்ந்து பிழையறு சிந்தனையும், சீரிய நோக்கமும் கொண்ட மனிதர் ஒருவர் பேரண்டத்தின் அறிகுறிகளைக் கண்டு அவற்றைச் சரியான முறையில் சிந்தித்து சத்தியத்தை அறிந்துகொள்வதில் எவ்விதம் வெற்றி கண்டார் என்பதை இந்தச் சிந்தனைப் பாங்கு நமக்கு உணர்த்துகின்றது."[129] என மௌலானா செய்யத் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

128. அல்குர்ஆன்6: 74 - 79
129. திருக்குர்ஆன், தமிழ் மொழிபெயர்ப்பு, தமிழ்நாடு இஸ்லாமிய நிறுவன வெளியீடு, பாகம் 1 (1994 மார்ச்), பக்: 236

இவ்வாறு சத்தியத்தைப் பெற்றுக்கொண்ட நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் மௌனமாக இருக்கவில்லை.

மாறாக, அந்த சத்திய இஸ்லாத்தை
— அந்த நாட்டு மன்னன் நம்ரூதுக்கு எடுத்துச் சொன்னார்.
— அதன்பால் வருமாறு தனது தந்தைக்கு அழைப்பு விடுத்தார்.
— தனது சமூகத்தினரின் சிலை வணக்கத்திற்கு
எதிராக வாதம் புரிந்தார்.
— இறைவனுக்கு இணைவைப்பதை வெறுத்தார்.
— இறைவனுக்கு இணைவைக்கும் தனது தந்தையையும்
சமூகத்தாரையும் விட்டு விலகிக் கொண்டார்.

இதனால் அவர் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டி வந்தது:
— அவரது தந்தை அவரைக் கல்லெறிந்து கொல்வதாகக் கூறினார்.
— அவர் நெருப்புக் குண்டத்தில் எறியப்பட்டார்.
ஆனால், நெருப்பு அவருக்குக் குளிர்ந்து விட்டது.
— இறுதியில் தான் பிறந்த நாட்டையே துறந்து செல்ல நேரிட்டது.

எனினும், அவர் தனது சத்தியப் பாதையிலிருந்து ஓர் அங்குலமேனும் விலகி நிற்கவில்லை. அதனால், அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான்; மேன்மைப் படுத்தினான்; சுவனத்திற்குரியவராக ஆக்கினான்; சத்தியத்தைத் தேடிச் செல்பவர்களுக்கு அவரை ஓர் அழகிய முன்மாதிரி என்று எடுத்துரைத்தான்:

● "உங்களுக்கு இப்ராஹீமிடத்திலும்
அவருடைய தோழர்களிடத்திலும்
ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது. அதாவது,
அவர்கள் தங்கள் சமூகத்தாரிடம் தெளிவாகக் கூறிவிட்டார்கள்:
"உங்களை விட்டும், இறைவனை விடுத்து
நீங்கள் வணங்குகிற கடவுளரை விட்டும்
நாங்கள் திண்ணமாக விலகி விட்டோம்.
நாங்கள் உங்களை நிராகரித்து விட்டோம். மேலும்,
உங்களுக்கும் எங்களுக்குமிடையே
நிரந்தரப் பகைமையும் வெறுப்பும் ஏற்பட்டுவிட்டன;
ஏக அல்லாஹ்வின் மீது மட்டும்
நீங்கள் நம்பிக்கை கொள்ளும் வரையில்!"[130]

நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் முன்மாதிரியை அனுசரித்து நீங்கள் சத்தியத்தை, உலகத்திலுள்ள தீமைகளை அழித்தொழிப்பதற்கான பொருத்த

130. அல்குர்ஆன் 60: 4

மான பரிகாரத்தைத் தேடிப் புறப்பட வேண்டும். அப்பொழுது, இஸ்லாம் எத்தகைய உயர்வான, இயற்கைக்குப் பொருத்தமான ஒரு மதம் - வாழ்க்கை நெறி - என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

மேலும், எத்தகைய இடர்கள் வந்தாலும், உற்றார் உறவினர்கள் வெறுத்தாலும், உங்களைப் பெற்றவர்களோ உங்களுக்குப் பிறந்தவர்களோ உங்கள் கணவரோ அல்லது மனைவியோ உங்களை விட்டொதுங்குவதாகப் பயமுறுத்தினாலும், உங்கள் உயிருக்கே ஆபத்து வந்துவிட்டாலும் அவற்றைப் பற்றி கவலை கொள்ளாது அல்லாஹ்வின் மார்க்கத்தை - இஸ்லாத்தை - உங்கள் வாழ்க்கைக்குரிய மார்க்கமாக ஏற்றுக்கொண்டால் நீங்கள் இவ்வுலகில் சரியான பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர் ஆவீர்கள்; மறுமையிலும் வெற்றியடைவீர்கள்.

நிச்சயமாக மறுமை வெற்றியே நிலையானது!

அல்லாஹ் வாக்களிக்கின்றான்:

● "எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு,
நற்செயல்கள் புரிந்தார்களோ
அவர்களுக்குத் திண்ணமாக
என்றென்றும் முடிவுறாத கூலி இருக்கிறது."[131]

## இஸ்லாத்தின் மூலாதாரங்கள்!

இஸ்லாம் நிலையான அடிப்படைகளை மூலாதாரங்களாகக் கொண்டுள்ளது. அவற்றிற்கமையவே அதனைப் போதிக்கவும், நடைமுறைப்படுத்தவும், அது சார்ந்த சமூக அமைப்பைக் கட்டியெழுப்பவும் முடியும். அன்றி, யாரும் எதையும் மொழிந்துவிட்டு இதுதான் இஸ்லாம் என வாதிட முடியாது.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

● "உங்களுக்கு மத்தியில்
நான் இரு விஷயங்களை விட்டுச் செல்கிறேன்.
அவ்விரண்டையும் நீங்கள் பின்பற்றி நடந்தால்
ஒருபோதும் வழிகேட்டில் விழமாட்டீர்கள்.
ஒன்று: அல்லாஹ்வின் வேதம்.
மற்றொன்று: அவன் தூதரின் வழிமுறை."[132]

---

131. அல்குர்ஆன்41: 8 132. முஅத்தா - மாலிக்

இந்த நபிமொழியின்படி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய இரண்டும் என்னவெனில்:

— அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆன்

— அவன் தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிமுறை என்னும் ஸுன்னா என்பனவாகும்.

இந்த இரண்டிலுமிருந்து ஊற்றெடுப்பதே இஸ்லாம். இவற்றுக்கு இசைவான கருத்துக்களையும் வழிகாட்டல்களையும் ஏற்று வாழ்வதுதான் ஒரு முஸ்லிமின் கடமை. இவற்றுக்கு மாறான எதையும் அது இஸ்லாம் என்ற பெயரில் போதிக்கப்பட்டாலும் ஏற்க வேண்டும் என்ற கடமை ஒரு முஸ்லிமுக்கு இல்லை.

எனவே, அல்குர்ஆனைப்பற்றியும், அவன் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றியும் அடுத்துவரும் பக்கங்களில் எடுத்துக்கூற விழைகின்றேன். அதோடு, முஹம்மத் (ஸல்) அவர்கள் தோற்றுவித்த சமுதாயத்தைப் பற்றியும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பல அம்சங்களை விவரித்துள்ளேன்.

இனி, அடுத்த பக்கங்களுக்கு நீங்கள் செல்லலாம். அவை இஸ்லாத்தின் சிறப்புக்குக் கட்டியங்கூறுவதை அவதானிக்கத் தவற மாட்டீர்கள் என்பது என் திடமான நம்பிக்கை - இன்ஷா அல்லாஹ்.

# அல்குர்ஆன்
# ஒரு வாழும் நூல்!

உலகில் காணப்படும் எந்த நூலையும்விட மிக அதிகமாக
ஓதப்படும் நூல்
— அல்குர்ஆன் ஒன்றேயாகும்!
கிறிஸ்தவ பைபிள் உலகின் மிக அதிகமான
விற்பனையைக் கொண்ட நூலாக இருக்கலாம். எனினும்,
இறைதூதரான முஹம்மத் அவர்களின் வழியில் செல்லும்
கோடிக்கணக்கான மக்கள்
அதை(குர்ஆனை)க் கவனமாகப் படித்து,
மனனமிட்டு,
அதன் நீண்ட பகுதிகளை
தினமும் தமது ஐவேளைத் தொழுகைகளில்
ஓதி வருவது நம் கவனத்தில் கொள்ளத்தக்கது.
முஹம்மத் அவர்களின்
முன்மாதிரியை ஏற்று வாழ்வோர்
பேசும் சக்தியைப் பெற்றுக்கொண்ட நாள் முதல்
— தினமும்
வாழ்நாள் முழுவதும்
அல்குர்ஆனை ஓதிவருவது
ஓர் அற்புதம் என்றுதான் குறிப்பிட வேண்டும்!
அதிக விற்பனையைப் பெற்று
ஆங்காங்கு அழகாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்ற
பைபிளை விட
மனித இதயங்களில் அமர்ந்து
மீட்டிவிட்ட வீணை போன்று உலகெங்கும் ஒலிக்கின்ற
அல்குர்ஆன் அற்புதமானது என்பதில் ஐயமில்லை!

■ சார்ல்ஸ் ஃபிரான்ஸிஸ் பொட்டர்
'The Faith Men Live by!' Kingswood Surrey (1955)
Charles Francis Potter, Page: 81

# 2

"உண்மையில் இந்தக் குர்ஆன்
முற்றிலும் நேரான வழியினைக் காண்பிக்கிறது.
மேலும், இதனை ஏற்றுக்கொண்டு
நற்செயல் புரிபவர்களுக்குத்
திண்ணமாகப் பெரும் கூலியுண்டு என்று
இது நற்செய்தி அறிவிக்கிறது."

— அல்குர்ஆன் 17: 9

# அல் குர்ஆன்

அல் குர்ஆன் முற்றிலும் அல்லாஹ்வின் வாக்குகளைக் கொண்ட ஓர் அருள் நூலாகும். அதில் அல்லாஹ்வன்றி, அவனிடமிருந்து அவற்றைப் பெற்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வசம் கொண்டுவந்த வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களோ, அதைப் பெற்றுக்கொண்ட அண்ணல் நபிகளார் அவர்களோ, வேறு யாருமோ மொழிந்த ஒரு சொல்லேனும் கிடையாது.

அல் குர்ஆனில் 114 அத்தியாயங்கள் இருக்கின்றன. அன்னை ஆயிஷா சித்தீக்கா* (ரலி) அவர்களது அபிப்பிராயப்படி அதில் 6 666 வசனங்கள் அடங்கப் பெற்றுள்ளன. அதன் மிகப் பெரிய அத்தியாயத்தில் 286 வசனங்கள் உள்ளன. அதன் மிகச் சிறிய அத்தியாயம் 3 வசனங்களைத்தான் கொண்டுள்ளது.

நீங்கள் குர்ஆனைப் பற்றிய ஆய்வொன்றை மேற்கொண்டால், அதனைப் போன்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மற்றொரு நூலை நிச்சயமாகக் காணவே மாட்டீர்கள். அதுவும் பல்வேறு கோணங்களில் அது ஆராயப்பட்டிருப்பதைக் காணும் நீங்கள் அதிசயப்படுவீர்கள்.

உலகின் வேறு எந்த நூலில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன என்று ஆராயப்பட்டுள்ளது? ஆனால், குர்ஆனில் என்னென்ன எழுத்துக்கள் எத்தனையெத்தனை உள்ளன; அவற்றின் கூட்டுத்தொகை என்ன; 'ஸபர்' (மேற்கோடு), 'ஸேர்' (கீழ்க்கோடு), 'பேஷ்' (மேல் வளைவுக்கோடு), 'ஷத்து' (அழுத்தல் குறி), 'மத்து' (நீட்டல் குறி) என்பன எத்தனையுள்ளன என்றெல்லாம் கணக்கிடப்பட்டுள்ளது அதன் மேன்மைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

இதன் காரணமாக இதில் எவரும் எதுவும் கூட்டவோ குறைக்கவோ, திருத்தவோ முடியாது. அப்படிப் பாதுகாக்கப்பட்டது அல் குர்ஆன்.

---

* நபி (ஸல்) அவர்களுடைய மனைவியருள் ஒருவர்.

குர்ஆன் ஒரு கருத்தை முன்வைக்கும்பொழுது கைக்கொள்ளும் முறைமை, அதற்கென எடுத்துக்கொள்ளும் ஆதாரங்கள், உவமைகள் என்பன தனியானவை; அடுத்து அதை சொல்லும் விதம், அதற்காக தேர்ந்தெடுக்கப் பட்ட மொழிநடை, அதில் பொதிந்துள்ள கருத்தாழம் என்பன தன்னிகரற் றவை. குர்ஆனை ஒருவர் ஓதும்பொழுது எழும் ஓசைநயம் மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டதாகும். நபி (ஸல்) அவர்களின் நண்பரும், இரண்டாவது கலீஃபாவுமான அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் குர்ஆனை ஓதும் வேளையில் இஸ்லாத்தின் எதிரிகள்கூட மறைந்திருந்து செவிமடுத்ததாக வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. அதனால்தான், அபூபக்கர் (ரலி) அவர்கள் மக்காவைத் துறந்து அபிஸீனியாவுக்குப் போக முற்பட்ட ஒரு சமயம், அப்படி போகவிடாது தடுத்த இப்னு தஃனா என்பவரை விளித்து, "இப்னு தஃனாவே! நீர் விரும்பினால் அபூபக்கரை உம்முடன் வைத்துக் கொள்ளலாம்; ஆனால் அவர் குர்ஆனை ஓதக்கூடாது!" என இஸ்லாத்தின் பரம வைரியாக இருந்த அபூ ஜஹ்ல் கூறினான்.

அந்த அளவுக்குக் குர்ஆனின் மொழியழகு சிறப்பாக அமைந்துள்ளது. ஆனால், அது கவிதைப் பாணியைக் கொண்டது அல்ல; உரைநடைப் பாணியில் அமைந்ததும் அல்ல. இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட தனியானதொரு பாணியில் அதன் கருத்துக்கள் அமைந்துள்ளன.

அல்லாஹ் கூறுகின்றான்:

● "அல்லாஹ் மிக அழகிய உரைகளை
இறக்கியிருக்கின்றான்; ஒரு வேதத்தை!
அதன் எல்லாப் பகுதிகளும் ஒரே சீராக உள்ளன."[133]

## பொதுவான நூல்களிலிருந்து மாறுபட்டது!

நீங்கள் பல வகையான நூல்களைப் படித்திருப்பீர்கள். அவை, அவற்றின் பொதுத் தலைப்புக்கேற்ப அத்தியாயங்களாக அமைக்கப்பட்டிருக்கும்; அவற் றுக்குள்ளும் சிறு தலைப்புக்கள் இருக்கும். அவ்வாறு அமைந்துவிட்ட நூல் களிலான கருத்துக்கள் யாவும் உதாரணங்கள், உவமைகள், சம்பவங்கள் போன்ற வைகளால் அழகாகக் கோர்க்கப்பட்டு அதன் பொதுத் தலைப்பில் சொல்ல நாடியதை அழகாக தந்து நிற்கும்.

ஆனால், குர்ஆனைப் பற்றிய முன்னறிவு இல்லாது, இன்றைய பொது வான நூல்கள் அமைந்துள்ள மேற்காணும் முறையை மனதில் வைத்துக் கொண்ட ஒருவர் அதைப் படிக்க முற்பட்டால் குழம்பிப் போய்விடுவார். காரணம், குர்ஆனின் வசனங்கள் அமைந்துள்ள முறைதான்.

133. அல் குர்ஆன் 39: 23

அல் குர்ஆனில், அல்லாஹ் அரசியல் பற்றி பேசுகின்றான்; ஆன்மிக வணக்க வழிபாடுகள் பற்றி உரையாடுகின்றான்; சமூக, தத்துவ, பொருளாதார அம்சங்களையும் எடுத்து வைக்கின்றான்; வரலாறு, விஞ்ஞானம், போர்கள், குடும்ப அமைப்பு, வாழ்வு, மரணம், மறுமை வாழ்வு போன்றவை பற்றி மட்டு மல்ல, தாவரங்கள், கால்நடைகள், தேனீக்கள் என்பவற்றுடன் எவருக்கும் பயன்படாத கொசுக்கள் பற்றியெல்லாம் உரையாடுகின்றான்.

இதிலுள்ள அதிசயம் என்னவென்றால் இவையெல்லாம் அத்தியாய வாரியாக, கருத்துக்களைத் தொடராகவும் படிப்படியாகவும் வளர்த்து வருவது போல் காணப்படாமையே. அதோடு, சில விஷயங்கள் பற்றி திரும்பத் திரும்ப உரையாடப்படுகின்றன; இன்னும் சில விடயங்கள் பல இடங்களில் பல்வேறு கருத்துக்களில் சொல்லப்படுகின்றன. மேலே சொல்லப்பட்ட விடயங்கள்கூட சிலவேளை ஒரே அத்தியாயத்திற்குள் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்து விட்டவைபோல் தோன்றும். இதுதான் குர்ஆனைப் பற்றிய முன்னறிவு இன்றி படிக்கும் புதியவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை!

இது குர்ஆனில் உள்ள குறையல்ல; அதைப் படிக்க முற்படுபவரில் உள்ள குறையேயாகும்!

விண்ணியல் பற்றி அறியாத ஒருவர் இரவு வேளையில் வானத்தை அண்ணாந்துப் பார்க்கின்றார் என வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது லட்சக் கணக்கான நட்சத்திரங்கள் சிறியதும் பெரியதுமாக அங்குமிங்கும் கண்சிமிட்டிக் கொண்டிருப்பதைக் காண்கிறார். அவற்றின் ஒழுங்கும் அமைப் பும் தெரியாத அவர், "இதென்ன; ஒரு பிடி மணலைத் தூவிவிட்டால் எத்தகைய ஒழுங்குமின்றி எங்கெல்லாம் சிதறிவிடுமோ அப்படியல்லவா இந்த நட்சத்திரங் கள் அமைந்துள்ளன!" என அங்கலாய்ப்பார். இது அவரது அறியாமை. ஆனால், விண்ணியல் அறிவுள்ள ஒருவர் வானத்தில் காணும் நட்சத்திரங்கள் அமைந் துள்ள ஒழுங்கைக் கண்ணுற்றால் வியப்புற்று விடுவார்; அவ்வளவு ஒழுங்காக வும் மிகத் துல்லியமாகவும் அவை அமைக்கப்பட்டுள்ளதை அவரது விண்ணி யல் பற்றிய அறிவு ஏற்றுக்கொள்கிறது.

இதுபோன்று, ஒருவர்

— குர்ஆன் வசனங்கள் அருளப்பட்ட முறைமை
— அது உரையாடும் அம்சங்கள்
— அதற்காக அது எடுத்துக்கொள்ளும் ஆதாரங்கள்
— அதன் அடிப்படை நோக்கம்

என்பவற்றை அறிந்த நிலையில் அல் குர்ஆனைப் படிக்க முற்பட்டால் அது எவ்வளவு நேர்த்தியாகவும் சீராகவும் அமைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்வார். அதைத் தனது வேத நூலாக ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் அதன் தன்னிகரற்ற ஒழுங்காலும் கட்டுக்கோப்பாலும் கவரப்பட்டு விடுவார் என்பதில் ஐயமில்லை.

## அறிவுக் கருவூலம்!

குர்ஆன் பல்வேறு அம்சங்கள் பற்றி மிகவும் உயர்ந்த நிலையில் உரையாடுவதாகக் குறிப்பிட்டேன். ஆனால், அவ்வுரையாடல்கள் யாவும் அந்தந்த விஷயங்களை வலியுறுத்துவதற்காக அன்றி மற்றொரு மகத்தான காரியத்திற்காகவே நடத்தப்படுகின்றது. அதேவேளை, அது உரையாடும் அம்சங்கள் பற்றியும் வேறு எந்த நூலும் கைக்கொள்ளாத பாணியில் முற்றிலும் இயற்கையான பாதையொன்றை, குர்ஆன் தனக்கென அமைத்துக் கொண்டுள்ளது.

அல் குர்ஆனின் அற்புத வடிவுக்கு அணி சேர்க்கும் வகையில் உள்ள சில கருத்துக்களை பேராசிரியர் அத்ஹர் ஹுசைன் கீழ்க்கண்டவாறு தொகுத்துத் தருகின்றார்:

"மனிதன் அறியாதிருந்த பல இயற்கை நிலைகள் பற்றி குர்ஆன் துல்லியமாகப் பேசுகிறது. இன்று மனிதனின் விஞ்ஞான அறிவு வளர்ந்த பின் குர்ஆனின் கூற்று எத்துணை உண்மை என்று உணரப்படுகின்றது.

உதாரணமாகப் பூமி சுழல்வதைச் சொல்கிறது. அது மிகத் தெளிவாக வர்ணிக்கிறது:

— "அவனே இரவைச் சுருட்டிப் பகலை விரிக்கின்றான்;
பகலைச் சுருட்டி இரவை விரிக்கின்றான்." (குர்ஆன் 39: 5)

மழை பெய்யும் முறையை அது அழகாக விளக்குகிறது:

— "அல்லாஹ்தான் காற்றை அனுப்புகின்றான்:
அது மேகத்தைக் கிளப்பி விடுகின்றது; பிறகு
அவன் நாடும் விதத்தில்
மேகங்களை வானத்தில் பரப்புகின்றான்.
அவற்றைப் பல துண்டுகளாய்ப் பிரிக்கின்றான்.
பின்னர், அவற்றுக்கிடையிலிருந்து
மழைத்துளிகள் உதிர்ந்து விழுவதை நீர் காண்கிறீர்..." (30: 48)

காற்று கருக்கொள்ளச் செய்கிறது எனும் உண்மையை அது எடுத்துக் கூறுகின்றது:

— "மேலும், கருக்கொள்ளச் செய்யும் காற்றை
நாமே அனுப்புகிறோம்..." (15: 22)

சூரியன், சந்திரன் மற்றும் இதர கோளங்கள் தத்தமது பாதையில் சுழல்கின்றன என்பதைக் குர்ஆன் கூறுகின்றது:

— "சூரியன் சந்திரனை சென்றடைய முடியாது.
மேலும், இரவு பகலை முந்திட முடியாது.

*ஒவ்வொன்றும் தத்தமது மண்டலங்களில்*
*நீந்திக் கொண்டிருக்கின்றன."* *(36: 40)*

*படைப்பினங்கள் நீரால் படைக்கப்பட்டன என்று கூறுகின்றது:*

— *"ஒவ்வொரு உயிரினத்தையும்*
*தண்ணீரிலிருந்து நாம் படைத்தோம்.*
*இவ்விஷயத்தை அவர்கள் ஏற்க மாட்டார்களா?"* *(21:30)*

*தாவரங்கள் ஜோடி ஜோடியாய்ப் படைக்கப்பட்டுள்ளதை விவரிக்கிறது:*

— *"மிகவும் தூய்மையானவன்;*
*எல்லாவகையான ஜோடிகளையும் படைத்திருப்பவன்!*
*அவை பூமி முளைக்கச் செய்யக்கூடியவையானாலும் சரி;*
*அவர்களுடைய இனத்திலிருந்தாலும் சரி;*
*அவர்கள் அறிந்திராத*
*மற்ற பொருள்களிலிருந்தானாலும் சரியே!"* *(36: 38)*

*கால்நடைகள், பறவைகளின் வாழ்வு பற்றியும் குறிப்பிடுகிறது:*

— *"பூமியில் வாழும் எல்லாப் பிராணிகளும்,*
*தன் இரு சிறகுகளின் துணைகொண்டு*
*பறந்து செல்லும் எல்லாப் பறவைகளும்*
*உங்களைப் போன்ற உயிரினங்களாகவே இருக்கின்றன*
*(என்பதைக் கவனியுங்கள்)"* *(6: 38)*

*தேனீக்களின் வாழ்வு பற்றிக் கூறுகிறது:*

— *"மேலும், (பாருங்கள்!) உம் இறைவன்*
*தேனீக்கு இவ்வாறு வஹி அறிவித்தான்:*
*'மலைகளிலும் மரங்களிலும்*
*பந்தல்(களில் படரும் கொடி)களிலும் நீ கூடு கட்டிக்கொள்.*
*மேலும், பலதரப்பட்ட பழங்களிலிருந்து*
*சாற்றை உறிஞ்சிக் கொள்.*
*உன் இறைவன் சீராக அமைத்துத் தந்த*
*வழியில் சென்று கொண்டிரு' -*
*அந்தத் தேனீக்களின் உள்ளேயிருந்து*
*பலவிதமான நிறமுடைய ஒரு பானம்*
*வெளிப்படுகின்றது. . . !"* *(16: 68, 69)*

*தாயின் கருவறையில் குழந்தையின் படிப்படியான வளர்ச்சி பற்றிப் பேசுகிறது:*

— "மனிதர்களே!
மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கை பற்றி
உங்களுக்கு ஏதேனும் ஐயமிருந்தால்
நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்:
நாம் உங்களை மண்ணிலிருந்து,
பிறகு இந்திரியத்திலிருந்து -
பிறகு இரத்தக்கட்டியிலிருந்து -
பிறகு வடிவமைக்கப்பட்ட அல்லது
வடிவமைக்கப்படாத சதைப் பிண்டத்திலிருந்து படைத்தோம்.
உண்மை நிலையை நாம் உங்களுக்கு
விளக்குவதற்காகத்தான் (இவற்றை நாம் எடுத்துரைக்கின்றோம்).
நாம் நாடுகின்ற(இந்திரியத்)தை
ஒரு குறிப்பிட்ட காலம்வரை
கருவறைகளில் தங்க வைக்கின்றோம். பிறகு
உங்களைக் குழந்தை வடிவில் வெளிக் கொணர்கின்றோம்." *(22: 5)*

"பிறகு, அந்த விந்தினை
இரத்தக் கட்டியின் வடிவத்தில் அமைத்தோம்.
பின்னர், அந்த இரத்தக்கட்டியை சதைக்கட்டியாய் ஆக்கினோம்.
பிறகு, அச்சதைக்கட்டியை எலும்புகளாய் ஆக்கினோம்.
பின்னர், அவ்வெலும்புகளைச் சதையால் போர்த்தினோம்.
பிறகு, அதனை முற்றிலும்
வேறொரு படைப்பாய் வளரச் செய்தோம்.
பெரும் அருட்பேறுகள் உடையவன் ஆவான் அல்லாஹ்,
படைப்பாளர்களிலெல்லாம் மிக அழகான படைப்பாளன்." *(23: 14)*

இத்தனை இருந்தும்
அது விண்ணியல் நூலும் அல்ல;
விலங்கியல் நூலும் அல்ல;
தர்க்கவியல் நூலும் அல்ல;
பௌதீக நூலும் அல்ல;
மருத்துவ நூலும் அல்ல!"[134]

## அல் குர்ஆனின் அடிப்படை நோக்கம்!

விஞ்ஞான உண்மைகள் அறியப்படாத காலத்தில்தான் குர்ஆன் அருளப் பட்டது. அதைப் பெற்றுக்கொண்ட அண்ணல் நபி (ஸல்) அவர்களோ எழுதப் படிக்கத் தெரியாதவர். அவர் தனது 40 ஆம் வயது வரை இத்தகைய கருத்துக்கள் எதுவும் அறவே பேசாதவர். அப்படிப் பேசக் கற்றுக் கொள்ளாதவர். இத்தகைய கருத்துக்கள் இவ்வளவு துல்லியமாகவும் தெள்ளத் தெளிவாகவும் அறிந்தவர் களும் அன்று இருக்கவில்லை.

134. திருக்குர்ஆன், பாகம் 2, மௌலானா மௌதூதி (ரஹ்), இஸ்லாமிய நிறுவனம், சென்னை - 12, (1992), பக்: 19, 20

இந்த நிலையில் திடீரென நபி (ஸல்) அவர்கள் இக்கருத்துக்களை - இன்றைய அறிவியல் உலகம்கூட வியக்கும் வகையில் - கூறினார் என்றால், அல்லாஹ் அன்றி வேறு எவர் இவற்றை அவருக்கு அறிவித்திருக்க முடியும். ஆனால், இவ்வுண்மைகள் எல்லாம் கூறப்படுவதன் நோக்கம் இவை தொடர்பான அறிவை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பது அல்ல. மாறாக, மனிதன் தீய கொள்கை வழிகளிலோ, தனது மன இச்சைக்கு அடிமைப்பட்டு வாழும் முறைகளிலோ சென்று, பாபங்கள் செய்து, இழிவடைந்து, அழிவுற்று, அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகாது தூய வாழ்வு வாழ வழிகாட்டுவதே இதன் நோக்கமாகும். இதற்குத் தூண்டுதல் வழங்கும் வகையில்தான் அல்லாஹ் எண்ணற்ற கருத்துக்களை எடுத்துரைக்கின்றான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட அல் குர்ஆனின் முதல் ஐந்து வசனங்களின் முதற் சொல் 'இக்ரஃ' - "ஓதுவீராக!" என்பதாகும்.

● "ஓதுவீராக!
(நபியே!) படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு!
(உறைந்த) இரத்தக்கட்டியிலிருந்து
மனிதனை அவன் படைத்தான்!
ஓதுவீராக! மேலும், உம் இறைவன்
எத்தகைய மாபெரும் அருட்கொடையாளன் எனில்,
அவனே எழுதுகோலின் மூலம் கற்றுக் கொடுத்தான்;
மனிதனுக்கு - அவன் அறியாதிருந்தவற்றையெல்லாம்
கற்றுக் கொடுத்தான்."[135]

இவ்வாறு தனது திருப்பணியைத் தொடங்கிய அல்குர்ஆன், தன் வழியில் உலகுக்கு வழிகாட்டும் உன்னத சமுதாயமொன்றை உருவாக்க முனைகின்றது. அந்த சமுதாயம் உலகம் முடியும் வரை எல்லாத் துறைகளிலும் வழிகாட்டும் ஒப்புயர்வற்றதாக இருப்பதற்கு அத்தனைப் பயிற்சிகளையும் அளிக்கின்றது.

ஆரம்பத்தில் ஒரு தனி மனிதராக நபி (ஸல்) அவர்கள் தம் பணியைத் தொடங்குகிறார்கள். பிறகு, இருவர், நால்வர், பத்துப் பேர், இருபது பேர், இருபத்தைந்து பேர் . . . இப்படி அந்த இறைநெறிச் சமுதாயம் வளர்கின்றது.

அப்படி வளரும் அந்த சமுதாயத்து மக்களுக்கு என்னவெல்லாம் தேவைப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் நேரிய வழியில் பெற்றுக்கொள்ள அல்குர்ஆன் வழிகாட்டுகின்றது. அல்லாஹ்வைப் பற்றிய உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்துவான் வேண்டி, அவனது தனித் தன்மை வாய்ந்த குணங்கள், வல்லமை, அந்தஸ்து, கண்ணியம், ஆட்சியதிகாரம், படைப்பாற்றல், பரிபாலிக்கும் ஆற்றல், மன்னிக்கும் தன்மை, அவன் படைத்த அண்டசராசரத்தின் அற்புதங்கள், இயற்கை உண்மைகள் போன்ற பலவற்றை அது எடுத்துரைக்கின்றது.

---

*135. அல்குர்ஆன் 96: 1 -5*

அந்தச் சமுதாயம் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் தலைமைத்துவத்தை ஏற்றால்தான் வெற்றியுண்டு என்பதற்கான அம்சங்கள் அனைத்தையும் ஆதார அத்தாட்சிகளுடன் முன்வைக்கின்றது.

அந்த மக்களின் வாழ்வு இவ்வுலகத்துடன் முடிவதல்ல. அதற்கு அப்பாலும் தொடர்கிறது என்பதை எடுத்துரைத்து, அதன்பால் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்த முனைகிறது. அந்த வகையில் மறுமையைப் பற்றிய முழுமையான காட்சியொன்றை சமர்ப்பிக்கின்றது. அந்தக் காட்சியில் இந்த அண்ட சராசரத்தில் அடங்கிய வானம், பூமி, சூரியன், சந்திரன், கோள்கள் என்பனவற்றுக்கு என்ன நடக்கும்; மனிதன் என்ன நிலையில் இருப்பான்; அவன் எவ்வாறு விசாரிக்கப்படுவான்; நன்மை செய்தோருக்கு வெகுமதிகளும் தீமை செய்தோருக்கு தண்டனையும் வழங்கும் முறையென்ன; சுவனம் எத்தகையது; நரகம் எத்தகையது என்பனவெல்லாம் தத்ரூபமாகவும் யதார்த்தமாகவும் காணக்கூடியதாய் இருக்கும்.

இத்தகைய நம்பிக்கைகளுடன் சத்தியத்தை ஏந்திச் செல்லும் சமுதாய மக்கள் மத்தியில் பிரச்சினைகள் தோன்றும்பொழுது அல் குர்ஆன் அவற்றை அவிழ்த்து விடும்; தேவைகள் ஏற்படும்பொழுது நேரிய வழியில் கொடுத்துதவும்; அந்த மக்கள் அளவுக்கு மீறிய வேகத்தில் செல்லும்பொழுது நிதானப்படுத்தும்; அவர்கள் சோர்வுறும்பொழுது உஷார்படுத்தும்; அவர்கள் வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் ஆளாகும்பொழுது மறுமையை முன்வைத்து பொறுமையைக் கைக்கொள்ளும்படி போதனை புரியும்.

அந்த மக்களுக்கு எதிரிகளினால் தொல்லைகள் உருவாகக் கூடிய வேளையில் குர்ஆன் முன்னெச்சரிக்கையாக அவற்றைக் கூறிவிடும்; நயவஞ்சகர்களின் சதிநாச வேலைகளையும் காட்டிக் கொடுத்துவிடும்; போர்களின்போது வெற்றியடைந்தால் பெருமிதம் கொள்ளாதிருக்கப் போதனை புரியும்; அதேவேளை, போர்களில் ஏற்படும் தோல்விகள், இழப்புகளால் துவண்டு விடாதிருக்க தைர்யப்படுத்தும்.

அந்த மக்கள் எந்தச் சந்தர்ப்ப சூழ்நிலையிலும் அல்லாஹ்வை மறந்திடாதிருக்கும் பொருட்டு தொழுகை மற்றும் வணக்க வழிபாடுகள், இறை தியானம், பிரார்த்தனை, அல்லாஹ்வைப் புகழுதல் போன்றவற்றில் ஈடுபட இறைமறை அறிவுறுத்தும்.

அந்த சமூகத்தின் ஒவ்வொரு தனி நபரையும் மனிதப் புனிதராக ஆக்கும் வகையில் ஒழுக்கம், கட்டுப்பாடு, நீதி, நேர்மை, உண்மைபேசுதல், ஆகுமான உழைப்பு, மக்கள் மீது கருணை காட்டுதல் போன்றவற்றைக் கூறி நெறிப்படுத்துகின்றது. அதேவேளை, அவர்கள் சேர்ந்து வாழும்பொழுது சகோதரத்துவமும் சமத்துவமும் பேணப்பட வேண்டும் எனவும் போதனை புரிகின்றது; இவற்றுக்குப் பங்கம் ஏற்படுத்தும் கோள், புறம், அவதூறு, பரிகாசம், குத்தல் வார்த்தைகள், பட்டப் பெயர் சூட்டுதல், சந்தேகம் கொள்ளுதல், மற்றாரின் குற்றங்குறைகளைத் துருவித்துருவி ஆராய்தல் போன்ற சகலவற்றையும் தவிர்த்துக் கொள்ளும்படி கட்டாயப்படுத்துகின்றது.

இவ்வாறு வளர்ந்து செல்லும் அந்த சமுதாயத்து மக்கள் ஒரு சமூக அமைப்பாக பரிணமிக்கும்பொழுது, அல்குர்ஆன் அந்தக் கட்டத்திற்கான போதனைகள், கட்டளைகள், சட்டங்கள் என்பனவற்றை வழங்குகிறது; நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் இஸ்லாமிய ஆட்சியை நிறுவியபொழுது அல்குர் ஆன் அதனை வழிநடத்தும் இஸ்லாமிய அரசியல் சாஸனத்தை வழங்கி, அவ்வ மைப்பைப் பாதுகாக்கும் அரணாகவும் திகழ்ந்தது.

ஒட்டுமொத்தமாகக் கூறுவதாயின், எத்தகைய கட்டுப்பாடுமின்றி கொலை, கொள்ளை, விபசாரம், மது, பழிக்குப் பழி என்பவற்றில் மூழ்கி, கண்ட கண்ட கற்களையெல்லாம் சிலையாக வடித்து, வணங்கி வழிபட்டு, வாழ்ந்து வந்த மக்களை தூய்மையின் கோபுரத்திற்கே அழைத்துச் சென்று விட்டது அல்குர்ஆன் எனக் கூற முடியும்; இக்கூற்றை எவரும் மறுக்க முடியாது.

அல்குர்ஆனின் ஆரம்ப வசனம் அருளப்படும்போது நபி (ஸல்) அவர்கள் தனித்து நின்றார்கள். ஆனால், அதன் 23 வருட நெடுந்தூரப் பயணத்தின் முடிவில் குர்ஆனின் எழுத்துக்கள்தான் உயிர்பெற்று வந்துள்ளனவோ எனக் கூறும்படியாக, மனிதப் புனிதர்கள் பெருமளவில் திரண்டிருந்தார்கள்.

அதாவது, குர்ஆனின் இறுதி வசனங்களான

- “இன்று உங்களுடைய தீனை
உங்களுக்காக முழுமையாக்கிவிட்டேன்.
எனது அருட்கொடையையும்
உங்கள் மீது நான் நிறைவு செய்துவிட்டேன்.
இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை
உங்களுடைய தீன்-வாழ்க்கை நெறியாக
ஏற்றுக்கொண்டுவிட்டேன்.”[136]

என்பவை அருளப்பட்ட வேளையில் சுமார் 124,000க்கும் அதிகமான இறை யடியார்கள் - அல்லாஹ்வுக்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட, அகமும் புறமும் தூய்மையடைந்த, தங்கக் குணமுடையவர்கள் திரண்டிருந்தார்கள்; அரபு நாட்டின் சுமார் 10 லட்சம் சதுர மைல்களுக்கு இஸ்லாம் சொந்தம் கொண்டாடியது.

## குர்ஆனும் முந்திய வேத நூல்களும்!

உலகில் தோன்றிய பல மதங்கள் இன்று இல்லை; அவற்றின் மூல நூல் களும் அழிந்துவிட்டன. எஞ்சியுள்ள மதங்களை இரண்டு பிரிவாகப் பிரித்து நோக்கலாம்.

1. அல்லாஹ் முன்னர் அருளிய வேதங்கள் மூலம் இஸ்லாத்தையே முன் வைத்தான். எனினும், பிற்காலத்தில் அவ்வேதங்கள் திரிபுபடுத்தப்பட்டு வேறு மதத் தோற்றங்களுக்கு வழிவகுக்கப்பட்டதால் உருவானவை.

---

136. அல்குர்ஆன் 5: 3

2. தனிப்பட்ட நல்ல மனிதர்கள் முன்வைத்த சில தத்துவங்கள் காலக் கிரமத்தில் மதங்களாக பரிணாமம் பெற்றவை.

இந்த இரு பிரிவிற்கும் அவற்றை விளக்கிக் கூறும் மூலநூல்கள் உள்ளன. எனினும், இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டாவது பிரிவின் மூல நூல்கள் வேத நூல்களின் அந்தஸ்தைப் பெறுவதில்லை. காரணம், அவை அந்தப் பிரிவைச் சார்ந்த கோட்பாட்டைத் தோற்றுவித்தவர்கள் மொழிந்த தத்துவக் கருத்துக்கள் என்பதனாலாகும். எனவே, அவை காலத்தின் தேவைக்கேற்ப மாற முடியும்; மாறிக்கொண்டுள்ளது.

முதற்பிரிவின் வேத நூல்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முன்னர் தோன்றிய நபிமாருக்கு அல்லாஹ் அருளியவை. அவை அனைத்தும் பின்னைய காலங்களில் திரிபுகளுக்கு ஆளாக்கப்பட்டாலும் அவற்றின் ஆரம்ப நிலை தூயதாகவே இருந்துள்ளது. எனவே அவற்றை சத்தியமானவை என்று இஸ்லாம் ஏற்றுக் கொள்கின்றது.

எனினும், அவையனைத்தும் 'தூய்மையானவை' என நம்புவதே நமக்குக் கடமை. நடைமுறைப்படுத்த முடியாது. அல் குர்ஆன் அருளப்பட்டதனால் அவை நடைமுறைப்படுத்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளது; செல்லுபடியற்ற தாக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்ததில் ஆழமான, எவரும் ஏற்கத்தக்க ஒழுங்குமுறைமை ஒன்று பொதிந்துள்ளதை நாம் காணலாம்.

இதை ஓர் உதாரணத்தின் மூலம் விளங்கிக்கொள்வது எளிது:

ஓர் அரசு ஒரு விடயம் தொடர்பாக ஒரு கட்டத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறது. சிறிது காலம் சென்றபின் அதே அரசு அதே விடயம் தொடர்பாக மற்றொரு சட்டத்தை அறிமுகப்படுத்தி, அதைத்தான் அனைத்து மக்களும் குறிப்பிட்ட அந்த விடயம் தொடர்பான சட்டமாக ஏற்க வேண்டும் என அறிவித்துவிடுகின்றது. இக்கட்டத்தில் முன்னைய சட்டம் தாமாகவே செல்லுபடியற்றதாகி விடுகின்றது. அதன்பின், புதிய சட்டமே நடைமுறையில் இருக்கும் அதிகாரம் பொருந்தியது என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். உண்மையில் இதுதான் சரியான வழிமுறையும்கூட.

இதுதான் குர்ஆனுக்கு முந்திய வேத நூல்களின் நிலை. அவற்றை எந்த இறைவன் அருளினானோ அவன்தான் அல் குர்ஆனை அருளினான். அந்த ரீதியில் முன்னையவை செல்லுபடியற்றுப் போகின்றன.

இந்த நிலையில் யார் குர்ஆனைத் தனது வேதநூலாக ஏற்று பின்பற்று கிறாரோ அவர் முன்னைய வேதங்களையும் அவற்றின் தூய்மையான நிலையில் பின்பற்றியவர் ஆகின்றார்.

இதிலிருந்து இஸ்லாம் உலக மதம் என்பது நிரூபணம் ஆகின்றது என்பதை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்!

## கற்பனைகள், கூட்டல் குறைத்தல்கள்!

நீங்கள் வேறு பல மதங்களின் மூல நூல்களை ஆராய்ந்து பாருங்கள். அப்பொழுது நீங்கள் பெரிதும் ஆச்சரியப்படும்படியான பல கற்பனைக் கதைகள், புராணங்கள், புரியாத தத்துவங்கள், சம்பிரதாயங்களை ஊக்குவிக்கும் அம்சங்கள், சாதிக் கொடுமையினை தொடரச் செய்யும் போதனைகள் இருப்பதைக் காணுவீர்கள்.

இந்துக்களின் வேத நூலொன்று, இந்துக்கள் பிறப்பில் உயர்வு தாழ்வை இப்படிக் கற்பிக்கின்றது:

—"ஈசுவரனுடைய
முகத்திலிருந்து பிராமணர்களும்
புயங்களிலிருந்து சத்திரியர்களும்
தொடைகளிலிருந்து வைசியர்களும்
பாதங்களிலிருந்து சூத்திரர்களும்
முறையே உண்டாயினர்."[137]

இது பற்றி இந்துக்கள் கோபங்கொள்ளாது சிந்தித்தல் நன்று.

உண்மையில் அந்த மதங்கள்
— வாழ்வின் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பனவாக இல்லை!
— மக்களது அன்றாட வாழ்வின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கி, அமைதியைத் தோற்றுவிப்பனவாக இல்லை!
— மக்களிடையே இணக்கத்தைத் தருவனவாகவும் இல்லை!

மாறாக, அவற்றை நம்பிக்கைகொண்ட மக்களை, அவர்கள் விளங்கிக்கொள்ள முடியாத தத்துவக் குவியலுக்குள்ளே சிக்கவைத்து, சில சம்பிரதாயங்கள், சடங்குகள், வழிபாடுகள் ஆகியவற்றுடன் திருப்தி கொள்ளச் செய்யப்பட்டுள்ளனர்; சில திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், அற்புதங்களுடன் அகமகிழச் செய்யப்பட்டுள்ளனர். காலமெல்லாம் திருவிழாக்களும், அற்புதங்களும் பயன்படுமா? வாழ்க்கை என்று ஒன்று உள்ளதே; அதற்குரிய வழிகாட்டல் என்ன என சிந்திக்கும் மனிதன் தடுமாற்றம் அடைகிறான்.

அந்தத் தடுமாற்றம் அவனுக்கு ஒரு வகையான விரக்தியை அளிக்கின்றது. முடிவில், 'இந்த வேத நூல்கள் காலத்தின் தேவைகளை நிறைவுசெய்ய போதுமானவையல்ல!' என்ற சிந்தனையுடன் அவற்றை மாற்றவும், திருத்தவும் கூட்டவும், குறைக்கவும் முனைகிறான். இதன் விளைவாக அவை இன்னுமின்னும்

137. ஆதாரம்: யஜூர் 30: 11

சிக்கலுள்ளவையாக மாறி விடுகின்றன. எனவே, அவற்றை திருத்துவதும் கூட்டிக் குறைப்பதும் தொடர்கதையாகி விடுகின்றன.*

ஆனால், அல்லாஹ் அருளிய புனித வேதமாம் அல் குர்ஆனை ஆராய்ந்து பாருங்கள். அது என்று அருளப்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை, "காலத்திற்குப் பொருத்தமில்லை" என்றோ, "கருத்துக்கு இசைவாய் இல்லை" என்றோ, "நடைமுறைச் சாத்தியம் இல்லை" என்றோ அதன் ஓர் எழுத்தோ, புள்ளியோ, சொல்லோ, சொற்றொடரோ மாற்றவோ, நீக்கவோ, கூட்டல் அல்லது குறைத்தல் செய்யவோ படவில்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

உண்மையில், குர்ஆனில் கட்டுக்கதைகள், கற்பனைகள், மந்திர ஜாலங்கள், புராணங்கள், மக்களுக்கு மனக்குழப்பத்தைத் தரும் கருத்துக்கள் என்பன எதுவுமேயில்லை. அதோடு, மூட நம்பிக்கைகள், மக்களுள் ஒரு சாரார் வாழ மறு சாராரை பலி கொடுக்கும் வழிமுறைகள் என்பனவும் அதில் இல்லை. மாறாக, முற்றிலும் இயற்கைக்கு இயைந்த முறையில் மனிதனுக்கு வழிகாட்டி நிற்கின்றது.

காலம் மாறும்; கருத்துக்கள் மாறும்; அவற்றுக்கமைய மனிதன் வாழும் முறைகளும் மாறும். அப்பொழுது, அவன் பல புதிய உத்திகளைக் கையாண்டு புதுக்கொள்கை வழியில் செல்லவே முற்படுவான்; அதுதான் வரலாறும்கூட!

அப்படி ஒரு காலநிலை வந்தால், அதற்கு முந்திய காலத்தின்

— வேத நூல்கள்
— அறிவுப் பொக்கிஷங்கள்
— வாழ்க்கை முறைகள்

என்பன புறக்கணிக்கப்பட்டு விடும்!

அவற்றைத் தந்த

— மதங்கள்
— அறிவியலாளர்கள்
— வாழும் வழி வகுத்தவர்கள்

ஒதுக்கப்படுவர்; பின்பற்ற முடியாதவர்களாக மதிக்கப்படுவர்; தூற்றப்படுவர். சிலவேளை, சிலர் மதிக்கப்படுபவர்களாக இருந்தாலும் பின்பற்றப்படுபவர்களாக இருக்க மாட்டார்கள்!

---

* "பைபிள் பல காலங்களாகவே மாற்றங்களுக்கு உள்ளாகி வந்திருக்கின்றது என்பதை வரலாறு நமக்குக் காட்டுகின்றது. 1952 இலும் 1971 இலும் வெளியிடப்பட்ட பைபிள் பதிப்பான Revised Standard Version, New American Standard Bible Version மற்றும் New World translation of the Holy Scriptures ஆகியவற்றில் King James Version என்னும் பைபிளில் இருந்த சில வசனங்கள் நீக்கப்பட்டுள்ளன. ரீடர்ஸ் டைஜஸ்ட், பழைய ஏற்பாட்டை ஐம்பது சதவீதம் குறைத்து வெளியிட்டது. சில ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்தவ சமய அறிஞர்கள் பைபிளை செக்ஸிலிருந்து தூய்மைப்படுத்த விரும்பினார்கள்."
- Christian Muslim Dialogue, Dr. H.M. Baagil M.D., World Assembly of Muslim Youth Publication, Page: 10

ஆனால், அல் குர்ஆன் அதன் இயல்பிலேயே

— புதியனவற்றுக்கு மத்தியில் புதியதாக
— சிந்தனைக் கருவூலங்களில் தனித்துவமுடையதாக
— அறிவியலின் அன்னையாகத்

திகழ்கின்றது. மனிதன் எச்சூழலில், எக்காலத்தில் வாழ்ந்தாலும் அந்தந்த சூழலிலும் காலத்திலும் அனைத்தையும் மிகைத்த அருட்கடாட்சமாக நின்று வழிகாட்டியுள்ளது; வழிகாட்டும் தகைமை கொண்டுள்ளது.

அதேபோன்று, அல் குர்ஆனின் வழியில் முன்னர் வழிகாட்டிய எவரும் பின்னவர்களால் ஒருபோதும் ஒதுக்கப்படவில்லை; பின்பற்ற முடியாதவர்களாய் மதிக்கப்படவில்லை; தூற்றப்படவும் இல்லை; தூற்றப்படவும் மாட்டார்கள். மாறாக, அத்தகையவர்கள் போற்றப்படுகின்றனர் - "அல்லாஹ்வின் அன்பும் அருளும் அவர்களுக்குக் கிட்டட்டும்" - என்ற பிரார்த்தனைக்குரியவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். இந்நிலை உலகம் உள்ளளவும் தொடரும் என்பதில் ஐயமில்லை.

அல் குர்ஆனுக்கும், அதனை ஏற்றுப் பின்பற்றியவர்கள், பின்பற்றுபவர்களுக்கும் இத்தகைய மேன்மையும், கண்ணியமும் கிடைக்கக் காரணம் என்னவெனில், அது மனித அறிவை மிகைத்த இறை ஞானத்தில் நின்றும் ஊற்றெடுத்த வாழ்வியல் வேத நூல் என்பதாகும்.

## குர்ஆனின் மொழி!

சில மதங்களின் மூல நூல்கள் எம்மொழிகளில் தரப்பட்டனவோ அம்மொழிகள் வழக்கில் இல்லை; அம்மத நூல்களுக்கு உரிமை கொண்டாடக் கூடிய மக்களது வாழ்வின் புழக்கத்திலும் இல்லை. அதாவது அவர்களது அன்றாட வாழ்வு சார்ந்த பேச்சிலும் எழுத்திலும் அவை பயன்படுவதில்லை.

உதாரணத்திற்கு நீங்கள் கிறிஸ்தவ பைபிளை எடுத்துக் கொள்ளலாம்.

இயேசு நாதருக்கு (நபி ஈஸா (அலை) அவர்களுக்கு) அருளப்பட்ட வேதத்தின் மூல நூல் 'பைபிள்' என்றே நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பீர்கள். அது உண்மையல்ல. அவர்களுக்கு ஆரம்பத்தில் அருளப்பட்ட வேதத்திற்கு 'இஞ்ஜீல்' என்று பெயர். அது 'அரமைக்' (Aramaic) என்ற மொழியிலேயே அருளப்பட்டது. இன்று அதன் ஒரு பிரதியாவது உலகத்தில் எங்கும் இருப்பதாகத் தகவல் இல்லை. அந்த மொழியைப் பேசுபவர்களும் எங்கும் இல்லை.

இந்நிலையில், இன்று புழக்கத்தில் இருப்பது 'அரமைக்' மொழியில் அருளப்பட்ட 'இஞ்ஜீல்' வேதத்தின் மொழிபெயர்ப்பு நூலான பைபிளும் அதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட மற்ற மொழிபெயர்ப்புகளுமேயாகும். எனவே, கிறிஸ்தவ மக்கள் இயேசு நாதருக்கு அருளப்பட்ட மூல வேதநூலைப் பார்த்துப் படித்துப் பயன்பெறும் பாக்கியத்தை இழந்து விட்டவர்களாவார்கள்.

இது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல. இன்னும் பல சமயத்தவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. ஏன் உங்களையே எடுத்துக் கொள்ளுங்களேன். நீங்கள் தற்போதுள்ள சமயத்தின் மூல நூலை அதன் மூல மொழியில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளீர்களா? அந்த மூல மொழி மக்கள் வாழ்வில் புழக்கத்தில் உண்டா? நிதானமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

அதேவேளை, அல் குர்ஆனை எடுத்துக் கொள்ளுங்கள்:

அல் குர்ஆன் ஆழமான கருத்துச் செறிவும், அழகிய இலக்கிய நடையும், தெளிந்த ஓசைநயமும் கொண்ட அரபு மொழியில் அருளப்பட்டுள்ளது. அது அருளப்பட்ட மக்கா மதீனா நகரங்கள் அடங்கிய அரேபியாவிலும் அதைச் சுற்றியுள்ள நாடுகளிலும் வாழும் சுமார் 20 கோடி மக்களின் தாய்மொழியாக அரபு மொழியே திகழ்கின்றது.

அரபு மொழி அந்தந்த நாட்டு மக்களின் ஜீவ மொழியாக அமைவதற்கு, அவர்கள் மொழிப் போராட்டம் எதுவும் நடத்தவில்லை. மாறாக, அது அதுவாகவே அந்த மக்களது வாழ்வுடன் இரண்டறக் கலந்து, வேர்பிடித்து, நிலைத்து நிற்கின்றது.

மேலும், அரபு மொழியைச் சரளமாகப் பேசும் கோடிக்கணக்கான அரபியரல்லாத மக்கள் உலகெங்கும் வாழ்கின்றனர்; அம்மொழியில் ஆழ்ந்த பாண்டித்தியம் பெற்ற முஸ்லிம்கள் மட்டுமன்றி, முஸ்லிமல்லாதாரும் உலகெங்கும் உள்ளனர்.

மேற்குலக நாடுகள் முஸ்லிம் நாடுகளல்ல என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், அவற்றிலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றில் அரபு மொழி போதிக்கப்படுகின்றது. சில பல்கலைக்கழகங்களில் அரபு மொழி போதனா பீடங்கள்கூட உள்ளன. அத்துடன், முஸ்லிம் நாடுகளில் மட்டுமன்றி முஸ்லிமல்லாத நாடுகளிலும் அரபு மொழியுடன் அமைந்த இஸ்லாமியக் கல்வியை பயிற்றுவிக்கும் கலைக்கூடங்கள் ஏராளமாய் உள்ளன.

குர்ஆனை அதன் மூல மொழியான அரபியில் ஓதத்தெரியாத முஸ்லிம்களே இல்லை எனலாம். சாதாரண, பாமரனான ஒரு முஸ்லிமாயினும், அவனும் அல் குர்ஆனின் சில பகுதிகளையாவது ஓதக்கூடியவனாகவே இருப்பான்.

குர்ஆன் அருளப்படுவதற்கு முன்னர்கூட அரபு மொழி, அரபு நாட்டு மக்களது வளமுள்ள மொழியாகவே திகழ்ந்தது. அவர்களது பேச்சு, எழுத்து மற்றும் இலக்கியங்கள் யாவும் இந்த மொழியில் இருந்தது. குர்ஆன் அந்த அரபு மொழியின் ஒப்புயர்வற்ற தனியான நடையில் மக்களுடன் உரையாட வருகின்றது. அதன் ஓசைநயத்தில் அந்த மொழியைத் தெரியாதவர்கள்கூட கட்டுண்டு விடுவர். அது மிக ஆழமான கருத்துக்களைக்கூட எளிய, இனிய, குறுகிய சொற்களில் முன்வைத்து மக்களை ஆட்கொண்டுவிடுகின்றது. இந்த ரீதியில் அரபு மொழியை சர்வதேச மொழியாக ஆக்கிய பெருமை குர்ஆனுக்கு உண்டு.

குர்ஆன் அருளப்பட்ட காலந்தொட்டு அதன்பால் ஈர்க்கப்பட்ட, ஈர்க்கப்படும் மக்கள் தொகை அதிகரித்து வருகிறதேயன்றி குறையவில்லை. இன்று அது தன்பால் மக்களை ஈர்க்கும் வேகம் முன்னெப்பொழுதும் இருந்ததைவிட பன்மடங்கு அதிகரித்துள்ளது. எதிர்காலம் அதன் உலகமாகத் திகழப் போகின்றது என்பதை இன்றைய உலகில் அதற்குப் பெருகிவரும் ஆதரவு நிரூபித்துக் கொண்டுள்ளது. இவ்வாறு குர்ஆனுக்கு விரிந்து கொடுக்கும் மனித மனங்கள் அதன் மொழியையும் ஏற்கத் தயங்காது. குர்ஆன் எங்கெல்லாம் தன் ஆதிக்கத்தை ஊன்றி விடுகின்றதோ அங்கெல்லாம் அரபு மொழியும் கூடவே சென்றடையும்.

இனி, எந்த மதத்தின் மூலநூலின் மொழி, வாழும் மொழியாக இருக்கிறது, குர்ஆனிய மொழியைத் தவிர என நீங்கள் கூறுவீர்களா? ஆனால், ஒரு முக்கிய அம்சத்தை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அதாவது, குர்ஆனிய மொழி 'ஒரு மொழிப் போராட்டம்' மூலம் நிலைபெற்றது அல்ல; அல்லாஹ்வின் அருளினால் நிலைபெற்றதாகும்.

மற்றைய மதங்களின் மூல நூல்களின் மொழிகள் மக்கள் புழக்கத்திலிருந்து விடுபட்டு, சிறுகச்சிறுக மறைந்துகொண்டுள்ளபோது, குர்ஆன் அருளப்பட்ட அரபு மொழி வளர்ச்சிப்பாதையில் சென்றுகொண்டுள்ளது.

## வேதநூல்களின் தொகுப்புமுறை!

ஒரு மதத்தின் மூல ஆதார நூல், 'நூல் வடிவத்தைப் பெற்ற முறைமை' மிக முக்கியமானது. அதனைக்கொண்டு அந்த நூலின் உயர்வை கணிப்பிட முடியும். அந்த வகையிலும் குர்ஆன் மற்றெந்த நூலையும்விடத் தனித்துவம் பெற்று விளங்குகிறது.

கிறிஸ்தவ பைபிளின் தொகுப்பு முறைபற்றியும், அதன் குறைபாடுகள் பற்றியும் ஏராளமான விமர்சனங்கள் உள்ளன. அந்த விமர்சனங்கள் மறுக்கப்பட முடியாத உண்மைகளே. அவற்றுள் ஒன்றிரண்டை நாம் நோக்குவோம்:

—"திருக்குர்ஆனுக்கு முன்பு, மக்களுக்கு அருளப்பட்ட
இறைவெளிப்பாடான பழைய ஏற்பாடும், பைபிளும்
தாம் அருளப்பட்டதற்கு வெகு காலத்திற்குப் பின்னர்தான்
நூல்வடிவில் தொகுக்கப்பட்டன.
அதுவும் மொழிபெயர்ப்பாகத்தான் தொகுக்கப்பட்டன.
ஏன் இவ்வாறு நடந்தது?
மூஸா (மோஸஸ்) (அலை), ஈஸா (இயேசு) (அலை) ஆகியோரைப்
பின்பற்றியவர்கள் தம் இறை தூதர்களுக்கு
அருளப்பட்ட வேதங்களைப் பாதுகாக்க
போதிய கவனம் செலுத்தவில்லை.
மாறாக, அத்தூதர்கள் மறைந்து நீண்ட காலம் சென்ற பின்னர்தான்
அந்த வேதங்கள் தொகுக்கப்பட்டன.

ஆக, இன்று நமக்குக் கிடைக்கும் பைபிள்
(புதிய ஏற்பாடும் பழைய ஏற்பாடும்)
அது அருளப்பட்ட மூல மொழியிலன்றி
வெறும் மொழிபெயர்ப்பாகத்தான் இருக்கின்றது.
அதிலும் தனிநபர்கள் செய்த ஏராளமான
திருத்தங்கள், மாற்றங்கள், இடைச்செருகல்கள்
கொண்டதாகவே இன்றைய பைபிள் காணப்படுகிறது.''[138]

— பைபிளில் நான்கு ஆகமங்கள் உள்ளடங்கியுள்ளன.
அவை முறையே மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பனவாகும்.
இவற்றில் இயேசு நாதரின் உணர்ச்சியூட்டக்கூடிய
பல கூற்றுக்களை நாம் காண்கிறோம்.
இந்த ஆகமங்கள் யாவும் இயேசு நாதர் பிரிந்து சென்றபின்
சில ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு
நாற்பதாண்டுக்கும் எண்பதாண்டுக்கும்
இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டன.
ஆனால், அந்த ஆவணங்கள் இப்பொழுது காணாமற் போய்விட்டன!
பைபிள் அறிஞர்கள் இவ்வாவணங்களில் சிலவற்றை
இனங்கண்டுள்ளார்கள்.
1 - 'Q' (German Quelle = 'Source') 'அரமைக்' மொழியிலான
காணாமற்போன ஆவணமொன்று
இதன் கிரேக்க மொழிபெயர்ப்பு ஆகமங்கள் எழுதியோர்க்குக் கிடைத்தது.
2 - ('Urmarcus' = Primitive Mark) இது இயேசு நாதரைப் பற்றி
பேதுரு பேசியவற்றை ஆதாரமாகக் கொண்டு
மாற்கு எழுதிய ஆரம்ப கால குறிப்பேடு.
3 - 'L' லூக்கா மட்டும் பயன்படுத்திய
இயேசு நாதரைப் பற்றிய அறிக்கைத் தொகுப்பொன்று.
இந்த ஆகமங்களை ஒப்புநோக்கிப் பார்த்தால்
இவற்றை எழுதியவர்கள் காணாமற்போன ஆவணங்களை
மிகவும் சுதந்திரமாகக் கையாண்டுள்ளதைக் காணலாம்;
மாற்கின் ஆகமம் ரோமில் வைத்து, இயேசு நாதர்
சிலுவையில் அறையப்பட்டதாக கூறப்படுவதற்கு
சுமார் நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்டது;
மத்தேயுவின் ஆகமம் கிரேக்கத்தின் அன்டியோக்கில்,
கி. பி. 90 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது;
லூக்காவின் ஆகமம் கிரேக்கத்தில் எங்கேயோ ஓரிடத்தில்,
கி. பி. 80 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டது;
யோவானின் ஆகமம் எஃபெஸஸ் (Ephesus) எனுமிடத்தில்
அல்லது அதற்கு அருகிய இடமொன்றில்
கி. பி. 110க்கும் 115க்கும் இடைப்பட்ட
காலத்தில் எழுதப்பட்டது!
இந்த நான்கு ஆகமங்களும் இயேசு நாதரின்

138. 'இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்', சவூதி அரேபிய வெளியீடு, பக்: 9

தூதை சமர்ப்பிப்பதில் கையாண்ட முறைகளை
நோக்கும் நாம் கீழ்க்காணும் அம்சங்களை மனதில் கொள்ளவேண்டும்:

1 - இயேசு நாதரின் உணர்வூட்டும் கூற்றுக்கள் எதுவும்
அவர் வாழும்போதே எழுதி வைக்கப்படவில்லை!

2 - இயேசு நாதர் பிரிந்து சென்ற கொஞ்ச காலத்தின் பின்னர்,
அவரைப் புகழுதல் ஆரம்பமான ஆரம்பக் கட்டத்தில்
தயாரிக்கப்பட்ட குறிப்புக்கள் யாவும்
கண்டுபிடிக்க முடியாதவாறு காணாமற் போய்விட்டது!

3 - கி. பி. 70க்கும் 115க்கும் இடைப்பட்ட காலத்தில்,
காணாமற்போன ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு
எழுதப்பட்ட ஆகமங்கள் யாவற்றிலும் உள்ளவை,
அவற்றை எழுதியவர்களின் கருத்துக்களுக்கமைய
இயேசு நாதருக்கு அதிக புகழ் தேடிக்கொடுக்கும் வகையிலோ
அல்லது தாம் சார்ந்துள்ள பிரிவுக்கு இணக்கமான வகையிலோ
எழுதச் சற்றும் தயங்காத அம்சங்களே!

4 - இவற்றை எழுதியவர்கள் எவருமே
இயேசு நாதரைப் பார்த்தவர்களல்லர்;
அவர்களுடைய பேச்சைக் கேட்டவர்களுமல்லர்!

5 - இயேசு நாதர் பேசிய மொழி 'அரமைக்' (Aramaic) என்பதாகும்;
ஆனால், ஆகமங்கள் எழுதப்பட்டது கிரேக்க மொழியிலாகும்!

6 - ஒன்றுக்கொன்று வித்தியாசமான பிரிவினரின்
கருத்துக்களைப் பரப்பவே இவை தொகுக்கப்பட்டன;
இதற்காக வெவ்வேறு கருத்துடைய வேறு
பலருடைய கருத்துக்களையும் தேர்ந்தெடுத்தனர்!

7 - சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் எழுதப்பட்ட இவை
அங்கீகாரமுடைய ஆதாரங்களைக் கொண்டவையல்ல;
அத்துடன் பல பிரிவுகளைச் சார்ந்த எழுத்தாளர்கள்
தத்தமது பிரிவுகளின் நலன் கருதி
மாற்றி எழுதியிருக்க முடியும்;
உண்மையில் மாற்றி எழுதப்பட்டுள்ளது!

8 - கொடெக்ஸ் ஸினய்டிகஸ் (Codex Sinaiticus),
கொடெக்ஸ் வத்திகானஸ் (Codex Vaticanus),
கொடெக்ஸ் அலெக்ஷன்டிரினஸ் (Codex Alaxandrinus) ஆகிய,
ஆகமங்களின் ஆரம்ப எழுத்துப் பிரதிகள்
நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளுக்கு உரியனவாகும்.
எனவே, இந்த எழுத்துப் பிரதிகள் இல்லாதிருந்த நூற்றாண்டுகளில்
இவ்வாகமங்கள் எந்த அளவு மாற்றங்களைக் கண்டது
என எவரும் அறிய மாட்டார்கள்!

9 - நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் இருந்த பல்வேறு
எழுத்துப் பிரதிகளில்கூட
பெருமளவு வித்தியாசங்கள் காணப்பட்டன!

10 - ஆகமங்கள் யாவையும் முழுமையாக நோக்கும்பொழுது
முரண்பாடுகளின் மொத்த உருவமாகக் காட்சியளிக்கின்றது!

இக்காரணங்களையிட்டு இயேசு நாதருக்கு இறைவனிடமிருந்து கிடைத்த செய்தியை அதன் தூய வடிவில் நாம் பெற்றுக்கொள்ளவில்லை என மேற்கின் கீர்த்திமிக்க அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். பைபிளில் இடம்பெற்றுள்ள நான்கு ஆகமங்களும் இயேசு நாதரின் தூய தூதைச் சமர்ப் பிப்பனவாகக் கொள்ளமுடியாது என்றும் அவர்கள் மொழிந்துள்ளனர்."[139]

இந்த மேற்கோள்களிலிருந்து பைபிளின் உண்மை நிலையென்ன என் பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்; அதைத் தொகுப்பதில் அமைந்து விட்ட முரண்பாடுகளையும் நிதர்சனமாகத் தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை.

இதேவேளை, பௌத்த தர்மத்தின் மூலநூல் எனப்போற்றப்படும் 'திரிபிடகம்' கூட தொகுப்பதற்கு மிக நீண்ட காலம் சென்றுள்ளது.* அதோடு, அதன் மொழி பௌத்த குருமார்களுக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய சில படித்தவர்களுக்கும் அன்றி பொதுவான பௌத்த மக்களுக்குத் தெரியாது. அது அவர்களது புழக்கத்தில் இல்லை!

இந்து மதத்தைப் பொறுத்த வரையில் நூல் தொகுப்பு முறைபற்றி நாம் உரையாடுவதற்கு முன்னர், 'இந்து மதத்தின் மூல முதல் நூல் எது' என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்வது அவசியம். ஏனெனில், இந்து மதத்தில் பலதெய்வ வழிபாடு இருப்பது போலவே 'வேத நூல்கள்' என்ற பெயரிலும் பல நூல்கள் ஒன்றையொன்று மிகைத்தவை என்ற நிலையில் பரவலாகக் காணப்படுவது தான் காரணம்.

## குர்ஆனின் தொகுப்புமுறை

திருக்குர்ஆன் 23 வருட காலமாகச் சிறுகச் சிறுக அருளப்பட்டது என முன்னர் பார்த்தோம். இப்படி அருளப்பட்ட வசனங்களைப் பாதுகாப்பதற்கு இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இரண்டு முறைகளைக் கையாண் டார்கள்.

1 - நபி (ஸல்) அவர்களுக்குக் குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டவுடன் அவற்றை எழுதிப் பாதுகாப்பது. இதற்காக அக்காலத்தில் இருந்த தோல் துண்டுகள், ஆடு, ஒட்டகை, மாடு ஆகிய பிராணிகளின் எலும்புகள், காய்ந்த பேரீத்த ஓலைகள் என்பன பயன்படுத்தப்பட்டன. அத்துடன் அவற்றை எழுதவென எழுத்தறிவும் நினைவாற்றலும் உடைய நபித்தோழர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

2 - குர்ஆன் வசனங்களை மனனம் செய்வது. பொதுவாக அரபு மக்களில் படிப்பறிவு இல்லாதவர்கள்கூட நினைவாற்றல் மிக்கவர்களாக இருந்

139. 'Islam and Christianity', Mrs. Ulfat Aziz-us Samad, (1984), Published in Saudi Arabia, Page: 2-8

* இந்நூலை எழுதும்போது இந்த விவரங்கள் கிடைக்கவில்லை. இதன் சிங்கள மொழிபெயர்ப்பில் இதுபற்றிய விவரம் தரப்படும், இன்ஷா அல்லாஹ்.

தார்கள். தங்கள் மூதாதையரின் பெயர்களைத் தலைமுறை வழுவாதும் தொடர் அறுபடாதும் கூறவும், நீண்ட கவிதைகளை ஓரிருமுறை படித்ததும் மனனம் செய்து கொள்ளவும் திறமை பெற்றிருந்தார்கள். அத்தகைய நபித் தோழர்கள் அல்லாஹ்வின் வசனங்களை ஆர்வத்துடன் மனனம் செய்யலானார்கள். அவர்கள் அல் குர்ஆன் வசனம் அருளப்படுவது எப்போது என எதிர்பார்த்து அருளப்பட்டதும் நபிகளாரிடம் கேட்டு மனனம் செய்துகொள்வார்கள். சிலர், நபிகளாருக்கு மறைவசனங்கள் அருளப்படும் வேளையில் அங்கில்லாதிருந்தால், அவர்கள் தம் இருப்பிடங்களுக்குத் திரும்பியவுடன் முதல் வேலையாக, குர்ஆன் வசனங்களை நபிகளாரிடம் கேட்டறிந்து மனனம் செய்துகொண்டவர்களைக் கண்டு, அவற்றைக் கேட்டு தாமும் மனனம் செய்துகொள்வார்கள். அடுத்து, தொழுகையில் குர்ஆன் வசனங்கள் ஓதுவதும் அதனை மனனம் செய்வதை இலகுவாக்கிவிட்டது.

நபி (ஸல்) அவர்களது இந்த ஏற்பாட்டின் விளைவாக, அல்லாஹ் கற்றுக்கொடுத்த முறைப்படி குர்ஆன் முழுவதையும் ஒழுங்காக எழுதிவைக்க முடிந்தது. அதேவேளை, பல நூறு நபித்தோழர்களும் குர்ஆனை மனனம் செய்து தம் இதயங்களில் தேக்கி வைத்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்களது அன்புத் துணைவியரான ஆயிஷா சித்தீக்கா (ரலி), ஹஃப்ஸா (ரலி), உம்மு ஸல்மா (ரலி) போன்றவர்களும் குர்ஆனை முழுமையாக மனனம் செய்திருந்தார்கள். மேலும், குர்ஆனை கற்றுக் கொடுப்பதும் பிரதானமானதொரு கடமையாக மேற்கொள்ளப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் மரணித்து ஆறு மாதம் கழிவதற்கு முன்னரே குர்ஆனை நூல் வடிவில் தொகுக்கும் பணி தொடங்கப்பட்டது. நபி (ஸல்) அவர்களுக்கு அடுத்து, இஸ்லாமிய ஆட்சியின் பொறுப்பை ஏற்ற கலீஃபா அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் இப்பெரும் பணியை, நபி (ஸல்) அவர்களுடன் நீண்ட காலம் நெருங்கி வாழ்ந்தவரும், அப்பொழுது குர்ஆன் வசனங்களை எழுதி வந்தவருமான ஜைத் பின் தாபித் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

அவர்கள் இப்பணியைத் தொடங்கும் அக்கட்டத்தில், நபி (ஸல்) அவர்களது முன்னிலையில் தோல்களிலும், எலும்புகளிலும், பேரீத்தமர ஓலைகளிலும் மற்றும் சிலவற்றிலும் எழுதப்பட்ட குர்ஆன் வசனங்கள் மிகுந்த பாதுகாப்புடன் இருந்தன; அத்துடன் நபி (ஸல்) அவர்கள் வாயிலாகவே குர்ஆன் வசனங்களைக் கேட்டறிந்து, அதை முழுமையாக மனனம் செய்த நபித்தோழர்களும் நூற்றுக் கணக்கில் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

எனவே, நபித்தோழர் ஜைத் பின் தாபித் (ரலி) அவர்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் நபி (ஸல்) அவர்களது மேற்பார்வையில் பல பொருட்களில் எழுதி வைக்கப்பட்டிருந்த குர்ஆன் வசனங்களை நபி (ஸல்) அவர்கள் அறிவித்திருந்த வரிசைக் கிரமப்படியும், அத்தியாய முறைப்படியும் தொகுத்து, குர்ஆன் வசனங்களை மனனம் செய்திருந்த நபித்தோழர்களை அழைத்து, ஓதச்செய்து, ஒப்பு

நோக்கிப் பார்த்து, இறுதியில் எல்லா வசனங்களையும் ஒரே நூலாகத் தொகுத்து முடித்தார்கள்.

அவ்வாறு தொகுக்கப்பட்ட முதல் குர்ஆன் பிரதிக்கு 'முஸ்ஹஃப்' (ஒன்றிணைக்கப்பட்ட தாள்கள்) எனக்கூறப்பட்டது. குர்ஆனின் இந்த மூலப் பிரதியை முதலில் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களும், அடுத்து, இரண்டாவது கலீஃபா உமர் பாரூக் (ரலி) அவர்களும், அவர்களை அடுத்து அவர்களின் மகளாரும் நபி (ஸல்) அவர்களின் துணைவியுமான ஹஃப்ஸா (ரலி) அவர்களும் தம்மிடம் வைத்திருந்தார்கள்.

மூன்றாம் கலீஃபாவாக இஸ்லாமிய ஆட்சியின் பொறுப்பை ஏற்ற உஸ்மான் (ரலி) அவர்கள் அவ்வசல் பிரதியிலிருந்து மேலும் பல பிரதிகள் எடுத்து தனது ஆட்சிக்கு உட்பட்ட எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தார்கள். அப்படிப் பல பிரதிகள் எடுக்கும்பொழுதுகூட அசல் பிரதியை எழுதிய ஜைத் பின் தாபித் (ரலி) அவர்களது தலைமையிலான ஒரு குழுவிடம்தான் அப்பொறுப்பு கொடுக்கப்பட்டது. இந்த விதமாக ஒரு புள்ளி மாறாமலும், ஓர் எழுத்து பிசகாமலும் தொகுக்கப்பட்ட குர்ஆன், இன்று உலகமெங்கும் உள்ள எல்லாப் பள்ளிவாயல்களிலும், ஒவ்வொரு முஸ்லிம் இல்லத்திலுமாக பலகோடி பிரதிகள் இருக்கின்றன.

இறுதி வேதமும், மறுமை நாள் வரை மனித குலம் முழுவதற்கும் வழி காட்டும் வாழ்வியல் நூலுமாக இலங்கும் இறைமறை குர்ஆனைப் பாதுகாப்பதில் எடுக்கப்பட்ட இத்தகைய துல்லியமான முயற்சிகள் வேறு எந்த நூலும் தொகுப்பதில் மேற்கொள்ளப்படவில்லை எனத் துணிந்து கூறமுடியும். இதையிட்டு நீங்களே ஆராய்து பார்க்கலாம்.

வரலாற்றாசிரியர் ஸர். வில்லியம் மூர் (Sir. William Muir) இவ்வாறு கூறுகின்றார்:

— "அனேகமாக இந்நூலை(குர்ஆனை)ப் போன்று
பன்னிரண்டு நூற்றாண்டு காலம் கடந்த பின்னரும்
மிகவும் தூய்மையாக இருக்கும்
மற்றொரு நூலை உலகில் காண முடியாது!"[140]

அதனை அருளிய அல்லாஹ் கூறுகின்றான்:

● "அல்லாஹ்விடமிருந்து
பேரொளிமிக்க, சத்தியத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்ற
திருமறை உங்களிடம் வந்துள்ளது.
அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை விரும்புவோருக்கு
அல்லாஹ் அதன் மூலம் சாந்திக்கான வழிகளைக் காண்பிக்கின்றான்.

---

140. 'The Life of Mohammed', Sir. William Muir, Published in Landon, (1903), See: Introduction, Page: 18

மேலும், அவன் தனது கட்டளையைக் கொண்டு
இருள்களிலிருந்து அவர்களை வெளியாக்கி
ஒளியின் பக்கம் கொண்டு வருகிறான்.
இன்னும் அவர்களை
நேர்வழியின் பக்கம் வழிகாட்டவும் செய்கின்றான்."[141]

## தினமும் ஓதப்படும் திருக்குர்ஆன்!

உலகில் நடமாடும் நான்கு மனிதர்களில் ஒருவர் முஸ்லிம் என கணிக்கப் பட்டுள்ளது. அதன்படி சுமார் 145 கோடி முஸ்லிம்கள் உலகெங்கும் வாழ்கின் றார்கள். இந்த முஸ்லிம்கள் யாவரும் தினமும் ஐவேளைகளில் தொழுதுவருவது கட்டாயக் கடமை. அதுவும் குறித்த நேரங்களில் தொழ வேண்டும். அப்படித் தொழாதவர்கள் முஸ்லிம்கள் என்று கணிக்க முடியாது. இந்தத் தொழுகையின் போது குர்ஆனின் பல வசனங்களை அவரவர்கள் மனனம் செய்துள்ளவாறு ஓதுவது தவிர்க்கக் கூடாததோர் அம்சமாகும்.

இந்த ஐவேளைத் தொழுகைக்குக் குறிக்கப்பட்டுள்ள நேரம் பல நாடு களைப் பொறுத்தமட்டில் மாறி மாறியே வரும். உதாரணமாக, அதிகாலை 'ஃபஜர்' தொழுகையை எடுத்துக்கொள்ளுங்கள். இதை இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் அதிகாலை ஐந்து மணிக்குத் தொழுவதாக வைத்துக் கொண்டால், இந்த ஐந்து மணியானது அரேபியாவில், அமெரிக்காவில், இந்தியாவில், இங்கி லாந்தில், ஜப்பானில், துருவ நாடுகளில் மற்றும் அனைத்து நாடுகளிலும் வித்தி யாசமாக - முன்பின்னாகவே வரும்; வருகின்றது. இந்திய உப கண்ட நாடுகளுக் கும் அரேபியாவுக்கும் இடையிலான நேரம் சுமார் 2½ மணி நேரத்தால் வித்தி யாசப்படுகிறது என்பதை பலரும் அறிவர் என நினைக்கிறேன்.

எனவே, மேற்குறித்த 'ஃபஜர்' தொழுகை பல நாடுகளில் வரும் வித்தியா சமான அதிகாலை வேளையில் தொழுவது போலவே, (லுஹர்) பகல், (அஸர்) பிற்பகல், (மஃரிப்) மாலை, (இஷா) இரவு வேளைத் தொழுகைகளும் வித்தியாச மான வேளைகளிலேயே நடைபெறும்.

இவ்வாறு மாறி மாறி வரும் தொழுகை வேளைகளில் அல்லாஹ்வின் தேன்மறை இனிய, அழகான நடையில் உலகெங்கும் உள்ள பள்ளிவாயல்களில் ஓதக் கேட்கலாம்.

இதுமட்டுமல்ல:

— ஐவேளைத் தொழுகை அல்லாத ஏனைய தொழுகைகள்
— காலை மாலை நேரங்கள்
— விசேட தினங்கள்
— மற்றும் பற்பல சந்தர்ப்பங்களில்

141. அல்குர்ஆன் 5: 16

குர்ஆனைப் பக்திப் பரவசத்துடன் ஓதும் முஸ்லிம்களும் உலகெங்கும் உள்ளனர். அதோடு, ரமளான் மாதம் வந்துவிட்டால் முழுக் குர்ஆனையும் ஓதியோதி வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் முஸ்லிம்களால் பள்ளி வாயல்களும் இல்லங்களும் புதுப்பொலிவு பெறுவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

இப்படித் தினமும், 24 மணி நேரமும் முழு உலகிலும் ஒலித்துக் கொண்டிருக்கும் குர்ஆனுக்கு இணையான மற்றொரு நூலை யாரேனும் காட்ட முடியுமா? "இன்ன நூல் தினமும் ஓதப்படுகிறது" என ஏதாவது ஒரு நூலை எடுத்துக் கூற முடியுமா? நீங்கள் தற்போதுள்ள மதத்தின் மூலக் கிரந்தத்தை வாழ்வில் எத்தனை முறை எடுத்துப் படித்தீர்கள் என்பதை நீங்களே யோசித்துப் பார்க்கலாம்; அல்லது வேறு யாரேனும் ஆர்வத்துடன் படிப்பதைக் கண்டுள்ளீர்களா என நினைத்துப் பாருங்கள்.

நீங்கள் திறந்த மனதுடன் எத்தகைய காழ்ப்புணர்ச்சியும் இல்லாது பேசுபவராக இருந்தால், "குர்ஆனைப் போன்று ஓதக்கூடிய மற்றொரு உலக நூல் இல்லை" என்பதை எத்தகைய தயக்கமுமின்றி எடுத்துக் கூறுவீர்கள்.

இக்குர்ஆனைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

● "... இது பெரும் பாக்கியங்கள் நிறைந்த ஒரு வேதமாகும்.
(நபியே!) இதனை நாம் உம்மீது இறக்கி அருளியுள்ளோம்.
இந்த மக்கள் இதனுடைய வசனங்களைச் சிந்திக்க வேண்டும்;
படிப்பினை பெற வேண்டும் என்பதற்காக!"[142]

அல்லாஹ், அல் குர்ஆனை அருள ஆரம்பிக்கையிலேயே "ஓதுவீராக!" என்று பணித்தான். அன்றுமுதல், அதனைத் தமது வேத நூலாக, வாழ்வை மாற்றியமைக்கும் புனித நூலாக ஏற்ற முஸ்லிம்கள் தினமும், வாழ்நாள் முழுதும் ஓதி வருகின்றனர்; இனி என்றுமே ஓயாது ஓதி வருவர் என்பதில் ஐயமில்லை!

## இதயங்களில் வாழும் இறைமறை!

அல் குர்ஆன் - மனித சமுதாயத்திற்கு வழிகாட்டவந்த தெய்வீகத் திருமறை. அது வெறும் எழுத்தில் - ஏட்டில் - மட்டும் எழுதப்பட்டதல்ல, நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அதனை முழுதும் மனனம் செய்த நூற்றுக்கணக்கான நபித்தோழர்கள் இருந்தார்கள் என்பதைப் பார்த்தோம். இது அந்தக் கால எல்லையுடன் முடிந்துவிட்ட கதையல்ல. மாறாக, அன்றுமுதல் இன்றுவரை இது சங்கிலித் தொடராக இருந்து வருகிறது. இன்று அனைத்துலகிலும் குர்ஆனை மனனம் செய்து இதயத்தில் தேக்கி வைத்துள்ள பல லட்சம் பேர் இருக்கின்றனர். அவர்கள் 'ஹாஃபிழ்கள்' - 'குர்ஆனை மனனம் செய்தவர்கள்' என அழைக்கப்படுவர்.

---

142. அல் குர்ஆன் 38: 29

இந்த முயற்சிக்கென, அதாவது குர்ஆனை மனனம் செய்வது, அதை மற்றார்க்குப் பிழையற ஓதிக்கொடுப்பது என்பதற்காகவே உலகெங்கும் குர்ஆனிய கலைக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இதன் விளைவாகக் குர்ஆனை முழுவதும் மனனம் செய்தவர்கள் போக, அதன் அரைப்பகுதி, காற்பகுதி, சில அத்தியாயங்கள், சில வசனங்கள் என மனனம் செய்தவர்கள் உலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லிம் இல்லத்திலும் உள்ளனர்.

இதனைப் பரீட்சித்துப் பார்க்க நீங்கள் விரும்பினால் உங்களுக்குத் தெரிந்த முஸ்லிம் சிறுவன் அல்லது சிறுமியை அழைத்து, அவர்களுக்குக் குர்ஆனுடன் உள்ள தொடர்பு பற்றிக் கேளுங்கள்; அதை ஓதச் சொல்லுங்கள். அப்பொழுது, நிச்சயமாக அவர்கள் குர்ஆனின் சில வசனங்களையாவது நயம்பட ஓதுவதை நீங்கள் கேட்பீர்கள்.

இவ்வாறு, அல்லாஹ் தன் அருள் மறையை மனித மனங்களில் வாழும் ஜீவனுள்ள நூலாக ஆக்கியுள்ளான்.

ஓர் அறிஞர் ஒருமுறை இவ்வாறு சவால் விட்டார்:

“இஸ்லாத்தின் எதிரிகள் யாவரும் ஒன்று கூடட்டும். எங்கெல்லாம் குர் ஆன் பிரதிகள் உள்ளனவோ அவற்றையெல்லாம் தேடிப் பெற்றுக் கொள்ளட்டும். பின்னர் அவற்றின் ஒரு தாளாவது விடுபடாது தீயிலிட்டுக் கொளுத்தி விடட்டும். அந்தக் கொடுமையைச் செய்யும் அவர்கள், அதன் பெருமிதத்தில் இருந்து விடுபடுவதற்கு முன்னரே மீண்டும் பல லட்சம் குர்ஆன் பிரதிகள் அணையுடைந்த வெள்ளம்போல் உலகெங்கும் பவனி வரும். அத்தகைய பாதுகாப்பான இடத்தில் - பல லட்சம் மனித மனங்களில் அல் குர்ஆனைப் பத்திரப் படுத்தி வைத்துள்ளான் அல்லாஹ்!”

இந்த அற்புதம், வேறு ஏதேனும் நூலைப் பொறுத்தவரையில் உள்ளதாக எவரும் கூற முடியுமா?

அல்லாஹ்வின் அருள் மறையைத் தவிர வேறு நூல் ஒன்றை
— ஓர் எழுத்து பிசகாது
— ஓர் எழுத்து விடுபடாது
— வரிசைக் கிரமப்படி
மனனம் செய்யப்படுவதாகக் கூற முடியுமா?
— அப்படியில்லாவிட்டால் ஒரு நூலின்
பத்துப் பக்கங்களையாவது மனனம் செய்யப்
பட்டுள்ளதாக எவரேனும் வாதிட முடியுமா?

உண்மையில், இந்த அற்புதம் குர்ஆனுக்கு மட்டும் உள்ளதாகும். உலகிலுள்ள வேறு எந்த வேத நூலும் இத்தகு அற்புதத்திற்கு உரிமை கொண்டாட முடியாது.

அல்லாஹ் கூறுகின்றான்:

- "மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து
ஓர் அறிவுரை உங்களிடம் திண்ணமாக வந்திருக்கிறது.
இது இதயங்களிலுள்ள நோய்களைக் குணப்படுத்தக் கூடியதாகவும்,
தன்னை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களுக்கு
வழிகாட்டக் கூடியதாகவும்,
ஓர் அருட்கொடையாகவும் திகழ்கிறது.
(நபியே!) நீர் கூறும்: அல்லாஹ்
தன்னுடைய கருணையைக் கொண்டும்
அருளைக் கொண்டும் இதனை இறக்கியுள்ளான்.
இதனைக் குறித்து மக்கள் மகிழ்ச்சி அடையட்டும்.
அவர்கள் சேகரித்துக் கொண்டிருக்கும்
எல்லாவற்றையும்விட இது சிறந்ததாகும்."[143]

இஸ்லாத்தின் சிறப்புக்கு

— இந்தத் திருமறை
— இதயங்களில் வாழும் இன்பப் பொதுமறை
— 'அல் குர்ஆன்'

ஓர் அழகிய சான்று என்பதை ஏற்றுக்கொள்ள நீங்கள் இனியும் தயக்கம் காட்டுவீர்களா?

இல்லை என்றே நினைக்கிறேன்!

## குர்ஆனின் பாதுகாப்பு!

உலகிலுள்ள ஏனைய மத மூல நூல்கள் எத்தகைய பாதுகாப்பும் இன்றியுள்ளன. அதனால் அவற்றின் ஆரம்ப காலந்தொட்டு திருத்தங்களுக்கும், கூட்டல் குறைத்தல்களுக்கும் இலக்காகி வந்துள்ளன என்பதை முன்னர் பார்த்தோம். சில வேத நூல்கள் அவற்றின் அசல் வடிவத்தையே இழந்துள்ளன என்று கூறுமளவுக்குத் திருத்தங்களுக்கு இலக்காகியுள்ளன. இதேவேளை, அல் குர்ஆன் மட்டும் அது அருளப்பட்டது போலவே அணுவளவும் பிசகாது பாதுகாப்பாக உள்ளது. இது எவ்வாறு சாத்தியமானது என்பதைப் பார்ப்போம்.

குர்ஆன் அருளப்பெற்றபொழுது அதனை ஏற்க மறுத்த எதிரிகள், அதற்கெதிராகப் பல விபரீதமான கருத்துக்களைப் பரப்ப முனைந்தனர். அதை "ஒரு கவிஞரின் கூற்று" என்றனர்; "ஜோதிடனின் பேச்சுக்கள்" என்றனர்; "பேய்ப் பிடித்தவரின் பிதற்றல்" எனக்கூறி மக்கள் கவனத்தைத் திசை திருப்ப ஆவன செய்தனர்; "இது முஹம்மதின் ஒரு கற்பனைக் காவியம்" என்ற கருத்தைப் பரப்

*143. அல் குர்ஆன் 10: 57, 58*

பினர். இப்படி எண்ணற்ற கருத்துக்களைக் குர்ஆனுக்கு எதிராக முன்வைத்து தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்த முயற்சித்தனர்.

அப்பொழுதெல்லாம்

- "திண்ணமாக இந்த நல்லுரையை
நாம்தான் இறக்கி வைத்தோம். மேலும்,
நாமே இதனைப் பாதுகாப்போராகவும் இருக்கின்றோம்."[144]

என்று மொழிந்த அல்லாஹ், அவற்றையெல்லாம் தனக்கெதிரான சவாலாக ஏற்று, தனது சவாலை முன்வைத்தான்.

- "இவர்தான் இவ்வேதத்தைப் புனைந்து கூறுகிறார்" என்று
இவர்கள் வாதிக்கின்றார்களா?
(நபியே!) நீர் கூறும்: "அவ்வாறாயின் இதுபோன்ற
பத்து அத்தியாயங்களை நீங்கள் இயற்றிக்கொண்டு வாருங்கள்.
அல்லாஹ்வைத் தவிர யார் யார்
(உங்கள் கடவுள்களாக) இருக்கின்றார்களோ -
அவர்களையும் (முடிந்தால்) உதவிக்கு அழைத்துக் கொள்ளுங்கள்;
(அவர்களைக் கடவுள்களாகக் கருதுவதில்)
நீங்கள் உண்மையானவர்களாயின்!""[145]

அல்லாஹ் விடுத்த இச்சவாலுக்கு என்ன பதில் கொடுப்பது என்பதறியாத எதிரிகள் தடுமாறினர். எனவே, அல்லாஹ் தனது சவாலை இன்னும் இலகுவாக்கி இவ்வாறு மொழிந்தான்:

- "நாம் நம் அடியார் மீது
இறக்கியுள்ள இவ்(வேதத்)தைப் பற்றி
(இது நம்மால் அருளப்பட்டதா இல்லையா என்னும்)
சந்தேகத்தில் நீங்கள் இருப்பீர்களானால் இதைப்போன்ற
ஒரே ஒரு அத்தியாயத்தையேனும் (உருவாக்கிக்) கொண்டுவாருங்கள்.
(இதற்காக) அல்லாஹ்வைத் தவிர
உங்களுக்குத் துணைபுரிபவர்கள் அனைவரையும்
அழைத்துக் கொள்ளுங்கள்;
நீங்கள் உண்மையானவர்களாய் இருப்பின்
"(இதனைச் செய்து காட்டுங்கள்)"."[146]

இங்கு அல்லாஹ், "ஓர் அத்தியாயத்தையேனும் கொண்டுவாருங்கள்" என்று கூறுவதன் மூலம் குர்ஆனின் நீண்ட அத்தியாயமொன்றைக் குறிப்பிடுகிறான் எனக் கருதிவிடாதீர்கள். பொதுவாக 'ஓர் அத்தியாயம்' என்றே குறிப்பிடுகின்றான். எனவே, குர்ஆனின் 108வது அத்தியாயத்தைப் போன்ற ஒன்றையாவது

144. அல் குர்ஆன் 15: 9 145. அல் குர்ஆன் 11: 13 146. அல் குர்ஆன் 2: 23

உருவாக்கிக் கொண்டுவர முயற்சிக்கலாம். அந்த அத்தியாயத்தின் பெயர் 'கவ்ஸர்' என்பதாகும். அதில் மூன்றே மூன்று வசனங்கள்தான் இருக்கின்றன.

உண்மையில் அந்த சவால் இன்று வரையும் இருக்கத்தான் செய்கின்றது. ஆனால், அதன் கோரிக்கையை நிறைவேற்றி வெற்றி பெற்றவர்கள் எவரும் இல்லை. இதன் கருத்து அத்தகைய முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை என்பதல்ல. முயற்சித்தவர்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்காது. ஆனால், அத்தகைய முயற்சிகள் - ஒன்றில் தோல்வியில் முடிந்துள்ளன; அல்லது அவற்றில் ஈடுபட்டவர்கள் அல் குர்ஆனின் அற்புத அமைப்பையும், அதன் இலட்சிய அழைப்பையும் கண்டு, பிரமித்து, அதன்பால் ஈர்க்கப்பட்டு, இஸ்லாத் தைத் தமது மதமாக ஏற்றுக் கொண்டனர்.

இந்தக் 'கவ்ஸர்' என்னும் அத்தியாயத்தையொட்டி சுவையானதொரு சம்பவம் இருக்கின்றது. அதுவும் குர்ஆனின் தூய்மைக்கு ஓர் ஆதாரமாகத் திகழ்கின்றது.

அரபியர்கள் பொதுவாகக் கவிதை இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். திடீர்ப் புலவர்களும் அவர்களிடையே ஏராளமாக இருந்தனர். இதன் காரணமாக அவர்களிடையே அடிக்கடி கவிதைப் போட்டிகள் நடை பெறும். அத்தகைய போட்டிகளில் வெற்றிபெறும் கவிதையை அவர்கள் ஓர் அட்டையில் எழுதி கஃபாவின் தலைவாசலில் தொங்கப்போட்டு விடுவார்கள். இது அவர்கள் மத்தியிலானதொரு வழக்கமாக இருந்தது.

இவ்வழக்கப்படி, ஒருமுறை வெற்றிபெற்ற கவிதையொன்றை அவர்கள் கஃபாவின் வாசலில் தொங்கப் போட்டனர். இதே சமகாலத்தில்தான் 'கவ்ஸர்' எனும் குர்ஆன் அத்தியாயமும் அருளப்பட்டிருந்தது. ஒரு நபித்தோழர் இந்த அத்தியாயத்தை ஓர் அட்டையில் எழுதி, அங்கு கஃபாவின் வாசலில் தொங்க வைக்கப்பட்டிருந்த கவிதைக்குப் பக்கத்தில் தொங்கவைத்தார். இந்த அத்தியாயத்தின் மூன்று வசனங்களாவன:

● "இன்னா அஃதய்னாகல் கவ்ஸர்
ஃப ஸல்லி லி ரப்பிக்க வன்ஹர்
இன்ன ஷானிஅக ஹுவல் அப்தர்"

குறிப்பிட்ட கவிதையைப் படிப்பவர்கள் இந்த மூன்று மறை வசனங் களையும் படிக்கத் தவறவில்லை. இதன் இலக்கிய நடை, ஓதும்போது எழும் ஓசைநயம், பொதிந்துள்ள ஆழமான கருத்துக்கள் என்பன பக்கத்தில் இருந்த கவிதையைத் தூக்கி எறிந்து விட்டன; அத்துடன் அங்கு போவோர் வருவோ ரைத் தன்வயப் படுத்திக் கொண்டிருந்தன.

இறுதியில், ஆழ்ந்த அறிவு படைத்தவர்கள் மேற்காணும் மூன்று மறை வசனங்களுக்கும் கீழே

— "மா ஹாதா கலாமுல் பஷர்"

என்று எழுதிவிட்டுச் சென்றனர். இதன் கருத்து: "நிச்சயமாக இது மனிதனுடைய சொல் அல்ல!" என்பதாகும்.[147] குர்ஆன் இவ்வாறு மனிதரைக் கவர்ந்து தன்பால் ஈர்த்துக்கொண்ட வரலாறுகள் அனந்தம்.

மற்றொரு நிகழ்வைப் படியுங்கள்:

ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை எதிர்த்த மூன்று மக்கத்துத் தலைவர்கள் அபூஜஹ்ல், வலீத் இப்னு முகைரா, அபூ சுஃப்பியான்* என்போராவர். இவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்களது தோழர்களுக்கும் கொடுத்த சித்ரவதைகள் அற்ப சொற்பமல்ல. என்றாலும் இவர்களாலும் குர்ஆனின் ஓசைநயத்திலிருந்து விடுபட முடியவில்லை என்பதை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. அவர்கள் என்னசெய்வார்களெனில் நபி (ஸல்) அவர்கள் இரவுத் தொழுகையில் ஈடுபடும் போது ஓதும் குர்ஆன் வசனங்களைச் செவிமடுக்க ஒருவருக்கொருவர் தெரியாமல் வந்து ஒளிந்து இருப்பர். ஒருநாள் மூவரும் தம் காரியம் முடிந்து வெளிப்பட்டுப் போகும்போது எதிர்பாராத விதமாகச் சந்தித்துக் கொண்டனர். உண்மையும் வெளிப்பட்டுவிட்டது. எனவே, "இனி நாம் இங்கு வரக் கூடாது!" என்று முடிவு செய்துகொண்டு சென்றனர். ஆனால், பின்னரும் அது தொடர்ந்தது. நீங்கள் இஸ்லாமிய வரலாற்றைப் படிக்க முற்பட்டால் இத்தகைய ஏராளமான நிகழ்வுகளைக் காணுவீர்கள்.

இந்த நிகழ்வுகள் குர்ஆனின் தூய்மையை மட்டும் எடுத்துக்காட்டவில்லை. அதோடு, அதன் பாதுகாக்கப்பட்ட வசனங்களுக்கு எதிராக எதிரிகளே வரமுடியாத அளவுக்கு வலுவுள்ளவையாக இருக்கின்றன என்பதையும் காட்டிக் கொண்டிருக்கின்றன.

குர்ஆனின் மற்றொரு சிறப்பம்சம் என்னவெனில், குர்ஆன் வசனங்களல்லாத வேறு எத்தகைய உயர்ந்த அரபு இலக்கியம் சார்ந்த வசனங்கள் அதில் சேர்க்கப்பட்டாலும் அது வித்தியாசமாகத் தென்படும். அதனாலும் அதில் இடைச் செருகல்கள் செய்வதில் இஸ்லாத்தின் எதிரிகள் பெரும் தோல்வி அடைந்துள்ளனர்.

இவ்வாறு பல்வேறு முறைகளிலே குர்ஆன் பாதுகாப்பாக, எவராலும் எதுவும் செய்ய முடியாத புனித நூலாக அது அருளப்பட்ட காலம் முதல் இருந்துவருகிறது.

மருத்துவ விஞ்ஞானி மொரிஸ் புகைல் அவர்கள் இவ்வாறு ஒரு வாதத்தை முன்வைக்கின்றார்:

---

147. 'தர்ஜுமதுல் குர்ஆன்', ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி, (1986), பக்: 93

* அபூ சுஃப்பியான் பின்னர் இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமானார்.

— "முஹம்மத் (ஸல்) அவர்கள் குர்ஆனைப் புனைந்தார்
என்று சொல்லப்படும் கூற்று அடிப்படையற்றது என்று
தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.
கல்வி அறிவு இல்லாத ஒருவர், திடீரென
சிறந்த இலக்கிய நயம் படைத்த ஒரு கிரந்தத்தின் -
இன்றைக்கும் அரபி இலக்கியத்தில்
இணையற்று விளங்கும் ஒரு கிரந்தத்தின்
ஆசிரியராய் ஆக முடியுமா?
அது மட்டுமல்ல,
அந்த நூற்றாண்டில் வாழ்ந்த மனிதன்
கற்பனை செய்தும் பார்த்திராத -
இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின்
மகத்தான கண்டுபிடிப்புகளின் எதார்த்த நிலையை
அன்றைக்கே அவரால் எப்படி
துல்லியமாகத் தெரிவிக்க முடிந்தது?"[148]

மொரிஸ் புகைல் அவர்களின் வாதம் மிக நியாயமானது. முஹம்மத் (ஸல்) அவர்கள் பொதுவான கல்வியைப் பெற்றவர்களல்லர்; முந்திய வேத நூல்களைப் படித்தவர்களுமல்லர். அவர்களுக்கு எழுதவும் தெரியாது; படிக்கவும் தெரியாது. அவர்களது நாற்பதாவது வயது வரை கல்வி, விஞ்ஞான, சமூக, அரசியல், பொருளாதார விடயங்கள் பற்றி பேசியதும் இல்லை. அத்தகைய ஒருவர் திடீரென பல புதிய வியக்கத்தக்க, அந்த ஆறாம் நூற்றாண்டில் எவரும் பேசாத, இந்த 20 ஆம் நூற்றாண்டில் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து ஆய்வுகள் நடத்தப்படுகின்ற விஷயங்களைப் பேசுகிறார் என்றால் அவை அவரது சொந்தக் கருத்துக்கள் எனக் கூற முடியுமா?

எனவே, எந்த வழிமுறைகள் மூலம் ஆராயப்பட்டாலும், குர்ஆன் நிகரற்ற வல்லமை பொருந்திய அல்லாஹ்வின் வசனங்களைக் கொண்ட அற்புத நூல் என்ற கருத்து வலுவடைந்து செல்வதைத்தான் நாம் பார்க்க முடிகின்றது. அதே வேளை அவனது சவால்களும் மிக உறுதியாக இருக்கின்றது. அத்துடன் அதன் எதிரே அவனது அடிமைகளான மனிதர்கள் தம் இயலாமையை நிரூபித்துக் கொண்டு மண்டியிட்டு விடுகின்றார்கள் என்தையும் காண முடிகின்றது.

அல்லாஹ் அவனது அடியாரும் திருத்தூதருமான முஹம்மத் (ஸல்) அவர்களை விளித்துக் கூறுகின்றான்:

- "(நபியே! நீர்) கூறும்:
மனிதர்கள் மற்றும் ஜின்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து
இந்தக் குர்ஆனைப் போன்று
ஒன்றைக் கொண்டுவர முயன்றாலும்
இதைப்போன்று அவர்களால் கொண்டுவர முடியாது;

148. The Bible, The Quran and Science, Dr. Maurice Bucaille, (1978), Page: 125

அவர்கள் ஒருவர் மற்றவருக்கு
உதவியாளராக இருந்தாலும் சரியே!"[149]

## இஸ்லாத்தின் மூல நூல்!

அல் குர்ஆன்தான் இஸ்லாத்தின் மூல நூல்; முஸ்லிம்களது அனைத்து விவகாரங்களிலும் முதன்மை பெற்று விளங்கும் நூல். அதன் கருத்துக்கள், கட்டளைகள், முடிவுகள் எவற்றையும் எந்த முஸ்லிமும் நிராகரிக்கக் கூடாது; நிராகரிக்கவும் முடியாது.

நீங்கள் ஆற அமர நிதானமாக சிந்தித்துப் பார்ப்பீர்களாயின், முஸ்லிம் களுக்கு மட்டுமல்ல, பொதுவாக எல்லா மக்களுக்கும் உரிய மூல நூலாக குர்ஆன்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவீர்கள். உண்மையில் குர்ஆனை மிகைத்த மற்றொரு நூல் உலகில் கிடையாது.

அல் குர்ஆனுக்குத் 'தஃப்ஹீமுல் குர்ஆன்' என்ற பெயரில் அழகிய விளக் கவுரை எழுதிய மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் கூறும் ஒரு கருத்து நம் சிந்தனைக்குரியது:

"என் அறியாமைக் காலத்தில் நான் ஏராளமான நூல்களைப் படித்துள் ளேன். புராதன புதிய தத்துவங்கள், விஞ்ஞானம், அரசியல், மனித வாழ்வு என் பன பற்றிய ஒரு நூல் நிலையமே என் மூளைக்குள் அமைந்து விட்டதோ என்று எண்ணும் அளவுக்கு நூல்களைப் படித்து வைத்தேன்.

ஆனால், என்று நான் என் கண்களைத் திறந்து குர்ஆனைப் படிக்கத் தொடங்கினேனோ அன்றுதான் அதற்கு முன்னர் படித்தவைகள் அனைத்தும் குறையுள்ளவை என்பதை உணரலானேன்.

— காண்ட் (Kant 1724 - 1804)
— ஹெகல் (Hegal - 1770 - 1831)
— நீஷே (Nietzsche 1844 - 1900)
— கார்ல் மார்க்ஸ் (Karl Marx 1818 - 1883)

போன்ற பெரும் பெரும் மேதாவிகள் மற்றும் அறிஞர்கள் அனைவரும் இப்பொழுது,

— பச்சிளம் குழந்தைகள் போன்று தோற்றம் தருகின்றனர்!

அவர்கள்மீது இப்பொழுது எனக்கு அனுதாபமே ஏற்படுகின்றது; பாவம். வாழ்க்கை முழுதும் எந்த இருட்குகைகளை ஒளிமயமாக்கவென இரவுபக

149. அல் குர்ஆன் 17: 88

லெனப் பாடுபட்டார்களோ, எந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவென பெரும் பெரும் நூல்களை எழுதிக் குவித்தார்களோ, அவற்றைத் தீர்த்து வைத்து உலகை ஒளிமயமாக்கும் கருத்துக்களை இவ்வேதப் பெருநூல் ஓரிரு வரிகளில் தந்து விடுகின்றது.

இந்த அரிய நூலைப் படிக்கும் வாய்ப்பை நானும் பெறாதிருந்திருப்பின் என் நிலையும் மேற்காணும் மேதாவிகளின் நிலையாகவே இருந்திருக்கும்; நானும் குழம்பிப்போய் வாழ்நாளைக் கழித்திருப்பேன்.

— வாழ்த்துதற்குரியது;
என் வாழ்வை மாற்றியமைத்த இவ்வேத நூல்!
— போற்றுதற்குரியது;
விலங்கின வாழ்விலிருந்து என்னை மனிதனாக்கிய இப்புனித நூல்!
— ஏழை என் நன்றிக்குரியது;
இருட்குகையிலிருந்து ஒளிப்பூங்காவுக்கு
என்னைக் கொணர்ந்த இவ்விறை நூல்!

அல் குர்ஆன் எனக்கு அருளியிருக்கும் ஒளியின் துணைகொண்டு, வாழ்வின் எந்தப் பிரச்சினை மீது நான் கருத்தைச் செலுத்தினாலும், அப்பிரச்சினைக்கான அழகிய தீர்வு எத்தகைய திரையுமின்றித் தெளிவாகக் கிடைத்து விடுகின்றது.

எல்லா வகையான பூட்டுகளையும் திறக்கும் திறவுகோலுக்கு ஆங்கிலத்தில் 'மாஸ்டர் கீ' (Master Key) என்று சொல்வார்கள். அது போன்று வாழ்வின் எத்தகைய சிக்கலான பிரச்சினைகளாயினும் அவற்றைத் தீர்த்து வைத்து அமைதியைத் தரும்

— 'மாஸ்டர் புக்' (Master Book)
'குர்ஆன்' என்று நான் கூறுவேன்.[150]

இக்குர்ஆனையிட்டு அல்லாஹ் விடுக்கும் வினா இதுதான்:

● "நாம் இந்தக் குர்ஆனை, அறிவுரை பெறுவதற்கான
எளிய வழியாக அமைத்திருக்கின்றோம்.
பின்னர், அறிவுரையை ஏற்றுக்கொள்ள
எவரேனும் இருக்கின்றாரா?"[151]

இவ்வாறு வினா விடுக்கும் அல்லாஹ், அதிலிருந்து அறிவு பெறுவதற்கும், அதற்கேற்ப அழகாக வாழ்ந்து ஈருலக நன்மைகளைப் பெறுவதற்கும் அவன் மீது அன்பும் அச்சமும் கொள்வதை நிபந்தனையாக வைக்கின்றான். அத்துடன்

150. 'வழிகாட்டி' மாசிகை, இலங்கை ஜமாஅதே இஸ்லாமி வெளியீடு, 1961 ஜூலை மாத இதழ்.
151. அல் குர்ஆன் 54: 17

அத்தகைய மக்களின் நம்பிக்கையும் நடத்தையும் எப்படி இருக்கும் என்பதையும் எடுத்துரைக்கின்றான்:

● "இது அல்லாஹ்வின் வேதமாகும்;
இதில் யாதொரு சந்தேகமும் இல்லை.
இறையச்சமுடையோருக்கு (இது) சீரிய வழிகாட்டியாகும்.
அவர்கள் எத்தகையோர் என்றால்
'கைப்' - மறைவானவற்றை நம்புகிறார்கள். மேலும்
தொழுகையை நிலைபெறச் செய்கிறார்கள்.
நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவும் செய்கிறார்கள்.
மேலும், உமக்கு இறக்கி அருளப்பட்ட
வேதங்கள் மீதும் நம்பிக்கை கொள்கின்றார்கள்.
இறுதித் தீர்ப்பு நாளின் (மறுமையின்) மீதும்
அவர்கள் உறுதியான நம்பிக்கை கொள்கின்றார்கள்.
இத்தகையோரே தம் இறைவனிடமிருந்து வந்த
நேர்வழியில் இருப்பவர்கள்.
மேலும் இவர்களே வெற்றி பெறுபவர்கள்."[152]

இவை குர்ஆனைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கு உங்களுக்குத் தூண்டும் அம்சங்களாக அமையும் என நினைக்கின்றேன். அதோடு, மற்றொரு முக்கியமான ஓர் அம்சத்தை நாம் மறந்துவிடக் கூடாது. அதாவது, குர்ஆனை நபி (ஸல்) அவர்களது வாழ்வின் ஊடாகத்தான் விளங்குவது அவசியம். அல்குர்ஆன் சொல் வடிவமாயின் அதன் செயல் வடிவம் நபி (ஸல்) அவர்களது வாழ்வாகும்.

அந்த நபி (ஸல்) அவர்களது வாழ்வு என்ன?
அடுத்த அத்தியாயம் அதுபற்றிப் பேசுகின்றது!

152. அல் குர்ஆன் 2: 2 - 5

# முழு உலக மக்களுக்கும் முன்மாதிரியாய்த் திகழ்ந்த முஹம்மத் (ஸல்) அவர்கள்!

ஒரு தத்துவப்போதகர்
சொல்வன்மை மிக்கவர்
இறைத்தூதர்
சட்ட நிபுணர்
மாபெரும் போர் வீரர்
கொள்கை ரீதியாக வெற்றி கண்ட வரலாற்று வீரர்
விக்கிரகங்கள் இல்லாத மார்க்கமொன்றைத் தோற்றுவித்தவர்
இருபது பூவுலகப் பேரரசுகளின்
தனித்துவமிக்க ஆன்மிக நிறுவனர்
— அவர்தான் முஹம்மத்!
மனிதனின் தரத்தை அளவிடக்கூடிய
எத்தகைய அளவுகோலைக்கொண்டு
அளவிட்டுப் பார்ப்பினும்
— அவரைவிட மகத்துவம் பொருந்திய
மற்றொருவர் அவனியில் இருக்கின்றாரா?
என்று எம்மைக் கேட்கத் தூண்டும், ஆமாம்,
அவருக்கு நிகர் அவரேதான்!

■ லாமார்டின்
Histoire de La Turquie, Paris (1854) Vol: II Pages 276,277
By Lamartine

3

“(நபியே!)
நாம் உம்மை
அகிலத்தார் அனைவருக்கும்
ஓர் அருட்கொடையாகவே
அனுப்பியுள்ளோம்!”
— அல்குர்ஆன் 21: 107

# முஹம்மத் (ஸல்) அவர்கள்

மனிதர்களிடையே மகத்தான சாதனைகள் புரிந்த மாமனிதர்கள், பெருந் தலைவர்கள், வரலாற்று நாயகர்கள், மனித சமுதாயத்தின் வாழ்க்கைப் போக்கையே மாற்றியமைத்த புரட்சியாளர்கள் போன்ற பலரைப் பற்றி நாம் அடிக்கடி படிக்கின்றோம்; அத்தகையவர்கள் ஆற்றிய தொண்டுகள், உலகுக்கு வழங்கிய நல்லம்சங்கள் பற்றியும் அவ்வப்போது கேட்டு வருவதுடன், நாம் அவற்றிலிருந்து எண்ணற்ற பயன்களும் பெறுகின்றோம்.

அத்தகையவர்களை நாம் இரண்டு அணியினராகப் பிரித்து நோக்க முடியும்.

— வேத நூல்களைத் தந்து,
அவற்றுக்கமைய வழிகாட்டியவர்கள்!
— பொதுவான கருத்துக்களை வழங்கி,
அவற்றுக்கமைய வழிகாட்டியவர்கள்!

இவ்விரண்டு அணியினர் மூலமும் மனித சமுதாயம் பெறற்கரிய பெரும் பயன்களைப் பெற்றது என்பது மறுப்பதற்கில்லை. ஆனால், அவை முழுமையாக அமையவில்லை என்பதை நாம் ஆராய்ந்தால் புரிந்துகொள்ள முடியும். அதாவது, அவர்கள் மனிதனின் ஏதாவது ஒரு துறைக்கு, பகுதிக்கு, அல்லது ஓர் அம்சத்திற்கு வழிகாட்டுதல் வழங்கி இருக்கலாம்; முன்மாதிரியாய் இருந்திருக்கலாம். அத்துடன் அவர்களது பணி முடிவுற்றுள்ளது என்பதுதான் வரலாற்றுக் காட்சிகளிலிருந்து நாம் காண்பது.

வழிகாட்டல், முன்மாதிரி எனும்போது அவை வெறும் போதனைகள் மட்டுமே என நீங்கள் கருதக் கூடாது. அது அவை சார்ந்த ஒரு பக்கம் மட்டுமே. அவற்றின் மறுபக்கம் அதைவிடவும் முக்கியமானது. அதாவது, எவை நாவினாலும், எழுத்தினாலும், வணக்க வழிபாடுகளாலும் மெய்யெனப் போதிக்கப்

படுகின்றனவோ அவை உண்மையில் மெய்யானவையே என்று நாளாந்த வாழ்வில் நடந்து காண்பிக்க வேண்டும்; அத்தகைய முன்மாதிரி வாழ்வொன்றை உலக மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும்; அவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைத்துக்கொள்ளும் வாழ்வே சிறப்பானது என்ற நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். இந்த வகையில் அத்தகைய அனைவரும் குறை உள்ளவர்களே என்பது ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது!

இதற்கான காரணிகள்

— ஒன்றில், அவர்கள் மூலம் தரப்பட்ட
நூல்களில் இருக்க முடியும்.

— அல்லது, அவர்களது வழிகாட்டல் சார்ந்த
வாழ்வில் இருக்க முடியும்.

எப்படியோ அந்தக் குறை நன்கு தெரிவதை மேலோட்டமாகப் பார்த்தால்கூட விளங்கிக்கொள்ள முடியும். உதாரணமாக, ஒரு பெருமனிதர் ஆன்மிகத் துறைக்கு அதிக அழுத்தம் கொடுத்து, அதைக் கட்டியெழுப்ப விழைந்திருப்பார்; ஆனால், அவர் அரசியல் துறையை அப்படியே மறந்திருப்பார். அதாவது ஆன்மிக வணக்க வழிபாடுகளில் அவர் நேரடியாக ஈடுபட்டு அவற்றை எவ்வாறு தினமும் செய்து வருவது என்பதைக் கற்றுக் கொடுத்திருப்பாரோ அதுபோல, மனிதரை ஓர் ஒழுங்கில் நிர்வகித்து நடத்திச் செல்லும் அரசியல் துறை பற்றிக் கவனம் செலுத்தியிருக்க மாட்டார். சிலவேளை சில கருத்துக்களை வழங்கியிருப்பார்; அன்றி, அதில் நேரடியாக ஈடுபட்டு அதை எவ்வாறு நடத்திச் செல்வது என்பதைக் காட்டத் தவறி விட்டிருப்பார் என்பதையே கூற வருகின்றேன்.

ஆயினும், நீங்கள்

— அல் குர்ஆனிலோ

— அது அருளப்பெற்ற அண்ணல் நபி (ஸல்) அவர்களிலோ

இத்தகைய குறைகளைக் காண மாட்டீர்கள். காரணம், அவர்கள் மனிதர்களுள் ஒருவராக, மனிதர்களுடன் இரண்டறக் கலந்து இருந்துகொண்டு, தாம் பெற்றுக் கொண்ட தூய மறைக்கு ஏற்ற விதமாக, வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வோர் அம்சத்திலும் வாழ்ந்து காட்டியிருப்பதுதான்!

அல் குர்ஆன் முழு மனித சமுதாயத்திற்கும் வழிகாட்ட வந்த தெய்வீக நூல் என்பதை முன்னர் பார்த்தோம். அது அத்தகைய நூலென்றால், அதை நன்கு விளங்கி நாளாந்த வாழ்வில் எவ்வாறு பின்பற்றுவது என்ற வினா எழுவது இயல்பே!

அந்த வினாவுக்கு விடையாகவே நபிகளாரின் பெருவாழ்வு அமைந்தது என்பதைப் பார்க்கின்றோம்.

ஒருமுறை நபி (ஸல்) அவர்களது துணைவியார் ஆயிஷா சித்தீக்கா (ரலி) அவர்களைச் சந்தித்த சில நபித்தோழர்கள், "நபி (ஸல்) அவர்களது குணவொழுக்கம் எத்தகையது எனக் கூறுங்கள்" என்றார்கள்.

அதற்கு விடையளித்த ஆயிஷா (ரலி) அவர்கள்

— "நபிகளாரின் குணவொழுக்கம்
குர்ஆனாகவே இருந்தது" என்றார்கள்.[153]

விசுவாசிகளின் அன்னை ஆயிஷா சித்தீக்கா (ரலி) அவர்கள் மொழிந்தது எத்துணை உண்மையானது என்பதை நபி (ஸல்) அவர்களுடைய வரலாறைப் படித்தால் புரிந்து கொள்வீர்கள். அதற்குத் தூண்டுகோலாக சுருக்கமாகச் சில குறிப்புக்களைத் தருவதற்கு விழைகின்றேன்.

## மக்களால் அவதானிக்கப்பட்ட மகத்தானவர்!

முஹம்மத் (ஸல்) அவர்களுடைய வாழ்வை முழுமையாக அவதானித்து, பதிவு செய்து, பாதுகாத்து வந்ததுபோல் வேறு எவருடைய வாழ்வும் அவதானிக்கப்பட்டு, பதிவுசெய்து, பாதுகாக்கப்பட்டதாக வரலாறு இல்லை. அந்த அளவு மிகத் துல்லியமாக அவர்களது வாழ்க்கை நிகழ்வுகளைத் தொகுத்துத் தந்துள்ளனர் ஆரம்ப கால இஸ்லாமிய அறிஞர்கள். அதுவும் தனியான ஒரு கலையாகவே மேற்கொள்ளப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள்

— தாடியில் எத்தனை நரைமயிர்கள் இருந்தன!
— சிரிக்கும்போது எந்தெந்தப் பற்கள் வெளியே தெரிந்தன!
— நடக்கும்போது எவ்வாறு பாதங்களை எடுத்து வைப்பார்கள்!
— திரும்பிப் பார்க்க நேர்ந்தால் எவ்வாறு நடந்து கொள்வார்கள்!
— உணவருந்தும்போது எவ்வாறு நடந்து கொள்வார்கள்!
— தொழுகையில் எவ்வாறு நிற்பார்கள்!
— சிறு பிள்ளைகளுடன் எவ்வாறு நடந்து கொள்வார்கள்!
— மனைவி மக்களுடன் எவ்வாறு நடந்து கொள்வார்கள்!
— பாதங்களில் செருப்பணியும்போது
எவ்வாறு அணிவார்கள்; எவ்வாறு கழற்றுவார்கள்!

இப்படி, அந்த இறை தூதரின் முழு வாழ்வும் - அற்ப விஷயம் முதல் ஆட்சிப் பொறுப்பு வரை - நன்கு அவதானிக்கப்பட்டுள்ளது என்பதைக் கேட்க நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்!

உண்மை அதுதான். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமேயில்லை. இனி உலக முடிவுவரை மனித சமுதாயத்திற்கான 'வாழ்க்கை முன்மாதிரி' இது வொன்றுதான் எனும்போது, இதைப் பாதுகாப்பது எவ்வளவு அவசியமாகின்றது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். உலகில் வேறு பல பெரிய மனிதர்கள் வாழ்ந்துள்ளபோது இவரை மட்டும் 'முழு உலகத்துக்குமான முன்மாதிரி' எனக் கூறுவது பற்றி சிலர் வினாவெழுப்பலாம்.

153. 'Al Hadis', Vol: IV, Maulana Fazlul Careem, (1979) Page: 274

உலகில் வாழ்ந்த எல்லா பெரிய மனிதர்களும் ஓரிரு துறைகளில் சிறப்பாக இருந்திருப்பர்; வேறு பல துறைகளில் மிகுந்த பலயீனமாக, அவர்களது முன் மாதிரி ஏற்கமுடியாத அளவு குறையுடையதாக இருந்திருக்கும்; இருக்கின்றது. ஆனால், முஹம்மத் (ஸல்) அவர்களுடைய முழு வாழ்வும் மனித சமுதாயத்திற்கு முன்மாதிரியாகவே இருக்கின்றது. ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்புவரை என்னென்ன துறைகளில் ஈடுபடுகின்றானோ அப்படியான அத்தனைத் துறை களிலும் ஈடுபட்டு அவை ஒழுங்காகவும் சிறப்பாகவும் அமைவதற்கான முன் மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

இத்தகைய சிறப்புக்குரிய முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது சிறு வயது முதல் மரணத்தை எய்தும் வரை மிகச் சிறந்த பண்புகளுக்குச் சொந்தம் கொண்டாடப்படுபவர்களாகத் திகழ்ந்தார்கள்.

— உண்மை பேசுதல்
— நம்பிக்கை, நாணயத்துடன் நடந்து கொள்ளல்
— எவரிடத்திலும் அன்பும் கருணையும் கொள்ளல்
— எப்பொழுதும் நாணமுடன் இருத்தல்
— உதவி தேவைப்படுவோர்க்கு ஓடோடிச் சென்று உதவுதல்
— ஒழுக்கத்தை உயிராய் மதித்து செயற்படுதல்
— பகைமையை வெறுத்தல்
— சமாதானத்திற்காக உழைத்தல்
— தனக்குத் தீங்கு செய்பவருக்கும் நன்மையை நாடுதல்
— உழைத்து உண்ணுதல்
— விக்கிரக வழிபாடுகளில் ஈடுபடாதிருத்தல்
— தன் தேவைகளுக்காக அடுத்தவரைத் துன்புறுத்தாதிருத்தல்
— நீதி நேர்மையுடன் நடந்து கொள்ளல்

இவ்வாறு நற்பண்புகள் அனைத்தும் ஒருங்கே குடிகொண்டிருந்த அவர்கள் தமது இளமைக் காலத்திலேயே ஏழைகள், பலயீனமானவர்கள், துன்பத்திற்கு ஆளானவர்கள் ஆகியவர்களது துயர் துடைக்கவென 'ஹில்ஃபுல் ஃபுழூல்' என்னும் அமைப்பை உருவாக்கி செயல்பட்டார்கள்.

அண்ணலாரின் இத்தகைய பண்புகள் காரணமாக
— 'அல் அமீன்' - நம்பிக்கைக்குரியவர்!
— 'அஸ் ஸாதிக்' - உண்மையாளர்!

என்று அன்று வாழ்ந்த அனைத்து மக்களாலும் அழைக்கப்பட்டார்கள். 'இப் படி அழைப்பது தவறு' என அவர்களது இஸ்லாமிய பணியை எதிர்த்த, அவர் களது உயிருக்கு உலைவைக்க நாடிய எதிரிகள் கூட கூறியதாக வரலாறு இல்லை. மாறாக, அவரை எதிர்த்த அவர்களும் தம் பொருட்களைப் பாதுகாக்க அவரி டமே கொண்டுவந்து கொடுத்த வரலாறே உண்டு.

அல்லாஹ் கூறுகின்றான்:

● "நபியே!) திண்ணமாக நற்குணத்தின்
மிக உன்னதமான நிலையில் நீர் இருக்கின்றீர்."[154]

## குடும்ப வாழ்வில் ஈடுபட்டவர்!

மனித சமுதாயத்துக்கு மகத்தான வழிகாட்ட வந்த பலர் மணமுடிக்க வில்லை; பல ஆயிரக்கணக்கானவர்கள் மணமுடிப்பதை வெறுத்து அல்லது 'வேண்டாம்' என முடிவுசெய்து, துறவுகோலம் பூண்டு, ஆசிரமங்களில் அடைக் கலம் புகுந்துள்ளார்கள். வேறு சிலர் மணமுடித்து மனைவியுடன் சில காலம் வாழ்ந்துவிட்டு துறவிகளாக மாறி தூரப் போய்விட்ட வரலாறுகளும் உண்டு.

இதனால், இத்தகையவர்களுக்குக் குடும்ப அமைப்பு இருக்கவில்லை; மனைவி மக்கள் என்ற உறவுகள் இருக்கவில்லை; 'குடும்பத்துக்காக உழைக்க வேண்டும்; மனைவி மக்களின் சுக துக்கங்களைப் பார்க்க வேண்டும்' என்ற தேவையும் ஏற்படவில்லை.

இவர்கள் குடும்ப வாழ்வு பற்றித் தமது நாவுகள் மூலம் (Lip Service) எதையும் சொல்லி வைத்திருப்பர்; ஆனால், நடத்தை மூலம் 'இதுதான் குடும்ப வாழ்வு' என்பதற்கான முன்மாதிரியைத் தரவில்லை. நீங்கள் சார்ந்துள்ள மதத் தலைவரையும், குருக்களையும் பற்றி சற்று நினைத்துப் பாருங்கள். சிலவேளை அவர்களும் இப்படி இருக்கலாம்.

ஆனால், முஹம்மத் (ஸல்) அவர்களைப் பாருங்கள்:

அவர்கள்

— மணமுடித்தார்கள்.
— குடும்பத்தலைவராகக் கடமை புரிந்தார்கள்.
— குடும்பத்தில் உள்ளோர்களது
உணவு, உடை, உறைவிடத் தேவைகளைக் கவனித்தார்கள்.
— கடைசிவரை குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்தார்கள்.
— தமது மனைவியரை நடத்திய விதம்
ஒப்புவமை இல்லாததாகும்.

ஒருவர் இப்படி குடும்ப வாழ்வில் ஈடுபாடு கொள்ளும்போது பெண் களின் உணர்வுகள், பாலியல் தேவைகள், பெண்களின் அந்தரங்க நோய் நொம்ப லங்கள், குடும்பத்தில் தோன்றும் பிரச்சினைகள், அவற்றுக்குக் காணும் பரிகா ரங்கள், கணவன் - மனைவி உறவு, பிள்ளைகள் வளர்ப்பு மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கவனிக்க வேண்டியுள்ளது. இவற்றில் எதனையும் தட்டிக்கழிக்க முடியாது. அந்த வகையில் அவர் குடும்ப வாழ்வு பற்றிய ஆழமான நடைமுறை அனுபவங்களைப் பெறுகின்றார்.

---

154. அல் குர்ஆன் 68: 4

இல்லறத்தில் ஈடுபடாதவர்கள் இதன் மேல்வாரியான அம்சங்களையே, அதுவும் தெளிவாக அன்றி மேலோட்டமாகவே சில விஷயங்களை அறிந்து வைத்திருப்பர். இத்தகைய ஒருவரால் குடும்ப வாழ்வு பற்றி நடைமுறை சாத்திய மான எத்தகைய கருத்துக்களை வழங்க முடியும்? அடுத்து, குடும்பப் பொறுப் பையே 'வேண்டாம்' என ஒதுங்கி வாழும் ஒருவர், சமூகப் பொறுப்புக்களை ஒழுங்குற நிறைவேற்றுவார் என எப்படி எதிர்பார்க்க முடியும்? சமூகம் என்பது குடும்பங்களின் கூட்டுத் தொகையினால் உருவாகும் ஓர் அமைப்பல்லவா!

அந்த வகையில் அழகான இல்லற வாழ்வுக்கான வெறும் போதனைகளை மட்டுமல்ல, நடைமுறை சாத்தியமான வழிகாட்டல்களையும் தனது வாழ்வு மூலம் வழங்கும் தகுதியைப் பெற்றுத் திகழ்கின்றார்கள் பாருக்கு வழிகாட்ட வந்த பயகம்பர் (ஸல்) அவர்கள்.

அவர்கள் மொழிந்தார்கள்:

— "உங்களில் யார் தனது குடும்பத்தாருடன்
மிக நல்லவராக நடந்து கொள்கிறாரோ
அவரே உங்களில் நல்லவர்.
மேலும், உங்கள் எல்லோரையும் விட
குடும்பத்தாருடன் நற்பண்போடு நடந்து கொள்பவன் நானே!"[155]

## பொருளாதாரத் துறையில் ஈடுபாடுடையவர்!

மனிதன் ஊண், உடை, உறைவிடம் ஆகிய மூன்று அடிப்படைத் தேவை களை உடையவன். இவற்றைப் பெற்றுக்கொள்ள அவன் தொழில் செய்தாக வேண்டும்; உழைப்பில் ஈடுபட வேண்டும். மற்றொருவரின் கையை எதிர்பார்த் திருக்க முடியாது. எனவே, அவனது முழுக் கவனமும் உழைப்பில்தான் இருந்தது எனக் குறிப்பிடலாம். அவன் பெறும் அறிவு மற்றும் ஆராய்ச்சி, சாதனைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கூட இத்துறைக்குத்தான் பயன்படுத்தப்பட்டு வரு கின்றன என்பதை நாம் பார்க்கின்றோம்.

இன்றைய உலகமே இத்துறையை அடித்தளமாகக் கொண்டு முதலா ளித்துவம் - கம்யூனிஸம் எனப் பிரிவுற்றுள்ளது. இவ்விரு கொள்கைகளால் விளைந்து வரும் அனர்த்தங்கள் சொல்லுந்தரமன்று.

பொருளாதாரத் துறை சார்ந்த மனிதனின் ஈடுபாடு எவ்வளவு நெருக்க மானது என்றால், சிலர் 'வாழ்வே உழைக்கத்தான்!' எனக் கருதினர்; சிலர் 'செய் யும் தொழிலே தெய்வம்!' என்று பாடினர்; சிலர் 'பொருளில்லார்க்கு இவ்வை யம் இல்லை!' எனத் தத்துவம் பேசினர்; சிலர் 'காசே தான் கடவுளப்பா!' எனக் கவிதை இயற்றினர்.

---

*155. ஆதாரம்: திர்மிதீ, இப்னுமாஜா*

இவை, எதையாவது எழுத வேண்டும் என்பதற்காக எழுதியவை அல்ல. உங்கள் சூழலை நோக்குங்கள். அங்கும் இப்படியான எண்ணற்றவர்களைக் காண முடியும்.

இவ்வாறு, பொருளாதாரத் துறைக்கு அதிக அளவிலான முக்கியத்துவம் கொடுத்து, எதையும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பார்க்கும் நிலையை உருவாக்கி விட்டதால் ‘எப்படியும் உழைக்கலாம்’ என்ற நிலை தலையெடுத்து விட்டது. அதனால், மதுவும், போதைப் பொருளும், புகைக்கும் பொருளும் சந்தைக்கு வந்துவிட்டன; சூது நவீன மயப்படுத்தப்பட்ட அழகிய பெயர்களில் நடக்கின்றது; கற்பும் விலைபேசும் பொருளாகிவிட்டது; வட்டி, லஞ்சம், கலப்படம், மோசடி, ஏமாற்றுதல், திருட்டு என்பன உலகெங்கும் இமயமலை போல் வளர்ந்து, பெருகிவிட்டன.

இதற்கான காரணம் என்னவெனில், பல மதங்களின் நாயகர்களும், நவீன கொள்கைவியலாளர்களும் தாம் சரியெனக் கண்டு, எடுத்துரைத்த பொருளாதாரத் துறை சார்ந்த உழைப்புக்கான

— உறுதியான அடிப்படைக் கோட்பாடுகள்
— ‘ஆகும் - ஆகாது’ என்ற வரையறைகள்

போன்றவற்றை வழங்கவில்லை. அத்துடன், மிக முக்கியமாக, அவர்களுள் பலர் நேரடியாக உழைப்பில் ஈடுபட்டு ஒரு முன்மாதிரியை வகுத்துத் தரவில்லை என்பதுதான்.

எனினும், முஹம்மத் (ஸல்) அவர்கள் இந்த எல்லோரிலும் மாறுபட்ட ஒருவராவார்கள். அவர்கள் இத்துறையை வெறும் உலகியல் தேவையொன்றைப் பெற்றுக்கொள்ளும் நிலையிலிருந்து மாற்றி இதற்கு ஆன்மிக வடிவமொன்றைக் கொடுத்தார்கள்; ‘ஆகும் - ஆகாது’ என்ற வரையறையை வகுத்து, ‘வல்லோனின் பார்வை உங்கள் உழைப்பில் இருக்கிறது’ என்று மொழிந்து, இறைவனுடன் அத்துறையை இணைத்துவிட்டார்கள். அத்துடன் அவர்களும் உழைப்பில் ஈடுபடும் ஒருவராகவும் இருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் வர்த்தகம் செய்வதன் நிமித்தம் சிரியா உட்பட இன்னும் பல இடங்களுக்கும் போயுள்ளார்கள். அத்தகைய வர்த்தக விடயங்களில் அவர்கள் நடந்துகொண்ட முறைகள் வர்த்தகத் துறைக்கே முன்மாதியாக உள்ளது.

— கொள்முதல் - விற்பனை
— அளவு, நிறுவை
— கடன், கைம்மாறு
— கொடுக்கல் வாங்கல்கள்
— விற்பனைக்கு ஆகும் - ஆகாதவைகள்
— தொழிலாளர் உறவுகள்
— கணக்கு எழுதி வைத்தல்

— இலாப நஷ்டங்கள்
— வியாபாரத்திற்கும் வட்டிக்கும் இடையிலான வேறுபாடுகள்
— வாக்குறுதி காத்தல்

போன்ற ஒவ்வொரு விடயத்திலும் ஒரு மனிதன் அல்லாஹ்வுக்குப் பொருத்த மாக எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை எடுத்துரைத்தார்கள்; நடைமுறை யிலும் காட்டித் தந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பெற்ற அல் குர்ஆனில் மிக நீளமான வசனமொன்று இருக்கின்றது.* அந்த அளவு நீளமானதோ அதைவிட நீள மானதோ எனக் கூறுவதற்கு வேறு வசனங்கள் இல்லை. அவ்வளவு நீண்ட வசனத்தில் அடங்கியிருப்பது கடன், வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர் பான அம்சங்கள் எவ்வாறு எழுதிக் கொள்ள வேண்டும் என்பதாகும். அதற்கு அடுத்த வசனமும் அவை பற்றியே பேசுகின்றது. இவற்றிலிருந்து இவை தொடர் பாக இஸ்லாம் கொண்டுள்ள நிலைப்பாட்டை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள லாம்.

உண்மையில், நபி (ஸல்) அவர்கள் பொருளாதாரத் துறை சார்ந்த விடயங்களில் நேரடியாக ஈடுபட்டு வழிகாட்டிய ஒருவராவார்கள். எனவேதான், இந்தத் துறையில் அவர்களால் ஓர் உதாரணப் புருஷராகத் திகழ்ந்து வாழ முடிந்தது.

அவர்கள் மொழிந்தார்கள்:

— "எவர்கள் நாணயமிக்க
வியாபாரிகளாக இருக்கின்றார்களோ
அவர்கள் மறுமையில்
நபிமார்கள் (இறை தூதர்கள்)
சுஹதாக்கள் - (அல்லாஹ்வின் பாதையில் உயிரை அர்ப்பணித்தவர்கள்)
சத்தியவான்கள் ஆகியோருடன் இருப்பர்!"[156]

## அரசு நடத்தியவர்!

அரசியற் துறை எவ்வளவு முக்கியமானது என்பதை அறியாத எவரும் இம்மண்ணின் மீது இருக்கமாட்டார்கள். மனிதனின் மிக அற்ப விடயம்கூட அதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டேயுள்ளது.

உண்மையில் அரசியல் ஆதிக்கம் என்பது கூர்மையான ஒரு கத்திக்கு ஒப்பானது. கூர்மையான கத்தியொன்று சுயபுத்தியுடன் நிதானமாக இயங்கும் ஒருவர் கையில் கிடைத்தால் எவரும் பயப்படுவதற்கில்லை. ஆனால், அது புத்தி பேதலித்த அவசரக்காரர் ஒருவரின் கைகளுக்குச் சென்றால் 'என்ன நடக்குமோ' என அச்சங்கொண்டு எல்லோரும் ஓடவேண்டியதுதான்.

'இல்லை' என்று மறுக்க மாட்டீர்களே?

---

* அல் குர்ஆன் 2: 282

156. 'Al Hadis', Maulana Fazlul Careem, (1979), Page: 301

அதேபோல, அரசு அதிகாரமும் நல்ல, நம்பிக்கையுடைய, நீதிக்கும் நேர்மைக்கும் மதிப்பளிக்கின்ற, ஒழுக்கத்தை உயிராக நேசிக்கின்ற ஒருவர் அல்லது ஓர் அமைப்பிடம் சென்றால், நாடு செழிப்படையும்; நீதியும் ஒழுக்க மாண்புகளும் நிலைபெறும்; இனத்துவேசம், சாதிக் கொடுமை, நிற வெறி என்பன நீங்கிவிடும்; வறுமையில்லாத சமூக சூழல் உருவாகும்; மக்கள் உயிருக்குப் பாதுகாப்பு இருக்கும்; பொதுவாக 'நாட்டுப் பிரஜைகள் யாவரும் நிம்மதியான வாழ்வைப் பெறுவர்' என்று திட்டவட்டமாக நம்பிக்கை கொள்ளலாம்.

ஆனால், அவ்வதிகாரம் நற்பண்புகள் மருந்துக்கும் கிடைக்காத, அக்கிரமக்காரர்களின் கரங்களுக்குச் சென்றால் நாட்டு நிலைமையும் மக்கள் வாழ்வும் பெரும் ஆபத்தையே காண நேரிடும். இதற்கு அன்றைய அராஜக ஆட்சி புரிந்த ஹிட்லர், முஸோலினி போன்றவர்களில் மட்டுமல்ல, இன்றைய பல நாடுகளின் ஆட்சியாளர்களிலும் ஏராளமான உதாரணங்கள் காணப்படுகின்றன.

இவ்வளவு முக்கியமான துறை தொடர்பாக 'ஏதோ சொன்னார்கள்' என்பதைத் தவிர வேறு எத்தகைய உறவும் கொண்டு செயற்படாத மதத்தாபகர்கள் பலர். அவர்கள் ஆட்சி நடத்தவில்லை; அந்தத் துறையை எட்டியும் பார்க்கவில்லை. அவர்களில் சிலர் அந்தத் துறை தொடர்பான சிற்சில போதனைகளை செய்துள்ளனர். இந்நிலையில் இத்துறை தொடர்பான நடைமுறைச் சிக்கல்களை அவிழ்த்து அழகான வழிகாட்டலை அவர்களால் எப்படி வழங்க முடியும்?

உங்களைக் கேட்டால், "ஓர் ஆன்மிக வாதியாகவோ, நாட்டு நிர்வாகத்தையும் ஆட்சிப் பொறுப்பையும் துறந்து சென்று துறவியாகவோ ஒதுங்கி வாழ்ந்துகொண்டு தத்துவம் பேசுவதை விட, உள்ளே வந்து, தாமே நேரடியாக அரசுத் துறையில் ஈடுபட்டு, பிரச்சினைகளைத் தீர்த்து, நடைமுறை சாத்தியமான சுமுகமான வழிகள் மூலம் மக்கள் வாழ்வை சீர்செய்வதுதான் மிக ஏற்றமானது" என்று கூறுவீர்கள் அல்லவா!

நீங்கள் கூறும் அந்த அழகுப்பணியை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திறம்பட செய்து வெற்றி கண்டார்கள். அவர்கள் அந்த ரீதியில் 'சொல்லும் செயலும் ஒருசேர செயல்பட்ட அரசியல் நிபுணர்' எனக் குறிப்பிடலாம். அந்த அளவு சிறப்பாக அவர்களது அரசுத் துறை சார்ந்த பணிகள் அமையப் பெற்றிருந்தன.

நபி (ஸல்) அவர்கள் தமது இஸ்லாமிய எழுச்சிப் பணியைத் தொடருமுன் அரேபியர்கள் மத்தியில் நிர்வாகம், கட்டுப்பாடு, ஒழுங்கு, திட்டமிட்ட செயல் முறை என்பன இருக்கவில்லை என்பதை எல்லோரும் அறிவர். அவர்களில் செல்வமும், சண்டித்தனமும், கோத்திரச் செல்வாக்கும் உள்ளவர்களே அதிகாரம் படைத்தவர்களாய் இருந்தனர். அத்தகைய மக்கள் மத்தியில் ஓர் அரசு முறையைத் தோற்றுவித்து கட்டுப்பாடும், ஒழுங்கும் உள்ளவர்களாக வாழச் செய்த பெருமை நபிகளாருக்கே உண்டு.

முஹம்மத் (ஸல்) அவர்கள் முதலில் அந்த மக்களை சிந்தனை ஒருமைப்பாடுள்ள சமுதாயமாக ஒன்று திரட்டுவதில் ஈடுபாடு கொண்டார்கள். அந்த வகையில்,

—'வணங்கவும், வழிபடவும், பிராத்தனை புரியவும்,
சட்டம் இயற்றவும், வாழும் வழியைத் தரவும்
தகுதி படைத்த ஒரேயொருவன்
அல்லாஹ் மட்டுமே'

என்ற கருத்தை அந்த மக்கள் முன் சமர்ப்பித்தார்கள். அதனை ஏற்று வாழ வந்தோரை அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்ப வாழும் தனி மனிதர்களாக அன்றி குழு அமைப்பில் வாழக்கூடியவர்களாக திரட்டி எடுக்க முனைந்தார்கள். அவர்களுக்கு தனிப்பட்ட நிலையிலும், கூட்டு வாழ்விலும் அல்லாஹ்வுக்கு இணக்கமாக வாழ்வதற்கான ஒழுங்குகளை வகுத்துக் கொடுத்தார்கள். அத்துடன் அவர்களே முன்னின்று அந்த மக்களை வழிநடத்தினார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்களது இறையாதிக்கத்தை நிலைநிறுத்தும் இந்த உழைப்பு 12 ஆண்டுகளைக் கடக்கும்பொழுது, மிகச் சிறந்த இஸ்லாமியக் குழுவொன்று உருவாகி விட்டிருந்தது. அதோடு, அவர்களது இஸ்லாமிய முழக்கம் கூட முழு அரபு நாட்டிலும், எல்லா மூலை முடுக்குகளிலும் பரவி விட்டிருந்தது. இது எடுத்த எடுப்பில் மிக இலேசாக நிறைவேறியதல்ல. விக்கிரக வணங்கிகள், ஏழைகளைச் சுரண்டி வாழ்ந்தவர்கள், தீமைகளுக்குக் காவலாளிகளாய் இருந்து அவற்றை வளர்த்தவர்கள் ஆகியோரின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் இந்த இஸ்லாமிய அணி உருவாகியது.

பின்னர் 13 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குக் குடிபெயர்ந்து செல்கிறார்கள். அங்கு அனைத்து இஸ்லாமிய மக்களையும் இணைத்த இஸ்லாமிய அரசுக்கான அடித்தளம் இடப்படுகின்றது. 11 அம்சங்களை உள்ளடக்கிய 47* விதிகளைக் கொண்ட அவ்வரசியல் சாஸனமே 'எழுத்தில் வந்த முதல் அரசியல் சாஸனம்' என பலராலும் விதந்துரைக்கப்படுகின்றது.

அந்த 11 அம்சங்களாவன:

1 - சிறுபான்மை மக்களுடனான உறவுகளை சீராக்குதல்
2 - அகதிகள் பிரச்சினையைத் தீர்த்து வைத்தல்
3 - இன, நிற, குல வேற்றுமைகளைக் களைதல்
4 - ஆளுவோர் - ஆளப்படுவோர் உறவும் உரிமைகளும் ஒழுங்கமைத்து பேணுதல்
5 - சமத்துவத்தை உருவாக்கல்
6 - வாய்மையின் அவசியத்தை உணர்த்தி, அதை நிலைநாட்டும் பணிகளை மேற்கொள்ளல்
7 - உடன்படிக்கைகளைப் பேணுதல்
8 - பொருளாதாரத்தில் தன்னிறைவு காணல்
9 - நாட்டின் தலைவருக்குரிய வரையறைகளை வகுத்தல்
10 - அனாதைகள் பிரச்சினையைத் தீர்த்து வைத்தல்
11 - பெண்ணுரிமை காத்தல்

* பார்க்க: Madinan Society at the time of the prophet - Vol: 1, Akram Diya Al Umari, (1991) Page: 107

இவ்வாறு உருவான அரசு சாஸனத்தை அமுலுக்குக் கொண்டுவரும் அடுத்த நடவடிக்கையின்போது, அதற்கு அவசியமான சட்டங்களை வகுக்கின்றார்கள்; அவற்றை நிர்வகிக்கும் அதிகாரிகளை நியமிக்கின்றார்கள்; தூர இடங்களுக்கான கவர்னர்களை நியமித்து அதிகார பரவலாக்கத்தை செய்கின்றார்கள்; அவர்களுக்கான ஒழுக்கக் கோவைகளைத் தயாரிக்கின்றார்கள்; தனியான நீதித்துறையை அமைத்து முஸ்லிம் - முஸ்லிமல்லாத எல்லா மனிதர்களும் நீதியைப் பெற வழி செய்கின்றார்கள்; வாழ்வின் ஒவ்வொரு துறையினதும் சிறிய அம்சங்கள்கூட விடுபடாதவாறு தமது அரசு அதிகாரத்தினுள் கொண்டுவந்து நெறிப்படுத்துகின்றார்கள்; இத்தகைய அமைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு, கட்டுப்பாடு என்பனவற்றை மீறிச் சென்று தவறு செய்வோர் திருந்தாத பட்சத்தில், தண்டிப்பதற்கான தண்டனை முறைகளையும் அறிமுகப்படுத்துகின்றார்கள்!

இத்தனையும் சிறப்பாக செயற்படுவதற்கான அரசை நிறுவி அதன் நடவடிக்கைகள் அனைத்தையும் முன்னின்று நடத்திச் செல்லும் ஒப்பற்ற தலைவராக முஹம்மத் (ஸல்) அவர்கள் தாமே நின்றார்கள். அடுத்த சில வருடங்களில் முழு உலகுக்கும் வழிகாட்டும் சக்திமிக்க தார்மிக அரசாக அது மிளிர்ந்து காணப்பட்டது. உண்மையில், தெய்வீகக் கோட்பாடுகளுக்கு இசைவாக அமைந்த அவ்வரசு அவர்களது காலத்திற்குப் பின் இன்னும் பல நாடுகளுக்குப் பரவிச் சென்றது.

பொஸ்வர்த் ஸ்மித் என்பவர் கூறுகின்றார்:

— அவர் ஒரே நேரத்தில் சீசரும் போப்பும் ஆவார்.
ஆனால், சீசரின் பாதுகாப்புப் படைகள் எதுவுமில்லாத சீசர் ஆவார்;
அதேவேளை போப்பின் பகட்டுகள், ஆடம்பரங்கள்
எதுவும் இல்லாத போப் ஆவார்.
தயார் நிலையிலுள்ள இராணுவமோ,
நிலையான நிர்ணயமான வருமானமோ இல்லாமல்
(மக்களின் உள்ளங்களையும் பெரும் நிலப்பரப்பையும்)
வெறும் இறைவனின் இசைவாணையை,
தெய்வீக அனுமதியை மட்டுமே துணையாகக் கொண்டு
ஆட்சி புரிந்ததாகக் கூறிக்கொள்ளும் உரிமை,
மனித வரலாற்றில் எவராவது ஒருவருக்கு இருக்குமானால்,
அவர் முஹம்மத் (ஸல்) அவர்களேயாவார்.
ஏனெனில் ஆட்சி அதிகாரம் செலுத்திடத் தேவையான கருவிகள்,
துணைச் சாதனங்கள் எதுவும் இல்லாமலேயே
(ஆன்மிக மற்றும் உலக) அதிகாரங்கள்
அனைத்தையும் அவர் பெற்றிருந்தார்.”[157]

---

157. ‘Bosworth Smith’ , ‘Mohammed and Mohammadanism’, London, 1874, Page: 92, ‘இஸ்லாத்தை அறிந்து கொள்ளுங்கள்’ நூலில் காணப்படும் மேற்கோள், பக்: 25

இவ்வாறு ஆன்மிக - உலகாயத இரு துறைகளையும் இணைத்து, நீதியும் நேர்மையும் ஒருசேர அமைந்த இஸ்லாமிய ஆட்சியை உருவாக்கி நடத்திய அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டாமா?

## யுத்தம் புரிந்தவர்!

மனிதன் தனியாகவன்றி கூட்டாக வாழும் இயல்பினன். அவ்வாறு கூட்டாக வாழும்பொழுது இணக்கம் இருக்கலாம்; பிணக்கமும் வரலாம்; வந்துள்ளது; வருகின்றது என்பதுதான் உண்மை. காரணம், ஒன்றாக வாழ்பவர்கள் மத்தியில் உள்ளங்கள் வித்தியாசப்படலாம். அதனால் உருவாகும் வேறுபட்ட கருத்துக்கள் ஆரம்பத்தில் மனக் கசப்பைத் தரலாம். அது தீராத பட்சத்தில் வாய்த் தர்க்கங்களாகி சண்டைகள் மூண்டு விடுகின்றன. இத்தகையவை இரு சமூகங்களிடையே உருவானால் உள்நாட்டு யுத்தம் என்றும், நாடுகள் சிலவற்றிடையே தோன்றுமானால் நாடுகளுக்கிடையிலான யுத்தம் என்றும் கூறுவோம் அல்லவா!

உண்மையில் சண்டை பிடிப்பதும், யுத்தங்கள் புரிவதும் இன்று நேற்று அல்ல, மனித இனத்தின் தோற்றத்திலிருந்தே இருக்கின்றன. "எமது மதம் அதிகாரப் பிரயோகமின்றி, ஆட்சியின் துணையின்றி வளர்ந்த மதம்!" எனக் கூறிக்கொள்வதன் மூலம் பெருமைப் படுவோர்கூட வாழ்க்கை நெடுக பல்வேறு யுத்தங்கள் புரிந்த வரலாறு உண்டு என்ற உண்மையை எவரும் மறந்துவிடக் கூடாது.

ஒருவர் தனக்கு நோய் வராமல் பாதுகாப்பாக இருப்பது அவசியமே. ஆனால், அந்தப் பாதுகாப்புகளையும் மீறி நோய் வந்துவிட்டால் "எனக்கு நோய் இல்லை; சுகதேகியாக இருக்கிறேன். அதோ அவனுக்குத்தான் நோயுள்ளது!" எனக் கூறுவது ஆகாது. மாறாக, தனது நோய்க்குப் பரிகாரம் காண வேண்டும். இல்லாவிட்டால் அந்த நோய் ஆளையே கொண்டுபோய்விடும்.

இதேபோன்று மதம் எதுவாயினும் மனித சமுதாயத்தில் நிலவும் எதார்த்த நிலையை உணர்ந்து பரிகாரம் காண்பது அவசியம். அவ்வாறின்றி வெறும் கற்பனை உலகில் கோட்டை கட்டி வாழமுற்படுவது அறிவீனமே. இந்த வகையில் முடிந்தமட்டும் யுத்தம் வராது அமைதியைக் காக்க முற்படுவது உத்தமமான காரியமே. இந்நிலையையும் மீறி யுத்தம் என்றொன்று வந்துவிட்டால் பரிகாரம் காணுவது தவிர்க்க முடியாத அவசரத் தேவையாகி விடுகின்றது அல்லவா!

இந்நிலையில் எதற்காக யுத்தம் புரிய வேண்டும்; எப்படி யுத்தம் புரிய வேண்டும்; அதற்கான வரையறைகள் என்ன; சமாதானம் செய்வது எப்படி; மன்னித்தல், அகதிகள் பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்றவை எவ்வாறு கவனிக்கப்பட வேண்டும் என்பன பற்றிய தெளிவுகள் தரப்பட வேண்டும்; நடைமுறை முன்மாதிரி மூலம் வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். என்றாலும் எத்தனை மதத்தாபகர்கள் இவை தொடர்பான நேரடி ஈடுபாடு கொண்டு

பரிகாரம் தந்துள்ளனர்? அப்படிப் பரிகாரம் தராததன் விளைவாக மனித சமுதாயம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்துள்ளது; வேதனைகளை அனுபவித்துள்ளது என்பதை வரலாறு கண்ணாடி போல் காட்டுகின்றது.

ஆனால், முஹம்மத் (ஸல்) அவர்கள் மட்டும் இவ்வகையில் தனித்துவம் பொருந்திய முன்மாதிரி வழங்கி நிற்கின்றார்கள்.

அவர்கள்

— தளபதியாகத் தாமே முன்னின்று
படை நடத்திச் சென்று யுத்தம் புரிந்தார்கள்!
— சமாதான ஒப்பந்தங்கள் செய்தார்கள்!
— கைதிகளுக்கு மன்னிப்பளித்து விடுதலைச் செய்தார்கள்!

அந்த வகையில்

— யுத்தம் புரிவதன் நோக்கம்
— யுத்தம் புரிவதன் ஒழுங்கு முறைகள்
— படை வீரர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்
— கைதிகளைப் பராமரித்தல்
— கைதிகளை விசாரணை செய்தல்
— அவர்களுக்குத் தண்டனை வழங்குதல் அல்லது மன்னிப்பளித்தல்
— எதிரிகளுடன் கண்ணியமாக நடந்துகொள்ளல்
— யுத்தத்தில் ஈடுபட்ட தன் பக்கத்தவர்களில்
மரணித்தோரின் குடும்பங்களைக் கவனித்தல்
— யுத்தத்தில் கிடைத்த பொருட்களை பகிர்ந்தளித்தல்
— எதிரிகளின் பெண்கள், வயோதிபர்கள், பிள்ளைகள் மட்டுமன்றி
அவர்களது வழிபாட்டுத் தளங்களையும் பாதுகாத்தல்
— வென்றெடுத்த பகுதி மக்களின் நியாயமான
உரிமைகளைப் பேணல்

போன்றவை பற்றி உலகின் வேறு எந்த ஆட்சியாளரும், மதப் போதகரும் வழங்காத வழிகாட்டல்களை முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது செயல் வடிவத்தில் வழங்கிவிட்டார்கள். இன்றுவரை அவற்றுக்கு நிகரான செயல் ரீதியான வழிகாட்டல்களை வேறு எவருமே வழங்கவில்லை.

இப்பொழுது

— "மதப் போதனைக்குப் போர்கள் எதற்கு?"

என்று யாரேனும் கேட்டுவிடலாம்.

'மதம்' என்றவுடன்

— வாழ்விலிருந்து ஒதுங்கி தனித்துத் தியானித்தல்
— வணக்க வழிபாடுகளில் ஈடுபடல்
— புனிதத் தளங்களைத் தரிசித்தல்

— அற்புதங்களைக் காட்டி ஆள் திரட்டல்
— சடங்குகள், சம்பிரதாயங்களை நிறைவேற்றல்
— திருவிழாக்கள் நடத்துதல்

என்பனவற்றுடன் 'மனிதனின் தனிப்பட்ட வாழ்வில் சிற்சில ஒழுக்கங்களைப் பேணல்' போன்றவைதான் பலரதும் சிந்தனைக்கு வருவன. அதற்குமேல் எதுவும் இல்லாததுபோல் தன்னிஷ்டப்படி பலரும் நடந்து கொள்வார்கள்; அவர்கள் எந்தக் கொள்கையையும் கடைப் பிடிப்பார்கள். அத்தகையவர்களுக்கு வாழ்வின் பல விடயங்களில் மனமும், பணமும், சமூக அந்தஸ்துமே தெய்வங்களாக இருக்கும்.

மேற்காணும் போக்கில் 'மதம்' என்பதற்கு வரைவிலக்கணம் கொடுக்கப்படுமாயின், இஸ்லாம் அத்தகைய ஒரு மதமல்ல என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இஸ்லாம் தீமைகளை அகற்றி நன்மைகளை நிலைநாட்ட வந்த மார்க்கம். எங்கெல்லாம் மனிதனின் தூய, அல்லாஹ்வுக்கு இயைந்த வாழ்வுக்கு இடையூறு ஏற்படுகின்றதோ அங்கு அவற்றை நீக்கி தூய்மையை நிலை நாட்டுவது இஸ்லாத்தின் இலட்சியமாகும்.

இந்த இலட்சியப் பணியில் ஈடுபட்டு, தீமைகளை வேரறுத்து, நன்மைகள் நிலைபெறும் சமூக சூழலை உருவாக்க முனையும்பொழுது, தீமையின் காவலர்கள், தீமைகளிலேயே உழன்று வாழும் சமூகங்கள், தீமைக்கு அனுமதி வழங்கி ஆதரவு தரும் அரசுகள் எதிர்க்குரல் எழுப்பி, போர் புரியத் தயாராகி விடுகின்றன; இஸ்லாத்தின் முயற்சிகளை நிர்மூலமாக்கி, அடக்கி ஒடுக்கி அதைச் செயலிழக்கச் செய்ய முனைகின்றன. இக்கட்டத்தில் போர் மூளுதல் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இந்தப் போர் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான போராகும்; நீதிக்கும் அநீதிக்கும் இடையிலான போராகும்.

ஆனால், ஒன்றை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

இஸ்லாம் எடுத்த எடுப்பிலேயே போர் புரியத் தூண்டும் மார்க்கம் அல்ல. நபி (ஸல்) அவர்களும் அவ்வாறு போதிக்கவும் இல்லை; நடந்து காட்டவும் இல்லை. அடுத்து நபிகளார் அவர்கள் ஒருபோதும் போருக்கு முந்திக் கொள்ளவும் இல்லை. எப்பொழுது இஸ்லாமிய சமூகத்தின் மீது தீமைகளைத் திணிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதோ, எப்பொழுது தீமைவயப்பட்டவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழித்தொழிக்கவென போர் தொடுத்தார்களோ அப்பொழுதுதான் அவர்களும் போருக்குப் புறப்பட்டார்கள்.

இதில் தவறு உண்டா? சொல்லுங்கள்!

## நபிகளாரும் வாளும்!

"முஹம்மத் (ஸல்) அவர்களின் முயற்சிகளில் வாள் பயன்படுத்தப் பட்டது; இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது!" என்ற கருத்தைக் கொண்ட சிலர், அக்கருத்தை எவ்வளவு அழகான சித்திரமாக வரைந்து வைத்துவிட்டார்கள் என்பதை மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் தமக்கே உரிய தனிப்பாணியில் இவ்வாறு மொழிகின்றார்கள்:

— "மதவெறியர்களின் (முஸ்லிம்களின்) ஒரு கூட்டம்
உருவிய வாட்களை கைகளில் ஏந்திய வண்ணம்
தாடிகளைக் கோதிவிட்டுக் கொண்டு,
பொறி பறக்கும் விளிகளுடன்,
'அல்லாஹு அக்பர்' என முழங்கிக்கொண்டு வருகிறது.
எங்கே ஒரு காஃபிரை(முஸ்லிமல்லாதவனை)க் கண்டாலும் பிடித்து,
பளபளக்கும் வாளை அவன் கழுத்தில் வைத்து,
"லா இலாஹ இல்லல்லாஹ் எனச் சொல்; இல்லையாயின்
இப்பொழுதே உன் தலை உடலிலிருந்து கொய்து எறியப்படும்!"
என்று ஆவேசத்துடன் கர்ஜிக்கிறது.
இத்தகைய கோர சித்திரமொன்றை
மிகுந்த திறமையுடன் தீட்டிவிட்ட அவர்கள்,
"இச்சமுதாயத்தின் வரலாற்றிலிருந்து இரத்தவாடை வீசுகின்றது!"
எனப் பொறித்து வைத்து
முஸ்லிம்களைப் பற்றிய முற்றிலும் தவறான
எண்ணமொன்றைப் பதிந்து விட்டார்கள்."[158]

இத்தகைய கருத்துக்கள் மற்றும் சிலரிடமும் இருக்கின்றன.* இவற்றில் ஏதும் உண்மை இருக்கின்றதா என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதற்கு அனுகூலமாக சில குறிப்புக்களை முன்வைக்க விழைகின்றேன்.

முஹம்மத் (ஸல்) அவர்கள்
— ஒரு மாமன்னரின் மகனல்லர்!**
— பெரும் தனவந்தரின் புத்திரருமல்லர்!

அவர்களுடைய தந்தை ஒரு சாதாரண வர்த்தகர்; ஆடு மேய்ப்பதைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர். "நான் காய்ந்த ரொட்டித் துண்டுகளை உண்டு வாழ்ந்த பெண்ணின் மகன்!" என்று நபிகளாரே மொழிந்ததிலிருந்து அவர்களது தாயார் ஒரு மகாராணி அல்லர் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அத்துடன், அவர்களது பொருளாதார நிலையும் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தது என்பதுவும் தெளிவாகக் காண முடிகின்றது.

அடுத்து, முஹம்மத் (ஸல்) அவர்களின் இஸ்லாமிய பிரசாரப் பணிக்கு, சத்தியப் போதனைக்கு, தீமையை வேரறுத்து நன்மையை நிலைநாட்டும் நற்பணிக்கு, சோதனைகள் மிகுந்த சாதனை வாழ்க்கைக்கு,

---

158. 'அறப்போர்', மௌலானா அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள், Published by Lebanan Holy Quran Publishing House, (1980), Page: 5.

* 'பலவந்தமாக பரப்பப்படாத ஒரே மதம் பௌத்தம்' என்ற கட்டுரையை சிங்கள தினசரி பத்திரிகையான 'திவயின' (28.5.91)வில் எழுதிய ஹேகொட கேமானந்த தேரர், இக்கருத்தையே தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

** புத்த பிரானின் தந்தை 'சுத்தோதன' என்பவர் சாக்கிய குலத்தைச் சேர்ந்த ஒரு மன்னர் ஆவார். அவர் கபிலவஸ்துவைத் தலைநகராகக் கொண்டு சாக்கிய தேசத்தை ஆண்டு வந்தார். இந்த சாக்கிய தேசம் ஹிமாலய மலையடிவாரத்தில் அமைந்திருந்தது. மேலும், புத்த பிரானின் தாயாரான மகாமாயாதேவியும் ஒரு மன்னரின் மகளாவார்.

— எந்த ஒரு மன்னரும்*
— எத்தகைய அதிகார பீடமும்
— எத்தகைய பலம் வாய்ந்த சமூகமும்

உதவவும் இல்லை; ஒத்தாசை புரியவும் இல்லை; பக்கபலமாக நிற்கவும் இல்லை. மாறாக எதிர்ப்புகளே எங்கும் உருவாகின.

முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவில் தன்னந்தனியாகத் தமது இஸ்லாமியப் பிரசாரத்தை ஆரம்பிக்கின்றார்கள். இந்த அழைப்பை ஏற்று முதலில் இஸ்லாத்தைத் தழுவியவர்களில் பெரும் பகுதியினர் ஏழைகளும் அடிமைகளாக இருந்தவர்களும் ஆவார்கள். எந்த ஒரு கோத்திரத் தலைவரும் இஸ்லாத்தை ஏற்கவில்லை. காரணம், அவர்கள்தான் தீமைகளின் மொத்த ஏஜண்டுகளாக இருந்து, அவற்றைப் பரப்பி, அரசோச்சிக் கொண்டிருந்தார்கள். இஸ்லாம் அவற்றை அடியோடு அகற்றிவிட்டு, சத்தியத்தை நிலைநாட்டப் போகிறது என்பதை அறிந்த

---

* 1). கிறிஸ்தவ வளர்ச்சி: "கிறிஸ்தவ வரலாற்றில் கி. பி. 306ஆம் ஆண்டு மிகவும் சந்தோசகரமான ஆண்டாகும். அந்த ஆண்டுதான் முதலாவது கொன்ஸ்டன்டைன் ரோம சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டார். கிறிஸ்துவத்தைத் தழுவிய அவர் சக்கரவர்த்தியானது கிறிஸ்தவ வளர்ச்சிக்குப் பெரும் துணையானது. அவர் அதை உறுதியாக நிலைக்கச் செய்தார். அவரே முன்னின்று கிறிஸ்தவத்தைப் பிரசாரம் செய்தார். ரோம், ஜெரூஸலம், கொன்ஸ்டன்டினோபல், டயர் போன்ற இடங்களில் ஏராளமான தேவாலயங்களை நிறுவினார். அத்துடன், கிறிஸ்தவ குருக்கள் மிகுந்த கௌரவத்துக்குரியவர்களாக ஆக்கப்பட்டதுடன் அவர்கள் முழுமையாக மத ஆராய்ச்சியில் ஈடுபடவும் வழி செய்தார். மேலும், ரோம சாம்ராஜ்ஜியத்தின் பல பகுதிகளிலும் கிறிஸ்தவ மத குருக்கள் மாநாடுகள் நடத்தப்பட்டு கிறிஸ்தவ மதத்தின் அடிப்படை நம்பிக்கைகளை முறைப்படி எழுதி, பின்பற்ற வழி செய்யப்பட்டது. இந்த வகையில் கி. பி. 325ல் 'நிகாஈ' (Nicaea)யில் நடைபெற்ற மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதில்தான் கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கையை மறுத்த 'எரியஸ்' (Arius) உட்பட பலர் கிறிஸ்தவத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர்."

- 'What is Christianity', Maulana Taqi Usmani (1987), Published by Muslim World League, K. S. A.

2). ஸொராஸ்திரிய மத வளர்ச்சிக்கு ஸைரஸ் மன்னர் பெருமளவு ஒத்துழைப்பு வழங்கினார்.

3). பௌத்தத்தின் வளர்ச்சி: இந்தியாவின் தென் தமிழ்ப் பகுதியைத் தவிர்ந்த முழு இந்தியாவையும் ஆண்ட சக்கரவர்த்தி அசோகர் பௌத்தத்தின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாக அமைந்தார். அவர் பௌத்த தர்மத்துக்குப் புது வடிவம் கொடுத்து 'அசோக தர்மம்' என நாட்டுக்குள்ளேயும், நாட்டுக்கு வெளியிலும் பிரசாரம் செய்தார். பௌத்த மதப் பிரசாரப் பணியில் அவர் மட்டுமன்றி மந்திரி பிரதானிகளும் ஈடுபடச் செய்தார். பௌத்தத்தின் அடிப்படைப் போதனைகளை எல்லா மக்களும் பெற்றுக்கொள்வதற்கான வழிகளை ஏற்பாடு செய்தார்.
அசோகன் இந்தியாவில் ஆட்சி செய்த காலத்திலேயே இலங்கைக்கும் பௌத்த மதம் கொண்டு வரப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. அப்படி அதனைக் கொண்டு வந்தவர் அவரது மகனான மிகிந்து என்பவராவார்.

இலங்கையில் பௌத்தத்தை ஏற்ற முதல் மனிதர் தேவானம்பியதிஸ்ஸ எனும் மன்னராவார். அவரையடுத்து மக்கள் எத்தகைய எதிர்ப்புமின்றி சாரி சாரியாக பௌத்தத்தில் சேர்ந்தனர்.

- 'பௌத்த தர்மம்', சாந்த ரத்னாயக்கா, குணசேன வெளியீடு, (1984), பக்: 169 - 185

இவற்றிலிருந்து: கிறிஸ்தவம் சக்கரவர்த்தி கொன்ஸ்டன்டைனின் பக்க பலத்துடன் வளர்ந்தது; ஸொராஸ்திரியம் ஸைரஸ் மன்னரின் ஒத்துழைப்புடன் வளர்ந்தது; பௌத்தம் சக்கரவர்த்தி அசோகனதும், அவரது மந்திரி பிரதானிகளதும் பெரும் செல்வாக்குடனும் ஒத்துழைப்புடனும் வளர்ந்தது. இலங்கையிலும் பௌத்த வளர்ச்சி முதன் முதலாக மன்னர் தேவானம்பியதிஸ்ஸ மூலமே ஏற்பட்டது. அவரும் அவரது மந்திரி பிரதானிகளும் எடுத்த முயற்சிகளே பௌத்தம் பரவக் காரணம். இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு இப்படி எவர் கிடைத்தார்?
அப்படி ஒரு மன்னரின் உதவியில்லாது வளர்ந்ததுதான் இஸ்லாம்.

அவர்கள் அதை இல்லாதொழிக்கவே முயன்றார்கள். எனவே, நபிகளாரும் அவர்கள் தம் தோழர்களும்

— ஏச்சுப் பேச்சுக்கள்
— கிண்டல்கள்
— அடிதடிகள்
— சித்ரவதைகள்
— கொடூரக் கொலைகள்

போன்ற இன்னோரன்ன கொடுமைகளுக்கு இலக்காக நேர்ந்தது. ஆனால், இவர்களும் அதே வழிமுறைகளைக் கையாண்டு தமக்குத் தீங்கு செய்தவர்களை பழிவாங்க சிறிய முயற்சியும் எடுத்ததாக வரலாறு கிடையாது.

மாறாக, அவர்களுக்குத் தரப்பட்ட இம்சைகளை சகிக்க முடியாது போன போது, அவர்களுள் அதிகமானோர் தமது

— வீடு வாசல்கள்
— தொழில் துறவுகள்
— நில புலன்கள்

யாவற்றையும் அப்படி அப்படியே போட்டுவிட்டு அபிஸீனியாவுக்கும் மதீனா வுக்கும் குடிபெயர்ந்து சென்றனர். எனினும் மக்காவில் வாழ்ந்த இஸ்லாத்தின் எதிரிகள் அங்கும் முஸ்லிம்களை நிம்மதியாக வாழவிடவில்லை.

ஆனால், இக்கட்டத்தில் மதீனாவில் ஓர் இஸ்லாமிய ஆட்சி உருவாக்கப்பட்டிருந்ததால் அதனைப் பாதுகாத்துக் கொள்வது நபி (ஸல்) அவர்களுடையவும் மற்றும் முஸ்லிம்களதும் ஓர் அடிப்படைத் தேவையாகி விடுகின்றது. எனவே, விரட்டிவரும் எதிரிகளைத் துரத்தியடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவ்வாறு நபிகளார் நடத்திச் சென்ற எந்தப் போர்ப் படையும் இஸ்லாமியப் பிரசாரத்தை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பதை இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பப் பாடங்களைப் படிக்கும் மாணவ மாணவியரும் தெரிந்து கொள்வர். அடுத்து இவ்வாறு போருக்குச் சென்ற இஸ்லாமியப் படைகள் படைப்பலத்திலும், ஆயுத பலத்திலும் மற்றும் சகல அம்சங்களிலும் எதிரிப் படைகளைவிட மிகவும் குறைந்த வசதிகளையே கொண்டிருந்தன. ஆனால், இறை நம்பிக்கை, தலைமைத்துவக் கட்டுப்பாடு, மார்க்க வரையறைகளைப் பேணல் போன்றவற்றில் இஸ்லாமியப் படையினர் எதிரிப்படையினரை விடவும் உயர்ந்து காணப்பட்டனர்.

இவ்வாறு அமைந்த இஸ்லாமியப் படையினரின் நோக்கம் வெள் ளைச் சுவரிலான கறுப்பு எழுத்துக்கள் போன்று தெளிவானதே.

அவையாவன:

— இஸ்லாத்தின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் எதிரிகளின் நடவடிக்கைகளை முறியடித்தல்

— முஸ்லிம்களைத் தனித்தனியாகவும் கூட்டங்கூட்டமாகவும் அழிக்கும் அவர்களது முயற்சிகளைத் தோற்கடித்தல்
— தீமைகள் வளருவதற்கான வாசல்களை அடைத்தல்

என்பனவாகும். நபிகளாருக்குப் பின் வந்த கலீஃபாக்கள் ஆட்சியின்போது கூட முஸ்லிம்கள் மீது போர் திணிக்கப்பட்ட வேளையிலும், தீமைகளை வேருடன் பிடுங்கி எறிய வேண்டி வந்த வேளையிலுமே போர்கள் நடந்தன என்பது வரலாறு.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் ஓர் இஸ்லாமிய சமூக அமைப்பை - ஆட்சியை அமைத்தபின், பத்தாண்டு காலத்தில்தான் போர்களில் ஈடுபடும் நிர்ப்பந்தம் உருவானது. அப்போர்களின் விளைவாக 250க்கும் குறைவான முஸ்லிம்களே மரணம் எய்தினர்; எதிரிகள் தரப்பில் மரணித்தோர் தொகை 759க்கு மேல் செல்லவில்லை. அத்துடன் 6564 எதிரிகள் கைது செய்யப்பட்டு அவர்களில் 6347 பேர் விடுதலை செய்யப்பட்டனர்; 215 பேர் இஸ்லாத்தைத் தழுவினர்; இருவர் - அவர்கள் இழைத்த பெருங்குற்றங்களுக்காக மரண தண்டனை பெற்றனர்.*

நாடு பிடிக்கும் ஆசையில், அல்லது, ஒரு நாட்டில் இயற்கையாக விளையும் செல்வங்களைச் சுரண்டிச் செல்லல், இன, மொழி, வர்க்க ஆதிக்கத்தை நிலைபெறச் செய்தல் போன்ற தற்கால நோக்கங்களைக் கொண்டு அன்றி, சத்தியத்தை நிலைபெறச் செய்யும் நோக்குடன் தம்மீது திணிக்கப்பட்ட போர்களை எதிர்கொள்ள எடுத்த நடவடிக்கைகளை புத்தியுள்ள எவராவது பிழை காண முடியுமா?

உண்மையில், இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்பது வரலாறை திரித்துக் கூறும் முயற்சியாகும். அல்லது வரலாறு தெரியாததாலும் இஸ்லாத்தின் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியாலும் இட்டுக்கட்டி முன்வைக்கப்படும் பொய்களாகும். நீங்கள் நிதானம் தவறாது 'உண்மை எங்கிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்வேன்' என்ற தூய மனதுடன் வரலாறைப் படியுங்கள். அப்பொழுது எது உண்மை என நீங்களே கண்டு கொள்வீர்கள்.

பேராசிரியர் ராமகிருஷ்ணராவ் கூறுகிறார்:

— "இஸ்லாத்தையும் வாளையும் இணைத்துச் சொல்லப்படுவதை
இப்போது எப்பகுதியிலும் அடிக்கடி கேட்க முடிவதில்லை.
மார்க்கத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் கிடையாது எனும்
இஸ்லாமியக் கொள்கை எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.
உலகப் புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் கிப்பன் கூறுகிறார்:
'மற்ற மதங்களை வாள் வலிமையால் அழித்துவிடுவது
தங்கள் மீது விதிக்கப்பட்ட கடமையாக
முஹம்மதியர்கள் கருதினர்' என்று கூறுவது
பொல்லாத குற்றமாகும்.

* பெருமானார் கண்ட போர்முனைகள், ஜமால், பயனீர் பப். ஹவுஸ், சென்னை - 600001, முதற் பதிப்பு 1987, பக்: 11

கற்பனையாலும் அறியாமையாலும் எழும் இக்கூற்றை
திருக்குர்ஆன் வலிமையாக மறுக்கிறது.
கிறிஸ்துவ வழிபாடுகளுக்கு சட்டரீதியானதும் பகிரங்கமானதுமான
அனுமதி வழங்கி சகிப்புத் தன்மையுடன் நடந்துகொண்ட
முஸ்லிம் ஆட்சியாளர்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.
முஹம்மதின் வாழ்க்கையில் கிடைத்த வெற்றி
வாள் வலிமையால் பெறப்பட்டது அல்ல;
ஒழுக்க வலிமையால் பெறப்பட்டதே!"[159]

டிலேஸி ஓ'லியரி கூறுகின்றார்:
— "வெற்றி கொள்ளப்பட்ட மக்கள் மீது வாள்முனையில்
இஸ்லாத்தை முஸ்லிம் வெறியர்கள் திணித்தனர் என்பது
சில சரித்திர ஆசிரியர்கள் மிகச் சாதுர்யமாக
மீண்டும் மீண்டும் சொல்லிவந்த செய்தியாகும்.
ஆனால், இந்தக் கருத்தோ கற்பனையேயாகும்;
அதுவும் அபத்தக் கற்பனையாகும்.!"[160]*

இஸ்லாத்தை மக்களுக்கு எடுத்துக் கூறுவதில் பலவந்தத்தைப் பிரயோகிக்கக் கூடாது என்பது அல்லாஹ் விதித்த நியதி. எனவே, அதனை மீறி நபி (ஸல்) அவர்களோ அவர்களைப் பின்துயர்ந்தவர்களோ நடக்கவில்லை; இனியும் நடக்க மாட்டார்கள்!

● "தீனில் (இறைநெறியை மேற்கொள்வதில்)
யாதொரு கட்டாயமோ நிர்ப்பந்தமோ இல்லை.
தவறான வழியிலிருந்து நேரான வழி
தெளிவாகப் பிரிக்கப்பட்டு விட்டது . . . ."[161]

## ஆன்மிகத்தில் ஊறித் திளைத்தவர்!

வாழ்வின் பல்வேறு துறைகளில் முழுமையான ஈடுபாடுகொண்டு இஸ்லாமிய முன்மாதிரியை வழங்கிய முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆன்மிக உணர்வுகளிலும் வணக்க வழிபாடுகளிலும்கூட முதன்மைபெற்று விளங்கினார்கள். அவர்களது முழு வாழ்வும் இறையுணர்வு சார்ந்ததாகவே இருந்தது. அவர்கள் தமது சொல், செயல், அங்கீகாரம் அனைத்தையும் அல்லாஹ் ஒருவனின் திருப்தியை நாடியே செய்தார்கள்.

---

159. 'Muhammad The Prophet of Islam', Prof. Ramakrishna Rao, The Board of Islamic Publications, Delhi - 110006. 2nd Edition 1979, Page: 4

160. 'Islam at the Crossroads', De Lacy O'Leary, London, (1923) Page: 8 'இஸ்லாத்தை அறிந்து கொள்ளுங்கள்' நூலில் உள்ள மேற்கோள், பக்: 16

* "இந்தியாவிலுள்ள பௌத்த புனிதத் தலமான 'புத்தகயா'வை இந்து ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுக்கப் போராடப் போவதாக அங்குள்ள பௌத்தர்கள் அறிவித்துள்ளனர்" - Arab News, K. S. A. (3. 7. 95) இஸ்லாத்தில் இல்லாததைக் கூறுபவர்கள் இப்போராட்டம் பற்றி என்ன கூறுவார்களோ. . .?

161. அல் குர்ஆன் 2: 256

நபி (ஸல்) அவர்கள் தொழுகையில் ஈடுபடும்போது உலகையே மறந்து அதில் லயித்துவிடுவார்கள். கூட்டாக(ஜமாஅத்தாக)த் தொழும்போது அதை சுருக்கிக்கொள்ளும் அவர்கள் தனித்துத் தொழும்போது அதிக அளவு நீட்டித் தொழுவார்கள். சில சந்தர்ப்பங்களில் இரவின் மூன்றில் ஒரு பகுதியோ, இரு பகுதியோ தொடர்ந்து தொழுவார்கள். சில வேளைகளில் அதிக நேரம் நின்று கொண்டிருப்பதால் அவர்களது கால்கள் வீக்கம் எடுத்துவிடும்.

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிப்பதற்கொப்ப, நபி (ஸல்) அவர்கள் சில சந்தர்ப்பங்களில் ஸுஜூது*க்குச் சென்றால் மீண்டும் எழும்பமாட்டார்களோ என நினைக்குமளவுக்கு அதில் தாமதிப்பார்களாம். "நபி (ஸல்) அவர்கள் முழு இரவும் தொழுவதை நான் ஒருமுறை கண்டேன்!" என ஸைத் பின் காலித் (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்.

ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவித்ததாவது:

— "நான் ஓர் இரவில் நபி (ஸல்) அவர்களுடன் தொழலானேன்.
அவர்கள் முதல் ரக்அத்தில்
'அல் பகரா'● அத்தியாயத்தை ஓதினார்கள்; தொடர்ந்து
ஆல இம்ரான்,● அன்னிஸாஃ● அத்தியாயங்களை ஓதினார்கள்.
பின்னர் ருகூஉ** ஸுஜூது செய்துவிட்டு எழுந்து
இரண்டாவது ரக்அத்திலும் அதே விதமான
நீண்ட அத்தியாயங்களை ஓதினார்கள்.
அவர்கள் மிக நிதானமாகவும்
பூரண கவனத்துடனும் தொழுகையை நிறைவேற்றினார்கள்."[162]

நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு தொழுததை அல்லாஹ்வே அல் குர்ஆன் மூலம் ஊர்ஜிதப் படுத்தியுள்ளான்:

● "(நபியே!) உம் இறைவன் அறிந்திருக்கின்றான் -
ஏறத்தாழ இரவின் மூன்றில் இரண்டு பகுதி வரை,
சில சமயம் பாதி இரவு வரை,
சில சமயம் அதன் மூன்றில் ஒரு பகுதி வரை,
நீர் இறைவழிபாட்டில் கழிக்கின்றீர் என்பதையும்,
உம்முடைய தோழர்களிலும் ஒரு குழுவினர்
இவ்வாறு செய்து வருகின்றார்கள் என்பதையும்!"[163]

முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட முஹம்மத் (ஸல்) அவர்கள் இவ் வாறு தொழுகையில் ஈடுபாடு கொள்வது குறித்து அவர்களது தோழர்கள்

---

* ஸுஜூது : தொழுகையின்போது நெற்றியை பூமியில் வைத்தல்.
** ருகூஉ : தொழுகையின்போது குனிதல்.
● அல் பகரா, ஆல இம்ரான், அன்னிஸாஃ என்பன குர்ஆனில் உள்ள மிக நீண்ட அத்தியாயங்களாகும்.
162. Al Hadis, Maulana Fazlul Careem, (1979) Page: 269
163. அல் குர்ஆன் *73: 20*

வினவியபோது, "நான் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ளவனாக இருக்க வேண்டாமா!" என்றார்கள். மேலும், "தொழுகையில்தான் என் கண்குளிர்ச்சி இருக்கின்றது!" என்றும் கூறினார்கள்.

தொழுகையில் இவ்வாறு ஈடுபாடு கொண்ட நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்பதிலும் மற்றும் வழிபாடுகளிலும்கூட முதன்மை பெற்றுத் திகழ்ந்தார்கள். அத்துடன், அவர்கள் அன்றாட வாழ்க்கைக் கடமைகளில் ஈடுபடும்போதுகூட தக்பீர்[164], தஸ்பீஹ்[165], தஹ்மீத்[166], தஹ்லீல்[167], தக்தீஸ்[168] போன்றவைகளை மொழிபவர்களாகவே இருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் எப்பொழுதும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிபவர்களாகவே இருந்தார்கள்.

*அத்தகைய பிரார்த்தனைகளில் ஒன்றைப் பாருங்கள்:*

*"யா அல்லாஹ்!*
*என் இதயத்துக்கு ஒளியைத் தருவாயாக!*
*என் நாவுக்கு ஒளியைத் தருவாயாக!*
*என் செவிகளுக்கு ஒளியைத் தருவாயாக!*
*என் பார்வைக்கு ஒளியைத் தருவாயாக!*
*என் பின்பக்கத்திற்கு ஒளியைத் தருவாயாக!*
*என் முன்பக்கத்திற்கு ஒளியைத் தருவாயாக!*
*எனக்கு மேலே ஒளியைத் தருவாயாக!*
*எனக்குக் கீழே ஒளியைத் தருவாயாக!"*[169]

மேலும், அவர்கள் தினமும் 70 விடுத்தம் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்பவர்களாக இருந்துள்ளார்கள். சில அறிவிப்புகளின்படி 100 விடுத்தம் எனக் கூறப்படுகின்றது.

இப்படி ஆன்மிக உணர்வு மேலிட அல்லாஹ்வுடன் அவர்கள் கொண்ட தொடர்பும், அல்லாஹ்வை வணங்கி, வழிபட்டு, பிரார்த்தனைப் புரிந்து வாழ்ந்த முறையும் சொல்லுந்தரமன்று. அவர்கள் தன் வாழ்க்கையில் அடைந்த வெற்றிகள் யாவுமே அல்லாஹ்வின் அருளினாலன்றி தன் முயற்சியால் கிடைத்தவை அல்ல என்றே எப்பொழுதும் கூறுவார்கள். இத்தகைய தூய இறையுணர்வுடைய நபி (ஸல்) அவர்களுக்கு நிகரான மற்றொரு மனிதரை உங்களால் காட்ட முடியுமா?

---

164. தக்பீர் : 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹ்வே மிகப் பெரியவன்) என மொழிதல்.
165. தஸ்பீஹ் : 'சுப்ஹானல்லாஹ்' (அல்லாஹ் மிகத் தூய்மையானவன்) என மொழிதல்.
166. தஹ்மீத் : 'அல்ஹம்துலில்லாஹ்' (புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே) என மொழிதல்.
167. தஹ்லீல் : 'லா இலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை) என மொழிதல்.
168 தக்தீஸ் : 'சுப்பூஹுன் குத்தூஸுன் ரப்புல் மலாஇக்கத்தி வர்ரூஹ்' (ஜிப்ரீல் (அலை) அவர்களதும் மற்றும் மலக்குகளதும் அதிபதியாகிய அல்லாஹ் மிகத் தூயவன்) என மொழிதல்.
169. Al Hadis, Maulana Fazlul Careem, (1979) Page: 271

சில மனிதர்கள் ஒன்றிரண்டு துறைகளில் சிறந்து விளங்க முடியும்; அப்படி சிறந்து விளங்கியவர்கள் இருந்துள்ளார்கள். ஆனால், சமகாலத்தில் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கியவர்களையிட்டுத் தேடிப் பாருங்கள்; அதோடு, "அத்தகைய சிறப்பெல்லாம் என் முயற்சியால் நான் பெற்றுக் கொண் டவையல்ல, அனைத்தும் அல்லாஹ் அருளியவையே!" எனக் கூறிய ஒருவரை குறித்துக் காட்டுங்கள். அத்தகைய தேடுதல் முயற்சியொன்றை மேற்கொள் வீர்களாயின், அங்கே முஹம்மத் (ஸல்) அவர்களைத்தான் காண்பீர்கள்.

மைக்கல் எச். ஹார்ட் குறிப்பிடுகின்றார்:

"உலகின் மிகச் செல்வாக்குமிக்க மனிதர்களின்
பட்டியலில் முதலிடம் வகிப்பவராக
நான் முஹம்மத் அவர்களைத் தேர்ந்தெடுத்திருப்பது
வாசகர்கள் சிலருக்கு வியப்பை அளிக்கலாம்.
சிலர் இதனைக் கேள்விக்குரியதாகவும் கருதலாம்.
ஆனால், முஹம்மத் அவர்கள்தான்
உலக வரலாற்றிலேயே
சமயத் துறை, உலகியல் துறை இரண்டிலும்
மிகவும் வெற்றிகரமானவராகத் திகழ்ந்த மாமனிதர்."[170]

## உறுதியான இறைநம்பிக்கை கொண்டவர்!

இறை நம்பிக்கை என்பது வெறுமனே 'இறைவன் இருக்கின்றான்' என நம்புவது மட்டுமல்ல; அவனுக்கு வணக்க வழிபாடுகள் செய்வது மட்டும்தான் எனக் கருதிவிடவும் கூடாது. இந்த நம்பிக்கையும், வணக்க வழிபாடுகளும் இருப் பதுடன், தான் எடுத்துக்கொண்ட கொள்கைப் போராட்ட வாழ்வின் எக்கட் டத்திலும், எத்தகைய சோதனைகள், வேதனைகள் வந்துற்ற போதிலும் இறை நம்பிக்கை தளராது, அவனையே நாடி, அவனுக்காக எத்தகைய தியாகத்தையும் ஏற்கத் தயங்காது செயற்பட வேண்டும். இத்தகைய நம்பிக்கையின் ஊற்றுக்கண் ணாக நபி (ஸல்) அவர்கள் விளங்கியுள்ளார்கள். அவர்களது வாழ்க்கை வரலாற் றைப் படிப்பவர்கள் இதைத் தெரிந்து கொள்வார்கள்.

உதாரணத்திற்கு அவரது போராட்ட வாழ்வின் சில நிகழ்வுகளை நாம் நோக்குவது பயனுடையன எனக் கருதுகிறேன்.

உலக செல்வங்களைக் காட்டி நபி (ஸல்) அவர்களின் இஸ்லாமியப் பிரசாரத்தைத் தடுக்க நினைத்த எதிரிகள் அவர்களை அணுகி, "யா முஹம்மத்! உமக்கு என்ன வேண்டும்? பெரும் பணக் குவியலா; அழகான ஆரணங்குகளா; ஆட்சியதிகாரமா? அனைத்தையும் தருகிறோம். உமது போதனையை விட்டு விடும்" என்றார்கள்.

---

170. 'The 100: A Ranking of the Most Influencial Persons in History', Michael H. Hart, New York, Hart Publishing Co., Inc. (1978) Page: 33

நபிகளாரின் பதில் அவர்கள் எவ்வளவு உறுதியாக தன் கொள்கையில் இருக்கிறார்கள் என்பதைக் காட்டிற்று. அவர்கள் மொழிந்தார்கள்:

"எனது வலது கரத்தில் கதிரவனையும்
எனது இடது கரத்தில் வெண்மதியையும் தந்து
என் கொள்கையை விடச் சொன்னாலும்
நான் ஒருபோதும் அதை விடமாட்டேன்.
ஒன்றில் அதன் போராட்டத்தில் அல்லாஹ்வின் அருளால்
நான் வெற்றியடைவேன்; அல்லது
அதன் வழியில் என் உயிரை அர்ப்பணிப்பேன்!" என்று!

மற்றொருமுறை நபி (ஸல்) அவர்கள் தனித்து இருக்கும் வேளையில் வந்த எதிரிகளில் ஒருவன் வாளைக் காண்பித்து, "இப்பொழுது உம்மை யார் பாது காப்பார்?" எனக் கேட்டான்.

— நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்!" என பதிலளித்தார்கள்!

இந்தப் பதிலால் தடுமாறிவிட்ட எதிரியின் கையிலிருந்த வாள் கீழே வீழ்ந்து விட்டது. அப்பொழுது அந்த வாளைத் தன் கையில் எடுத்துக்கொண்ட நபி களார் "இப்பொழுது உம்மைப் பாதுகாப்பவர் யார்?" என வினவினார்கள். அவன் பயந்து "எவருமில்லையே!" எனக் கூறியபொழுது, "அப்படிக் கூறாதீர்; எல்லோரையும் பாதுகாக்கும் அல்லாஹ் இருக்கின்றான்!" என்றார்கள்.

இன்னொருமுறை நபி (ஸல்) அவர்களின் கண்களில் எதிரிகள் மண் ணைத் தூவிவிட்டுச் சென்றார்கள். இதைக் கண்ட அவர்களது மகள் ஃபாதி மதுஸ்ஸஹ்ரா (ரலி) அவர்கள் அழுதுவிட்டார்கள். ஆனால், நபிகளார் வேத னைப்படவில்லை; மண் தூவிவிட்டு ஓடியவர்களைத் திட்டவும் இல்லை. மாறாக, மிகவும் அடக்கமாகச் சொன்னார்கள்:

— "என்னருமை மகளே! அழ வேண்டாம்;
அல்லாஹ் உங்கள் தந்தையைப் பாதுகாப்பான்!" என்று!

நபி (ஸல்) அவர்களும் அவர்களின் உற்ற தோழர் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களும் மதீனாவுக்குத் தப்பிப்போகும் வழியில் 'ஹிரா' குகையில் மறைந் திருக்க வேண்டி வந்தது. அங்கேயும் எதிரிகள் அவர்கள் இருவரையும் தேடி வந்துவிட்டார்கள். இதனைக் கண்ணுற்ற அபூபக்கர் (ரலி) அவர்கள் அச்சம் கொண்டு அங்கலாய்த்தார்கள். அப்பொழுது,

— "அபூபக்கரே! கவலைப்படாதீர். நாம் இருவரல்லர்; மூவர் இருக்கிறோம்.
அல்லாஹ்வும் எம்முடன் இருக்கிறான்; அவன் பாதுகாப்பான்!"
என்றார்கள்!

இத்தகைய ஏராளமான சம்பவங்கள் நபி (ஸல்) அவர்களின் உறுதியான இறை விசுவாசத்தையும் கொள்கைப் பற்றையும் எடுத்துக் கூறுகின்றன. மிக

இக்கட்டான சோதனைமிக்க கட்டங்களில்கூட அவர்கள் அல்லாஹ்வைப் பற்றிய உறுதியான நம்பிக்கையிலிருந்து அணுவளவேனும் அகன்று நின்றதாகக் கூறும் ஒரேயொரு சம்பவத்தைக்கூட காண முடியாது.

அதேவேளை, அந்த நம்பிக்கை வெறும் நம்பிக்கையாகவும் இருக்க வில்லை. மாறாக, அது உறுதியான நம்பிக்கையாக அமைந்ததுடன் தான் எடுத்துக்கொண்ட விடயங்களில் வெற்றியீட்டும் பொருட்டு சகல விதமான தியாகங்களுடனும் செயற்பட்டு வந்தார்கள்.

ஒட்டுமொத்தமாகக் கூறுவதாயின், நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை முழுவதும் இறை நம்பிக்கையும் இஸ்லாமிய அமைப்பைக் கட்டியெழுப்புவது தொடர்பான பல்வேறு வகையான முயற்சிகளும் இரண்டறக் கலந்ததாக இருந்தது எனக் குறிப்பிடலாம்.

## விக்கிரக, வீர வணக்கம்!

நபி (ஸல்) அவர்கள் விக்கிரக ஆராதனை, வீர வணக்கம் ஆகியவற்றை முற்றாக ஒழித்துக் கட்டினார்கள். அவை ஒரே இறைவனான அல்லாஹ்வை விட்டும் மனிதனைத் திசை திருப்பும் அம்சங்கள் என்பது இஸ்லாத்தின் கருத்தாகும்.

உலகில் மனிதத் தோற்றம் உருவான காலத்திலிருந்தே "இறைவன் ஒருவன்; அவனுக்குக் கீழ்ப்படியுங்கள்; அவனை மட்டும் வணங்கி வழிபடுங்கள்" என்ற கருத்தை இறைதூதர்கள் போதித்து வந்தார்கள். அதனால், 'இறைவன் ஒருவன்' என்ற கருத்து எல்லா மதத்தினர் மத்தியிலும் சரியாகவோ பிழை யாகவோ, மாசுபடுத்தப்பட்ட நிலையிலோ இருந்து வருகிறது. இறைவனை மறுக்கின்ற நாத்திகர்கூட சில கட்டங்களில் இறைவனைப் பற்றிய உணர்வை வெளிப்படுத்தி விடுகின்றனர். ஆனால், நடைமுறைக்கு வரும்பொழுதுதான் அக்கருத்து சிதைந்துவிடுகின்றது. இதற்குக் காரணம், இறை கருத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையும், குறுகிய உலகியல் நோக்கங்களைக் கொண்ட மத குருக்களின் தவறான போதனைகளுமாகும் என்பதை வரலாறு நமக்குக் காட்டித் தருகின்றது.

இவற்றின் விளைவாக மனிதன்

— கல், மண், மரம்
— நீர், நெருப்பு, காற்று
— சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள்
— பசு, நாகம்

போன்ற பலவற்றுக்கு தெய்வாம்சம் இருப்பதாகக் கருதி வணங்கவும் பலவித மான ஆராதனைகள் செய்யவும் முற்பட்டான்.

அதோடு, மனிதனை மனிதன் வணங்கும் கொடிய குற்றமும் எங்கும் உருவானது. இதனை 'வீர வணக்கம்' எனக் கூறுவார்கள்.

ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் அமையப்பெற்றுள்ள அறிவு, ஆற்றல், அலாதியான சக்தி, வீரம் என்பவற்றைக் கண்டு மருட்சியடைகின்றான்; சில உத்தம மனிதர்களின் தூய போதனைகள், நல்ல நடத்தைகளைக் கண்டு அவர்களைப் புகழவும், அவர்களுக்குத் தன் பணிவைக் காண்பிக்கவும் முற்படு கின்றான்.

காலக்கிரமத்தில் இவனின் இச்செயல்கள், தான் மதித்து மரியாதை செய்து, புகழ்ந்து வந்தவர்களுக்குத் தெய்வத்தன்மையை வழங்கி, வணங்க முற் படும் நிலையை உருவாக்கி விடுகின்றது. இப்படித்தான் பலதெய்வ வழிபாடும், விக்கிரக வழிபாடுகளும் உருவாயின.

நபி ஈஸா (அலை) அவர்கள் (இயேசுநாதர்) இறைவனின் தூதராகவே வருகை தந்தார். "அல்லாஹ் ஒருவனுக்கு அடிபணியுங்கள்; அவனையே வணங்குங்கள்" என்றுதான் அவரது வாழ்நாள் முழுதும் போதித்தார். மாறாக, அவர் தன்னை வணங்கும்படி போதனை புரியவேயில்லை. எனினும், அவருக்குப் பின்னால் வந்தவர்கள் அவரை அளவுகடந்து புகழ ஆரம்பித்து "இறைவனின் மகன்" என்றார்கள். இறுதியில் "இறைவன்" என்றே கூறி வணங்கவும் முற்பட் டார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் தன்னைப் பொறுத்த வரையில் அப்படி யொரு நிலை தோன்றாதிருக்கும் பொருட்டு

— "மரியமின் மகன் (இயேசு) விஷயத்தில்
கிறிஸ்தவர்கள் நடந்து கொண்டது போல்
நீங்கள் என்னைப் புகழ்வதில் எல்லை மீறிச் செல்லாதீர்கள்.
நான் ஓர் அடிமை மாத்திரமே.
எனவே, மிக எளிமையாக,
'அல்லாஹ்வின் அடிமையும் திருத்தூதரும் ஆவார்கள்'
எனக் கூறுங்கள்."[171]

என்று தனது தோழர்களைப் பணித்தார்கள். பொதுவாக 'வணக்கம், வழிபாடு கள், பிரார்த்தனைகள், நேர்ச்சைகள் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே உரித்து; அல்லாஹ்வுக்கும் அவனது அடியானுக்கும் இடையிலான இடைத் தரகர் முறை இஸ்லாத்தின் போதனைகளில் கிடையாது' என்பதைத் தெளிவாக விளங்கும்படி செய்தார்கள்.

ஒரு மனிதன் - அழிந்த, அழிவதற்கு இருக்கின்ற எதற்கும் வணங்குவதும், அவற்றிடம் கையேந்திப் பிரார்த்திப்பதும், அவை மூலம் இறைவனின் அனுக் கிரகங்களைப் பெறுவதற்கு நாடுவதும் அறிவுக்குப் பொருத்தம் உடையனவா என சிந்தித்துப் பாருங்கள்.

'அழிவு' இறைவனுக்கு இல்லாத பண்பொன்று. அவன் நித்திய ஜீவன்; என்றும் அழிவில்லாது வாழ்பவன். ஆனால் அவனால் படைக்கப்பட்ட இப்பிர

171. ஆதாரம்: புகாரி

பஞ்சம், இதில் காணும் இயற்கைப் படைப்புக்கள், மனிதன் மற்றும் உயிரினங்கள் யாவுமே அழிந்து கொண்டிருக்கின்றன; என்றோ இவை யாவும் முற்றாக அழிந்துவிடும்.

அடுத்து, மனிதனின் கற்பனையில் உதித்த உருவங்களே சிலைகளாக செதுக்கப்பட்டுள்ளன; சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன. அழியும் மனிதனின் கைவண்ணத்தில் உருவான அவற்றைப் பாதுகாப்பது, காலாகாலங்களில் புதுப்பிப்பது, அழகுபடுத்துவது என்பன யாவும் அக்கைகளாலேயே செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவற்றை யாரேனும் திருடிக்கொண்டு போய் விடுவர்; பலசுபட்டுப் போய்விடும்; காலக்கிரமத்தில் அழிவுற்றுப் போய்விடும். இந்த சிலைகளுக்கோ சித்திரங்களுக்கோ எழுந்து நடமாட முடியாது; தன் அழிவிலிருந்து தன்னையே பாதுகாத்துக்கொள்ள முடியாது; தன் மீது வந்தமரும் கொசுவொன்றைக் கூட விரட்டிக்கொள்ள சக்தி பெறமாட்டாது.

எனவே, அழியக்கூடிய இயற்கைப் பொருட்களும், மனிதனும் மற்றும் உயிரினங்களும், மனிதனின் கைவண்ணத்தில் தோற்றம்பெற்ற சிலைகளும் சித்திரங்களும் வணங்கப்படக்கூடியனவாக, துன்ப துயரங்களை நீக்கக் கூடியனவாக இருக்கின்றன என எவ்வாறு நம்ப முடியும்?

மனிதன் இவற்றை அறியாமலில்லை. எனவேதான், "நாம் இவற்றை வணங்கவில்லை; இறைவனை வணங்கும்போது மனதை ஒருமுகப்படுத்தும் சாதனங்களாக இவைகளைப் பயன்படுத்துகின்றோம்!" என்று ஒரு கருத்தை கற்பனைசெய்து வைத்துக்கொண்டுள்ளான்.

சில நல்ல மனிதரின் பேரில் சிலை செதுக்கியோ சித்திரம் வரைந்தோ வணங்குவதையிட்டு, "அவர்கள் நல்ல மனிதர்கள். நல்லதை நமக்குப் புகட்டியவர்கள். எனவே, அவர்களை கௌரவிக்கும் நோக்கில் வணங்குகிறோம்!" எனக் கூறுகின்றான்.

மறைந்த நல்லடியார்களின் சமாதிகளில் கையேந்துவதுபற்றிக் கேட்டால், "நாம் பாவிகள்; இறைவனிடம் நேரடியாக உரையாட தகுதி பெறாதவர்கள். எனவே இங்கு சமாதி அடைந்தவர் ஊடாக இறைவனிடம் எமது கோரிக்கையை முன்வைக்கின்றோம்!" என்று கூறுகின்றான்.

நபி (ஸல்) அவர்கள் இத்தகைய தவறான கருத்துக்கள், அவற்றின் அடிப்படையில் உருவான வழிபாட்டு முறைகள் போன்ற அனைத்தையும் அடியோடு அழித்துவிட்டு, அல்லாஹ்தான் மனிதன் முழுமையாக அடிபணிவதற்குத் தகுதியுடையவன் என்ற கருத்தை நிறுவினார்கள்.

உண்மையில், நபி (ஸல்) அவர்களது இறைநெறிப் போராட்டம், மனிதனை எல்லாவிதமான அடிமைத்தளைகளிலுமிருந்தும் விடுவித்து அவனைப் படைத்தவனின் அடிமை என்ற கௌரவமிக்க நிலையைத் தோற்றுவித்தது. அத்துடன், நபி (ஸல்) அவர்கள்கூட அந்த அல்லாஹ்வின் அடிமையே என்பதையும்

தெளிவுபடுத்தி, மக்கள் அவரைப் பின்பற்றுவதை விடுத்து வணங்கக் கூடாது என்ற கருத்தையும் மனித மனங்களில் ஆழப்பதிந்துவிட்டார்கள்.

இந்த, நபி (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப் பிடுகின்றான்:

● "அல்லாஹ்வின் மீதும்
இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து,
அல்லாஹ்வை அதிகம் தியானிப்போர்க்கு
நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம்
ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது!"[172]

● "... இவர் நன்மை செய்யுமாறு அவர்களை ஏவுகின்றார்;
தீமைகளிலிருந்து அவர்களைத் தடுக்கின்றார். மேலும்,
அவர்களுக்குத் தூய்மையானவற்றை ஆகுமாக்குகின்றார்;
தூய்மையில்லாதவற்றைத் தடை செய்கின்றார். மேலும்,
அவர்களின் மீதுள்ள சுமையை இறக்குகின்றார்;
அவர்களைப் பிணைத்திருந்த
விலங்குகளையும் உடைத்தெறிகின்றார்.
எனவே எவர்கள் இந்நபி மீது நம்பிக்கை கொண்டு
இவரைக் கண்ணியப்படுத்தி உதவியும் புரிகின்றார்களோ
மேலும் இவருடன் இறக்கியருளப்பட்ட
ஒளியினைப் பின்பற்றுகிறார்களோ
அவர்களே வெற்றியாளர்களாவர்."[173]

● "இறைத்தூதர் எதை உங்களுக்குக் கொடுக்கிறாரோ
அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
அவர் எதனைவிட்டும் உங்களைத் தடுக்கிறாரோ
அதனைவிட்டு விலகி இருங்கள். மேலும்,
அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.
திண்ணமாக அல்லாஹ் கடும் தண்டனை
அளிப்பவனாக இருக்கின்றான்."[174]

மேற்காணும் குர்ஆன் வசனங்கள் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி வாழ்வது எத்துணை முக்கியமானது எனக் கூறுவதைப் பார்க்கின்றோம். அவர்களைப் பின்பற்றாத வரையில் மனித சமுதாயத்திற்கு விமோசனம் இல்லை என்பதை இவற்றிலிருந்து நாம் உணர முடிகின்றது.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

— "நான் உங்களை ஒரு பிரகாசமான
திறந்தவெளியில் விட்டுச் செல்கிறேன்.

172. அல் குர்ஆன் 33: 21 173. அல் குர்ஆன் 7: 157 174. அல் குர்ஆன் 59: 7

அதன் இரவு பகலைப்போன்று
பிரகாசமானதாய் இருக்கும்.
அநியாயக்காரனைத் தவிர வேறு எவனும்
அதனைவிட்டும் வழிதவறிச் சென்றிட மாட்டான்!"[175]

இந்த நபிமொழிமூலம் குறித்துக் காட்டப்படும் 'பிரகாசமான திறந்த வெளி' இஸ்லாமாகும். இது வெறும் கூற்று அல்ல; முழுக்க முழுக்க உண்மை யானது என்பதை நிரூபிக்கும் வகையில் ஒரு சமூகமொன்றையே இதன் வழியில் உருவாக்கிவிட்டார்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்.

ஒரு கொள்கையை தனிப்பட்ட சிலர் தம் வாழ்வில் பின்பற்றலாம்; மற்றும் பலரிடம் சிலகாலம் நிலைக்கவும் செய்யலாம்; சிலவேளை, அதன் அடிப் படையில் சிற்சில நாடுகளின் ஆட்சியைக்கூட அமைத்து மக்கள் வாழ்வில் திணிக்கவும் செய்யலாம். ஆனால், அது பரம்பரை பரம்பரையாக நிலைத்து நிற்கச் செய்வது சாத்தியமன்று.

ஆனால், இஸ்லாம் இதற்கு விதிவிலக்கானது!

— அது ஆரம்பத்தில் தனியொரு மனிதரின் -
முஹம்மத் (ஸல்) அவர்களின் -
நம்பிக்கையாகவும், வாழ்வாகவும், பிரகாசமாகவும் அமைகிறது.
— அடுத்து, அதனை ஏற்றுக் கொண்டவர்களின்
ஒப்பற்ற தியாகங்கள் மூலம் வளர்கின்றது.
— அவர்களது வாழ்வின் சிறிய பெரிய எல்லா அம்சங்களையும்,
அனைத்துத் துறைகளையும் சீர்செய்துகொண்டு
ஆட்சிபீடம் ஏறுகிறது.
— அதனை ஏற்றுக் கொண்டவர்கள் யாவரையும்
தனித்தனியாகவும் சமூக ரீதியாகவும்
அதன் சான்றாளர்களாய்த் திகழச் செய்கிறது.
— இன்று, பதினான்கு நூற்றாண்டுகள் கடந்த பின்னரும்
அதன் சக்தி குன்றிவிடாமல்
உலகை அதன் வழியில் கொண்டுவர
போர் முரசு கொட்டுகின்றது.
— உண்மையில் இஸ்லாம், அதனை ஏற்ற
கோடானு கோடி மக்களின்
இதயநாதமாக பரிணமித்து வாழ்வை செப்பனிடுகின்றது.

இஸ்லாத்தின் இந்த அருமை பெருமைக்கெல்லாம் பிரதான காரணம், அது அகிலத்தைப் படைத்த அல்லாஹ்வின் அருள் என்பதனாலாகும். எனவே, அதனை நீங்களும் இன்னுமின்னும் தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும் என்பது என் அவா.

175. ஆதாரம்: அஹ்மத், இப்னுமாஜா

## ஓர் ஒப்பற்ற சமுதாயம்!

வரலாற்றிலேயே
ஒப்பற்ற சந்ததியொன்றை உருவாக்கிய பெருமை
இஸ்லாத்துக்கு உண்டு.
முஹம்மத் (ஸல்) அவர்களின்
அன்புத் தோழர்களைக் கொண்டது அந்தச் சந்ததி.
அதைப் போன்ற ஒரு சந்ததி
இஸ்லாமிய வரலாற்றிலோ
உலக வரலாற்றிலோ - பின்னர்
ஒருபோதும் தோன்றவில்லை. ஆனால், பண்பிலே
அச்சந்ததியை ஒத்த ஒரு சிலர்
ஆங்காங்கே இருந்துள்ளார்கள் என்பது உண்மையே.
எனினும்,
இஸ்லாத்தின் உதயகாலத்தில் வாழ்ந்ததுபோல்
அத்தகைய பொற்குணசீலர்கள்
பெருந்தொகையினராக
— ஒரே இடத்தில் சேர்ந்து வாழ்ந்து
ஓர் இஸ்லாமிய சமூக அமைப்பை
உருவாக்கியது கிடையாது.
இஸ்லாமிய வரலாற்றிலான இவ்வம்சம்
மிக முக்கியத்துவம் வாய்ந்தது;
தெளிவானது!

■ அஷ்ஷஹீத் செய்யத் குதுப் (ரஹ்)
'அஷ்ஷபாப்' சிறப்பு மலர் - ஹிஜ்ரி 1400,
கொழும்பு - 10 (1980) பக்கம் - 17

4

"உங்களுக்கு எதிராகப் பகைவர்கள்
(பெரும்படையாகத்) திரண்டிருக்கின்றார்கள்.
எனவே அவர்களுக்கு அஞ்சுங்கள்" என்று
மக்கள் அவர்களிடம் கூறினார்கள்.
அதனைக்கேட்டு அவர்களிடம்
இறைநம்பிக்கை இன்னும் அதிகமாகிவிட்டது.
அதுமட்டுமல்ல,
"எங்களுக்கு அல்லாஹ் போதுமானவன்.
அவனே சிறந்த பாதுகாவலன்"
என்றும் கூறினார்கள்."

— அல் குர்ஆன் 3: 173

# காருண்ய நபி தோற்றுவித்த குர்ஆனிய சமுதாயம்!

மனிதன் இந்த உலகில் வாழவே பிறக்கின்றான். அதுவும் ஏனைய உயிரினங்களைப் போலல்ல. அவற்றைவிடச் சிறப்பாக இவன் வாழ வேண்டும். எனவே, அதற்கேற்ற விதத்தில் உயர்ந்த பண்புகளை வளர்த்துக்கொண்டு, சீராகவும் ஒழுங்கு கட்டுப்பாடுகளுடனும் வாழ வழிசெய்துகொள்வது அவசியம்.

ஆனால், மனிதருள் ஒரு சாரார் தாம் சார்ந்துள்ள மதங்களின் மீது ஏற்பட்ட அபரிமிதமான பற்றின் காரணமாக உலக வாழ்வை, மனைவி மக்களை மற்றும் கடமைகளைத் துறந்து காடு, மலைகளிலும் ஆசிரமங்களிலும் தஞ்சமடைந்தார்கள். அங்கு தனித்துத் தவமிருந்து, தியானங்கள் புரிந்து முக்தி நிலை காண முயற்சிகளை மேற்கொண்டார்கள். இன்றும் அத்தகையவர்கள் இல்லாமலில்லை.

அதே மதங்களைச் சார்ந்த மற்றொரு சாராருக்கு மதம் ஒரு தனிப்பட்ட விவகாரமாகிவிட்டது. ஏதோ சில கிரியைகள், மதாசார வைபவங்கள், சம்பிரதாய ரீதியான சடங்குகள், திருவிழாக்கள் என்பவற்றுடன் அவர்களது மதக் கடமைகள் முடிந்துவிடுகின்றன.

அவற்றுக்கு அப்பால், அவர்களது வாழ்வு சார்ந்த மற்றைய துறைகளில், ஒன்றில் மற்றாரிடமிருந்து கடன் வாங்கிய கொள்கை வழியிலோ அல்லது தமது மன இச்சை தரும் வழியிலோ செயற்படுவர். எனவே, சமகாலத்தில் அவர்கள் ஒரு மதத்தினை ஏற்றவர்களாக இருந்துகொண்டே அந்த மதத்தை நிராகரிக்கும் கொள்கை வழியில் செல்பவராக இருப்பர்; தமது மதத்தின் மூல மந்திரங்களை ஓதிக்கொண்டே மது விற்பவர்களாகவும், சூது விபச்சாரம் போன்றவற்றைத்

தொழிலாகச் செய்பவர்களாகவும் இருப்பர். இப்படியே மற்றைய நடவடிக்கைகளும் இருக்கும்.

அதேவேளை, அவர்களில் நல்லவர்களும் இல்லாமலில்லை. அவர்கள் மற்றவர்க்குத் தீங்கு விளைவிக்காத நல்ல தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு தம் வாழ்வை நடத்திச் செல்கின்றனர். என்றாலும், அவர்களும் அவர்கள் ஏற்ற மதத்தின் மூலக் கருத்துக்களுக்கு இசைவாகத் தம் வாழ்வை அமைத்துக் கொண்டதாகச் சொல்ல முடியாது. அவர்களும் தமது ஏதாவது காரியத்தைச் செய்ய முற்படும்போது தம் மதத்துடன் இணக்கமாக வருகிறதா அல்லது முரண்படுகிறதா எனப் பார்ப்பது மிகக் குறைவு. மாறாக, தம் மனதுக்கு சரியெனப்படுகிறது - செய்கின்றார்கள்.

இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய மற்றொரு அம்சம் என்னவெனில், யாரெல்லாம் முக்தி வேண்டி ஆசிரமங்களில் தியானம் செய்துகொண்டு இருக்கிறார்களோ அவர்கள்கூட தமது ஊண், உடை மற்றும் தேவைகள், ஆசிரம பரிபாலனம் போன்றவற்றுக்கு மேற்காண்பவர்களைத்தான் அண்டி நிற்க வேண்டும். ஏனெனில், இவர்கள் உழைப்பதில்லையே! இந்த நிலையில் இந்த இரு சாராரையும் உலகியல் கொள்கைகளே வழிநடத்துகின்றன என்பது தெளிவானது.

இதற்கு இந்த மக்களை முழுமையான குற்றவாளிகள் எனக் கணித்து குற்றக் கூண்டில் ஏற்ற முடியாது. இந்நிலை தோன்றுவதற்கான காரணிகள் அம்மதங்களிலும் உள்ளன.

பொதுவாக, பல மதங்களில், மனிதனின் முழு வாழ்வும் சார்ந்த அத்தனை அம்சங்களையும் குறிப்பிட்டதோர் அமைப்பில் ஒழுங்குபடுத்துவதற்கான திட்டங்கள் மிக மிகக்குறைவு.

உதாரணமாக, மனிதனின் பொருளாதாரத் துறையை அந்த மதமொன்றின் மூல அடிப்படைக் கருத்துக்கமைய சீர்செய்ய வேண்டுமாயின் அதற்கான திட்டம் என்ன?

இதேபோன்று
— 'ஆண் - பெண் தீயொழுக்கம் பாபமானது'
எனக் கூறும் ஒரு மதம்
அதனை இல்லாமலாக்க அறிமுகப்படுத்திய திட்டம் என்ன?
— 'திருடுவது குற்றம்' எனக் கூறும் ஒரு மதம்
அதனை ஒழித்துக்கட்ட நடைமுறைப்படுத்திய திட்டம் என்ன?

"இதோ இருக்கிறது" என யாரேனும் ஒரு திட்டத்தை முன் வைக்கலாம். நான் இங்கு கேட்பது, அந்தந்த மதங்களின் தாபகர்கள் அறிமுகப்படுத்தி, அவர்கள் கண்ணெதிரே ஒரு சமூகத்தில் நடைமுறைப்படுத்தி வெற்றிகண்ட திட்டங்கள் என்ன என்பதாகும்.

இந்த வகையில் இஸ்லாம் அறிமுகப்படுத்திய அனைத்துக் கருத்துகளும் அச்சொட்டாக நடைமுறைப்படுத்தி வெற்றிகண்ட சமுதாயமொன்று இருக்கிறது. அதனை நாம் 'குர்ஆனிய சமுதாயம்' என்போம். அது அல்லாஹ்விடமிருந்து அல் குர்ஆனைப்பெற்ற முஹம்மத் (ஸல்) அவர்கள் தாமாக முன்னின்று வழிகாட்டி, 23 வருட காலத்திற்குள் கட்டியெழுப்பிய சமுதாயம் என்று கூறிவைக்க விரும்புகிறேன்.

அதனைப் பற்றி நீங்கள் அறிவது அவசியம்.

இஸ்லாம் மனித வாழ்வை ஆன்மிகம் - உலகாயதம் எனக் கூறுபோடவில்லை. மாறாக, இரு பகுதிகளையும் இணைத்து ஓர் அமைப்பில் இயங்கச் செய்தது. எனவே, மற்ற மதங்களிலான உலகாயத அம்சங்களிலிருந்து விடுபட்ட துறவறப் போக்கோ, ஆன்மிகத்தை ஒதுக்கிவிட்ட உலகாயத போக்கோ இஸ்லாம் தோற்றுவித்த குர்ஆனிய சமுதாயத்தில் அறவே இருக்கவில்லை.

ஒரு வகையில் அந்தக் குர்ஆனிய சமுதாயத்தைச் சேர்ந்த அனைவரும் துறவிகள்தாம். அதன் கருத்து, அவர்கள் குடும்ப வாழ்வை, சமூக நிர்மாணப் பணிகளை, அரசியலை மற்றும் வாழ்வியல் தொடர்புகளைத் துறந்துவிட்டவர்கள் என்பதல்ல. மாறாக, அத்துறைகள் யாவற்றிலும் முழுமையாக ஈடுபட்டு காரியமாற்றி வரும்போது, அவ்வழியில் காணப்படும் பாவச் செயல்கள், தீமைகள் ஆகியவற்றைத் துறந்தவர்கள், அவற்றை விட்டுத் தூர விலகி நின்றவர்கள் என்பதே அதன் சரியான கருத்தாகும்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய தூதை சமர்ப்பிக்கும் முன்னர் அவர்கள் வழிகேட்டில் இருந்தனர்; பல வகையான தீமைகளை மனமுவந்து செய்பவர்களாகக் காணப்பட்டனர்; பாபங்கள் செய்வதில் தமக்கிணை யாரும் இல்லை என்பதுபோல் நடந்து கொண்டனர். ஆனால், அவர்கள் - ஆண்களும் பெண்களும் ஒருவர்பின் ஒருவராக இஸ்லாத்தைத் தழுவ ஆரம்பித்தபோது தீயன பாபங்களிலிருந்து அரைகுறையாக அல்ல, முற்றாகவே ஒதுங்கி விட்டனர்.

பலதெய்வ வழிபாட்டை, வீட்டுக்கு வீடு விக்கிரகங்களை வைத்துக் கொண்டு வணங்கி வந்ததை விட்டுவிட்டு ஒரே இறைவனை - அல்லாஹ்வை - மட்டும் முழுமனதுடன் ஏற்று, அடிபணிந்து வணங்கி வர முற்பட்டார்கள்!

வர்த்தகத் துறையில் பல வகையான தில்லுமுல்லுகள் செய்துவந்தவர்கள் வர்த்தகத்தை அல்ல, அதில் செய்துவந்த தில்லுமுல்லுகளைத் துறந்தார்கள். அத்துடன் அதை ஒரு மகத்தான சேவையாகக் கணித்து மிகுந்த நேர்மை உணர்வுடன் செய்து வரலானார்கள்!

பெண்களுடன் சல்லாபிப்பதை, விபசாரத்தில் ஈடுபடுவதைப் பேரின்பமாகக் கருதியவர்கள் அதை அடியோடு துறந்துவிட்டது மட்டுமல்ல, பெண்களின் பாதுகாப்பு அரண்களாக மாறிவிட்டார்கள். தன் உணர்வைக் கட்டுப்படுத்த முடியாது போய் தப்பித்தவறியாவது அந்தப் பாவச்செயலில் ஈடுபட்டவர்கள் தாமாக முன்வந்து "இந்தப் பாவத்தை செய்து விட்டேன்; தண்டனை தாருங்கள்" எனக்கேட்டு, தண்டனை பெற்றுத் தூய்மையாகி விட்டார்கள்.

மதுபானத்தைப் புகழ்ந்து கவிபாடி, வீட்டுக்கு வீடு பீப்பாய்களில் பத்திரப்படுத்தி பருகி வந்தவர்கள், "மதுபானத்தை விட்டொழியுங்கள்" என்ற இஸ்லாத்தின் தடை வந்தபோது, 'இதை விடுவதா இல்லையா' என்று சிந்திக்கவில்லை. மதுப் பீப்பாய்கள் பாதைகளில் உருண்டன; மதுக் கிண்ணங்கள் தூள் தூளாயின; மதுவை அருந்திக் கொண்டிருந்தவர்கள் அதை காறி உமிழ்ந்து விட்டனர். அத்துடன் மதுவுக்கு எதிரான பிரசாரகர்களாகவும் மாறி விட்டனர்!

மற்றாரின் பொருளைக் கொள்ளையடித்து வாழ்ந்தவர்கள் அந்த ஈனச் செயலை முற்றாகத் துறந்தனர். அத்துடன் ஏழை எளியவர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யவும், கடன்பட்டோரின் கடன்களைத் தீர்க்கவும் உதவினர்; மேலும், மற்றவர்களின் அமானிதப் பொருட்களைத் தம் பொருட்களை விடவும் பேணுதலாகப் பாதுகாப்பவர்களாயினர்!

அன்று ஓர் அரபியின் வீட்டில் பெண் குழந்தை ஒன்று பிறந்துவிட்டால் அந்த அரபி தன் இல்லத்தைவிட்டு வெளியே வர வெட்கப்படுவான். 'பெண் குழந்தை பிறந்துள்ளது' எனக் கூறுவது அவனுக்குப் பெரும் அவமானமாகத் தெரிந்தது. எனவே, அக்குழந்தையை கதரக் கதர குழிதோண்டி உயிருடன் புதைப்பது அவனது வழக்கமாகிவிட்டது. அப்படி வாழ்ந்த அவர்கள் இஸ்லாத்தை ஏற்றபொழுது ஒரு குருவிக்குக்கூட அநியாயம் செய்யாத ஜீவகாருண்யம் படைத்தவர்களாக மாறிவிட்டார்கள்!

குல கோத்திரப் பெருமையைப் பாடிவந்தவர்கள், தம் குலத்துக்கும் கோத்திரத்துக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தியவர்களை கொன்றொழித்து மகிழ்ந்தவர்கள், தலைமுறை தலைமுறையாக கோத்திரப் போர்களில் ஈடுபட்டு உயிர்களைக் குடித்து வந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றபின் சாதாரண மக்களை சமமாக நடத்தினர்; அடிமைகளாக இருந்தவர்களை அகநிறைவுடன் கௌரவித்தனர்; தம் உற்ற சகோதரர்களாய் மதித்து நடத்தினர்!

இஸ்லாத்தைத் தழுவுமுன் பெரும் பாபகரமான தீமைகளைச் செய்துவிட்டு அவற்றின் பெருமிதத்தில் திளைத்து நின்றவர்கள், இஸ்லாத்தைத் தழுவிய பின் அற்பத் தவறுகளுக்காகக்கூட அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்பவர்களாக மாற்றம் பெற்றனர். தம்மால் ஒரு சகோதரருக்குத் தீங்கொன்று நேர்ந்து விட்டால், அத்தீங்கு தொடர்பாக பாதிக்கப்பட்டவரின் மன்னிப்புக்காக ஏங்கித் தவித்தனர்; கெஞ்சி நின்றனர்!

## கூட்டமைப்பும் முயற்சிகளும்!

மேற்காணும் விதத்தில் தீமைகளைத் துறந்து திருந்திய அவர்கள் தனித் தனியாக வாழவில்லை. மாறாக, அவர்களிடையே கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள்; ஒரே கொள்கையை ஏற்றுக்கொண்ட அவர்கள் அதன் வழியிலான ஒரு சமுதாயமாக அமைந்து அண்ணல் நபிகளார் தலைமையில் வீறுநடை போட ஆரம்பித்தார்கள். அந்த வகையில் பல்வேறு கூட்டு முயற்சிகள் உருவாயின. அல்லாஹ்வும் அவன் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் திட்டம் தந்து வழிகாட்ட, அவை வளர்ச்சிப் பாதையில் செல்லலாயின.

அவர்களுக்கு மத்தியில் உருவான புதிய சமூக உணர்வுகள்

— அண்டை அயலாருடன் இணக்கமாக வாழ்தல்
— பெரியோருக்கு மரியாதையும் சிறியோருக்கு அன்பும் செலுத்துதல்
— கோள், புறம், அவதூறு, பொய் போன்றவற்றைத் தவிர்த்தல்
— தீமைகளுக்கு இடம் கொடாதிருத்தல்
— வீண் சண்டை சச்சரவுகளைத் தவிர்த்தல்
— ஏழைகளுக்கும் தேவையுள்ளோர்க்கும் உதவுதல்
— ஒழுக்க வரம்பு மீறாத வகையில்
இஸ்லாம் விரும்பும் கூட்டு முயற்சிகளில் ஈடுபடல்

போன்றவற்றில் அதிக கவனம் கொள்ளத் தூண்டின!

அவர்களின் பொருளாதாரச் சிந்தனையானது

— வியாபாரம், விவசாயம், கால்நடை வளர்ப்பு
போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்துதல்
— வட்டியில்லா நிதிமுறை உருவாக்கல்
— பொது நிதியம் (பைத்துல்மால்) உருவாக்கல்
— ஸகாத் மற்றும் தான தர்மங்களை நடைமுறைப்படுத்தல்
— தொழிலாளர் உரிமைகளைப் பேணல்
— இஸ்லாத்திற்கு இணக்கமான வரிகள் கொண்டுவரல்

என்பனவற்றில் அதி தீவிரமாக ஈடுபாடுகொண்டு செயல்படத் தூண்டின. அதனால், பொருளாதாரத் துறை சார்ந்த தவறுகளுக்கு வழியில்லாது போய்விட்டது.

அவர்களது அரசியல் துறை அமைப்பானது

— பொது நிர்வாகம், ஒழுங்கு, கட்டுப்பாடு,
— சட்டம், நீதி, தண்டனை,
— யுத்தம், சமாதானம், ஒப்பந்தங்கள்,
— முஸ்லிமல்லாதாரின் பாதுகாப்பு, உரிமைகள்

ஆகியன தொடர்பான அத்தனை அம்சங்களும் கொண்டதாக மிளிர்ந்து காணப்பட்டது.

பொதுவான வரலாற்றாசிரியர்கள் அந்தக் குர்ஆனிய சமுதாயத்து முஸ்லிம்களைக் கீழ்க்கண்டவாறு விதந்துரைப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது.

— "பகல் வேளைகளில் நாம் அவர்களை நோக்கினால்
இவ்வுலகத்தையே கட்டி ஆள வந்தவர்கள்போல்
உலக விவகாரங்களில் ஈடுபடுவதைக் காணலாம்.
ஆனால், இரவு வேளைகளிலோ அவர்கள்
இவ்வுலகத்தை முற்றும் துறந்து விட்டவர்கள்போல்
வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதைக் காணலாம்!"

ஒட்டுமொத்தமாகக் கூறுவதாயின் அவர்களது முழுச் சமுதாயமும் முற்றாகத் திருத்தியமைக்கப்பட்ட உறுதியும் கம்பீரமும் உடைய ஒரு கட்டிடத்தை ஒத்திருந்தது எனலாம்.

அதன் அடித்தளம்

"லா இலாஹ இல்லல்லாஹ்
முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்"

என்பதாகும். அதாவது, "அல்லாஹ்வைத் தவிர (வணங்குவதற்கு, வழிபடுவதற்கு, சட்டம் இயற்றுவதற்கு, கீழ்ப்படிவதற்கு, பிரார்த்தனைகள் புரிவதற்கு, நேர்ச்சைகள் வைப்பதற்கு) வேறு இறைவன் இல்லை; முஹம்மத் (ஸல்) அவர்கள் (முழு மனித சமுதாயத்துக்கும் எல்லாத் துறைகளிலும் வழிகாட்டும்) அவனுடைய (இறுதித்) தூதராவார்" என்பதே அந்தக் குர்ஆனிய சமுதாயத்தின் அடிப்படை நம்பிக்கையும் நடைமுறைக் கொள்கையுமாக இருந்தது.

அவர்கள் தமது வணக்க வழிபாடுகளையோ, உலகியல் வாழ்வு தொடர்பான விவகாரங்களையோ, வெறும் உலகாயத இன்பங்களையோ இலாபங்களையோ கருத்தில் கொண்டு செய்யவில்லை. அவர்களது முழு எண்ணமும் எதிர்பார்ப்பும்

— அல்லாஹ்வுடைய திருப்தி
— மறுமை வெகுமதிகள்
— சுவன இன்பம்

என்பவற்றையே சூழ்ந்து இருந்தன. அதற்காக அனைத்துத் தீமைகளிலிருந்தும் பாபங்களிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டனர்; செல்வத்தைத் தேவை உடையோர்க்கு வாரி வழங்கினர்; தூய இஸ்லாத்தைக் கட்டியெழுப்புவதில் தம் உயிரைக் கூட அர்ப்பணித்தனர்.

ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக அல் குர்ஆன் வசனம் அருளப்பட்டால், நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுவிட்டால் அந்தச் சமூக மக்கள் அவற்றுக்கு மறு வார்த்தை பேசாது இணங்கி நடந்தார்கள். அந்த அளவுக்கு இஸ்லாத்தில் பற்றுக் கொண்டு, கட்டுண்டு இருந்தார்கள். இறை அன்பையும் அவனது வெகுமதிகளையும் அடைவதில் ஆர்வம் கொண்டார்கள்.

உதாரணத்திற்கு ஒரு குர்ஆன் வசனம் அருளப்பட்டபோது ஒரு நபித்தோழர் எப்படி நடந்துகொண்டார் என்பதைக் கேளுங்கள்:

● "உங்களுக்கு விருப்பமானவற்றை
(இறைவழியில்) செலவழிக்காதவரை
நீங்கள் நன்மையினை அடைந்திட முடியாது.
மேலும் எதனை நீங்கள் செலவழித்தாலும்

திண்ணமாக அல்லாஹ் அதனை
நன்கு அறிபவனாக இருக்கின்றான்."[176]

இந்தக் குர்ஆன் வசனம் அருளப்பட்ட அடுத்த கணம் பெரும் செல்வந்த ரான அபூதல்ஹா (ரலி) அவர்கள் மொழிந்தார்கள்.

"யா ரஸூலுல்லாஹ்! 'உங்களுக்கு விருப்பமானவற்றை (இறைவழியில்) செலவழிக்காதவரை நீங்கள் நன்மையினை அடைந்திட முடியாது' என்று அல்லாஹ் அருளியதை சொல்லக் கேட்டேன். எனக்கு மிகவும் விருப்பமானது எனது 'பைரஹா' எனும் ஈத்தந்தோப்பு. அதனை நான் அல்லாஹ்வின் பாதை யில் கொடுப்பதன் மூலம் நன்மையையும் அல்லாஹ்விடத்தில் எனக்காக சேமித்து வைக்கப்படுவதையும் விரும்புகிறேன். எனவே, அல்லாஹ்வின் கட்டளை என்னவோ அதன்படி அதனைப் பயன்படுத்துங்கள்" என்றார்.

இதனை செவிமடுத்த நபி (ஸல்) அவர்கள், "அது செழிப்பான பயன்மிக்க தோப்பாகும். (அதனையிட்டு) நீர் கூறியவற்றை கேட்டேன். அதனை உமது உறவினர்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பீர் என நினைக்கின்றேன்" என்றார்கள்.

"அப்படியே செய்கிறேன் அல்லாஹ்வின் தூதரே!" என்று கூறிய அபூதல்ஹா (ரலி) அவர்கள், அதனைத் தமது உறவினர்கள், (தாய் வழி, தந்தை வழி) சகோதரர்கள் ஆகியோர் மத்தியில் பகிர்ந்தளித்தார்."[177]

அந்த சமூகத்து மக்கள் அனைவரதும் வாழ்க்கை இத்தகைய தியாகமிக்க சம்பவங்களால் நிரம்பியுள்ளது. அதற்குக் காரணம் அவர்கள் மறுமை ஈடேற்றத்தை இலக்காகக்கொண்டு செயற்பட்டதாகும்.

இந்த உண்மைகளை நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால் அல் குர்ஆனை உங்கள் கரங்களில் எடுத்துக் கொள்ளுங்கள். திறந்த மனதுடன் அதன் கருத்துக்களுக்குச் செல்லுங்கள். அப்பால், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் 23 வருட காலத்தில் உருவாக்கிய சமூகத்தைப் பற்றிய வரலாற்று நூல்களைப் படியுங்கள். அப்பொழுது அந்தச் சமூகத்து அற்புத மனிதர்களாக குர்ஆனின் ஒவ்வோர் எழுத்தும் உயிர்பெற்று நடமாடுவது போன்ற கண்கொள்ளாக் காட்சியில் நீங்கள் உங்களையே மறந்துவிடுவீர்கள்.

ஆமாம் - அது குர்ஆனிய சமுதாயம்!

அந்த மக்களை அத்தகைய தூய்மை பொருந்திய சமுதாயமாகக் கட்டியெழுப்புவதில் முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது முழுவாழ்வையும் செலவிட்டார்கள்; இரவு பகல் எனப் பாராது உழைத்தார்கள். இறுதியில் இறையுணர்வுமிக்க இலட்சிய சமுதாயம் உருவானது. அச்சமுதாயம், அதன்

---

176. அல் குர்ஆன் 3: 92
177. 'Madinan Society at the time of the Prophet' - Vol: 1, (1991), Page: 80

காலத்தை அடுத்து, உலகம் முடியும் வரையிலான முன்மாதிரி சமுதாயமாக என்றென்றும் திகழ்ந்து வரும். அல்லாஹ் அச்சமுதாய உறுப்பினர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

அன்று, எல்லா விதமான நற்பண்புகளும் கொண்ட, பலம் வாய்ந்த மறைவழிச் சமுதாயமாக அது திகழ்வதற்குக் காரணமாய் அமைந்த

— உறுதியான இறைநம்பிக்கை
— நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியை உவக்கும் உணர்வு
— மக்களை வழிநடத்த வல்ல தலைமைத்துவம்
— ஒழுங்கு
— கட்டுப்பாடு
— அமைப்புத் திட்டம்
— மறுமை ஈடேற்றத்தை இலக்காகக்கொண்ட
மனப்பாங்கு

என்பன இன்றும் மக்களிடம் இருக்குமாயின் நன்னெறி சார்ந்த சமுதாயமொன்றை மீண்டும் கொண்டுவர அல்லாஹ் போதுமானவன்.

அவன் மொழிகின்றான்:

● "... எந்த ஒரு சமூகமும்
தன் பண்புகளை மாற்றிக் கொள்ளாதவரை
உண்மையில் அல்லாஹ்வும்
அச்சமூகத்தின் நிலையை மாற்றுவதில்லை."[178]

எனவே, மனிதர்கள் தங்களிலுள்ள நிலையை மாற்றிக்கொள்ள ஆவன செய்யும்பொழுது அல்லாஹ்வும் உதவுவான் என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறதல்லவா!

---

178. அல் குர்ஆன் 13: 11

# இஸ்லாம் மனநிறைவைத் தந்தது!

ஒரு ஜப்பானியப் பெண்ணான நான்
பிரஞ்சுப் பல்கலைக்கழகமொன்றில் கல்வி பயின்றவள்.
அதிகமான ஜப்பானியர்களைப் போன்று
நானும் எம்மதத்தையும் பின்பற்றாதவள்.
எனினும், மதம் என்பதில் ஓர் ஆர்வம் இருந்தது.
எனவே, கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய மதங்களை
ஆர்வம் மேலிட படித்தேன்;
இஸ்லாத்தையும் படித்தேன்.
இஸ்லாத்தின் இயற்கையான கருத்துக்கள்
மற்ற மதங்களின் கருத்துக்களை விடவும்
என் உணர்வுகளுடன் உறவு கொள்ளலாயின!
இறுதியில், இஸ்லாத்தைத் தழுவும் எண்ணம்
என்னுள் ஏற்பட்டுவிட்டது.
என்றாலும், 'எப்படித் தொழுவேன்;
எப்படி உடலை மறைத்து 'ஹிஜாப்' அணிவேன்'
என்ற அச்சம் என்னை வாட்டியது.
காரணம், நான் வாழும் சமூகத்துக்கு
இவை அறிமுகமானவை அல்ல.
அதோடு, 'பலரும் பலவிதமாகப் பார்ப்பார்களே'
என்ற ஆதங்கம் வேறு!

ஆனால், இஸ்லாத்தைத் தழுவும் என் ஆர்வம்
கூடிக்கொண்டே போனது.
இஸ்லாத்தைத் தழுவி 'முஸ்லிம்' ஆனேன்.
அதோடு, என் அச்சம் எங்கோ போய்விட்டது.
இப்பொழுது தொழுகையும் ஹிஜாபும்
என் நிரந்தர அணிகலன்களாகிவிட்டன!
உண்மையில் அல்லாஹ்வின் பாதையில்
அடியெடுத்துவைத்தால் அனைத்தும் இலேசாகும்
என்பது இதிலிருந்து புலனாகியது.
அல்லாஹ்வே புகழுக்குரியவன்!

■ சகோதரி கவ்லா **(Kaula)**
'The Hijab.... Why?' by Dr. M. Ismail, (1993), Cooperative Office for Call & Guidance, P. O. Box 24932, Riyadh - 11456, K. S. A.

5

"திண்ணமாக
இஸ்லாம் மட்டுமே
அல்லாஹ்விடம் (ஒப்புக்கொள்ளப்பட்ட)
வாழ்க்கை நெறி (தீன்) ஆகும்."

— அல் குர்ஆன் 3: 19

# இருள்களிலிருந்து ஒளியை நோக்கி...!

அன்பார்ந்த சகோதரரே, சகோதரியே!

வாழ்க்கை தற்காலிகமானது. நேற்றுவரை வாழ்ந்தவர்களில் பலர் இன்று இல்லை. இன்று வாழ்பவர்களுக்கு எப்பொழுது, எந்த நிலையில் பயணச் சீட்டு கொடுக்கப்படுமோ, யாரும் அறியமாட்டார்கள். நாளை புதிய தலைமுறையொன்று வாழ்வதற்கு வரும்!

இந்த வாழ்க்கையை ஏனைய உயிரினங்கள் போன்று, 'பிறந்தோம்; உண்டோம்; உறங்கினோம்; உற்ற துணையுடன் உடலுறவு கொண்டோம்; சந்ததிகளைப் பெருக்கினோம்; மரணித்தோம்' என்று நடத்திச் செல்வதா? அல்லது அதற்கு மேலும் எமக்கு ஏதும் பொறுப்பு உள்ளதா? என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்பது அவசியம்.

நானும் நீங்களும் எண்ணில் அடங்காத, அல்லாஹ்வால் அன்றி மற்றவர்களால் தரமுடியாத பல வகையான செல்வங்களுக்கு உரிமை கொண்டாடுபவர்கள். உங்கள் உடலில் அமையப்பெற்றுள்ள உறுப்புக்களையும் அவை இயங்கும் முறைகளையும் சிந்தித்துப் பாருங்கள்; அடுத்து, எமக்கு வாழ்வை ஓட்டிச் செல்வதற்குத் தரப்பட்டுள்ள இயற்கைச் சாதனங்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். வியப்படைவீர்கள்!

ஆனால், அவை எமக்கு மட்டுமல்ல, விண்ணில் பறக்கும் பறவைகளுக்கும், நீரில் நீந்தி விளையாடும் மீனினங்களுக்கும், ஊர்ந்து செல்லும் விஷ ஜந்துக்களுக்கும், காட்டில் வாழும் மிருகங்களுக்கும்கூட சொந்தமாகும். எனவே, நாம் எந்த நிலையிலும் அவற்றுக்குத் தனித்துவ உரிமை கொண்டாட முடியாது.

அந்த உயிரினங்கள் பெற்றுள்ள அருட்பேறுகள் மட்டும்தான் எமக்கும் கிடைத்துள்ளன என்றால், பொறுப்பில்லாத அந்த உயிரினங்களைப் போன்று 'மிருக வாழ்வு' ஒன்றை நடத்திவிட்டுப் போக முடியும். ஆனால், மிருகங்களை விடவும் சிறப்பான, அவைகளைவிட வேறுபட்ட முறையில் வாழ்வதற்கான மற்றொரு அருள் நமக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதுதான்,

— சிந்திக்கும் ஆற்றல்

— எதையும் பகுத்துப் பார்க்கும் அறிவு

— நல்லது கெட்டதை அறிந்துகொள்ளும் உணர்வு

உலகில் வாழும் மற்ற எந்த உயிரினத்துக்கும் கொடுக்கப்படாத இப் பேரருள் எமக்குத் தரப்பட்டுள்ளது வீணுக்காக, எப்படியோ வாழ்ந்துவிட்டுச் செல்வதற்காக என்று நீங்கள் நினைப்பீர்களாயின் அது தவறு. எந்த ஒருவனுக்கு நீங்கள் அதிகமான வசதிகளைச் செய்து கொடுக்கின்றீர்களோ அவனிடம் அதிக பயன்களை எதிர்பார்ப்பீர்கள்.

அதுபோல, மற்றெந்த ஜீவனுக்கும் வழங்காத வளமிக்க அறிவுப் பேரருளை வழங்கிய அல்லாஹ், அதனைப் பயன்படுத்தி நல்லது கெட்டது அறிந்து வாழவேண்டும் என எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றான். அம்மட்டல்ல, மறுமையில் அதுபற்றி கேட்கவும், நல்வழியில் நடந்திருந்தால் வெகுமதிகள் தரவும், தீய வழியில் நடந்திருந்தால் தண்டனைகள் தரவும் இருக்கின்றான். இதனையுணர்ந்து நாம் அவன் தந்த இஸ்லாத்தை ஏற்று வாழ வேண்டும்.

நீங்கள், உங்களுக்குத் தரப்பட்டுள்ள தெரிவுச் சுதந்திரத்தை வாழ்வின் பல விடயங்களிலும் பயன்படுத்தத் தவறவில்லை என்பது மறுக்க முடியாததோர் உண்மை:

ஓர் உணவகத்திற்குச் செல்கின்றீர்கள். அங்கு உங்களுக்கென வைக்கப் படும் எல்லா உணவு வகைகளையும் நீங்கள் உண்பதில்லை. உங்களுக்கு எது விருப்பமோ அதைத் தெரிவுசெய்து உண்கிறீர்கள்.

ஒரு ஜவுளிக் கடைக்கு சேலை வாங்கப் போகின்றீர்கள். விற்பனையாளன் பல வண்ண சேலைகளை உங்கள் முன் விரித்து வைக்கின்றான். அவற்றில் உங்கள் மனதுக்குப் பிடித்தமானதைத் தெரிவுசெய்து, பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறீர்கள்.

திருமணம் உங்கள் வாழ்வை அலங்கரிக்க வரும் அருமையானதொரு சந்தர்ப்பம். அப்பொழுது பாதையில் போகும் ஒருவனையோ ஒருத்தியையோ உங்கள் துணையாக்கிக் கொள்ளும் அளவுக்கு நீங்கள் முட்டாள் தனமாக நடந்து கொள்ள மாட்டீர்கள். அதிலும் உங்களுக்குப் பொருத்தமான துணைக்கான 'செலெக்ஷன்' - தெரிவு - நடைபெறும்.

இப்படி உங்கள் வாழ்வில் வரும் அத்தனை அம்சங்களிலும் 'தெரிவு' என்னும் சாதனத்தைப் பயன்படுத்த நீங்கள் தவறவில்லை. அத்தகைய எல்லாக் கட்டங்களிலும் உங்களிடம் சொல்லிக் கொள்ளாமலேயே உங்கள் அறிவு உங்களுக்குப் பக்கபலமாக நின்று உதவும்; ஒத்தசை புரியும்!

ஆனால், ஒரேயொரு விடயத்தில் மட்டும் உங்கள் அறிவை நீங்கள் பயன் படுத்துவது இல்லை; உங்கள் தெரிவுச் சுதந்திரத்தை குழிதோண்டிப் புதைத்து விட்டு மனம்போனபடி வாழ்ந்து வருகிறீர்கள்.

— அதுதான் 'மதம்' அல்லது 'வாழ்க்கை முறை' எனப்படுவது!

நீங்கள் ஏற்றுள்ள மதம் தொடர்பாக, அது சரியா பிழையா என்றோ, அது என் வாழ்வுக்குப் பொருத்தமான இயற்கை சார்ந்த பரிகாரங்களைத் தருகின்றதா இல்லையா என்றோ, அதன் வழியில் நாம் எதிர்நோக்கும் சிறிய பெரிய பிரச் சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடிகின்றதா இல்லையா என்றோ, அதன் நம் பிக்கைகள், நடைமுறைகள், வழிபாட்டு முறைகள் புத்திக்குப் பொருத்தமான வையா இல்லையா என்றோ, என்றாவது சிந்தித்துப் பார்த்தது உண்டா?

உண்மையில், நீங்கள் உங்கள் மதத்தை கருத்துணர்ந்து, சரி பிழை பார்த்து ஏற்றுக்கொள்ளவில்லை. தலைமுறை தலைமுறையாக உங்கள் மூதாதையர் காலத்திலிருந்து அவர்களும், உங்கள் பெற்றோரும் இருந்த மதத்தில் அவர்களுக் குப் பிள்ளையாகப் பிறந்த நீங்களும் இருக்கிறீர்கள். நீங்கள் உறவு கொண்டாடும் மதம் தொடர்பாக உங்களுக்குள்ள ஆதாரம் அவ்வளவுதான்.

மிக அற்ப விடயங்களான உணவு, உடை மற்றும் விவகாரங்களில் நீங்கள் பயன்படுத்தும் தெரிவுச் சுதந்திரத்தை உங்கள் மத வாழ்வு தொடர்பாக நீங்கள் பயன்படுத்தாதது ஏன்? மதம் அவ்வளவு தாழ்ந்து போனதா? 'அது எனக்கு அவ சியமில்லாத ஒன்று' எனக் கருதுகிறீர்களா? அப்படி நீங்கள் கருத மாட்டீர்கள். ஆனால், அது பற்றி அவ்வளவு அக்கறையில்லை; அப்படித்தானே!

இஸ்லாம், தன்னைப் பின்பற்றுபவனை இருளில் வைக்க விரும்பாத மதமொன்று; வாழ்க்கை முறையொன்று.

அது அவனைச் சிந்திக்கத் தூண்டுகிறது:

- "இவர்கள் குர்ஆனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?
  அல்லது அவர்களின் இதயங்கள் மீது
  பூட்டுகள் போடப்பட்டிருக்கின்றனவா?"[179]

179. அல் குர்ஆன் 47; 24

மேலும், அவனது தெரிவுச் சுதந்திரத்தைத் தூண்டுகிறது:

- "அல்லாஹ் இறக்கியருளிய (வேதத்)தைப் பின்பற்றுங்கள்"
என்று அவர்களிடம் கூறப்பட்டால்
"இல்லை! எங்கள் தந்தையார் பாட்டனார்
எந்த வழியைப் பின்பற்றியதாகக் கண்டோமோ
அதனையே நாங்கள் பின்பற்றுவோம்"
என்று மறுமொழி கூறுகிறார்கள்.
அப்படியானால் அவர்களின் தந்தையார் பாட்டனார்
எதையும் சிந்தித்து உணராதவர்களாகவும்
நேர்வழி பெறாதவர்களாகவும் இருந்தாலுமா
இவர்கள் அவர்களைப் பின்பற்றுவார்கள்."[180]

இந்தத் திருமறை வசனங்கள், எதையும் அறிந்து ஆராய்ந்து பின்பற்ற வேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுவதைப் பார்க்கின்றோம். அன்றி, கண்களை மூடிக்கொண்டு மூதாதையர் வழியில் செல்வதோ அல்லது முரண் வழியில் செல்வதோ முறையாகாது என்பதை சொல்லக் கேட்கின்றோம்.

எனவே, நீங்களும் உங்கள் அறிவுக்கும் தெரிவுச் சுதந்திரத்திற்கும் வேலை கொடுக்க வேண்டும்; அவற்றை முறையாகப் பயன்படுத்த வேண்டும். மாறாக, அவற்றை மூட்டை கட்டி மூலையில் வைத்துவிட்டு வாழ முற்படக் கூடாது; அது அறிவு சார்ந்த செயல் அல்ல.

அல்லாஹ் கூறுகின்றான்:

- "வானங்களிலும் பூமியிலும் உள்ள யாவும்
அல்லாஹ்வுக்கே உரியனவாகும்.
உங்கள் உள்ளங்களில் உள்ளவற்றை
நீங்கள் வெளிப்படுத்தினாலும்
அல்லது மறைத்து வைத்தாலும்
எந்நிலையிலும்
அல்லாஹ் அவை பற்றிக் கணக்குக் கேட்பான். பின்னர்,
தான் நாடுபவர்களை அவன் மன்னிப்பான்;
தான் நாடுபவர்களைத் தண்டிப்பான்.
அல்லாஹ் அனைத்துப் பொருட்கள் மீதும்
பேராற்றல் உடையவனாக இருக்கின்றான்."[181]

இவ்வசனங்கள் எம் வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான ஓர் எச்சரிக்கையாக உள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு ஒளியை நோக்கிய

---

180. அல் குர்ஆன் 2: 170
181. அல் குர்ஆன் 2: 284

உங்கள் பயணம் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கின்றேன். அதற்கான வழிகாட்டு நூலாக இது அமைய இறைவனிடம் பிரார்த்தனைப் புரிகின்றேன்.

இந்நூலில் காணும் நிறைகள் யாவும் அல்லாஹ்வின் அருளால் ஆனவையே; குறைகள் இருப்பின் அவை என் பலயீனத்தால் உருவானவையே. அக்குறைகளை சுட்டிக்காட்டினால் நான் என்னைத் திருத்திக்கொள்வதுடன் சுட்டிக்காட்டிய அவருக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனைப் புரிபவனாகவும் இருப்பேன், இன்ஷா அல்லாஹ்!

கண்ணியம் பொருந்திய அல்லாஹ்

— கருணையே உருவானவன்
— அன்பில் நிகரற்றவன்
— தன்னை நாடி வருபவர்களின்
பாவங்களை மன்னிப்பவன்
— அவன் அருள் கிடைக்காத எவரும்
ஈருலகிலும் வெற்றிபெற முடியாது.

எனவே, அவனது அருளும், நேர்வழியும், பாப மன்னிப்பும் எம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து உங்களிடம் இருந்து விடை பெறுகின்றேன்.

## உசாத் துணை நூல்கள்


1. திருக்குர்ஆன் - மூலம். தமிழாக்கம். விளக்கவுரை - (பாகம் 1, 2 - 1992) மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்), இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 78 - பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600 012, இந்தியா.

2. ஷஹீஹ் அல் புகாரி *(அரபு - ஆங்கிலம்)*, Dr. Muhammad Muhsin Khan, Islamic University, Al Madina Al Munawwara, K. S. A.

3. Al-Haj Maulana Fazlul Kareem, **Al - Hadis**, (Jan. 1979), Malik Sirajuddin & Sons. Lahore - 8, Pakistan.

4. *அல்லாமா ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி*, **தர்ஜுமதுல் குர்ஆன்**, *(1986), 19 - முதல் அவென்யூ, இந்திரா நகர், சென்னை - 600 020, இந்தியா.*

5. *மௌலானா சையித் ஹாமித் அலி*, **நாளும் பழக நபிமொழி நாற்பது,** *(1992), இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 78 - பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600 012, இந்தியா.*

6. **பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் அடங்கிய பரிசுத்த வேதாகமம்,** *(1960)* இந்தியா, இலங்கை வேதாகமச் சங்கம், A/1, மகாத்மா காந்தி ரோட், பெங்களூர் - 1, இந்தியா.

7. பேராசிரியர் வல்பொல ஸ்ரீ ராகுல தேரர், **புத்தர் போதித்த தர்மம், බුදුන් වදාළ ධර්මය** *(சிங்கள மொழி) (1993), எம். டீ. குணசேனா கம்பனி, 217 - ஒல்கொட் மாவத்தை, கொழும்பு - 11, ஸ்ரீ லங்கா.*

8. *பேராசிரியர் சாந்த இரத்நாயக்கா,* பௌத்த தர்மம், *(சிங்கள மொழி), (1984), குணசேனா கம்பெனி வெளியீடு. ஸ்ரீ லங்கா.*

9. Dr. Maurice Bucaille, **The Bible, The Quran and Science,** 4th French Edition (1977), Seghers, 3 Rue Falguiere, 75725, Paris, Cedex 15

10. *மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்),* **இதுதான் இஸ்லாம்,** *(1994), இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 78 - பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600 012, இந்தியா.*

11. Said Abdullah Seif - Al-Hatimy, **Woman in Islam,** (1979), Islamic Publications Ltd., Lahore, Pakistan.

12. Dr. Jamal A. Badawi, **The Status of Woman in Islam,** (1980), World Assembly of Muslim Youth, P.O.Box 10845, Riyadh 11443, K. S. A.

13. B. Aisha Lemu, Fathima Heeran, **Woman in Islam,** (1978), The Islamic Foundation, 223, London Road, Leicester LE2 1ZE, United Kingdom.

14. மௌலானா சையித்அபுல் அஃலா மௌதூதி (ரஹ்), அறப்போர், (1980), The Holy Koran Publishing House, P.O.Box 7492, Beirut, Lebanon.

15. மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்), குத்பாத் பேருரை நூல் 1. (இறை நம்பிக்கை வாழ்வின் அடிப்படை), (1994), இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், சென்னை - 12

16. இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ளுங்கள், The Cooperative Office for Call & Guidance at Al Badiah, P.O.Box 24932, Riyadh - 11456, K. S. A.

17. R. P. M. கனி, இஸ்லாமிய இலக்கியக் கருவூலம் (1963) அருள் நூல் பதிப்பகம், தென்காசி, இந்தியா

18. Prof. K. S. Ramakrishna Rao, **Muhammad The Prophet of Islam,** The Board of Islamic Publications, Delhi - 11006.

19. Akram Diya Al Umari, **Madinan Society at the Time of the Prophet,** Vol I + II, (1991), The International Institute of Islamic Thought, 555 - Grove Street, Herndon, Virginia 22070 - 4705 U. S. A.

20. கலைமாணி கவி. கா. மு. ஷெரிப், இஸ்லாமும் ஜீவகாருண்யமும், (1988), சீதக்காதி நூல் வெளியீட்டகம், சென்னை - 2, இந்தியா.

21. Mrs.Ulfat Aziz-us-Samad, **Islam and Christianity,** (1984), Presidency of Islamic Research, Ifta and Propagation, Riyadh, K. S. A.

22. நஸீம் காஜி (ஹேம்குமார் அகர்வால்), அன்புள்ள அம்மா, The Cooperative Office for Call & Guidance at Al Badiah, P.O.Box 24932, Riyadh - 11456, K. S. A.

23. Dr. H. M. Baagil M. D., **Muslim Christian Dialogue,** (1984), Islamic Education Foundation, P.O.Box 15798, Jeddah - 21454, K. S. A.

24. Michael H. Hart, **The 100: A Ranking of the Most Influencial Persons in History,** (1978) Hart Publishing Co., Inc., New York.

25. Dr. Muhammad Ismail, **The Hijab... Why?,** (1993), The Cooperative Office for Call & Guidance at Al Badiah, P.O.Box 24932, Riyadh - 11456, K. S. A.

26. Maulana Taqi. Usmani, **What is Christianity,** (1987), Muslim World League, K. S. A.

27. Marvin Perry, **A History of the World,** (1989), Houghton Mifflin Co., Boston, Massachusetts, U. S. A., Printed in Philippine.

28. டாக்டர் பீ. ஆர். அம்பேத்கர், இந்து மதமாற்றம் ஏன்?, (1988), தலித் சாகித்ய அகடமி, 32 - 4th St., Venkatespuram New Colony, Dr. Ambedkar College Rd., Madras-600012, India.

29. Dr. B. R. Ambedkar, **Riddle of Rama & Krishna,** Dalit Sahitya Academy, 32 - 4th St., Venkatespuram New Colony, Dr. Ambedkar College Rd., Madras-600012, India.

30. கணியூர் இஸ்மாயில் நாஜி, **பலதார மணம் பாவமா? பரிகாரமா?,** *(1990),* சாரா பதிப்பகம், 55 அ - எஸ். பி. கோயில் தெரு, சிதம்பரம் 608001, இந்தியா.

31. டாக்டர் அ. சேப்பன் எம். பீ. பீ. எஸ் (DGO), **விடுதலைப் பெற துடிப்ப தேன்?,** *(1991),* பாக்தாத் புக் சென்டர், 81 - அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை - 1, இந்தியா.

32. கலாநிதி செய்க் முஹம்மத் பின் இஸ்மாயில், **ஹிஜாப் - அதன் அவசியம் என்ன?,** (1994), The Cooperative Office for Call & Guidance at Al Badiah, P.O.Box 24932, Riyadh - 11456, K. S. A.

33. ஜமால், **பெருமானார் கண்ட போர்முனைகள்,** பயனீர் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை - 600001. இந்தியா.

34.

சஞ்சிகைகள், பத்திரிகைகள்

1. **அல் ஹஸனாத்,** மாசிகை, இலங்கை ஜமா அதே இஸ்லாமி, 77 - தெமடகொட ரோடு, கொழும்பு - 9, ஸ்ரீ லங்கா.

2. **வழிகாட்டி,** மாசிகை, இலங்கை ஜமா அதே இஸ்லாமி, 77 - தெமடகொட ரோடு, கொழும்பு - 9, ஸ்ரீ லங்கா.

3. **சமரசம்,** இருவார சஞ்சிகை, இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 78 - பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600 012, இந்தியா.

4. **அஷ்ஷபாப்** சிறப்பு மலர் - ஹிஜ்ரி - 1400, கொழும்பு - 10, ஸ்ரீலங்கா.

5. **திவயின,** சிங்கள நாளிதழ், ஸ்ரீலங்கா.

6. **தினகரன்,** தமிழ் நாளிதழ், ஸ்ரீலங்கா.

7. **தினபதி,** தமிழ் நாளிதழ், ஸ்ரீலங்கா.

8. **தினமணி,** தமிழ் நாளிதழ், தமிழ்நாடு, இந்தியா

9. **Saudi Gazette,** Daily Paper, Riyadh, K. S. A.

10. **Arab News,** Daily Paper, Riyadh, K. S. A.

11. **Philippine Times Journal,** International Edition, Philippine.

12. **The Muslim World League Journel,** Monthly Magazine, K. S. A.

குறிப்புக்கள்

# இருள்களிலிருந்து ஒளியை நோக்கி . . .

இஸ்லாத்தின் உயிரோட்டத்தையோ, முஹம்மத் (ஸல்) அவர்களின் குண இயல்புகளையோ அறிந்துகொள்ள முயலும் ஒரு மாணவன், முஹம்மத் (ஸல்) அவர்கள் வெறும் ஆன்மிக அங்காடி வியாபாரியாகவோ, காலத்தை விரயம் செய்து ஏதேதோ செய்துகொண்டிருந்த நாடோடியாகவோ அல்லாமல், காலத்தால் அளவிட முடியாத வாய்மையும் நேர்மையும் ஒருங்கே அமையப்பெற்ற தனியான மகத்துவம் பொருந்திய ஒருவர் என்பதை எடுத்த எடுப்பிலேயே புரிந்துகொள்வான்.

அவர் மனித சமுதாயத்திலே தோன்றிய மகத்தான ஒருவர் என்று கூறுவதைவிட, மிக மிக மகத்தானவர்களுள் முதன்மையான ஒருவர் என்று கூறுவதே சாலப் பொருந்தும்.

அவர் ஓர் இறைதூதர் என்ற ரீதியில் மட்டும் சிறப்பானவர் அல்லர். நாட்டுப்பற்றில், நல்லாட்சி நடத்தியதில், உலகாயத—ஆன்மிகத் துறைகள் இரண்டும் இணைந்த சாம்ராஜ்ஜியமொன்றைக் கட்டியெழுப்பியதில் கூட சிறப்பானவர்—தன்னிகரற்றவர் எனக் குறிப்பிடலாம்.

இவை மட்டுமன்று. இவற்றை விடவும் உயர்வான மற்றொரு அம்சம் அவரிடம் குடிகொண்டிருந்தது.

அதுதான்—ஆழ்ந்த அசைவுறாத இறை நம்பிக்கை!

அவர் முதன்முதலில் தனக்கும், அப்பால் தனது மக்களுக்கும், அடுத்து, அனைத்திற்கும் மேலாக அல்லாஹ்வுக்கும் மிகுந்த நம்பிக்கை உடையவராகத் திகழ்ந்தார். அது வெறும் நம்பிக்கையன்று. அந்த நம்பிக்கை அவரது வாழ்வு முழுவதும், ஒவ்வொரு விடயத்திலும் படிந்து, உலகுக்கு ஒரு முன்மாதிரியை வழங்கிற்று.

இவற்றையெல்லாம் நன்கு தெரிந்துகொள்ளும் அந்த மாணவன்

- இஸ்லாம் இருள்களின் அடித்தளத்தில் தடுமாறிக்கொண்டிருந்த மனிதரை ஒளியின்பால் அழைத்துவந்து, அவ்வழி வந்தோரை அதிகார பீடம் வரை கொண்டுசென்ற அதியுயர்ந்ததொரு மதம் என்பதை அங்கீகரிக்க சிறிதும் பின்னடைய மாட்டான்!

■ மேஜர் ஆர்தஸ் க்லய்ன் லெனார்ட்

'Islam-Her Moral and Spiritual Value', London, (1927), By Major Arthus Glyn Leonard, Pages 20, 21.

ISBN 955-8223-00-X

A. A. Prints - Beruwala